காவேரி

[illegible]தி - ஆவணி மலர். August - 1950

683
3-50
683
OFFICE OF THE REGISTRAR ... MADRAS
22 AUG 1950
MADRAS

நான்கு நன்மணிகள்

மேட்டூர் சந்தன சோப்

பரிமளமிக்கது, பரிசுத்தமானது

கவர்ச்சிமிக்க காந்தி அளிப்பது

ரூப் டாய்லெட் சோப்

காவேரி சூபர் சோப்

'சால்முக்ரா' எண்ணெய் சேர்ந்தது
சுகாதாரத்திற்கு இன்றியமையாதது

சுத்தமான சலவைக்கு உத்தமமான

காவேரி பார் சோப்

மேன்மையான 'மேட்டூர் கெமிகல்ஸ்' தயாரிப்புகள்

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை சேலம்

பூரண விற்பனை ஏஜண்டுகள் :
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்,
120, அரமனைக்கார விதி, மதறாஸ், 1 & பிராஞ்சுகள்.

தமிழ்நாடெங்கும் வெற்றிகரமாய் நடைபெறுகிறது
சிட்டாடல்
இதய கீதம்
நடிகர்கள்:
மஹாலிங்கம் ராஜகுமாரி
சாரங்கபாணி · V.சுசீலா · வீரப்பா · T.P.ராஜலக்ஷ்மி
T.S.ஜெயா · சக்ரபாணி · C.V.நாயகம் · K.P.காமாக்ஷி
நடனம்
லலிதா · பத்மினி
புரொடியூஸர் & டைரக்டர்:
ஜோஸப்தளியத் Jr.
அஸோஸியேட் புரொடியூஸர்:-
M.நடேசன்
VENDHAN

நரஸுஸ் காபிதூள்

உங்கள் பிரியமுள்ள பானம்

இப்பொழுது எங்கும் கிடைக்கும்



உயர்ந்த ரக பிளாண்டேஷன் பீபெரி
எக்ஸ்ட்ரா போல்ட் காபிக் கொட்டைகளும்

7 பவுண்டு, 3 பவுண்டு, 1½ பவுண்டு'
¾ பவுண்டு ஸீல்வைத்த துணிப்
பைகளில் கிடைக்கும்.

நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட், சேலம்.

சென்னையில் அதிவிரைவில் வெளிவருகிறது.

 Govt. Regd. No. 816

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை பிரீமியர் பாங்க் ஆப் இந்யாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ பிரவேசக்கட்டணம் கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே ★

முடிவு தேதி 9—9—50

1	இது கொஞ்சம் தவறினால்கூடத் தெரிந்துகொள்வதற்கு, சங்கீதத்தில் நல்ல ஞானம் வேண்டும்	இராகம்	தாளம்
2	பொதுக் காரியங்களில் ஈடுபடுவது என்றால் மிகவும் இதாக இருத்தல் அவசியம்	யோக்-கியதை	சாக்கிரதை
3	அறுபது வயதாகியும்கூட இது குறையாதிருப்பவர்களுமுண்டு	இளமை	வலிமை
4	ஆரம்பித்த தொழில் எதிர்பார்த்தபடி இதாக இல்லாவிட்டால், ஊக்கம் குறைந்துதானே போகும்?	இலாபம்	சுலபம்
5	ஆபத்து வேளையில் பணமில்லாது திண்டாடும்போது, முடிந்ததை … … … கொடுத்து உதவுவதே நண்பனின் கடமை	கடன்	உடன்
6	அடை மழை பெய்யும்போது இது உலர்வதே கஷ்டம்	உடை	குடை
7	இதற்குப் போகலாம் கிளம்பு என்றால், பெண்களுக்கு ஏற்படும் குஷியே அலாதிதான்	திருவிழா	திருமணம்

மேலே உள்ள கட்டத்தில் ஏழு குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. குறிப்புக்கு மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைத் தனிக்காகிதத்திலும் எழுதலாம். அச்சுக் கூபன்களும் தேவையானவர்களுக்கு அனுப்பப்படும். தனிக்காகிதத்தில் எழுதுபவர்கள் விடைகளைமட்டும் எழுதினால் போதும். குறிப்புகளையும் சேர்த்து எழுதவேண்டியதில்லை. ஏழு விடைகளும் சேர்ந்ததுதான் ஒரு கூப்பன்.

கட்டணத்தை ம. ஆ. மூலம்தான் அனுப்பவேண்டும். போஸ்டல் ஆர்டர்கள் எடுத்துக்கொள்ளப்படமாட்டா. ம. ஆ. ரசீதும் கட்டாயம் கூபனுடன் சேர்த்து அனுப்பவேண்டும். பரிசுத் துகைகள் 27—9—50-ல் அனுப்பப்படும். பரிசுகள் நிபந் தனைப்படி கியாரண்டியானது. சரியானவிடை புரட்டாசி காவேரியில் வெளிவரும். மற்றபடி சகல விஷயங்களிலும், விரி வான நிபந்தனைகளும், மானேஜரின் தீர்ப்புமே முடிவானதும், சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டு வோர் கார்டு எழுதவும்.

கூப்பன்களும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :-

மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி

"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 5-ன் சரியான விடை :—

(1) மனப்பொருத்தம். (2) கடனாளி. (3) வெகுமானம். (4) மழை. (5) போதனை. (6) அமைதி (7) பாத்திரம்.

(மற்ற விவரங்கள் புரட்டாசி காவேரியில்)

வரலெக்ஷ்மிப் போட்டி-4-முடிவு.

வரலக்ஷ்மிப் போட்டி நெ. 4

சரியான விடை

---

1. அறிஞன்
2. படுக்கை
3. கூனம்
4. கல்வி
5. கர்வம்
6. நீசல்
7. நீதி

We hereby certify that the above is the Solution in original deposited with us, by VARALAKSHMI COMPANY on 2nd June 50 in a sealed cover which was opened in our presence to day and that a copy of the above solution has been lodged with the bank.

For PREMIER BANK OF INDIA LTD

V. Ramanathan

Agent 25·7·50

முதற் பரிசு (சரியான விடைக்கு)

தலைக்கு

ரூ. 10—3—0 வீதமும்

2வது பரிசு (ஒரு தப்புள்ள விடைக்கு)

தலைக்கு

ரூ. 1—1—0 வீதமும்

பிரித்து வழங்கப்பட்டன.

பரிசுத்துகைகள் யாவும் 24—7—50 அன்றே அனுப்பப்பட்டன.

பரிசு பெற்றவர்களின் ஜாபிதா.

ஏ. விட்டல் ராவ் சாத்தூர். மாஸ்டர் பி. கண்ணன், லத்தேரி. வி. நடராஜன், புனா 3. எஸ். ஸ்ரீனிவாஸன், பம்பாய்-1. ஸ்ரீமதி. C. S. லக்ஷ்மி சங்கரய்யர், பம்பாய்-24. என். தங்கவேலு நாயக்கர், கடிச்சம்பாடி, கும்பகோணம். சி. ராமலிங்கம், திண்டிவனம். எஸ். ஆர். சம்பத்தாதம், ஸ்ரீ ரங்கம். எஸ். வெங்கடராமன் ஸ்ரீரங்கம். எம். மாரி செட்டியார், கோவை. ஸ்ரீமதி. ஆர். லக்ஷ்மி, ஷெனய்நகர், மதுரை. ஸ்ரீமதி. வி. பாக்கியலெக்ஷ்மி, ஹைதராபாத். கே. ஜி. பங்காரு, கணியூர், கோவை. கே. எஸ். கோபாலகிருஷ்ணன், மிஞ்சூர். ஆர். முத்துக்கிருஷ்ண நாயுடு, பாளையங்கோட்டை. டி. கே. கோபாலன், உதகமண்டலம், எஸ். கே. வெங்கடராமய்யர், தெப்பக்குளம், திருச்சி. ஏ. ராதாகிருஷ்ணன், ஆவடி. எஸ். ராமசாமிப் பிள்ளை, ஸ்ரீரங்கம். எஸ். பாஸ்கரன், அம்பாசமுத்திரம், வி. வி. வீரபத்திரன், சங்கரலிங்கபுரம். டி. பாண்டுரங்கம், பெரியகாஞ்சிபுரம். மு. கோபாலன், எழும்பூர், சென்னை. கே. ஆர். தியாகராஜன், திருப்பத்தூர். (இன்னும் பலர்)

[இடநெருக்கடி காரணமாக பூரா ஜாபிதாவையும் பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம். பரிசு பெற்றவர்கள் யாவருக்கும் தபால்மூலம் தனித்தனியாக அறிவிக்கப்பட்டுவிட்டது.]

மாதவிடாய் :-

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் '**ரிதுபர்த்தினி**' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை. ரூ. 5-0-0. **பார்வதி** கர்ப்பத்தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

விரைவாதம் :-

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

வயிற்றுக் கோளாறுகள் :-

அதிகமான ஏப்பம், அஜீர்ணம், வயிற்றுவலி, வாய்வு, புண், கட்டி, குடல் வலி, முதலியன "**தீபன்**" சாப்பிட்ட ஒருநாளில் திருவதோடு நிரந்தரமாக சொஸ்தமாகும் என்பது காரண்டி. விலை ரூ. 3-0-0 தபாற் செலவு 0-14-0.

கூஞ்சா தைலம்:-

வழுக்கை, மயிர் கொட்டுதல் போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது, தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேச விருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0 தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.



கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI (K. M.)

24, Debendra Ghose Road, CALCUTTA, 25

மதராஸ்:—அப்பா & கோ., 286, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, மதராஸ்–1.

பம்பாய்:—இண்டோ ஈரோபியன் கெமிகல் கம்பெனி "ஆனந்தபவன்" பிரின்ஸஸ் தெரு, பம்பாய்.

டெல்ஹி:—ஜம்னுதாஸ் & கோ., சந்தினி சௌக், டெல்ஹி.

ஸிலோன்:—ஹெக்டார், மாதெர் & கோ., 19—21. கிராண்ட்பாஸ், ரோடு, கொழும்பு,



அறிவு வளர்ச்சிக்கு வயது கணக்கில்லை

இளமையில் ஏற்பட்ட நற்பழக்கம் வாழ்நாள் முழுவதற்கும் நற்பழக்க மாகும்

பெரும்பான்மையான உயிர்ச் சேதங்களுக்குக் காரணமாயுள்ள மலேரியாவை 'பாலுட்ரின்' உபயோகத்தினால் அதிகமளவில் குறைத்துக்கொள்ளலாம்.

'பாலுட்ரின்' மலேரியா ஜுரத்தை விலக்குவதுமன்றி ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட நாளில் ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டு வந்தால் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் மலேரியாவின் பீடிப்பிலின்றும் தடுக்கச் செய்கிறது.

சிறு குழந்தைகளுக்கு கால் அல்லது அரை மாத்திரை வீதம் பெரியோர்களுக்குக் கொடுப்பது போல் தவறாமல் கொடுக்க வேண்டும்.

முன்புறம் பின்புறம்

நீங்கள் 'பாலுட்ரின்' வாங்கும் போது 8 மாத்திரைகள் கொண்ட பிரதிபேக், பளிங்கு காகித உறையில் கொடுக்கப்படுகிறதா என்று கவனிக்கவும். உண்மையான 'பாலுட்ரின்' மாத்திரைகள் மேற்கண்டவாறு குறிக்கப்பட்டிருக்கும்.

'பாலுட்ரின்'

டிரேட் மார்க்

மலேரியாவை ஒழிக்கிறது

ஒரு வாரத்திற்கு வேண்டிய ஒரு மாத்திரை
விலை ஒரு அணா

ஒரு காகித உறை
விலை 8 அணா

குணத்தின் சின்னம்

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

PH-23

List of 1st Prize Winners names for Contest No. 31: (1) Jem. R. Ram, Jubbupore. (2) S. K. Thaper, Ludhiana. (3) M. K. N. Menon, Mattancherry. (4) Qamaruddin, Dehra Dun. (5) A. Y. Kamat, N. Kanara. (6) K. P. Swamy, Sivagiri. (7) Pt. J. Koul, Chheharte. (8) K. M. Pillai, Pollachi. (9) K. Charan, Madras. (10) S. M. Moiddin, Nellore. (11) G. A. Swamy, Gooty. (12) S. S. Pillai, Tenkasi. (13) S. M. M. Khan, Tonkraj. (14) Jajuraman, Madras. (15) S. Ganesan, Trichy Dt., (16) Miss. S. V. Raman, Madras. (17) G. M. Ram, Hosadurga. (18) A. M. R. Chary, Bombay. (19) N. K. E. Poty, Nagercoil. (20) S. A. Kareem, Kolar. (21) R. H. Singh, Ludhiana. (22) M. N. R. Pillai, Tiruvalla.

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249 — போட்டி நெ. 33

M/S. Premier Bank of India Ltd..ல் சீல் செய்து வைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/- முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகளபடி எல்லாம் சரியாக இருக்கவேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S NO 31 42 TO 57=198

45	50	46	57
55	48	52	43
56	47	51	44
42	53	49	54

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No. 31 on 26.6.50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V Ramanathan
29.7.50
Agent, Madras

முடிவு தேதி 28-8-50 விடை 13-9-50

பிரவேசக்கட்டணம்:- கூபன் 1-க்கு ரூ. 1/-
6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-

206

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:- 44 முதல் 59 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில். மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும், எப்படிக் கூட்டினாலும் 206 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும். விதிகள்:- தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்படவேண்டும். பிரவேசகட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும. வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப் படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-

THE RAINBOW COMPETITIONS No. 33, 306 (6), Mint Street, MADRAS-1.

ரிஜிஸ்டர் நெ. 249 — **ரூபாய் 25,000 பரிசு** — போட்டி நெ. 34

சரியான விடை Premier Bank of India Ltd. Madras-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 13—9—50 — விடை: 27—9—50

பிரவேசகட்டணம் கூபன் 1க்கு ரூ. 1/- — 6 கூபன் கொண்ட ஸெட் 1க்கு ரூ. 5/-

210

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 45 முதல் 60 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 210 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-

The Rainbow Competitions, No. 34,
306, (6) Mint Street, Madras-1



மோட்டார் சொந்தக்காரர்களுக்கு ஓர் நற்செய்தி!

ஜார்ஜ் ஓக்ஸ் லிமிடெட்

கம்பெனியார் ஜூலை முதல் தேதியிலிருந்து சேலத்தில், மெயின் சேலம் - மதருஸ் ரஸ்தாவில், ஒரு புதிய ஸர்விஸ் ஸ்டேஷன் ஆரம்பித்திருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கிருர்கள்.

அங்கு கார், லாரி மற்றும் பஸ்களுக்கும் லூபிரிகேஷன் ஸர்விஸும், பராமரிப்பு சேவையும் தகுந்த கைதேர்ந்த முறையில் செய்யப்படும்.

இவ்விடத்தில் அசல் போர்டு சாமான்களும் விற்பனைக்கு கிடைக்கும்.

ஜார்ஜ் ஓக்ஸ் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: சென்னை

கிளைகள்: பெங்களூர், பெஜவாடா, கோயமுத்தூர், மதுரை & உதகமண்டலம்.

உப வியாபாரிகள்: * கள்ளிக்கோட்டை & தெல்லிச்சேரி: வி வி. ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட் * குண்டூர்: பெஜவாடா மோட்டார் ஸ்டோர்ஸ். * மங்களூர், மர்க்காரா & விராஜ்பேட்: பி வி. பாய் & கோ. * நெல்லூர்: டி. எஸ். ஆட்டோமொபைல்ஸ். * திருவனந்தபுரம், கோட்டயம் & திருச்சூர்: ஆர் எஸ் ஏ. ராமகிருஷ்ணன் செட்டியார். * திருநெல்வேலி: அரசங்கம்பேனி. * திருச்சிராப்பள்ளி, கும்பகோணம் & புதுக்கோட்டை: [illegible]

தென்னாடு முழுவதிலும் ஸிப்பேர் வசதியுடன் போர்டு வியாபாரிகள் இருக்கின்றனர்.

EP.

எங்கள் சுதந்திர தின வாழ்த்துக்கள் !

உங்கள் நலம் பெருக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

விசேஷ காலத்தையும்
கல்யாண காலத்தையும்
முன்னிட்டு

பட்டு &
நூல்ஜவுளிகள்

எங்களிடம் கொள்ளேகாலம் பட்டினால் தயார்செய்த பட்டுச் சேலைகளும், பல வூர் நூல் சேலை, வேஷ்டி, துப்பட்டா ரகங்களும் சாயம் காரண்டியாகவும் விலை நயமாகவும் கிடைக்கும்

தேவைக்கு உடனே முந்துங்கள்

M. நடேச ஐயர் & Co.

பட்டு ஜவுளி வியாபாரம்
9, வடக்கு மாடவீதி,
மயிலாப்பூர் - மதராஸ்

பிராஞ்சு :
26, நாகசந்திரா ரோடு, பஸவங்குடி
பெங்களூர்

N. B:—ஆர்டர்கள் குறிப்பிட்ட டயத்துக்குள் கொடுக்கப்படும்.

கட்டிட நிருமிப்பின் உறுதி யான அம்சம்

சங்கர்
I C
பிராண்ட்

சூலம் மார்க்
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட்
ஸிமெண்ட்

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

தொழிற்சாலை :
சங்கர் நகர் தாழையூத்து,
திருநெல்வேலி ஜில்லா

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
11-12, ஸெகண்ட் லைன் பீச்,
மதராஸ்—1

தென்னிந்தியா முழுவதும்
எல்லா முக்ய நகரங்களிலும்
இந்தியா ஸிமெண்ட்ஸ்
ஸ்டாக்கிஸ்டுகள் உள்ளனர்

மேன்மையின்

பெருமை அநேக வருஷ உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்

ஸைக்கிள்கள்

ஸைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு

நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிரட்வே :: :: மதராஸ்-1.

தந்தி :—"ஸைக்கிள்ஸ்" போன்: 3168

பொருளடக்கம்

விக்ருதி மலர் 10 | ஆவணி இதழ் 1

பத்தாம் ஆண்டு ...	9
பசி ...	10
அகிலன்	
சுதந்திர வித்யாலயம் ...	16
கே. எஸ். நாகராஜன்	
ஜீவ ரஹஸ்யம் ...	19
ஸ்ரீதரம் குருஸ்வாமி	
பெண்களும் பத்திரிகைத் தொழிலும்	23
லீலா கோபாலன்	
காஷ்மீர் கன்னி ...	26
நாதன்	
நொண்டியின் மனைவி ...	33
கு. நாராயணஸ்வாமி	
ஞாபகச் சின்னம் ...	41
ஆனை. ஸு. குஞ்சிதபாதம்	
ஜெய் ஸோம்நாத் (தொடர் கதை)	55
கே. எம். முன்ஷி	
பெண்களுக்கு மட்டும் ...	75
ஷிபாலி சௌத்ரி—சாரி	
விளம்பரத்தில் வள்ளுவர் ...	83
"சுகி"	
காவேரியின் கலக்கம் ...	86
ஏ. எஸ். ராகவன்	
அக்பர் லோட்டா ...	95
ராமயோகி	
அமர நிருத்யம் ...	101
ஆர். எஸ்.	
சிற்பியின் சீற்றம் ...	108
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்	

குறிப்பு:— காவேரியில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள், அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.



வாழ்க சுதந்திரம்

வாழ்க பாரத்

காவேரி

விக்ருதி மலர் 10 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | ஆவணி இதழ் 1

பத்தாம் ஆண்டு

நமஸ்காரம். இந்திய சுதந்திர சகாப்தத்தில் இது ஒருபுத்தாண்டு. காவேரியின் ஆயுளிலும் பத்தாவது ஆண்டு ஆரம்பம். நமது சுதந்திரமும் காவேரியும் ஆக்கம் உற்றுத் திகழ வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொள்வோமாக.

மலருக்கென வரவேண்டிய பல கட்டுரைகள் கைக்கு எட்டவில்லை. எதிர்பாராத பல இன்னல்களினால் அநேக அம்சங்களைக் கைவிட நேர்ந்துவிட்டது. எனினும் பக்கங்களை அதிகமாக இணைத்துள்ளோம். வாசகர்கள் இதை வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

'ஸ்திரீ' என்ற கட்டுரை ஆடி இதழில் பிரசுரமானதை வாசகர்கள் அனைவரும் படித்திருப்பார்கள் என்பது திண்ணம். ஆனால் அக்கட்டுரை பல ஸ்திரீகளின் மனதைப் புண்படுத்தியுள்ளது என்று தெரியவருகிறது. ஒவ்வொரு நாள் தபாலிலும் அக்கட்டுரைக்கு எதிர்ப்புக் கடிதங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. சில பெண்மணிகள் மனக் கொதிப்படைந்து எதிர்த் தாக்குதல் தொடங்கியுள்ளார்கள். பத்திரிகை ஆசிரியரும் ஓர் ஆண் என்ற காரணத்தினால் தாக்கப்பட்டுள்ளார் என்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

இக்கடிதங்களை எல்லாம் பிரசுரிப்பது என்பது முடியாத காரியம். அவைகளின் சாராம்சங்களை அடுத்த இதழில் பிரசுரிப்பதாக எண்ணம்.

ஆனால் ஒன்றுமட்டும் ஆத்திரமூண்ட எமது ஸ்திரீ வாசகர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறோம். ஸ்திரீ என்ற கட்டுரை ஒரு ஹாஸ்யச் சித்திரம் (Caricature) போன்றது. ஹாஸ்யக் கண்களோடு படித்து அனுபவிக்கவேண்டிய கட்டுரை. அப்படி அதை ரஸிக்காமல் ஸ்திரீகளின்மீது பாய்ச்சல் என்று எடுத்துக்கொண்டு பல ஸ்திரீகள் மனக் கொதிப்படைவதைக் கண்டு வருந்துகிறோம்.

அதற்கு எதிர்ப்படையான ஹாஸ்யச் சுவையுடன் கூடிய ஆண் என்ற கட்டுரையை ஸ்திரீ வாசகர்கள் அழகிய கற்பனையுடன் எழுதுவார்கள் என்று நினைத்தோம். ஆனால் அனேகமாக வந்துள்ள கடிதங்கள், கட்டுரைகள் அனைத்தும் நேரடித் தாக்குதலாகத்தான் அமைந்துள்ளன. அடுத்த இதழுக்குள்ளாவது அத்தகைய கட்டுரைகள் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

பசி

அகிலன்

கறுப்பன் வீட்டு அடுப்பு இரண்டு நாட்களாகப் புகையவில்லை. அதில் பூனை தன் பரிவாரங்களுடன் நிம்மதியாகப் படுத்து உறங்கியது. அவன் மனைவி வேலம்மாள் வெறுந் தரையில் அழுக்குத் துணியைக்கூட விரிக்காமல் உருண்டுகிடந்தாள். கைக் குழந்தை அவள் வயிற்றை ஒட்டிச் சவம்போல அசைவற்றுச் சுருண்டு கிடந்தது.

அரைமணி நேரமாய்க் குழந்தை கதறியது. பிறகு கத்த முடியாமல் தேம்பிக்கொண்டே வந்து, தேம்பலையும் இப்போது நிறுத்திக் கொண்டது—தாயிடம் பால் இல்லை: இரண்டு மாதங்களாகவே தாய்ப்பால் அந்தக் குழந்தைக்குப் போதியதாக இல்லை. ஆட்டுப் பாலைக் குடித்து அது தன் பசியைத் தீர்த்துக் கொண்டுவந்தது.

அந்த ஆடு ‘கொடுத்து வைத்தவர்களின்’ பசியைத் தணிக்கக் கறிக்கடை ராவுத்தரிடம் போய்விட்டது. குழந்தையைப் போலத்தான் அதைக் கறுப்பனும் வேலம்மாளும் வளர்த்து வந்தார்கள். அவர்கள் மாத்திரமென்ன ? அவர்களுடைய நாலு குழந்தைகளுமே அந்த ஆட்டின்மேலும் அதன் குட்டிகள் மேலும் உயிரைத்தான் வைத்திருந்தார்கள். உயிரைப் பிரிப்பதுபோலவே ராவுத்தர் அதை அவர்களிடமிருந்து பிரித்துக் கொண்டு போய்விட்டார்.

"நம்ம தங்கத்தை நாம் உயிரோட கொல்லவே படாது; தானு வயசு வந்து சாகறவரைக்கும் நாம் அதை வளர்க்கணும்" என்று வேலம்மாள் சொல்லியிருந்தாள். தங்கம் என்பது அந்த ஆட்டிற்கு அவள் இட்ட செல்லப் பெயர்.

"என்னுடை தங்கம்மா !" என்று ஒவ்வொரு குழந்தையும் ஓடிப்போய் அதன் கழுத்தையும் வயிற்றையும் கட்டிக்கொள்வதைப் பார்த்தால் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். அந்த வீட்டில் தங்கம் ஆடாகவா வளர்ந்தது ? இல்லை; அருமைக் குழந்தையாக வல்லவோ வளர்ந்தது.

கொழு கொழுவென்று திரிந்த அந்தச் சின்னஞ் சிறு பிராணியின்மேல் ராவுத்தர் வெகு நாட்களாகவே கண்களை வைத்திருந்தார். கறுப்பன் அவர்வலையில் அகப்படவில்லை. கடைசியில் பாழும் பசி வந்து பாசத்தைத் தின்றது. அந்த அருமையான தங்கமும் அதன் தங்கக் குட்டிகளும் இருபது வெள்ளிக் காசுகளுக்குக் கசாப்புக் கடைக்காரரிடம் கைமாற்றப்பட்டன.

வேலம்மாள் ஆட்டை விற்ற மறுநாள் விறகுச் சுள்ளி பொறுக்கிக்கொண்டு ராவுத்தர் வீட்டுவழியே நடந்துவந்தாள். அவர் வீட்டுத் திண்ணையில் அவளுடைய தங்கத்தின் பிணம் தோல் உரிக்கப்பட்டுத் தலைகீழாகத் தொங்கியது. தலையில் விறகுச் சுமையுடன் வேலம்லம்மாள் இதைப் பார்த்தாள். அப்படியே நின்று விட்டாள். அவள் நெஞ்சை, உருத் தெரியாத பிசாசு ஒன்று அப்படியே கவ்விக் கொண்டது. கண்ணீர் அருவி பாய மெதுவாக அடுத்த அடி எடுத்து வைத்தாள், ராவுத்தர் இவளைப் பார்த்து விட்டார். என்ன நினைத்தாரோ தெரியவில்லை. கையசைத்து வேலம்மாளைக் கூப்பிட்டார். வேலம்மாள் ஒன்றும் புரியாமல் நினைவற்றவளாய் அங்கே போனாள்.

"இந்தா வேலு, வீட்டுக்குக் கொண்டுபோய் எல்லோரும் குழம்பு வச்சிச் சாப்பிடுங்க" என்று கத்தியால் அந்த உடம்பில் கொஞ்சம் சதையை வெட்டி வாழை இலையில் வைத்து அவளிடம் நீட்டினார்.

"வேண்டாம்; வேண்டாம்: என்னுடை பிள்ளைக்கறி இது !......நான் மா பாவி ! வேண்டாம்" என்று மறுத்துவிட்டு, வெறியோடு வீட்டிற்குத் திரும்பினாள். அன்றைக்கு முழுவதும் பச்சைத் தண்ணீர்கூட அவள் பற்களில் படவில்லை.

2

அது மானம் பார்த்த சீமை. புதுக்கோட்டைப் பக்கத்தைச் சேர்ந்த ஒரு கிராமம்

கறுப்பன் தன்னுடைய வயலின் மத்தியில் நின்று உச்சி வானத்தை நிமிர்ந்து பார்த்தான். வயலைப் போலவே அது வெறிச்சென்று இருந்தது. பார்த்துக்கொண்டே நின்றவன் அப்படியே மண்டியிட்டுத் தரையில் உட்கார்ந்தான். இரண்டு கைகளாலும் வயல் மண்ணைக் வாரிக் கையிலெடுத்தான். கண்களில் ஒற்றிக்கொண்டான். மழை நீரை மறந்து நின்ற அந்த மண் அவனுடைய வெது வெதுப்பான இரண்டு கண்ணீர்த் துளிகளால் நனைந்தது.

திடீரென்று எழுந்தான். தெற்கு மூலையில் பார்த்தான். அவனுடைய நான்கு குழந்தைகளும் அங்கே பனை மரத்தடியில் நின்று பனம் பழத்தைப் பற்களால் கடித்து இழுத்துக் கொண்டிருந்தார்கள். மெதுவாக நடந்து, கையில் இரண்டு பனம்பழங்களையும், மூன்று வயசுள்ள பெண் பிள்ளையையும் தூக்கிக் கொண்டு வீட்டைப் பார்க்கப் புறப்பட்டான். மற்றக் குழந்தைகள் அவனைப் பின் தொடர்ந்தனர்.

அவர்கள் வீட்டிற்கு வருவதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. அடுப்படிப் பூனை இன்னும் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. இருட்டில் அதன் கண்கள் அனல் துண்டுகள் போல் பிரகாசித்தன. வேலம்மாள் கறுப்பன் கொண்டு வந்திருந்த பனம் பழங்களில் ஒன்றைத் தின்று விட்டுத் தண்ணீரைக் குடித்தாள். வீட்டில் ஏற்கனவே உப்புத் தண்ணீரில் ஊறப்போட்டிருந்த வறுத்த புளியங்கொட்டைகளை எடுத்து ஆளுக்குக் கொஞ்சமாய்க் கொடுத்தாள். குழந்தைகளுக்கு இருந்த ஆத்திரத்தில் புளியங்கொட்டைகள் கண் இமைக்கும் நேரத்தில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டன!

"என்ன வேலு, காலங்காத்தாலே புறப்பட வேண்டியதுதானே?" என்றான் கறுப்பன்.

"ஆமா; பரமக்குடி பக்கத்திலேருந்துகூடப் பத்துப் பன்னெண்டு குடும்பம் வந்திருக்கு. அங்கே இதைவிடப் பஞ்சமாம். எல்லாம் தஞ்சாவூருக்குத்தான் போறாங்களாம்! அங்கே போனா எப்படியாச்சும் பொளைச்சுக்கலாம்னு தான் சொல்றாங்க." என்றாள் வேலம்மாள்.

"காவேரியிலே புதுவெள்ளம் வந்து கடலிலே பாயுதாம்; இங்கே நம்ம பாழாப்போன சீமை இன்னம் மானம் பாத்துக் கிட்டுத்தான் இருக்கு, சுடுகாடாக்கிடக்கிற நம்ம சீமைப் பக்கம் அந்தக் காவேரித்தண்ணி வந்திச் சின்னா......" என்று தன் ஆசையை வெளியிட்டான் கறுப்பன்.—ஆசை இருந்து என்ன செய்வது? காவேரி கடலுடன் கொஞ்சிக் கொண்டு தான் இருந்தாள்; புதுக்கோட்டை மண் 'மானம் பார்த்து'க் கொண்டுதான் இருந்தது.

3

பரமக்குடிப் பக்கத்துப் பஞ்சைக் குடும்பங்களுடன் ஒன்றாகக் கறுப்பனின் குடும்பமும் தஞ்சாவூர் பட்டணத்தின் புளிய மரத்தடி ஒன்றில் குடியேறியது. முப்பது மைல் தூரத்தை மூன்று நாட்களாக நடந்து கழித்த அலுப்பில், வந்துசேர்ந்த முதல் நாள் இரவு எல்லோரும் சவம்போல் உறங்கினார்கள். தவிரவும் வழியில் இருந்த ஒரு கிராமத்தில் அவர்களுக்குக் குறைந்த விலையில் வயிறு நிறையச் சோறு கிடைத்தது.

பொழுது விடிந்தது. கறுப்பனின் குழந்தைகள் திறந்த கண் மூடாமல் ஆசையோடு பட்டணக் கரையை வேடிக்கை பார்த்தார்கள். வேலம்மாளுக்குக்கூடக் கொஞ்சம் அந்த ஊரைச்சுற்றி வேடிக்கை பார்க்கவேண்டும் போல் இருந்தது.—ஊர் எங்கே ஓடிவிடப் போகிறது? ஊரும் இருந்த இடத்தை விட்டு நகரப்போவதில்லை; வேலம்மாளும் சீக்கிரமாக அதை விட்டுப் போகப் போவதில்லை. ஆகையால் மெதுவாய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்று பொறுத்துக் கொண்டாள்.

காலை இவர்கள் குடியேறியிருந்தமரத்தடிக்கு, பத்துமணி சுமாருக்கு ஒரு பக்ஷி ஜோஸ்யன் வந்து தன் கடையைப் பரப்பினான். மரம் பெரிய மரம். நிழல் நிறையக் கொடுத்தது. மரத்துக்குப் பக்கத்தில் பெரிய வாய்க்கால் ஒன்று இருகரையிலும் நீர் பரவ, சிவந்த தண்ணீருடன் ஓடிக்கொண்டிருந்தது. இந்த மாதிரி நீர் ஓட்டத்தைப் பார்த்தவுடனேயே கறுப்பனுக்குப் புத்துயிர் வந்தாற்போல் இருந்தது, ஆனால் அந்த உணர்ச்சி நீடிக்க வில்லை. தண்ணீர் ஓட்டத்தை அவன் உற்றுக் கவனித்தான். அது வேகமாக ஓடியது; சுழித்துக் கொண்டு ஓடியது; பயங்கரமாகப் பாய்ந்து ஓடியது. திடீரென்று தெம்பு கொண்டிருந்த அவன் மனம் சஞ்சலப் படத்தொடங்கியது. ஏன்? அது அவனுக்குத் தெரியவில்லை. புது வெள்ளம் அவன் மனத்தில் பயத்தைப் பாய்ச்சிக் கொண்டு தன் பாட்டில் ஒன்றுமறியாதது போல் ஓடியது.

மரத்தடிக்கு வாடிக்கைக்காரர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராய் வந்தார்கள். பக்ஷி சாஸ்திரக்காரனுக்கு அடுத்தாற்போல் கை ரேகை பார்ப்பவன் வந்தான்; அவனுக்கு அடுத்தாற்போல் பெயர் நாமத்துக்குப் பலன் சொல்லுபவன் வந்தான். இந்த மாதிரியாக அந்தப் புளிய மரம் மூன்று காலத்தையும் அறிந்து கூறும் ஞானிகளின் கூட்டத்திற்குப் பர்ணசாலையாக விளங்கிற்று.

வேலம்மாளுக்கு இவர்களைப் பார்த்தவுடன் தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள ரொம்பவும் ஆசை உண்டாயிற்று. ஏற்கனவே பரமக்குடி சனங்களில் சிலர் இந்த ஞானிகளிடம் கூடி விசாரணையில் ஆரம்பித்து விட்டார்கள். கறுப்பனும் குறைந்த செலவான அரையணாவுக்குள் தனக்கும் தன்னுடைய மூத்தமகனுக்கும் பட்சி சாஸ்திரம் பார்த்தான். கறுப்பனுக்குப்

மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent :— T. T. KRISHNAMACHARI & Co.
12 A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

பஞ்சபாண்டவர்கள் வனவாசக் காட்சி வந்தது; அவன் மகனுக்கு ராமர் காட்டுக்குப் புறப்படும் படம் வந்தது.

"பதினைஞ்சு நாளுக்குள்ளே உங்களுக்கு நல்ல காலம் பிறக்கும். நீங்க சொந்த ஊரை விட்டு வந்திருக்கிறவங்க. பஞ்சபாண்டவர்களுக்கும் ராமருக்கும் பட்டாபிஷேகம் ஆனப்பிலே நீங்க குடியும் குடித்தனமுமா ஆகப்போறீங்க. இன்னம் பதினைஞ்சு நாளுக்குள்ளே கட்டாயம் நடக்குது பாருங்க" என்றான் அவன். ஆனால் வேலம்மாளுக்கு என்னவோ அவன் வார்த்தையில் கொஞ்சம் நம்பிக்கை குறைவாக இருந்தது.—பஞ்சபாண்டவர்கள் வனவாசம் பன்னிரண்டு வருஷமல்லவா? ராமர் காட்டில் திரிந்தது பதினான்கு வருஷங்களல்லவா?

தஞ்சாவூர்ப்பக்கம் பச்சைப் பசேல் என்றுதான் இருந்தது. அரிசியைக்கூட அங்கே அவர்கள் அடிக்கடி கண்ணால் பார்த்தார்கள். விலைகூட ரொம்பவும் மலிவுதான். ஆனால் அதை வாங்கத்தான் அவர்களிடம் காசில்லை. எப்படியோ இரண்டு மூன்றுநாள் காலத்தை ஓட்டிவிட்டார்கள். வேலம்மாளின் மூக்குப் பொட்டு, திருகாணி, மாங்கல்யம் இவையாவும் அரிசியாக மாறி புளியமரத்தடி அடுப்பில் கொதித்தது. வெறும் மஞ்சள் கயிறுமட்டும் அவளுடைய சுமங்கிலி ஸ்தானத்தின் சாட்சியாகக் கழுத்தில் தொங்கியது.

பட்டணக்கரையில் இருந்தவர்களில் அதிகம் பேர் கறுப்பனின் கண்களுக்குச் சுகவாசியாகத் தான் பட்டார்கள். கறுப்பனுக்குப் பட்டணம் தஞ்சாவூர்தான். சாயங்கால வேளைகளில் எல்லா சினிமாக் கொட்டகைகளிலும் கூட்டம் நிறைய இருந்தது. அடித்துப் புடைத்துக் கொண்டு சனங்கள் உள்ளே நுழைந்தனர். பணத்தைக் கொடுத்துக் காட்சியைப் பார்க்க அவர்கள் படாத பாடு பட்டனர்.

கறுப்பனுக்கு இது வேதனை நிறைந்த வேடிக்கையாக இருந்தது. கிராமங்கள் பஞ்சத்தால் வாடிப் பட்டினியால் துடிப்பது பொய்யா? அல்லது இந்தக் கூத்தும் பாட்டும் அதற்காக வெறி கொண்டு திரியும் சனக் கூட்டமும் பொய்யா?

கறுப்பன் பல இடங்களில் வேலைக்கு அலைந்தான். கடைத்தெருக்களில் மூட்டை தூக்குவதற்காகப் போட்டியிட்டான். விறகுக் கடைகளில் போய் விறகு வெட்டியாகத் தன்னை வேலைக்கு வைத்துக்கொள்ளும்படி கேட்டான். ஆனால் அவன் போவதற்கு முன்பே அங்கெல்லாம் பல கறுப்பன்கள் இருந்தார்கள்.

ஒரு நாள் வெளியூர் வாசிகளான பத்துப்பேர் சேர்ந்து பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்றார்கள். கறுப்பனும் அவர்களுடன் கிளம்பினான். பெரிய மனிதர்கள், மிராசுதார்கள், நிலச்சுவான்கள் இவர்களிடம் போய் அவர்களுடைய நிலங்களில் வேலை செய்வதாகக் கேட்டார்கள். அவர்கள் எல்லோரும் ஒரேயடியாக மறுத்து விட்டார்கள்.

"இன்றைக்குப் பஞ்சத்துக்காகப் பிழைக்க வருவீர்கள். நாளைக்கு நிலத்திலே பங்கு கேட்பீர்கள். உங்கள் சகவாசமே வேண்டாம். நிலமெல்லாம் தரிசாய்க்கிடந்தாலும் கிடக்கட்டும். இந்த வேலைக்காரன் தொந்தரவும் ரேஷன்காரன் தொந்தரவும் இல்லாமல் இருந்தால் போதும். எங்களுக்கு வேண்டியதை மட்டும் எங்களால் பயிரிடமுடியும். உங்களுக்காகவோ, கண்ட்ரோல் விலைக்காகவோ நாங்கள் நெல் விளைக்கத் தயாராக இல்லை" என்றார் ஒரு மிராசுதார். மற்றும் சிலர் இதே கருத்தை வேறு வார்த்தைகளால் சொல்லி வைத்தார்கள்.

சோர்ந்துபோய் எல்லோரும் தஞ்சாவூருக்குத் திரும்பினார்கள். , அங்கே ஒரு பெரிய கூட்டம் ஒரு இடத்தில் கூடியிருந்தது. யாரோ ஒருவன் ஆவேசத்தோடு கையையும் காலையும் ஆட்டிப் பேசிக்கொண்டிருந்தான்.

"நாம் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து புரட்சி செய்யவேண்டும். புரட்சி ஒன்றுதான் நமக்கு நல்வாழ்வைக் கொடுக்கும். பங்களா வாசிகளையும், சோம்பேறிச் செல்வர்களையும், உணவு உற்பத்திக்கு முட்டுக்கட்டை போடும் மிராசுதார்களையும் ஒழித்துக் கட்டுவோம்!" என்று அவன் கர்ஜனை செய்து கொண்டிருந்தான்.

கறுப்பனுடைய வேதனைக்கு அவன் பேச்சுக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது:—ஆனால் இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? பட்டினிப் பட்டாளம் ஒன்று திரண்டு, பணம் படைத்தவர்களையோ, பகல் கொள்ளைக்காரர்களையோ, பதுக்கல் பேர்வழிகளையோ என்ன செய்யமுடியும்?

புரட்சி என்ற வார்த்தைக்கே கறுப்பனுக்குச் சரியாக அர்த்தம் தெரியவில்லை. அந்தச் சொல்லால் அவன் பசிக்கு அரிசி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. சோர்ந்துபோய் மற்றவர்களுடன் மரத்தடிக்குத் திரும்பினான்.

4

கறுப்பன் தஞ்சாவூருக்கு வந்து பதினான்கு நாட்கள் ஆகிவிட்டன. மரத்தடி ஜோஸ்யன் சொன்னபடி இன்னும் அந்த நல்ல காலம் வந்தபாடில்லை. அப்படி அது வருவதாக

இருந்தால் இன்னும் ஒருநாள் பொழுதுதான் பாக்கி இருக்கிறது.

உறக்கமற்ற இரவைக் கழித்துவிட்டுக் கறுப்பன் எழுந்து உட்கார்ந்தான். உறக்கமற்ற இரவு மாத்திரம் அல்ல அது; இரக்கமற்ற இரவுங்கூட.—வாழ்வில் இத்தனை பயங்கரமான நினைவுகள் ஒருபோதும் அவனுக்கு ஏற்பட்டதே இல்லை. இத்துணை துன்பக்கனவுகள் ஒருபோதும் அவனை ஆட்டி வைத்ததே இல்லை.

விவரம் தெரிந்த தன்னுடைய நான்கு குழந்தைகளையும், விவரந் தெரியாத தன் சின்னஞ் சிறு கைக்குழந்தையையும் அவன் பார்த்தான். கைக்குழந்தை தாயின் அருகே மயங்கிக் கிடந்தது. இரவு பூராவும் அது போட்ட சத்தத்தைச் சகிக்கவே முடியவில்லை. வயிற்றுக் கொடுமையை மற்றக் குழந்தைகள் வாய்விட்டுச் சொல்லத் தெரிந்திருந்தன. அந்தச் சிசு தன்னால் முடிந்த மட்டும் கதறிவிட்டுச் சோர்ந்துவிட்டது.

"என்ன ஐயா ஜோஸியக்காரரே, பதினாலு நாளாச்சுங்களே, இன்னும் நல்ல காலம் பிறக்கலிங்களே!" என்று குருவி சாஸ்திரக்காரனைக் கேட்டாள் வேலம்மாள்.

"அதிர்ஷ்டம் வர்ரது திடீர்னுதான் வரும். சொல்லிக்கிட்டு வராது. நான் சொன்ன கெடுவுக்கு இன்னும் ஒரு நாள் பாக்கி இருக்கல்ல?" என்றான் அவன்.

அத்தோடு கறுப்பனிடம் அவனுக்குத் தெரிந்த உலக அறிவைப் பற்றியும், ஒரு பட்டணக்கரையானின் கர்வத்தோடு அவன் பேசினான். உணவு மந்திரி நிறையக் காய்கறிகளைத் தின்னச் சொல்லுகிறாராம்; பச்சைப் புல்லையும் பருத்திக் கொட்டையையும் சாப்பிடச் சொல்லுகிறாராம். இன்னும் என்னென்னவோ வழிகளையெல்லாம் பெரிய மனிதர்கள் பிரசாரம் செய்கிறார்களாம்; ஆனால் பஞ்சம் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொஞ்சமும் பயப்படவில்லையாம்.

உணவைப் பற்றிப் பேசும் பிரமுகர்களைவிட வேலம்மாள் அதிகமாக உணவு ரகசியங்களைத் தெரிந்து வைத்திருந்தாள். சோற்றுக்கற்றாழை, காட்டில் வளரும் இலை தழைகள், கிழங்குகள் இவற்றை ஏற்கனவே அவள் அரிசிக்குப் பதிலாக உபயோகிக்கத் தொடங்கிவிட்டாள்.

கறுப்பன் காலையில் மரத்தடியை விட்டுக் கிளம்பும்போது ஏதோ ஒரு முடிவுடன் புறப்படுபவன்போல் தெரிந்தது. அகத்திக்கீரையையும், அதன் சாற்றையும் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான். பகல் மூன்று மணிவரையில் தெருத் தெருவாய் அலைந்தான். மேலே நடக்க முடியவில்லை. மயக்கம் வந்தது. குழாய்த் தண்ணீரில் தொண்டையை நனைத்துக்கொண்டு ஒரு ஓரமாகத் தெருவில் உட்கார்ந்தான்.

பிச்சைக்காரர்கள் தெருவெல்லாம் காணப்பட்டார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழவர்-கிழவிகள் பல ரகம். பிச்சையெடுக்கும் நினைவே அவனுக்கு அருவருப்பாக இருந்தது:—வீர மறக்குலத்தில் பிறந்தவன் கையேந்தித் தெருவில் அலைவதா? வேறு வழி?......ஊ ஹூம்; முடியவே முடியாது! பிச்சை எடுப்பதைவிட......

அந்தப் பக்கமாகச் சின்னஞ் சிறு பெண் குழந்தை ஒன்று குதித்துக் குதித்து ஓடியது. உற்று அதைக் கவனித்தான். காலில் ஒரு ஜதை வெள்ளிக் கொலுசு கலகலத்தது.—ஏன், அதைத் திருடினால்?

சே! வேண்டாம்; ஏழைக் குழந்தைக்கு வெள்ளி நகையின் அருமை எத்தனை உயர்வானது தெரியுமா? போன வருஷம்வரை கறுப்பனின் மூத்த மகள் அழகி அதைப் போலத் தானே ஒரு சதங்கை அணிந்துகொண்டு ஜல் ஜல் என்று திரிந்தாள்!

ஏழைகளிடம் திருடுவதற்கு ஒன்றும் இல்லை. பணக்காரர்களோ எதையும் திருட்டுக் கொடுக்கும்படியாக அவ்வளவு ஏமாளிகளாக இல்லை. ஏமாளிகளாக இருந்தால்தான் அவர்கள் பணக்காரர்களாக ஆகி இருக்க மாட்டார்களே!

கறுப்பனின் முயற்சி வீண் போகவில்லை. விறகுக் கடைக்காரன் கறுப்பனுடைய பிடிவாதத்தைக் கண்டு அவனை மறுநாள் முதல் வேலைக்கு வைத்துக் கொள்வதாக வாக்களித்தான்.—பிடிவாதக்காரக் கறுப்பன் பாதிக் கூலிக்குத் தன்னை ஒப்படைக்கத் தயாராக இருந்தது கடைக்காரனுக்கு லாபகரமான விஷயமல்லவா?

கறுப்பன் சந்தோஷமாக வீடு திரும்பினான். மத்தியானப் பசிகூட அவனுள் செத்து விட்டது. ஜோசியக்காரனுக்கு இன்னும் கொஞ்ச நாள் கழித்து ஒரு வேளைக் காபி வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று அவன் தீர்மானம் செய்து கொண்டான்.—குருவி ஜோஸ்யம் பலிக்காமலா போம்!

வேலம்மாள் அவனை அன்போடு வரவேற்றாள். வேலை கிடைத்ததில் பேரானந்தம் அடைந்தாள், ஐந்து மைல்தூரம் போய்த் தானும் தன் குழந்தைகளும் பறித்து வந்திருந்த பலகீரைச் சாப்பாட்டை எல்லோருக்கும் பரிமாறினாள். தானும் சாப்பிட்டாள்.

பல கீரைச் சாப்பாட்டில் எத்தனையோ விதமான கீரைகள் சேர்ந்திருந்தன. குப்பைக் கீரை. பண்ணைக்கீரை, பருப்புக்கீரை, சிறுகீரை, தும்பைக்கீரை, தொய்யல்கீரை, முள்ளி, மணலி, நாகரஞ்சி, இன்னும் எத்தனையோ விதங்கள். தாயாருடன் சேர்ந்துகொண்டு குழந்தைகளும் தாங்கள் பறித்து வந்த விதம் விதமான இலைகளைப் பற்றிச் சொன்னார்கள்.

சாப்பிட்டுச் சில நிமிஷங்கள்வரை புருஷனும் மனைவியும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வயிறு நிறைந்திருந்தது, வேகவைக்கப்பட்ட பல கீரையால். நெஞ்சு நிறைந்திருந்தது எதிர்கால நம்பிக்கைக் கனவால். குழந்தைகள் உண்டமயக்கத்தால் தரையில் உருண்டார்கள், கைக்குழந்தை புளியமரத்தின் சேலைத் தொட்டிலில் கை சூப்பிக்கொண்டு உறங்கியது. கறுப்பனும் வேலம்மாளும் கடைசியாகப் படுத்தார்கள்.

*　　*　　*　　*

பொழுது விடிந்தது. கோழி கூவிற்று. கீழ்வானம் வெளுத்தது. சனங்கள் எழுந்தார்கள். தொட்டிலில் கிடந்த கைக்குழந்தை உதய ராகம் பாடி அழுதது.

கடைசியாகச் சூரியனும் சுள்ளென்று தன் கிரணங்களைப் புளியமரத்தடியில் பரவ விட்டான். அங்கே படுத்துக்கிடந்த கறுப்பன், அவன் மனைவி, நாலு குழந்தைகள் இந்த ஆறு பேர்களும் அப்படியே படுத்துக் கிடந்தார்கள். பக்ஷி ஜோஸ்யக்காரன் அங்கு வரும் வரையிலும், அதற்கு மேலும், பத்துப் பேர்கள் அங்கே கூட்டம் போடும்வரையிலும் படுத்துக் கிடந்தார்கள்.

அவர்கள் அப்புறம் எழுந்திருக்கவே இல்லை.

அவர்கள் பசியால் சாகவில்லை. அப்படிச் சொல்லுவது தப்பு. பசியைத் தணித்துக் கொண்டதால் செத்தார்கள். பலகீரைக்குள் இருந்த ஒரு விஷக்கீரையால், அவர்கள் கொல்ல விரும்பிய பசி அவர்களையே கொன்று தின்றது. ●

கலியாணகால விசேஷ விற்பனை

சுதந்திர வித்யாலயம்

கே. எஸ். நாகராஜன்

இரவிந்திரநாத் தாகூர் நம் நாட்டில் தோன்றிய மிகச் சிறந்த கல்வியாளர்களுள் ஒருவராவார். அவருடைய தந்தையார் தேவேந்திரர் கடைசிக் காலத்தில் தம் இருப்பிடமான போல்பூரைச் சார்ந்த சாந்தி நிகேதனம் என்ற இடத்தில் தனியே இருந்துவந்தார். ரவீந்திரரும் அங்கே சென்று கொஞ்சகாலம் அங்குள்ள வனங்களிடையே நிம்மதியாக வாழ்ந்து வந்தார். ஆசிரமங்களில் வாழ்ந்துவந்த பெரு முனிவர்களின் வாழ்வைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தார் தாகூர். அடர்ந்த காடுகளிடையே அல்லவா ஆசிரமங்களை அமைத்துக் கொண்டு, சீடர்களுக்கு உயர்ந்த தத்துவங்களைப் போதித்து வந்தார்கள் பண்டை நாட்களில்! இவ்வெண்ணம் தோன்றவே, தாகூர் தாமும் ஒரு நல்ல கல்விச்சாலையை நிறுவவேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

தாகூருக்கு, தாம் சிறு பிள்ளையாயிருக்கும்போது கிடைத்த பள்ளிப் படிப்பில் மிகுந்த அதிருப்தி உண்டாயிற்று. அவருக்குப் பள்ளி வாழ்க்கை அறவே பிடிக்கவில்லை. அது அவருக்குச் சிறை வாழ்க்கையைப்போல இருந்தது. இயற்கையின் அழகில் ஊறித்திளைக்கும் சுதந்திர வாழ்க்கையையும் உற்சாகத்தையும் பள்ளி வாழ்வு அறவே அழித்துவிட்டது. தன்னையொத்த பிள்ளைகளிடையே மிகுந்த ஊக்கத்தோடும் மகிழ்ச்சியோடும் பழகுவதை மாணவர்கள் இயல்பாகவே விரும்புவார்கள். ஆனால் மதிற் சுவர்களுக்குள் இயற்கை இன்பத்தினின்றும் வெளியே, கல்வியின் பெயரால் மாணவர்கள் புத்தகங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்வதால் அவர்களுக்கு இயற்கை இன்பம் இல்லாமற்போகிறது. இக்கொடுமையால் மாணவர்கள் சுய உணர்ச்சியை இழந்து, மனத்தையும் உடலையும் இயந்திரத்தைப்போலப் பழக்குகிறார்கள். இந்தக் கொடுமையைக் கண்டு பயந்த தாகூர், பள்ளியைவிட்டு வெளியேறிவிட்டார். இங்ஙனம் தாமே பள்ளிப்படிப்பால் பெரிதும் கஷ்டப்பட்டவராதலால், அவருக்கு ஒரு புதிய முறையில் கல்வி போதிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. சுதந்திர உணர்ச்சி, சுய அறிவு, நல்ல உடல் வளர்ச்சி, கல்வியறிவு ஆகியவற்றைப் பெறத்தக்க, அப்போதிருந்த பள்ளிகளினின்றும் முற்றிலும் மாறுபட்ட புதுமுறைக் கல்வியை மக்களுக்குத் தரவேண்டும் என்ற அவா மேலிட்டது.

சிறந்த கல்வியை நம் நாட்டுச் சிறுவர்களுக்கு வனங்களில் அல்லவா போதிக்க வேண்டும்? இதற்கேற்பச் சிறு பிள்ளைகளுக்கென ஒரு பள்ளியை அவர் சாந்தி நிகேதனத்தில் ஆரம்பித்தார். மரங்களின் நிழல் நிறையவேண்டும். ஆசிரியரது இதயங்களில் அன்பு பெருகவேண்டும். இவ்வளவேதான், இவர் ஆரம்பித்த பள்ளியின் மூலதனம். ஐந்தே மாணாக்கர்கள் வந்தார்கள். அவர்கள் வெகு சீக்கிரமே எவ்வளவோ மாணாக்கர்களை அங்குச் சேர்க்க வழி செய்துவிட்டார்கள். புராணக் கதைகளைச் சொல்லிச் சொல்லி குழந்தைகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்கள், அங்குள்ள ஆசிரியர்கள். இப்படிச் சிறு அளவில் அமைக்கப்பட்ட சாந்திநிகேதனப்பள்ளி இன்று விசுவ பாரதிப் பல்கலைக் கழகமாய், உலகத்திலுள்ள பல நாட்டுப் பிரதிநிதிகளின் கூட்டுறவுடன் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

அங்குள்ள பள்ளி ஓர் ஆசிரமத்தில் அமைந்துள்ளது. அந்தப் பள்ளியிலுள்ள மாணவர்களின் ஒரு நாளைய நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினால் அது உங்களுக்கு ஆசிரமத்தின் உள் அழகினைக் காட்டும். சூரியன் எழுமுன்பே மாணவர்கள் எழுந்துவிடுவார்கள். அவர்களில் ஒரு சிலர் முன்பே எழுந்திருந்து கடவுள் வணக்கப் பாடல்களைப் பாடிக்

கொண்டு ஆசிரமத்தைச் சுற்றி வருவார்கள். நாம் சிறிது தூரத்தே நின்று கொண்டு கேட்டால், நிசப்தமான அவ்வேளை அப்பாக்களின் ஒலியும், அங்கு இருப்பதனல் உண்டாகும் மகிழ்ச்சியும் ஆன்மாவிற்குச் சாந்தியைக் கொடுக்கின்றன.

சிறிது நேரம் கழித்து ஒவ்வொரு மாணவனும் அப்பரந்த வெளியில், ஓர் ஆசனத்



தமர்ந்து தனியாகத் தியானஞ்செய்ய ஆரம்பிக்கிறான். பிறகு பள்ளிக்கூடம் கூடுவதற்குள் குளிப்பது முதலான வேலைகளை முடித்துக் கொள்வான். பத்தரை மணி வரையில் மாணவர்கள் பள்ளியில் இருந்து படிப்பார்கள். அவர்களுக்குப் பெரிய வகுப்பறைகள் இல்லை. வானமே கூரை; மர நிழலில் ஆசிரியர்களைச் சுற்றி உட்கார்ந்துகொள்வார்கள். எட்டு அல்லது பத்து மாணவர்கள் ஒன்று சேர்ந்து ஓர் ஆசிரியரைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு கேள்விகள் கேட்பது வழக்கம். ஒரு சில புத்தகங்களையே உபயோகிக்கிறார்கள். சம்பாஷணை முறையிலேயே கல்வி போதிக்கப்படுகிறது. மாணவர்கள் தங்களுக்குள்ள கஷ்டங்களைத் தெளிவாக ஆசிரியரிடம் எடுத்துச் சொல்வார்கள். ஆசிரியரும் மாணவர்கள் மீது அன்புகொண்டு மாணவர்களுக்குள்ள சந்தேகங்களையும் கஷ்டங்களையும் நீக்க முயல்வர். இத்தகைய கல்விமுறை என்றும் அழிவுறாது.

காலைப்பள்ளி முடிந்ததும் மாணவர்கள் சாப்பிடச் செல்வார்கள். மறுபடியும் இரண்டு மணிக்குப் பள்ளிவேலை ஆரம்பமாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதாவது ஒரு கைத்தொழிலில் பயிற்சி அளிக்கப்படும். கைத்தொழில் அதிகமாகப் பழக்கத்தில் வரவே, சில மாணவர்கள் மர வேலைகளிலும், சிலர் நூற்றல், நெய்தல் முதலியவற்றிலும் தனிப்பற்றுக் காட்டுவார்கள். சிலர் ஓவியத்திலும் இசை முதலான நுண் கலைகளிலும் ஆர்வம் காட்டக்கூடும். அவரவர்களுக்கு ஏற்பக் கல்வியளிக்கப்படும் பள்ளிகள் வெகு சிலவே. அவற்றில் சாந்தி நிகேதனப்பள்ளி சிறந்து விளங்குகிறது. நான்கு மணிக்குப் பள்ளி முடிந்தவுடன் எல்லா மாணவர்களும் விளையாட ஓடி வருவார்கள்; சூரியன் மறையும் வரை விளையாடிக்கொண்டிருப்பார்கள். பிறகு எல்லோரும் தியானம் செய்ய நிசப்தமான இடத்தில் உட்காருவார்கள். இராக் காலங்களில் கதை சொல்லுவதும், நாடகங்கள் நடிப்பதும், குருதேவரது பாடல்களைப் பாடுவதும்தான் பொழுதுபோக்கு; ஒன்பது மணிக்கு எல்லோரும் படுக்கச் செல்வார்கள். மற்றொரு முறை சில மாணவர்கள் பாடிக்கொண்டு ஆசிரமத்தைச் சுற்றிவருவார்கள். மாணவர்களின் சந்தோஷமான வாழ்க்கையை எடுத்துச் சொல்ல இயலாது. அங்குக் கற்கும் மாணவர்களின் முகங்களே அவர்களுடைய மகிழ்ச்சியை எடுத்துரைக்கும். சாந்திநிகேதன மாணவர்களுடைய சுதந்திர வாழ்வைப்போல் இந்தியாவில் வேறெந்தப் பள்ளியிலும் மாணவர்களுடைய வாழ்வு அமையவில்லை.

சுயதேவையைத் தாமே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் மாணவர்களுடைய வாழ்வு அமைந்துள்ளது. காலையில் தாங்கள் குளிப்பதற்குத் தாங்களே கிணற்றினின்று குழந்தைகள் நீர் இறைத்துக் கொள்ள வேண்டும். தங்கள் படுக்கைகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் ஆடம்பரமான பொருள்களை உபயோகித்தல் கூடாது. உண்மையில் மாணவர்கள் இவ்விஷயத்தில் மிக்க எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். அவர்கள் பிற்காலத்தில் செல்வ வளர்ச்சியைத் தங்கள் குறிக்கோளாகக் கொள்ளாதிருக்க, இது பெரிதும் பயன்படும். தாகூரின் வித்யாலயத்திலே குழந்தைகளின் சுய உணர்ச்சியை வெளிப்படுத்தும் தன்மைக்கு மிகுந்த ஆதரவு அளிக்கப்படுகிறது. இசை, நாட்டியம், ஓவியம் முதலியவை கல்வியில் முக்கியத்துவம் பெறுகின்றன. குழந்தைகள், தாங்களே பத்திரிகைகள் நடத்துவர். தாகூரின் நாடகங்களையோ, அன்றித் தாங்களே தங்கள் சொந்த முயற்சியால் எழுதிய நாடகங்களையோ அன்னார் நடிப்பர்.

பிற பள்ளிகளைப் போலன்றித் தாகூரின் கல்விச்சாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற வேற்றுமை சிறிதும் இன்றி ஒரே குடும்பத்தினரைப் போல் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாசிரம வாழ்க்கையில் தான் தாகூர் பெரும்பான்மையான பாடல்களை இயற்றினர். அவற்றை எல்லாம் பிரசுரிப்பதற்கு முன், அங்குள்ள குழந்தைகளுக்கு அப்பாடல்களைத் தாமே படித்துக் காட்டுவது தாகூரின் வழக்கம்.

ஜீவ ரஹஸ்யம்

ஸ்ரீதரம் குருஸ்வாமி

ஹாஸ்யமாகச் சொல்வதுண்டு—பேரன் பாட்டிக்கு நமஸ்காரம் பண்ணுகிறான்; பாட்டி ஆசிர்வாதம் செய்கிறாள்: "தீர்க்காயுஸாக இருடா, அப்பனே! நீ இருக்கிறமட்டும் எனக்கு ஒரு குறைவும் இல்லை...அப்புறம் என்னை யார் லக்ஷியம் செய்யப்போகிறார்கள்?" என்று.

எவ்வளவு ஆசை அவளுக்கு உயிரின் மேல்! பேரன் இருக்கிறமட்டும் கவலை இல்லையாம். அதற்கப்புறமும் அவள் ஜீவித்திருக்கப்போகிறாள்! தனக்கும் ஒரு நாள் முடிவுகாலம் உண்டு என்ற எண்ணமே அவளுக்கு இல்லை. தன்னை வைத்து ஸம்ரக்ஷணை யார் செய்வார்கள் என்ற கவலைதான் அவளுக்கு. அதுவும், அவளே எடுத்துவளர்த்த குழந்தைகள் மறைகிறார்கள்; அதைப்பார்த்தும் அவளுக்கு மரணத்தைப்பற்றிய சிந்தனை வருவதில்லை. தன்னைச் சுற்றி உள்ளவர்கள் ஒவ்வொருவராக மறைய, தான் மாத்திரம் சாச்வதம் என்ற நம்பிக்கை அவளுக்கு அவ்வளவு திடம்!

பாட்டி செய்யும் ஆசிர்வாதத்தில் இவ்வளவும் உள்ளடங்கி இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஆனால், நம்மைச்சுற்றி நாம் பார்த்து வருவதற்கும், மேலே சொன்ன உள் கருத்துக்கும், ஏதாவது ஸம்பந்தம் இருக்கிறதா? நாலுபேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்பொழுது, ஸம்பாஷணை ஒவ்வொரு ஸமயம் பின்வரும் விதமாக வளர்ந்து போய்க்கொண்டிருப்பது நாம் அறியாததல்ல:—

"எங்கள் ஊர் மண்ணில் வாழை, தென்னை பிடிப்பதில்லை. உளுந்து உண்டு, நிலக்கடலை உண்டு. என் தகப்பனார் இதையெல்லாம் மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொள்வார்; கபிஸ்தலத்தில் தமக்கை வீட்டில் கொண்டுபோய்ப் போடுவார். மத்தியானம் அங்கே சாப்பிட்டு விட்டு, பத்திருபது தேங்காயும் இரண்டொரு தார் வாழைக்காயும் கோத்து எடுத்துக்கொண்டு விளக்கு வைக்கும் நேரத்திற்கு வீட்டிற்குத் திரும்பிவிடுவார். பதினாலும் பதினாலும் இருபத்தெட்டு மைல்—அவருக்கு ஒரேநாளில் போய் வருவது ஒரு பிரமாதமில்லை."

"என் தகப்பனார் தோட்டம் முழுவதும் அவரே வெட்டிக்கொத்தி ஜலம் பாய்ச்சுவார். தலையில் துணியைச் சுற்றிக் கொண்டு ஏற்றம் இறைப்பார். வெய்யில், பனி, எதுவும் அவரை ஒன்றும் செய்யாது. அவருக்கு எழுபதாவது வயதில் இருந்த திடம் எனக்கு முப்பதாவது வயதில் இல்லை.

"என் பிதாமஹர் மூன்றுதரம் காசிக்குப் போய்விட்டு வந்தார்—கால்நடையாகத்தான்! மூன்றாவது தடவை அவர் திரும்பி வந்தபோது கிராமத்து எல்லையில் மேளம், பூர்ண கும்பம், இதோடு அவரை எதிர்கொண்டு அழைத்து வந்ததும், பஜனை மடத்தில் அவர் காவடி கட்டிக் கொண்டு வந்த கங்கா தீர்த்தத்தை இறக்கி அதற்குப் பூஜை, ஸமாராதனை, செய்ததும் எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது."

"டாக்டர் க்ளோரோ பாரம் கொடுக்க வேண்டும் என்றார். 'ப்ராரப்தம் இதற்கு ஆபரேஷன் செய்யவேண்டும் என்று; ஆனால் க்ளோரோபாரம் வேண்டாம், ஸாதாரணமாக ஸத்ர சிகிச்சை செய்தால் போதும்' — என்று சொல்லிவிட்டார் பெரியவர். முக்கால் மணி ஆகி இருக்கும் உள்ளே இருப்பதையெல்லாம் கீறி எடுத்து, மருந்து வைத்துக் கட்ட. அவ்வளவு நேரமும் அவருடைய வாய் புருஷ ஸூக்தத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அதிகமாக வலிக்கும் ஸமயத்திலும் பகவந்நாமாதான் அவர் சொன்னாரே தவிர அப சப்தம் எதுவும் அவர் வாயிலிருந்து வரவில்லை. டாக்டர்களே இந்த ஆச்சரியத்தைப் பார்த்துப் பிரமித்துவிட்டார்கள்."

இவ்வளவு தேஹ திடமும் மனோ திடமும் இன்றைக்கு எங்கே? ஷஷ்டியப்த பூர்த்தியும் சதாபிஷேகமும் கிருஹங்கள் தோறும் ஸஹஜமாக இருந்து வந்தது போக, இன்றைக்கு வரவர அரிதாகிக்கொண்டுவர என்ன காரணம்? "1930க்கும்' 40க்கும் இடையில் அமெரிக்கரின் சராசரி வயது நாலு வருஷம் அதிகம் ஆயிற்று. ஒவ்வொரு அமெரிக்கனும் சராசரி அறுபத்து நாலு வருஷம் உயிர் வாழ்வான் என்ற நம்பிக்கை இப்போது இருந்து வருகிறது. இந்தியரின் சராசரி வயது **முப்பதுக்கும் குறைவு.** ஜப்பானில் நாற்பத்தெட்டு. இத்தாலியில் ஐம்பத்தைந்து. அமெரிக்கரின் சராசரி வயதான அறுபத்து நாலைவிட அதிகமுள்ள நாடுகள் ந்யூஸிலண்டும் ஆஸ்திரேலியாவுமே. இப்போது கிடைத்துள்ள நவீன வைத்திய அநுபவத்தைக் கொண்டு இன்னும் பத்து வருஷங்களுக்கு மேலாகவே சராசரி வயது நீடிக்கும்படி செய்துவிடலாம் என்பது அமெரிக்கரின் உறுதியான நம்பிக்கை" — என்றெல்லாம் ஸென்ஸஸ், இன்ஷ்யூரன்ஸ், வைத்திய இலாகா, வெளியீடுகளில் நாம் பார்க்கும்போது அவமானம் நம்மைத் தலைகவிழச் செய்கிறது, வருத்தம் நம் மனதைக் கருக்கி வாட்டுகிறது.

நியூஸிலண்ட், ஆஸ்திரேலியா! இவை மாத்திரம் புண்ய பூமிகளா? இல்லை. அங்கே மனிதர் பெரும்பாலும் திறந்த வெளிகளில் கடுமையாக உழைப்பதுதான் அவர்களுடைய நீண்ட ஆரோக்கிய வாழ்க்கையின் ரஹஸ்யம். "கெட்டும் பட்டணம் சேர்!" என்ற பழமொழியைக் கைக்கொண்டுவிட்டோம். "கிராமத்திற்குப் போ!" என்றால், அங்கே போய் என்ன செய்ய? விடுமுறைக்காகத் தப்பித் தவறிச் சென்றாலும், இரண்டொரு நாள் அங்கே பொழுது போக்குவதே சிரமம். காலை வீசி நடப்பதும் கையைக் கொண்டு உழைப்பதும் இடையில் அற்றுப்போன பழையகால வழக்கங்கள் இன்றைக்கு. கிராமத்தில்தான் என்ன? வாய்க்கால் வெட்டவேண்டும், தூர்ந்துபோன குளத்தைச் சீராக்க வேண்டும் என்றால், காணிக்கு இத்தனை என்று வரிப்பணமாகக் கொடுத்துக் கூலியாட்களை வைப்போமே தவிர, நமது சொந்தக் காரியத்திற்கோ ஸமுதாய நன்மைக்கோ நாமே மண்வெட்டி பிடிப்பது அகௌரவம் என்ற நிலைக்கு வந்து விட்டோம். பரீக்ஷையில் தான் நூற்றுக்கு முப்பத்தைந்து வாங்கினால் போதாதா என்ற மனப்பான்மை வந்து விட்டது என்பதில்லை. எல்லாத் துறைகளிலும் அப்படித்தான். சாண் அளவு மண்கூட வீணாகக்கூடாது என்று, அதற்கு ஒரு வேலி அமைத்து ஒரு அவரைக் கொடியோ பாகற்கொடியோ நட்டு அதற்கு நீர் ஊற்ற நமக்கு உடம்பு வளைவதில்லை. "எட்டணா பத்தணா வீசி எறிந்தால் ஒரு வீசை அவரைக்காய் மார்க்கெட்டில் வாங்கிவிட்டுப் போகிறோம். இதற்காக மாஸக்கணக்கில் ஜலம்கொட்டி, அதற்குக் குச்சிதேடி, கம்புதேடி, பந்தல் போட்டு, யார் சிரமப்படுகிறது?" ரூபாய் அணா கணக்கு இருக்கட்டும். பூமிக்கும் நமக்கும் தொடர்பு லேசில் கிடைக்குமா? "அந்த அஸுரன் பூமியைத்தொட்டால் அவன் பலம் பத்து மடங்கு வளரும்" என்று புராணங்களில் எழுதியிருந்தால், அது அஸுரர்களுக்கு மாத்திரம் அல்ல. பூமியன்னையோடு சேர்ந்து எவ்வளவுக்கெவ்வளவு உழைப்பில் நாம் ஈடு படுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய பலமும் வளரும், ஆயுளும் வளரும், திறந்த வெளி, தூயகாற்று, மண் திருத்தி உழைப்பது, இவை மூன்றும் ஆரோக்கிய வாழ்க்கையின் அடிப்படை. அப்புறம், நாம் வளர்த்த ஜீவன் தழைத்துப் பலன் தருவதைப் பார்ப்பதற்கு ஈடான ஆனந்தம் நம் மனதிற்கு வேறு எங்கு உண்டு?

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுதல் நல்ல குணமல்ல. ஆனால், தினசரி வாழ்க்கையில், நம்முடைய நம்பிக்கையும் படிப்பும் ஒருவிதமாகவும், நடத்தை வேறு விதமாகவும்—அற்பகாரியங்களில் கூட—இருப்பது அதைவிடத் தாழ்ந்த நிலையைத்தான் குறிக்கிறது. பத்துமணிப் பள்ளிக்கூடத்திற்கோ ஆபீசிற்கோ, சாப்பிட உட்காருவது எப்பொழுது, சாப்பிடுவது எப்படி, அதற்கப்புறம் கடைப்பிடிக்க வேண்டிய ஆரோக்கிய விதிகள் என்ன ஆகின்றன? பாதி வழியில் பையன் பறக்கப் பறக்கத் திரும்பி வீட்டிற்கு ஓடுகிறான். அவன் கையிலுள்ள இடைக்கால உணவுப் பாத்திரம் மூடி கழன்று வழியில் உருள்கிறது. என்னவென்று கேட்டால், காப்பி நோட்டோ, ஜ்யாமெட்ரி பாக்ஸோ, எடுத்துச் செல்ல மறந்து விட்டான்.

அதையும் எடுத்துக்கொண்டு, குறித்த காலத்தில் பள்ளிக்கூடம் போயாக வேண்டுமே! இரவில் அவன் விளக்கடியில் படிப்பதென்ன? "ஆகாரம் உட்கொண்ட பின் நாம் சிறிது ஓய்வு கொள்ளவேண்டும். கடுமையான உழைப்பில் உடனே ஈடுபட்டால் ஜீரண உறுப்புக்கள் சரியாக வேலை செய்யமுடியாது. நம்முடைய ஆரோக்கியம் கெட்டுவிடும்." படிப்பதெல்லாம் யாருக்காக, எதற்காக? இயற்கை விஞ்ஞானப் பரீக்ஷையில் இரண்டொரு மார்க்குகள் வாங்குவதற்காக! தினசரி வாழ்க்கையில் உறுதியாகப் பின்பற்றுவதற்கு அல்ல! ஆங்கிலேயரின் தனி மேன்மையை எடுத்துசசொல்கிருர் பால்ட்வின் பிரபு:—"ஆங்கிலேயராகிய நாம் முணு முணுக்கிறோம், எப்பொழுதும் சிறு விஷயங்களை எதிர்த்து முணு முணுத்து வந்திருக்கிறோம். கூச்சல் போடுவோம், இரைந்து கத்துவோம்; ஆனால் கவலைப்படுவதில்லை; உள்ளூறக்கவலை மனதை அரிக்கும்படி நாம் விடுவதில்லை. இதில் ஒரு பெரும் உண்மை இருக்கிறது. வெளிப்படையாக முணு முணுக்காமலே இருந்து, கவலையினால் மனதிற்குள் மாத்திரம் வெதும்பி உருகிப் போகிற அயல் நாட்டார் உண்டு. முணு முணுப்பதென்பது வெறும் மேல் பரப்பில். அது ஒருவர் குணத்தைப் பாதிக்காது. கவலைக்கு இடம் கொடுக்காததால் ஆங்கிலேயனின் நரம்புத் தொகுதி ஆரோக்கியமும் நிதானமும் நிறைந்து விளங்குகிறது. ஆகவே நெருக்கடிகள் நேர்ந்தால், அவனுடைய உணர்ச்சி நரம்புகள் செவ்வையாக நெருக்கடிக்கு ஈடு கொடுக்கும்; மற்ற நாட்டினரோ அப்பொழுது மக்கி மனமுடைந்து போவார்கள்" என்று.

"நெருக்கடியாகவே படைக்கப் பட்டவன் ஆங்கிலேயன். திடீரென்று கஷ்ட நஷ்டம் வரும்போது ஆங்கிலேயனின் மன அமைதி அதிகமாகிறது. ஸாதாரண நாட்களில் ஆங்கிலேயன் அசட்டையாகவே இருப்பான். வெகு நாள் கழித்துத் தனக்கு வரப்போவதை முன் கூட்டியே நினைத்துத் துக்கப்பட மாட்டான். பிறர் செய்யும் எச்சரிக்கை அவன் காதில் விழாது. எதற்கும் தான் முதலில் ஆயத்தம் கொள்ள மாட்டான். ஆனால் ஒரு காரியத்தில் தீர்மானமாக இறங்கிவிட்டால் உயிர் போனாலும் அவன் காரியத்தை விடமாட்டான். காரியத்தை நிறைவேற்றுவைப்பதிலும் தயை தாக்ஷிண்யம் பார்க்க மாட்டான். இந்தக் குணங்கள்தாம் இப்போது அவனுள்ள நிலைமையில் அந்த ஆங்கிலேயனைக் கொண்டு அமர்த்தியிருக்கின்றன. இந்தக் குணக்களால்தான் இங்கிலாந்தும் ஆங்கில ஸாம்ராஜ்யமும் இப்போதுள்ள நிலையை அடையும்படி அவனால் செய்ய முடிந்தது" என்று மேலும் சொல்கிருர் பால்ட்வின் பிரபு. கால் நூற்றாண்டுக்கு முன் (1924ல்) அவர் சொன்ன வார்த்தைகள் இவை. அதற்கப்புறம் மறக்கவொண்ணாத சோதனையில் அதே ஆங்கிலேயன் சிக்கிக்கொண்டான். ஆனால் அவன் கவலைப்படவில்லை, தத்தளிக்கவில்லை. உடும்புப் பிடி போன்ற உறுதியைக்கொண்டு வெற்றிக்கு வழி தேடினான். சோதனை தோற்றது. மனிதன் வென்றான்.

"வெளிப்படையாகப் பொறுமையைக் காட்டி, கவலையினால் உள்ளுக்குள் உருகும் அயல் நாட்டினர்" என்று பால்ட்வின் பிரபு சொன்னது நம் தலைமுறையைச் சேர்ந்த இந்தியருக்கு முழுவதும் பொருந்தும். "சிதை உயிரற்ற உடலை எரிக்கிறது; சிந்தை உயிருடன் கூடிய உடலையே எரித்துவிடுகிறது. சிதையை விடச் சிந்தை(கவலை)க்கு வலிமைஅதிகம்" என ஸம்ஸ்க்ருதத்தில் சொல்வதுண்டு. ஏராளமான வருவாயுள்ள மேல் வகுப்பாருக்கும் அன்றாடம் உழைத்து ஜீவனம் நடத்தி வரும் கீழ் வகுப்பாருக்கும் இல்லாத கவலை இரண்டிற்கும் இடையிலுள்ள மத்திய வகுப்பாருக்கு ஏற்பட்டிருக்கிறது. பிள்ளை பரீக்ஷை எழுதினால் முடிவு என்ன ஆகுமோ என்ற கவலை. அவன் தூர தேசம் போனால் கவலை. பெண்ணின் கல்யாணத்திற்காகக் கவலை. குழந்தைகளுக்கு வியாதி வந்தால் கவலை. வருவாய்க்கும் செலவுக்கும் சரிக்கட்ட முடியாமல் கவலை. இதெல்லாம் போதாதென்று, ஷேர் மார்க்கெட் நிலவரம், அயல் நாட்டுப் போர், தன் எதிர்கால வாழ்க்கை — ஒவ்வொன்றைப் பற்றியும் கவலை. இரண்டொரு வார்த்தையில் யாரையேனும் உரக்கத் திட்டிவிட்டு எல்லாவற்றையும் அதோடு மறந்து, நிம்மதியாய் இலையில் உட்கார்ந்து உணவை ரஸித்து உண்ணும் பழக்கம் கிடையாது. கலகலப்பாக விளையாட்டிலும் தமாஷ் பேச்சிலும் மனதைச் செலுத்திப் பிறகு

நிம்மதியாகப் படுத்துத் தூங்கவும் முடிவதில்லை. 'கவலை பூனையையும் கொன்றுவிடும்!' ஏன்? 'பூனைக்கு **ஒன்பது** உயிர்; நமக்குள்ள **ஒரு** உயிரை மாய்க்கவா கவலைக்குத் திறமையில்லை?

"அந்தக்காலத்து மண்; கழுந்து மாதிரி; நூறு வயசானாலும் கட்டுவிடாத தேஹம்;" என்று சொல்லிப் பிரயோஜனமில்லை. அந்தக் காலத்திற்கு மண் வேறு, இந்தக் காலத்திற்கு மண் வேறு என்று மண்ணைப்பற்றிச் சொல்வதோடு நம்முடைய பொறுப்பு முடிந்துவிடாது. தனக்கு ஸமானமான, தன்னைவிடச் சற்று வலிமை அதிகமுள்ள ஒருவனோடு போட்டி விளையாட்டில் ஈடுபட்டால், எப்படிக் கண்ணும் கருத்துமாக விளையாடிப் பிறகு விச்ராந்தியை அடைவோமோ, அதைப்போல வாழ்க்கையையும் ஸ்வாரஸ்யம் நிறைந்த ஒரு விளையாட்டாகப் பாவித்துக் குடலுக்கு வேலை தருவதற்குச் சரியாக உடலுக்கும் வேலை கொடுத்து, இயற்கையோடு தொடர்பு அமைத்துக் கொண்டுவிட்டால், நம்முடைய சராசரி வயது குறைந்துகொண்டே போக இடமில்லை; ஆயுள் வளர்வதோடு வாழ்க்கையிலுள்ள ஆனந்தமும் வளர்ந்துவரும் என்பது நிச்சயம்.

உறுதியுள்ள கன ஸ்டீல் தகட்டினால் வேலைப்பாடுகளுடன் பல்வேறு மாதிரியில் திருப்தியளிக்கும் கலர்களில் தயாரிக்கப்பட்டு வருவதுதான்

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு, சூட்கேஸ்கள்

டிரேட்

மார்க்

பொதுமக்களின் 25 வருஷ தொடர்ந்த அன்பும் ஆதரவுமே இதற்கு அத்தாட்சி

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்

341, எஸ்பிளனேட் சென்னை.

Telegrams:- "SUITCASE" Telephone No. 3094

பெண்களும் பத்திரிகைத் தொழிலும்

லீலாகோபாலன்

இத் தலையங்கத்தைப் படிக்க ஆரம்பிக்கும் என் நண்பர்கள் "ஏன் பெண்களுக்கு ஏற்ற தொழில் இது தானா" என்று கேள்வி கேட்க ஆயத்தமாவீர்கள், இன்னும் சில நெருங்கிய நண்பர்கள் பத்திரிகாசிரியரின் மனைவி இத்தொழிலைப்பற்றிக் குறைகூறாமல் என்ன பிரமாதமாகச் சொல்லப் போகிறாள் என்றும் நினைக்கலாம். ஆனால் நான் மேலே எழுதிக் கொண்டு போவதைப் படித்தால் ஒவ்வொருவரும் கட்டாயம் தம் அபிப்ராயத்தை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்.

தற்போது, அதுவும் எங்கும் சுதந்திரம். பெண்கள் விடுதலை, தேசத் தலைவரின் கொலை, சினிமாநடிகையின் காதல் மணம் என்றெல்லாம் அமர்க்களப் படும் நாளில் பத்திரிகைத் தொழில் மிகவும் கஷ்டம் என்பதை எல்லோராலும் நன்கு அறிய முடியும். ஆனால் "என்ன வெறும் பேப்பர்காரன் தானே" என்று அலக்ஷியம் செய்வது நம் நாட்டில் குறையவே இல்லை. பெண்களுக்கும் இத்தொழிலுக்கும் சரி வருமா என்பதை நன்றாக விஸ்தரிப்பதற்கு முன் இந்தத்தொழிலைப் பற்றியே சிறிது பார்க்கலாம்.

பத்திரிகைத் தொழிலிலுள்ளவர் தலைமை ஆசிரியராக இருந்தாலும் சரி, சிறிய செய்தி கொண்டுவரும் குமாஸ்தாவாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வேலை செய்யும் நேரம் கணக்கில் வராது. சாப்பாடு வேளை விட்டு வேளை. தூக்கம் அதைவிடக் கேட்க வேண்டாம். வீட்டிற்கு வந்து அப்பாடி என்று உட்கார்ந்து சற்றே பெண்டாட்டி பிள்ளைகளிடம் வாயாரப் பேசலாமென்றாலோ, யாராவது ஒருவன் ஒன்றும் அவசர சமாசாரமே இருக்காது, ஒரு அல்ப சங்கதிக்காகச் டெலிபோன் செய்வான். படுக்கும் கட்டில் அருகிலும் டெலிபோனை வைத்துத் தூங்கும் பத்திரிகாசிரியர்கள் எவ்வளவு பெயர் தெரியுமா? பாவம்தான்! இவ்வளவு கஷ்டங்களையும், இன்னும் பல தொந்தரவுகளையும் தெரிந்து கொண்டு பெண்களையும் பத்திரிகைத் தொழிலையும் சேர்க்கிறாயே என்று என் சகோதரிகள் கோபிக்கிறார்கள்.

லண்டனில் வந்து, பலஇளம் பெண்களையும், உற்சாகத்துடன் முன்னின்று உழைக்கும் குடும்பப் பெண்களையும் பத்திரிகாலயங்களில் பார்த்து நேரில் கண்டறிந்த எனக்கு, பெண்களால் பத்திரிகைத் தொழில் செய்ய முடியாது என்பது இல்லை, மனம் இருந்தால் மார்க்கம் எதற்கும் இருக்கிறது என்றுதான் தோன்றுகிறது. எல்லா மற்ற வேலைகளுக்கும் போல் மூளை வேண்டும், பொறுமை, கற்பனாசக்தி, எழுத்துக்களைக் கோவையாக எழுதத் திறமை எல்லாம் மிகவும் அவசியம்.

கீழ் நாடுளில் இப் பத்திரிகை உலகத்திற்கு முன்வருபவர் எண்ணிக்கை வெகு வெகு சொல்பம். ஏன் இல்லை என்றே சொல்லலாம். ஆனால் இங்கோ எண்ணற்ற பெண்கள் வாராந்தர சஞ்சிகை ஸ்தாபனத்திலோ, மற்றப்பத்திரிகாலயங்களிலோ, வேலை பார்ப்பதோடு இல்லாமல் பேரும் புகழும் அடைந்து வருகிறார்கள். ஆனால் மணமுடித்து, குழந்தை குட்டிகளுடன் இருக்கும் பெண்கள்மட்டும் இதைச் செய்ய அவ்வளவாக முன் வருவதில்லை. இவர்களுக்கு ஏதோ சில மணிக் கணக்கில் உத்யோகம் பார்க்க முடியுமே தவிர வீட்டுக் கவலைகள் மத்தியில் சாப்பாடு, தூக்கம், ஓய்வு இல்லாமல் உழைக்க முடி

யுமா? ஆனால் இதற்கும் விலக்கு இல்லாமல் இல்லை. என் சினேகிதி ஒருத்தி தன் வீடு, கணவன், நான்கு குழந்தைகள் (அதிலும் கடைசி பையன் பிறந்து 4 மாதம் தான்) இவர்களை எல்லாம் பார்த்துக் கொண்டு ஏதோ வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு விடாமல் பிரதி வாரமும் செய்திக் கடிதம் எழுதிக் கொண்டுதான் இருக்கிருள். "எப்படி இதை எல்லாம் சமாளிக்கிருய்" என்று கேட்டதற்கு, "பகல் எல்லாம் குழந்தை, கணவன் வீட்டைக் கவனிப்பேன், இரவில் உட்கார்ந்து மணிக் கணக்கில் எழுதுவேன், வேலையோடு வேலையாய் வெளியில் சென்று செய்திகளையும் கொண்டு வருவேன். எனக்குப் பத்திரிகைத் தொழிலில் மிக்க ஆசை. அதனுல்தான் எவ்வளவு கஷ்டமிருந்தும் நான் அதை விடவில்லை.'' என்று பெருமையாக மார் தட்டிச் சொல்லுகிருள்.

இங்குள்ள மற்ற அலுவல் பார்க்கும் பெண்கள் உதாரணமாகப் பார்லிமெண்ட் சங்கத்தவர், டாக்டர்கள் ஏன் சினிமா நடிகைகள் உள்படப் பலர், பெண் நிருபர்களிடம் அந்தரங்கமான விஷயங்களைக் கூடச் சொல்லி விடுவார்கள். பிறரிடம் பேசி அவர்கள் ரகசியங்களைக் கவருவதில் பெண்கள் மிகவும் சாமர்த்தியம் உள்ளவர்கள் என்று எப்பொழுதும் பிரசித்தம் தானே. அதனுலேயே அநேகம் லண்டன் பத்திரிகைகள் பெயர் போனவர்களின் இல்வாழ்க்கையில் உள்ள குற்றம் குறைகளைக் கூட ஜனங்கள் கவனத்திற்கு இழுத்து விடுகிறதாகச் சொல்லப் படுகிறது. ஆனால் இவற்றிற்கெல்லாம் காரணம் முக்கியமாகப் பெண்கள் தாம் என்றும் சொல்ல முடியாது என்கிருர் ஒரு ஆண்மகன். இவர்கள் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதில் நாம் தலையிடுவானேன். மேலே பார்க்கலாமா:

பெண்கள் மனோபாவத்தைப் பெண்கள் தாம் எடுத்துரைக்க முடியும் அல்லவா? அந்த விஷயத்தில் இந்நாடு எவ்வளவோ முன்னேறித் தான் இருக்கிறது. இங்கிலாந்தில் இப்பொழுது உலாவிவரும் பெண்களுக்கு மட்டும் பிரத்யேகமான வாராந்தர சஞ்சிகைகளும், மாதாந்தர வெளியீடுகளும் எண்ணிக்கையில் அடங்கா. விலையெல்லாம் ½ அணு, 1 அணுக்குள் தான். ஒவ்வொன்றிலும் பெண்களுக்கு முக்யமாகத் தெரிய வேண்டிய செய்திகள், சமையல் (நம் கீழ்நாட்டுச் சமையல் அல்ல) புது நாகரிகம், விவாகத்திற்குப் புத்திமதி, குழந்தைகள் பராமரிப்பு, தோட்டக் குறிப்பு, வீட்டுக் குறிப்பு இன்னும் எவ்வளவோ பல உபயோகமான கட்டுரைகள். தொடர்கதையாக வரும் காதல் நவீனமும் இல்லாமல் போகாது. நடு நடுவில் உற்சாகம் வேண்டாமா?

இதெல்லாம் போதாதென்ருல் "மனதைத் திறந்து கேட்கும் பகுதி" Heart to Heart என்றென்று இருக்கிறது. இதில் வீட்டில் உள்ள அற்ப சச்சரவுகளை எப்படிப் போக்கடிப்பது, மாமியார் மருமகள் சண்டைத் தீர்ப்பு, பிள்ளைக்கும் தாய்க்கும் ஒற்றுமை, கைவிட்டுச் சென்ற காதலனைப் பற்றிய விவரங்கள் எல்லாம் இருக்கின்றன, ஒவ்வொரு கேள்வியும் பரிதாபமாகவோ, வேடிக்கையாகவோ அல்லது பிடிவாதமாகவோ காணப்படும். இதனுல் இந்நாட்டுப் பெண்கள் எவ்வளவோ நன்மை அடைவதாகச் சொல்கிருர்கள்.

மற்ருெரு பகுதி "பெண்களுக்குத் தெரிய வேண்டியது" "What women want to know" என்பது. இதில் உடல் நிலை சம்பந்தமாகக் கேட்கப்படும் கேள்விகளும் தகுந்த விடைகளும் அந்தந்த நிருபரின் அனுமதியின் பேரில் பிரசுரிக்கப் பட்டிருக்கும். உடல் நிலை என்ருல் என்ன—ஒருத்தி, "கால் நின்ருல் வலிக்கிறதே" என்பள். இன்னொருத்தி "குழந்தைக்கு ஆகாரம் கொடுத்ததும் வாந்தி செய்கிறது" என்று கேட்பள். மற்ருெருத்தி "எனக்குக் குழந்தையே பிறக்கவில்லை" என்று குறை கூறுவள். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அங்கேயே இதற்கென்று தனியாக அமர்த்தப் பட்டிருக்கும் பெண் டாக்டர் ஒருவர் சரியான பதில்களைக் கொடுக்கிருர்.

இந்த இரு விசேஷ பகுதிகளைத் தவிர, "Shopping Centre" கடைகளில் முக்யமாக என்ன புதிய சாமான்கள் கிடைக்கின்றன என்பதைப் பிரசுரிக்க, ஒரு புதிய பகுதி ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாரமும் கடைகளில் ஏதாவது

சாமான்கள் உபயோகமாகித்தான் வருகின்றன. ஆனால் தினமும் கடைகளில் சென்று சுற்றிப் பார்க்க முடியுமா? அதுவும் என்னைப்போல் அதிகம் சுற்றப் பிடிக்காதவருக்கு இந்த விசேஷச் செய்திகள் எவ்வளவு உபயோகம் தெரியுமா? நமக்குத்தேடிக்கிடைக்காவிட்டால் அவர்களே சிரமப்பட்டு வாங்கியும் கொடுக்கிறார்கள்.

சென்ற சில வருஷங்களாக லண்டனில் பெண்கள் மத்தியில் மிகவும் புகழ் அடைந்துவரும் பத்திரிகாசிரியர் Rebecca West என்ற அம்மையார். இவர் பல இதர நாடுகளுக்கும் ஏதாவது விசேஷச் செய்தி இருக்கும் என்றால் அனுப்பப்பட்டு, எல்லோருக்கும் முன்னே தம்மால் முடிந்த செய்திகளைப் பறக்கவிடுகிறார். இவர் எழுதப் போகும் கட்டுரைகளோ செய்திகளோ மறுநாள் பேப்பரில் வரப்போகிறதென்றால் பேப்பர்களுக்கும் ஏக கிராக்கி என்று சொல்லப்படுகிறது.

பத்திரிகைத் தொழில் பார்ப்பவர் எவருக்குமே ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி இந்நாட்டில், கொடுக்கப்படும் மரியாதை எங்கும் கிடைக்காது. மணிக்கு மணி பிரசுரிக்கப்படும் செய்திகளைப் படிப்பதில் உற்சாகம் ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களும் போட்டியிடுகின்றனர். இருபாலாரும் பத்திரிகை, செய்திகள், தேச முன்னேற்றம், அந்தந்த நாளும் நடக்கும் பார்லிமெண்ட் சர்ச்சைகள்—இவைகளில் சிரத்தை காட்டுவதால்தான் நிருபர்களும் போட்டியிட்டுச் செய்திகளைத் திரட்டுகிறார்கள். ஏதோ கடன் இழவே என்று பத்திரிகாலயத்தில் போய் உட்காராமல் எதிலும் ஓர் உற்சாகம் இருந்தால் உலகமே முன்னுக்கு வராமல் இருக்குமா? நம்மைப் போன்ற சாதாரண நபர் ஒருவர் பிரசித்தி பெற்ற ப்ளீட் (Fleet) தெருவுக்குள் நுழைந்து ஒவ்வொரு பத்திரிகாலயத்திலும் நுழைந்தால் பெண்களின் உற்சாகத்தைக் கட்டாயம் கண்டு, பெண்களுக்கும் பத்திரிகைத் தொழிலில் அனுபவம் இருக்கிறது தெரியவரும். நம் நாட்டுப் பெண்மணிகளும் இந்த வழியைப் பின்பற்றினால் நமக்கும் பெருமை நண்ணும் என்பது திண்ணம். ●

மாதவிடாய்

நின்று விட்டதா?
கவலை வேண்டாம்

எச்சரிக்கை: ரஸாயனத்துக்கு ஒவ்வாத மருந்துகளை உபயோகப்படுத்தாதீர்கள்; அந்த வழக்கம் மிகவும் ஆபத்தானது. அரசாங்கத்தாரின் அங்கீகாரம் பெற்ற மருத்துவரின் '**ராஜோ-நியமோனி**'யை உபயோகியுங்கள்; அது ஆபத்து இல்லாதது. மிகவும் மோசமான நிலைமையாக இருந்தாலும் 24 மணி நேரத்தில் விடாயாவது நிச்சயம். என்ன காரணத்தால் விடாய் நின்றிருந்தாலும்—4 அல்லது 5 மாதமாயிருந்தாலும் கூட—கவலையில்லை; விடாயாவது நிச்சயம். உத்தரவாதமுள்ளது.

விலை ரூ. 5 தபால் சிலவு 14 அணா. தீராத நெடுநாள்பட்டதற்கு "**ஸ்பெஷல் ராஜோ நியமோனி**" விலை ரூ. 14–8–0. தபால் சிலவு தனி.

'**ரோதனி**': கர்ப்பத்தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. ஒரே முறைதான் உபயோகப்படுத்தவேண்டியது. தேக நலனோ, மாத விடாயோ இதனால் பாதிக்கப்படுவதில்லை. மருத்துவர்களும், உபயோகப் படுத்துகிறவர்களும் இதை மிகவும் பாராட்டுகிறார்கள். உத்தரவாதமுள்ள மருந்து.

நிலையான கர்ப்பத்தடைக்கு விலை ரூ. 6
தற்காலிகத் தடைக்கு ரூ. 3
தபால் சிலவு 14 அணா

வயிற்று உபாதைகள் வாயு உபத்திரவங்கள், வயிற்றுப் புளிப்பு, அஜீரணம், தீராத ஜீரண சக்தியின்மை தீராத மலச்சிக்கல், குடல்வலி, வயிற்றுவலி, வயிற்றுப்பிடிப்பு, வயிற்று ரணம், மார் எரிச்சல், பசியின்மை, தூக்கமின்மை, முதலியவற்றை அறவே ஒழிக்க "**அக்னிபன்**" (வயிற்று டானிக் பவுடர்) உபயோகியுங்கள் முழு வெற்றிக்கு உத்தரவாதம் விலை ரூ. 3–4–0 வி. பி. பி. அணா 14

தயவுசெய்து ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

KAVIRAJ
M. BHATTACHARYA (c. k.)
Kavya—Vyakarantirtha Vishagacharya.
120/1/1, Upper Circular Road. CALCUTTA—9

"காஷ்மீர் கன்னி"

நாதன்

"உச், உச்" என்றவாறே ரயில் வண்டி, பிளாட்பாரத்தினுள் நுழையும் பொழுது, என் உள்ளமும் அமைதியுற்று "உச்" என ஒரு பெருமூச்சு விட்டது.

ராணுவ உடையில் கம்பீரமான தோற்றத்துடன், ரயிலினின்றும் இறங்கி வந்தான், நண்பன் ரகு. இருவர் இதயமும் உணர்ச்சிப் பெருக்கால் பூரிக்க, நாங்கள் சந்தித்தோம். வருடக்கணக்கான விஷயங்களைப் பேசிக் கொண்டு வந்ததில், வீடு வந்து சேர்ந்து விட்டது கூட எங்களுக்குத் தெரியவில்லை.

நானும், ரகுவும் பால்ய நண்பர்கள். பள்ளிப் படிப்பு முடிந்தபின், எங்கள் வாழ்க்கை வெவ்வேறு திசையில் திரும்பியது. நான் கிராமத்திலேயே தங்கி, நிலபுலன்களைக் கவனிக்கலானேன். வலிவும், துணிவும் நிறைந்த ரகு ராணுவத்தில் சேர்ந்தான்,

இரண்டாவது மகாயுத்தம் காரணமாக, வெளிநாடுகள் பலவற்றில், ரகு சேவை செய்தான். இந்தியா சுதந்திரம் பெற்றபின் ஏற்பட்ட காஷ்மீர் போரில், அவனது படையும் ஈடுபட்டது, சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேல், அங்கே சேவை புரிந்தபின், அவன் இப்பொழுதுதான் திரும்பி வந்துள்ளான்,

அன்று மாலை, ரகுவும், நானும் எங்களுக்கு மிகவும் உவப்பான முள்ளியாற்றங்கரையை அடைந்தோம். கதிரவனை, அந்திவானம் முகம் சிவக்க வரவேற்றுக் கொண்டிருந்தது. நீர்ப் பரப்பில் பட்டுவந்த காற்று, குளுமையாக வீசிற்று. பகல் பொழுதின் அரவம் அடங்கி, நிசப்தம் எங்கும் வியாபித்தவண்ணமிருந்தது.

பாகிஸ்தானின் பாய்ச்சலால், மிகப் பிராபல்யம் அடைந்துவிட்ட அழகிய காஷ்மீர நாட்டை நேரில்கண்டு வந்திருக்கிற ரகுவிடம், அவனது அனுபவங்களைக் கேட்க எனக்கு அளவுகடந்த ஆவல் ஏற்பட்டது.

"என்ன, பாபு, குழந்தைகள் எவ்வளவு?" என ரகுவே புன்னகையுடன் தொடங்கினான்.

"குழந்தைகளா!......அதெதற்கப்பா. தற்போது, நானும், அவளும்தான் குழந்தைகள்." என நான் பதிலளித்துவிட்டு, "உன் விஷயமென்ன? எப்பொழுது கிரகஸ்தாசிரமத்தில் புகுவதாக உத்தேசம்?" எனக்கேட்டேன். உடனே அவனது முகம் கறுத்தது. கண்களில் கிலேசம் நிறைந்தது. அவன் என்னை நோக்காமல், எதிரே வானவெளியைப் பார்த்தவாறே, மௌனமாக விருந்தான்.

ரகுவின் அந்த மாறுதலுக்குக் காரணம் புலப்படாமல், நானும் ஒருகணம் திகைத்து இருந்தேன். அதன் பின்னரே, "ரகு, ரகு! ஏன் இப்படியிருக்கிறாய்?" என அவனைப் பிடித்து மெதுவாக உலுக்கினேன்,

என் பக்கம் திரும்பிய அவனது கண்கள், கலங்கியிருந்தன. "பாபு என்றாவது ஒருநாள் அதை உன்னிடம் சொல்லத்தான் நினைவு. ஆனால் நமது பேச்சுவாக்கில், இன்றே சொல்லும்படியாகி விட்டது." எனத் தளர்ந்த குரலில் கூறினான், ரகு. அவனது பீடிகை எனக்கு மேலும் ஆவலையும், துடிதுடிப்பையும் தந்தது.

கலங்கிய கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டு, ரகு சொல்லத் தொடங்கினான்.

"காதல், காதல் என்று கதைக்கிறார்களே, அதில் கேவலம் மிருக இச்சையின் சிறிய கீற்றாவது இல்லாமலிருக்கிறதா?......சில சமயங்களில், காமத்தை மறைக்கக்கூட "காதல்" என்ற வார்த்தை பயன்பட்டு வருகிறது. ஆனால், "காதல்" என்ற வார்த்தையை, அதன் புனிதத் தன்மையை, அதன் உயர்வை நான், காஷ்மீரின் கிராமமொன்றில் உணர்ந்தேன்."

"பாபு, நான் ஏதோ கதை சொல்கிறேன் என நினைக்காதே. முற்றும் எதிர்பாரா வகையில், என் வாழ்க்கையில் நிகழ்ந்த அச்சம்பவம் என் இதயத்தில் ஆழப்பதிந்து நிற்கிறது. அந்நிகழ்ச்சி நினைவுக்கு வந்தால், அவளை நினைத்து என் நெஞ்சம் பூரிக்கிறது. ஆனால் மறுகணம் பூரித்த நெஞ்சம் புண்ணாகிறது."

2

ராணுவத்தில், என் பகுதிக்கு நல்ல கியாதி இருந்தது. எதிர்பாரா விதத்தில் காஷ்மீர் தாக்கப்பட்ட பொழுது. அதைவிடச் சடுதியில் நமது சர்க்கார் நடவடிக்கை எடுத்தது. காஷ்மீரின் உதவிக்கு முதல் முதல் சென்றது, எங்களது தரைப் படைதான்.

காஷ்மீரம் பேரபாய நிலையில் இருந்தது. மக்கள், தங்கள் மீதேற்பட்ட திடீர் தாக்குதலால், பொறிகலங்கியிருந்தனர்.

எங்கள் படை முழு மூச்சாகத் தாக்கி, எதிரிகளின் முன்னேற்றத்தைத் தடுத்தது. அத்துடன் நில்லாமல், நாங்கள் முன்னேறி, எதிரிகளின் வசமிருந்து பல கிராமங்களை மீட்டோம், அவைகளில் கடைசி ஊர் சித்ரபூர்,

மலையின் அடிவாரத்திலிருந்த சித்ரபூர், அழகின் இருப்பிடமாக விளங்கியது. ஜனத்தொகையில் பெரும்பான்மையோர் முஸ்லீம்கள். மற்றவர் ஹிந்துக்கள். எல்லோரும் அனேகமாக விவசாயிகள். அந்தக் கிராம மக்களிடையே நிலைத்திருந்த சௌஜன்ய பாவம் எங்களுக்கு வியப்பூட்டியது.

சித்ரபூருக்கு அருகில், மலையின் மறுபக்கச் சரிவில் எனது படை முகாம் செய்தது. எதிரியின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக நாங்கள் நிறுத்தப்பட்டோம். அதனால் தான், நான் அடிக்கடி சித்ரபூர் சென்று வருவதற்குச் சந்தர்ப்ப மேற்பட்டது.

எனது தலைமையதிகாரியும் தமிழரே. என்னிடம் அவருக்கு அலாதியான அபிமானம். ஆகையால் ராணுவக் கட்டுப்பாடுகள், என் அளவில் அதிக நிர்ப்பந்தமில்லாமலிருந்தன.

ஓய்வு கிடைத்த ஒரு நாள், சித்ரபூர் சென்றேன். கிராமம் எப்படி இருக்கிறது எனச் சுற்றிப் பார்க்கும் ஆவலில், சிகிரெட் பாக்கெட்டை முகாமிலேயே விட்டுவிட்டுப் போய் விட்டேன். ஆகையால் சித்ரபூரில் நுழைந்தவுடன் என் முதல் அலுவல் சிகிரெட் வாங்க வேண்டியதாயிற்று. எதிரில் தென்பட்ட கிராமவாசியொருவனிடம், "நல்ல சிகிரெட் எங்கே கிடைக்கும்?" எனக் கேட்டேன். "தாவூத்கான் கடையில்தான் கிடைக்கும்" என்ற அவன் அந்தக் கடைக்குப் போகும் வழியையும் காட்டினான்.

ஊரின் வெளிப்பகுதியில் இருந்தது அக்கடை. நமது கிராமங்களில் காணப்படுவது போலவே, சிறிய குச்சுவீடும், அதன் ஒரு பகுதி கடையாகவும் விளங்கின. பண்டங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்த தோரணை, முதலாளியின் தூய்மைப் பழக்கத்துக்கு அத்தாட்சியாய் நின்றது. ஒரு பழைய நாற்காலியில் உட்கார்ந்து, ஒரு கிழவர் அழுக்கடைந்த கனமான புஸ்தகம் ஒன்றில் மூழ்கியிருந்தார். அவரது நீண்ட வெண்மையான தாடி காலைக் காற்றில் புரண்டுகொண்டிருந்தது.

எனது பூட்சின் ஓசை கேட்டுக் கிழவர் தம் பார்வையைப் புஸ்தகத்தை விட்டுப் பெயர்த்தார். என் ராணுவ உடையைக் கண்டதாலோ என்னவோ, சட்டென எழுந்து நின்றார். நான் கடையை நெருங்கிவிட்டேன்.

"ஸலாம், ஸாப். என்ன வேண்டும்?......" என ஹிந்துஸ்தானியில் வினயமான பணிவுடன், அவர் கேட்டார்.

"நல்ல சிகிரெட் இருக்கிறதா?" என்றேன்"

"தங்கள் போன்றவர்களுக்குத் தேவைப்படலாமென்று நினைத்து, சமீபத்திலேதான் கொஞ்சம் வாங்கி வந்தேன். இதெல்லாம் இந்தக் கிராமத்தில் யார் உபயோகிக்கிறார்கள்" என முகமலர்ச்சியுடன் கூறியவாறே, உயர்ந்த ரக சிகரெட் பாக்கட் ஒன்றை என்னிடம் நீட்டினார்.

நடந்து வந்த களைப்பினால், கடையின் வாயிலில் கிடந்த பலகையொன்றில் உட்கார்ந்து சிகரெட்டைப் புகைக்கத் தொடங்கினேன். "ஏன், இப்படி உள்ளே வந்து உட்காரலாமே" எனத் தாவூத்கான் உபசரித்தார். "பரவாயில்லை" என நான் பதிலளித்தேன்.

என்ன பேசுவதெனப் புரியாமலே, இருவரிடையேயும் சிறிதுபொழுது மௌனம் நிலவியது.

தாவூத்கானின் முகத்தோற்றம், அவர் நிதான புத்தியும், ஆழ்ந்த அறிவும் உள்ளவரெனக் காட்டியது. ஆனதால், நானே பேசத் தொடங்கினேன்.

"காஷ்மீரை, அதாவது காஷ்மீர் முஸ்லீம்களைக் காப்பாற்ற வந்ததாகப் பாகிஸ்தான் சொல்கிறதே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என நான், அவரை நோக்கிக் கேட்டேன்.

அதுகேட்டு, அவர் புன்முறுவல் பூத்தார். எதிரிலிருந்த புஸ்தகத்தின் ஏட்டைப் புரட்டியவாறே, "அப்படித்தான் சொல்வார்கள். காப்பாற்ற இவர்கள் யார்? அல்லாஹ் இருக்கிறான்......"என்றார்.

அவரது பதிலினின்றும் தெளிவான மதப்பற்றும், நேர்மையான மனப்பான்மையும், எனக்கு வியப்பூட்டின. ஆகையால், அவரிடம் தொடர்ந்து சம்பாஷிக்கத் தூண்டுதல் ஏற்பட்டது.

அதற்குமேல் சுமார் அரைமணி நேரம், நாங்களிருவரும் வார்த்தையாடினோம். அதன் பயனாகத் தாவூத்கானைப்பற்றி நான் மேற்கொண்டும் தெரிந்துகொண்டேன் அவர் ஓர் ஆரம்பப் பள்ளியில் முன்ஷியாக

இருந்து ஓய்வு பெற்றவர். அவர் மனைவி சில வருடங்களுக்கு முன் இறந்துபோய் விட்டாள். அவரது இரு புதல்வர்களும் காஷ்மீர் ராணுவத்தில் சேவை செய்கின்றனர். கடைக்குட்டியாக ஒரே புதல்வி. அவள்தான் தகப்பனருக்கு ஒத்தாசையாக இருக்கிருள்.

நேரம் சென்றதே, தெரியவில்லை, தாவூத் கான் கொடுத்த ஒரு பாக்கெட் சிகரெட்டும் காலியாகிவிட்டது. முகாமுக்குத் திரும்பப் பொழுதாகிவிடவே, இன்னும் கொஞ்சம் சிகிரெட் வாங்கிக் கொண்டு அவரிடம் விடை பெற்றேன்.

"தெரிந்தும், தெரியாமலும் ஏதாவது உளறியிருப்பேன்; அதை ஸாப் பாராட்டக்கூடாது. அடிக்கடி வந்துபோங்கள்" எனத் தாவூத்கான் வேண்டிக்கொண்டார். அவரது பேச்சு வியாபாரியின் வினயமாக இல்லை. அதில் நெருங்கிய நண்பன் ஒருவனின் பாவனை தொனித்தது.

கடையினின்றும் சிறிது தூரம் சென்ற பின்னர் தன்னிச்சையாகத் திரும்பிப் பார்த்தேன். கடையின் வலக்கோடியிலிருந்த சிறிய ஜன்னல் வழியாக இரு கரிய விழிகள் என்னை ஆச்சரியத்துடன் நோக்கிக்கொண்டிருந்தது தெரிந்தது. காற்றில் அசைந்தாடிய சிவப்பு நிறச் சேலை, அது யாரெனப் புலப்படுத்தியது.

இரண்டு தரப்புத் தாக்குதலும், சிலகாலம் ஓய்ந்திருந்தன. நாங்கள் பாதுகாவல் மட்டும் புரிந்து வந்தோம். ஆனதால் எனக்கு மும்முரமான வேலை எதுவும் இல்லை. நான் அடிக்கடி சித்ரபூர் போய்வர முடிந்தது.

கடைக்கார தாவூத்கானிடம் அரட்டை பேசுவது எனக்குப் பொழுது போக்காக அமைந்தது. இந்த வகையில் எங்கள் பழக்கம் வலுப்பட்டது. முதலில் வெட்க மிகுதியால், வெளியே வராமலிருந்த அவரது மகள் ரோஷனாரா நாளடைவில் வெட்கம் தெளிந்தாள். அவளை முதன்முதலில் நான் நன்கு சந்தித்த தினம் என் நினைவில் பசுமையாகவிருக்கிறது.

அன்றொரு நாள் நான் தாவூத்கானைச் சந்திக்கச் சென்றேன். தொலைவிலிருந்து பார்த்த போதே, அவரது வழக்கமான இடம் காலியாக இருந்தது. உள்ளே யிருப்பாரென, நான் கடையை அணுகினேன். நான் அவரைக் கூப்பிடும் பழக்கப்படி, "பாயி" எனக் குரல் கொடுத்தேன்.

அபொழுதுதான் அவள் எனக்குப் பூரணக் காட்சியளித்தாள். பரந்த அந்த முகமண்டலமும், அன்றலர்ந்த ரோஜாவின் இதழை யொத்த கன்னங்களும், மருட்சி நிறைந்த கரிய விழிகளும், என்னை இமைப்பொழுது மெய்ம் மறந்து நிற்கவைத்தன. யௌவனச்சோலையுடன் இழைந்துநின்ற அவ்வெழிலை வர்ணிக்க எனக்குத் தெரியவில்லை. கவிகளுக்குத்தான் அது சாத்யம்!

"அப்பா சிறிதுநேரம் முன்புதான் வெளியே போனர்; சீக்கிரம் திரும்பிவிடுவார்: தாங்கள் வந்தால் இருக்கச் சொல்லும்படி என்னிடம் சொல்லிப் போயிருக்கிருர்" என்ற குரல் ஏதோ வேறு உலகத்தில் சஞ்சரித்த எனக்கு, மெதுவாகக் கேட்டது. நான் உட்கார்ந்தேன்.

இவ்விதம்தான், எனக்கும் கன்னிரோஷனுக்கும் நேரிடை அறிமுகம் ஏற்பட்டது. என் உள்ளத்தில், அன்று ஏதேதோ நூதன உணர்ச்சிகள் பூத்தன. என்னுடைய நாடோடி வாழ்க்கையில், அதுவரை நான் அநுபவிக்காத புதிய நிலை அது...!. அந்த முஸ்லீம் யுவதியிடம் ஏதோ ஓர் அற்புத சக்தி இருந்து, என்னை ஆகர்ஷிப்பதாக எனக்குப் பட்டது.

என் இதயத்தில் நெளிந்த அந்த உணர்ச்சியை நான் "காதல்" என்ரே, "மோகம்" என்ரே உருவகப்படுத்தவில்லை. ஆனல் அவள் மீது சென்ற என் ஆவல் வெறும் "மோகம்" மட்டும் இல்லையெனச் சொல்வேன்.

அந்த இளங்கன்னியின் உள்ளத்தடாகத்திலும், ஏதேதோ எண்ண அலைகள் மோதின, கணக்கற்ற உணர்ச்சிகள் குமிழியிட்டன என்பதை அவளது விழிகள் நிதர்சனமாக்கின.

கால சக்கரத்தின் சுழலில் நான் தாவூத்கானின் அச்சிறிய குடும்பத்தின் அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமானேன். தாவூத்கான், தமது புதல்வர்களிடம்கூட அவ்வளவு பாசம் காட்டுவாரா என நான் சந்தேகிக்கும் விதத்தில், அவர் என்னிடம் பழகினர். அதைக் காட்டிலும் ரோஷனராவின் போக்குத்தான் எனக்குப் புரியாப் புதிராகவிருந்தது. அவ்வளவு சகஜமான, வெள்ளை நடத்தையை நான் வேறெங்கிலும் கண்டதே இல்லை.

வாழ்க்கையில் வறுமையும், கஷ்டங்களும், தந்த முத்திரைகளைத் தாங்கிய தாவூத்கான் தற்போது சலனமற்றவராக விளங்கினர். சதா "அல்லா" நாமம்தான் அவரது ஸ்மரணையாகவிருந்தது, அதிகமான கல்வியறிவில்லா அவரிடம் நிலைத்திருந்த தாராள மனப்பான்மை எனக்கு வியப்பூட்டியிருந்தது. அந்தக் கிராமத்திலுள்ள ஹிந்துக்கள், "பாயி, பாயி" என அவரிடம் அந்தரங்க விசுவாசம் பூண்டிருந்தனர். முஸ்லீம்களுக்கோ தாவூத்கானுடைய சொல், வேத வாக்காக இருந்தது.

அந்த எளிய குடும்பத்துடன் நான் பழகி ஒன்றிப்போனபின், அவர்களை அடிக்கடி காணுவிட்டால், என் இதயம் ஏங்கத் தொடங்கியது. அவர்களும் அவ்விதமேதான்.

நாளடைவில் யுவதி ரோஷனுராவின் உருவம், என் உள்ளக் கோயிலில் நிலையாக இடம் பெற்றுவிட்டது. ஒவ்வொரு நாள், எண்ணற்ற சிந்தனைக்குப்பின், என் இதயத்திரையினின்றும் அவளது உருவத்தை அகற்றக்கூட முயற்சித்தேன். முடிந்தால்தானே!

தென்னிந்தியாவின் மூலையில், சைவ குலத்தில் பிறந்த நானெங்கே! இந்தியாவின் வட கோடியில் முற்றும் புதிய சூழ்நிலையில், முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த ரோஷனுரா எங்கே! எங்களுக்கு இடையே நின்ற சுவர்களை நினைத்துப் பார்த்தேன். இடம், அந்தஸ்து, எல்லாவற்றையும்விட மதம், ஆகிய இந்த வலுவான குறுக்குச் சுவர்களை எண்ணிப் பார்க்கும்பொழுது, எங்கள் நேசத்துக்கு ஏதாவது பொருள் இருக்க முடியுமா? மனித வாழ்க்கையில், சந்தர்ப்பப் பொருத்தத்தால் தோன்றிக் கரையும் சம்பவம்தானு எங்களுடைய நேசமும்!......இவ்விதமெல்லாம் சிந்தனைகள் என்னைச் சூழவே செய்தன.

மாதங்கள்சில கழிந்துவிட்டன. பனிக்காலம் தொடங்கிவிட்டது. அப்பப்பா! பனியென்ருல் அது சாதாரண பனியா? மலைத்தொடரெல்லாம் பனியால் உறைந்து ஒரே வெண் மேகக் கூட்டமாகக் காட்சியளித்தன. ஒவ்வொருநாள் கழிவதும், பெருத்த சோதனையாக விருந்தது.

அப்பொழுதுதான் ராணுவத் தலைமைக் காரியாலயத்திலிருந்து, அந்த உத்தரவு வந்தது. பனியின் பயங்கரத்தை முன்னிட்டு எங்கள் படை, சித்ரபூரைவிட்டு, சுமார் நூறு மைல்களுக்கப்பால் உள்ள ஒரு வசதியான இடத்துக்குப் பின் வாங்கலாம் என்று கூறிய அவ்வுத்தரவு, எங்கள் படையினர் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. ஆனல் எனக்கேற்பட்ட ஏமாற்றத்துக்கும் அதிர்ச்சிக்கும அளவேயில்லை.

பளுவான வேலைக்கிடையே, சிறிது அவகாசம் கிடைத்ததைப் பயன்படுத்திக்கொண்டு, தாவூத்கான் வீட்டையடைந்தேன். கிழவரும், மகளும் என்னை மாமூல்படி மகிழ்வுடன் வரவேற்றனர். நான் அவசர அவசரமாக என் நிலையைத் தெரிவித்தபோது, அவர்கள் திகைத்து நின்றுவிட்டனர்.

"அல்லா......" என்ற வார்த்தையுடன், தாவூத்கானின் நெஞ்சத்தினின்றும் ஒரு பெருமூச்சும் கலந்துவந்தது. "சமீபத்திலேயே திரும்பி வந்து விடுவீர்களல்லவா" என ஆவலும், ஏக்கமும் கலந்த குரலில் வினவினள், ரோஷனுரா. அவளை நன்கு நோக்கினேன். அவளது கருவிழிகளின் ஓரத்தில் நீர் முத்துக்கள் திரண்டுநின்றன. அவளது முகத்தோற்றத்தில் ததும்பிய உணர்ச்சி!!

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY.4

"சமீபத்தில் திரும்பி வந்துவிடுவீர்களல்லவா?......" ரோஷனாராவின் அந்த வெகுளிக் கேள்விக்கு, என்ன பதில் அளிப்பதென எனக்குத் தோன்றாமல் அசைவற்று நின்றேன்.

ராணுவ வாழ்க்கையில், இன்று இங்கு; "நாளை எங்கே?" எனச் சொல்ல இயலுமா? அந்த நிலையை விளக்கி அவளது இளம் உள்ளத்தை வெதும்ப அடிக்க எனக்குச் சம்மதமில்லை.

முகாமுக்குத் திரும்ப நேரமாகிக் கொண்டிருந்தது. அவ்வளவு சீக்கிரத்தில் எப்படியோ தயாரித்துச் சுடச்சுடத் தேநீரும், ரொட்டியும் கொண்டுவந்துவிட்டாள், ரோஷன்.

"இதை முதலில் சாப்பிடுங்கள்; மீண்டும் எப்பொழுது சந்திப்போமோ?" என்று தாவூத்கான் உபசரித்தார்.

திடீரெனக் கொந்தளிக்கும் எரிமலை போல என் நெஞ்சம் உணர்ச்சிப் பிழம்பைக் கக்கிக் கொண்டிருந்தது, மௌனமாக ரொட்டியைத் தின்று, தேநீரைக் குடித்தேன்.

வேதனையால் மரத்துப்போன உள்ளம் வார்த்தைகளைக்கூடத் தடைப்படுத்தியது. என் தாயை விட்டுப்பிரிந்து, ராணுவ சேவைக்குப் புறப்பட்ட அன்றுகூட நான் அவ்வளவு துக்கப்படவில்லை. அவர்களிருவரிடமும் பிரியா விடைபெற்று நான் புறப்பட்டேன். என் நினைவெல்லாம் அந்தக் குடிசையில் தங்கி விட்டது. என் உடல் மட்டுமே ராணுவ முகாமை நோக்கி நடைபோட்டது.

பனிமூட்டத்தின் கொடிய பிடியினின்றும் சற்றே விலகிய இடத்தை எங்கள் படை அடைந்தது. நிலைமை சிறிது திருந்தினுலும், நாங்கள் சித்ரபூர் திரும்பவேண்டியவர்களே. ஏனெனில் சித்ரபூர் எல்லை எங்களுக்கு அவ்வளவு ராணுவ முக்யத்துவம் வாய்ந்தது. படையினர் அனைவருக்கும் சித்ரபூர் திரும்ப மனமில்லை. ஆனுல் நானே, புதிய இடத்தில் நிலை கொள்ளாமல் தவித்தவண்ணமிருந்தேன்.

நாங்கள் புதிய ஊரையடைந்து இரண்டு நாட்கள் ஆகியிருக்கும். அரைகுறையான நித்திரையிலிருந்த நான், வேலைக்கழைக்கும் சங்கொலியின் அலறல் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தேன்.

"சித்ரபூரை நோக்கி முன்னேறுங்கள்" எனத் தளபதியின் உத்தரவு முழங்கியது. அடுத்த விநாடி எங்கள் படை பனி மூட்டத்தைப் பிளந்துகொண்டு சித்ரபூரை நோக்கி விரைந்தது.

போகப் போகத்தான், மெதுவாக விவரம் காதுக்கெட்டியது. எங்களது படை இல்லாத தறிந்த எதிரிகள் மும்முரமாக முன்னேறி சித்ரபூரை வெட்டிவிட்டனர். விரைவில் மேற்கொண்டு தாக்கச் சன்னத்தமாகவுமிருக்கின்றனர் எனவும் தெரியவந்தது.

எதிரிகளின் முன்னேற்றத்தைக் கேட்டவுடன் போர் வீரனுக்கு ஏற்படவேண்டிய உள்ளத்துடிப்பு எனக்கு ஏற்படவில்லை. ஆனுல் அந்தக் குடும்பம் என்ன ஆனுர்களோ, என் ரோஷனுராவுக்கு என்ன நேர்ந்ததோ என நான் கலங்கினேன்,

அவ்வளவு விரைவில் எங்கள் படையை எதிர்பார்க்காத எதிரிகள், எங்களது முதல் பீரங்கி முழக்கத்திலேயே சிதறத் தொடங்கினர். சித்ரபூரை மீட்பது வெகு எளிதில் முடிந்தது,

உணர்ச்சியற்றவனுய், இரும்பாலாகிய பீரங்கிகளோடு பீரங்கியாய், நான் இயங்கினேனென்றே சொல்லவேண்டும்.

எழில் நிறைந்த அச்சிறு கிராமத்தை, அவ்வளவு சொற்ப தினத்தில் எதிரிகள் உருக்குலைத்திருந்த விதம் கண்டு என் நெஞ்சம் துணுக்குற்றது.

"முஸ்லீம்களைக் காப்பாற்றுகிறவர்களா, இவ்விதம் இந்த முஸ்லீம் கிராமத்தைப் பாழ்படுத்தியிருக்கின்றனர்!" எனவெண்ணி நான் வியப்பும், வெறுப்புமடைந்தேன்,

தாவூத்கானையும், ரோஷனுராவையும்பற்றி அறியத்துடித்த என் ஆவலுக்குச் சிரமத்துடன் அணையிட்டுக்கொண்டேன். ராணுவ நியதிகள் முடிந்து, எனக்கு மறுநாள் மாலையில்தான், ஓய்வுகிட்டியது.

கூண்டிலிருந்து திறந்துவிடப்பட்ட விலங்கின் வேகத்துடன் நான் சித்ரபூரை நோக்கி ஓடினேன்,

தூரத்திலேயே, நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. பாதி எரிந்து நின்ற தாவூத்கானின் குடிசையை நோக்கிப் பதை பதைக்க ஓடினேன், நான்,

குடிசையின் வாயிலில் கிராமவாசிகள் சிலர் கவலை தோய்ந்த முகத்துடன் நின்றனர். அவர்களது பேச்சுப் போக்கில், எதிரிகள் நாச வேலைக்குத் தாவூத்கானும் பலியாகி இருந்தார் எனப் புலப்பட்டது.

என்னைக்கண்ட கிராமவாசிகள், பீதியால் மறைய யத்தனித்தனர். அவர்களை, ஓட வேண்டாமெனக் கையமர்த்தியவாறே, குடிசையினுள் நுழைந்தேன்.

முன்னுல், கண்களை மூடியவாறு சோர்ந்து கிடந்த தாவூத்கானைக் கண்டு, நான் திடுக்கிட்டேன். எனது பூட்ஸ் ஓசை கேட்டு அவரது இமைகள் இலேசாகத் திறந்தன. அடுத்த விநாடி அந்தப் பஞ்சடைந்த கண்களில் மின்னல்போல் ஒளிபரவியது. ஒரு தடவை விழிகளை மூடித் திறந்தார், அவர்.

"ஸாப், வந்துவிட்டீர்களா...? வந்துவிட்டீர்களா?" என்று ஈனஸ்வரத்தில், ஆவல் துள்ளக் கேட்டார், தாவூத்கான். அவர் அப்பொழுது அசைந்ததில்தான், அவருடைய தலையிலிருந்த பலத்த கட்டு எனக்குத் தென்பட்டது.

"பாபி, இது என்ன? தலையில் ஏன் கட்டு?" எனப் பதட்டத்துடன் கேட்டேன்.

சோர்வின் மிகுதியால் பேச இயலாத அவர் உட்புறத்தை நோக்கிக் கையால் சாடை காட்டினர். உள்ளே சென்ற நான் கண்டகாட்சி எனக்கு அதிர்ச்சியை அளித்தது.

முரட்டுக் கம்பளியொன்ருல் மூடப்பட்டுக் கிடந்தாள், ரோஷனரா. அவளது முகம்மட்டுமே தெரிந்தது. மூச்சோட்டத்தின் அசைவு கூடச் சரியாகப் புலப்படவில்லை. அழகுக் கோயிலாக விளங்கிய அவளது முகமண்டலம், வெளிறி அருவருப்பை யூட்டுவதாகக் காணப்பட்டது. எங்கோ ஆழத்தில் அழுந்தியிருந்த கண்கள் பஞ்சடைந்து மூடிக்கிடந்தன.

மெதுவாக நடந்தும், என் அரவம் கேட்டுவிட்டதுபோலும். அவளது இமை அசைந்து திறந்தது. என்னையே உன்னிப்பாக விழிகளை உருட்டிப் பார்த்தாள், அவள். குழிவிழுந்து கிடந்த அவளது நேத்திரங்கள் புத்தொளி பெற்றதுபோல் சுடர்விட்டன.

''நீங்களா?......நீங்கள்தானு?'' என முணகினுள், ரோஷன்.

நான் அவளருகில் அமர்ந்து அவளை உற்று நோக்கினேன். அவளது விழிகளில் முத்து முத்தாக நீர் அரும்பியது. தொண்டையில் நின்ற வார்த்தைகளை உதிர்க்கமாட்டாமல், காய்ந்து கிடந்த அவளுடைய உதடுகள் ஒட்டிக்கொண்டன.

உலர்ந்த உதடுகளுக்கு நாவினுல்பசையூட்டிக் கொண்டு, குளறிய குரலில் பிரயாசையுடன் ரோஷன் பேச யத்தனித்தாள்.

அவளது வாயினின்றும் தட்டுத்தடுமாறி உதிர்ந்த பல வார்த்தைகளை ஒன்ருய் இணைத்துப் பார்த்ததில் அவள் கூறியது தெளிவாயிற்று.

என் நெஞ்சு படபடத்தது. எனது இரத்தம் பூராவும் தலைக்கேறி, தலை சிதறும்போலிருந்தது. கோபத்தால் என் நரம்புகள் முறுக்கேறித் துடித்தன.

''பேடிகள், பேதைப்பெண்களைக் கற்பழிக்கும், படுபாவிகள்!......அவர்கள் வீரர்களா?... உணர்ச்சியற்ற மிருகங்கள்!'' என்றெல்லாம், என் உள்ளமும், வாயும் சபித்தன.

மீண்டும் ரோஷனின் உதடுகள் அசைந்தன. நான் கவனித்துக் கேட்டேன்.

"என் கன்னித்தன்மை கெட்டுவிட்டது. ஆனல்...... ஆனல் என் "காதல்" கெடவில்லை."

"'காதல்'...... அது உடலுன் மட்டும் சம்பந்தப்பட்ட கேவல உணர்ச்சியல்லவே! இதய வெளியிலே பின்னிக்கிடப்பதல்லவா. அது!... அதைப் பாழாக்க யாரால் இயலும்?......''

"என்னையுமறியாமல் என் இதயம் உங்களிடம் ஒன்றி லயித்துவிட்டது, நான் கட்டிய மனக்கோட்டைகள் பல. ஆனல் அவை வெறும் மணற்கோட்டைகள் போலத்தான் சரிந்துவிட்டன.''

''நான் வருந்தவில்லை; எனக்கு ஏமாற்றமுமில்லை; வெறும் தேக உணர்ச்சியாக இருந்திருந்தால், ஒருவேளை நான் வருந்தித் துடிப்பேன். என் நிலை, இதயதாகம் அல்லவா?...''

"ரோஷன், உன்னைக் காதலிக்கிறேன் என ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும். என் நெஞ்சம் நிம்மதியடைந்துவிடும்...... சாவைப் புன்னகையுடன் அணைத்துக்கொள்வேன்'' என்று முடித்தாள், ரோஷன்.

குழந்தைபோல 'ஓ' வெனக் கதறிவிடுவேன் போலானேன், நான். உணர்ச்சிப் பெருக்கும் பேசிய அயர்வும் அவளை மீண்டும் சோர்வடையச் செய்தன. மூடத்துடித்த விழிகளைச் சிரமத்துடன் உருட்டி விழித்தவண்ணமிருந்தாள் அவள்,

போர்வையைக் கலைத்து அவளது அழகிய கரங்களை எடுத்தேன்; என் நெஞ்சத்தில் அவைகளை அணைத்துக்கொண்டேன். என் இதயத் துடிப்பை அக்கரங்களே அவளுக்கு உரைத்திருக்கும். குமுறிய குரலில் "ரோஷன், உன்னைக் காதலிக்கிறேன்'' என்றேன்.

வாடி, உலர்ந்து கிடந்த அவளது முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது. அவளது கரிய நயனங்களில் அமைதி நிரம்பியது. அந்த அமைதியுடனேயே, அவளது மூச்சோட்டமும், அமைதியுற்றது.

எவ்வளவு நேரம் அவ்விதம் உட்கார்ந்திருந்தேனே! சில்லிட்ட அவளது கரங்கள்தான், என்னைச் சுய நினைவுக்குக் கொணர்ந்தன.

வெளியே எழுந்துவந்து பார்த்தேன். பாயிதாவூத்கான் மீளாத்துயிலில் ஆழ்ந்து கிடந்தார்.

பேச்சை முடித்த ரகு, ''பாபு, அவள் சொன்ன '**முஹபத்**' என்ற வார்த்தைகள் சதா என் காதுகளில் ஒலிக்கின்றன. "காதல்" என்ற சொல்லுக்கு அவள் கூறிய பொருள் என் நெஞ்சத்தில் உறைந்து கிடக்கிறது. அப்படியானல் ஒருவனே, ஒருத்தியோ, ஒரு தடவைதானே காதலிக்க முடியும்! இல்லையேல், அது 'காதல்' ஆகுமா? உடல் ஆசையை மூட உபயோகமாகும் அலங்காரச் சொல் ஆகிவிடுமே! நாங்களிருவரும் காதலித்தோம். அவளில்லை; நான் இருக்கிறேன். ஆனல் எங்கள் "காதல்"?......அது மறைந்துவிடமுடியுமா!......அதற்கு அழிவேது! அமரத்துவம் பெற்ற அதற்கு அழிவேது!'' என்ருன்.

சந்தியா கன்னியும் மறைந்து, இருள் அரக்கன் ஆட்சி தொடங்கிவிட்டது. ரகுவும், நானும் ஆற்றங்கரையை விட்டு எழுந்தோம். அந்த இருளிலும், ரகுவின் காதலி, அந்தக் "**காஷ்மீர் கன்னி**" சோதிமயமாக என் மனக்கண் முன் நின்ருள்.

நொண்டியின் மனைவி

கு. நாராயணஸ்வாமி

அரசலாற்றில் புதுத்தண்ணீர் கலங்கலாகச் சுழலிட்டு ஓடிக்கொண்டிருந்தது. அதில் மிதந்துவந்த குப்பை செத்தைகளைப் பார்த்துக்கொண்டு சோமசுந்தரம் கரையோரமாக உட்கார்ந்திருந்தான்.

ஆடி பிறந்துவிட்டது. ஆயிற்று, இன்னும் ஒருமாதம் ஓட்டமாக ஓடிவிடும். அப்புறம் ஆவணி. ஆவணி எட்டாம் தேதி அத்தனே நேரம் கமலா அவனுடைய தருமபத்தினியாகி யிருப்பாள். அனேகமாக அந்த வேளையில் நலங்கு நடந்துகொண்டிருக்கும். அவள் தலையைக் குனிந்துகொண்டு வெட்கத்தினுல் முகம் சிவக்க, தன் வளையல் குலுங்கும் கரங்களை நீட்டுவாள். அதற்கப்புறம்......அவன்......... தனது வலது காலை நீட்டி, பாதத்தை ஊன்றி நிறுத்துவான். அதில் சிகப்பைப் பூச அவள் இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையால்.........

ஐயோ நினைக்கவும் உடல் நடுங்குகிறதே! அந்தச் சமயம் வளைந்து கோணியிருக்கும் அப் பாதத்தைக் கண்டு அவள் முகம் எப்படி மாறும்! அவளுடைய விழிகளில் நீர் நிரம்பி அவனுக்கு எதிரே விழுமல்லவா? 'நொண்டிக்கு வாழ்க்கைப் பட்டு விட்டோம்' என்ற நினைவு வரும் போது......... எண்ணங்களின் வேகத்தால் விரட்டப்பட்டு, சோமசுந்தரம் டக்கென்று எழுந்து விட்டான். ரத்தவோட்டம் திடீரென்று துரிதப்பட்டது போலிருந்தது. வேஷ்டியைச் சற்று விலக்கி, தனது வலது பாதத்தைப் பார்த்துக் கொண்டான்.

"சே! இவ்வளவு கோரமாகவா இருக்கிறது!" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டான். "நமக்கே இப்படி யிருக்கும்போது முதன்முதலாகப் பார்க்கும் அவளுக்கு எப்படி யிருக்கும்!" என்ற எண்ணம் வந்தது.

அவன் நொண்டி என்பது அவளுக்குத் தெரியாததல்ல. அவனும் அவளும் ஒரே ஊரில் ஒரே அக்கிரகாரத்தில் தானே இருக்கிருர்கள்?

அவன் காலை விந்தி விந்தி நடந்து செல்லும் போது அவள் எத்தனையோ தடவை எதிர்ப் பட்டிருக்கிறாள். ஆனால் அந்தக் காலை மட்டும் அவள் பார்த்திருக்க முடியாது. அது வெளியில் தெரியாதிருக்கும் பொருட்டு வேஷ்டியைத் தொங்கத் தொங்க, பூமியில் புரளும்படி கட்டிக்கொள்வது அவன் வழக்கம். பண்ணை சதாசிவய்யரின் ஒரே மகனல்லவா? வண்ணான் அவர்கள் வீட்டுக்குத் தினம் வருவான்!

தான் பண்ணையாரின் ஒரே மகன் என்று நினைவு வந்ததும் அவன் சோகமாகச் சிரித்துக் கொண்டான், ஊரில் எல்லோரும் அவனைக் கண்டு பயப்படுகிறார்கள். பண்ணையாளிலிருந்து கிராம முனிசிப் வரை அவனைக் கண்டதும் தலையைக் குனிந்து கையைக் கூப்புகிறார்கள். ஆனால் விதியென்று ஒன்றிருக்கிறதே அதற்கு மட்டும் அவனிடம் பயமோ பாரபட்சமோ கிடையாது. நாலு பேரோடு ஐந்தாவதாக அவனை 'ஜீப்' வண்டியிலிருந்து எதிரே வந்த பஸ்ஸுக்கு அடியில் தூக்கிப் போட வில்லையா? அட கர்மமே! அந்தப் பஸ் ஒரேயடி யாக அவன் கழுத்தில் ஏறித் தொலைக்காமல் வலது பாதத்தில் மட்டும் ஏறி அதை முறித்து விகாரப்படுத்தி வைத்திருக்கிறதே!

ஆற்று நீரில் ஒரு பெரிய காகிதக் கப்பல் மிதந்துகொண்டு வந்தது. ஊரில் யாராவது சிறுவர்கள் விட்டதாக இருக்கலாம். இருந் தாலும் அது அவனுக்குப் பழைய ஞாபகத்தைக் கொண்டு வருவதற்காகவே மிதந்து வந்ததாகத் தோன்றியது.

அப்போது சோமசுந்தரத்திற்கு ஒன்பது வயது. வெகு அழகாக இருப்பான். தலையில் கட்டுக் குடுமி, கையில் தங்கக் காப்பு, காதில் வைரக் கடுக்கன், இந்த அலங்காரங்களும் சேர்ந்துகொண்டன. பணக்காரர் வீட்டுப் பிள்ளையாக வேறு இருந்து விட்டானா, ஊரி லிருந்த சிறுவர் சிறுமிகள் எல்லோரும் அவ னைச் சுற்றிலும் கும்மாளம் போட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களுள் கணக்குப் பிள்ளையின் பெண் கமலா ஒருத்தி,

ஒரு நாள் அந்தச் சிறுவர் படை காவேரிக் கரையில் 'டேரா' போட்டது.

"இன்னிக்கு என்ன விளையாடலாம்?" என்றான் சோமு, ஆளுக்கொன்று சொன்னார் கள். கமலா பேசாமல் இருந்தாள்.

"நீ என்ன சொல்றே, கமலா?"

"கப்பல் போட்டி வைக்கலாம். அவாவா காகிதம் கொண்டு வந்து கப்பல் செய்யணும். காவேரிக்குக் குறுக்கே நின்னுண்டு விடணும். யாருது முழுகாமே முன்னாடி போகிறதோ அவா......" அவள் முடிக்கவில்லை. சோமசுந்



Sastry & Sastry

JEWELLERS

33, EAST MADA STREET,
MYLAPORE P. O. MADRAS-4.

தரம் "சபாஷ்" என்று கையைத் தட்டினான். அவனுக்கு அந்த யோசனையும் பிடித்திருந்தது. கமலாவையும் ஏற்கனவே, பிடித்திருந்தது.

"எல்லாரும் வீட்டுக்குப் போய் ஆளுக்கொரு காகிதம் கொண்டு வாங்கோ. எனக்கும் கமலாவுக்கும் சேத்து!"

எல்லாரும் ஓடினார்கள். வரும்போது "சோமுவுக்கும் கமலாவுக்கும் கலியாணம்" என்று பாடிக்கொண்டு வந்தார்கள். சோமு "காலித்தனமா பேசாதே!" என்று இரைச்சல் போட்டான்.

"காலித்தனமா அது? கமலா அம்மா உங்க அம்மாகிட்டே சொல்லிண்டு இருக்கா, அதோ அந்த அரசமரத்தடிலே. நான் இந்த காதாலேதான் கேட்டேன்," என்றான் ஒரு பையன். உடனே கமலாவுக்கும் சோமுவுக்கும்" என்று ஆரம்பித்தான். மீதி பேர் "கல்யாணம்" என்று தொடர்ந்து பாடினார்கள்.

"அசடுகளே! வாங்கோ, விளையாடுவோம்." எல்லோரும் கணுக்கால் வரை நீர் ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் குறுக்கே வரிசையாக நின்றார்கள். கப்பல்கள் தயாராகிவிட்டன.

"ஒண்ணு, ரெண்டு, மூணு!"

கமலா தன் கப்பலை, 'குபுக்' கென்று நீரில் அமுக்கினாள்,

"ஏண்டி, ஆட்டம் பிடிக்கலையா? முதல்லேந்து வேறே விடுவோமா?" என்றான் சோமு.

"வேண்டாண்டா, வேணும்னுதான் பண்ணினேன்."

"வேணும்னா? உனக்கு ஜெயிக்கணும்னு ஆசையில்லையா?"

"ஆசையிருக்கு. ஆனா, நான் உன்னோடே போட்டி போடக்கூடாது. நம்ம ரெண்டுபேருக்கும் கலியாணமோல்லியோ?" என்றாள் ரகசியமாக. பாவம், அப்போது அவள் ஆறு வயதுச் சிறுமி. கலியாணமென்றால் புதுசு கட்டிக்கொண்டு கை கோத்து உலவிவருவது என்று நினைத்து விட்டாள் போலிருக்கிறது!

அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்ததும் அவன் கண்களில் நீர் துளித்தது. சிறுவயது நினைவுகளில் அவன் மனதில் பசுமையாகப் பதிந்திருப்பது அது ஒன்றுதான் போலும்! அப்புறம் ஐந்து வருடம் கழித்து மேல் படிப்புக்கு அவன் பட்டணம் போய்விட்டான். அதற்கு முன்னேயே எப்போதோ கமலாவுடன் பேசுவதை விட்டுவிட்டான். பட்டணம் போன

"பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயிலை நான் உபயோகித்திருக்கிறேன். அது மிகவும் குளுமை அளிப்பதுடன், மனோரம்மியமாகவும் இருக்கிறது" என்று பிரபல சினிமா நட்சத்திரமும், நடனக்கலையில் புகழ்பெற்று வருமான **குமாரி துளசி** கூறுகிறார்.

★

Manufacturers:

RATHOD TRADING CO.

21, THOLASINGAM ST., MADRAS-1

தும் அவள் நினைவே மறந்துவிட்டது. அப்போதைக்கப்போது ஊருக்கு வரும்போது 'பட்டணத்தில் படிக்கிறோம்' என்ற மிடுக்குத்தான் அவனிடமிருந்ததே தவிர வேறு எவ்வித நினைவுமில்லை, அப்புறம் காலொடிந்து ஊரோடு வந்துவிட்ட பிறகுதான் அவன் பார்வை ஆகாயத்திலிருந்து பூமிக்கு வந்து அவளைக் கவனித்திருக்கிறது. இப்போது அவளுக்கு மனசு எப்படியிருக்கும்?

"அப்போதெல்லாம் தான் பட்டணத்தான் என்ற கர்வத்தில் இருந்தாரே, இப்போது காலொடிந்து நம்மை வலிய வந்து கலியாணம் செய்து கொள்ளுகிறார் அல்லவா?" என்று நினைத்துக் கொண்டிருப்பாள். சே! என்ன கெட்டபுத்தி! அவளா அப்படி நினைத்துக் கொண்டிருப்பாள்? அவனுக்குப் பணம் இருக்கிறது என்கிற கர்வத்திலே தானே தன்னை மனைவியாகக் கேட்கிறான் என்று நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாள்.

இருட்டிவிட்டது. சோமசுந்தரம் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு மெதுவாகக் கைத்தடியை ஊன்றிக்கொண்டு நடந்தான். அவனுடைய வலது பாதம் மேடு பள்ளங்களில் இடறி, பூமியைத் தேய்த்துக்கொண்டு நகர்ந்தது.

அடுத்த இரண்டு தினங்கள் அவன் வீட்டைவிட்டு வெளியே கிளம்பவுமில்லை. ஒருவருடன் பேசவுமில்லை. வாசல் கொட்டகையிலேயே விழுந்துகிடந்தான். அவன் மனம் உணர்ச்சியற்று, கட்டியாகப் போயிருந்தது.

மூன்றாவது தினம் மத்தியானம் எங்கிருந்தோ அவனுக்குச் சுறுசுறுப்பு வந்தது. வீட்டுக்குள் சென்று கூடத்தில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான்.

"சோமு, உனக்கு மயிற்கண் வேஷ்டி வேணுமா, அல்லது இந்தமாதிரி பட்டைச் சரிகை வேஷ்டி போறுமா? 'ஸ்பெஷலா' நெய்யச் சொல்லலாம்னு இருக்கேன்" என்றார் சதாசிவய்யர்.

"இரண்டும் வேண்டாம்," என்று அவன் முரட்டுத்தனமாகப் பதிலளித்தான்.

"இப்படி பேசாதேடாப்பா. உனக்கு உடம்பு சரியாயில்லை போலேயிருக்கு," என்றாள் தாயார்.

"நல்ல உடம்பாகத்தான் இருக்கேன். இந்தக் கலியாணமே வேண்டாம். எனக்குப் பிடிக்கல்லே,"

சதாசிவய்யரும் அவர் மனைவியும் திடுக்கிட்டுப் போய்விட்டார்கள். அவர்களுக்குப் பேசக்கூட உடனே வாயெழும்பவில்லை.

"நொண்டிக்கு கலியாணமா? உங்களுக்கு வெட்கமாயில்லை? பணமிருக்கு என்கிற காரணத்துக்காக கிளிபோலேயிருக்கிற பெண்ணை உங்கள் நொண்டிப் பிள்ளைக்குச் சமமா நினைத்துக்கொண்டு விட்டீர்களா?" என்று இரைந்தான்.

"ஐயோ, வேண்டாமடா!" என்று தாயார் அவன் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

சதாசிவய்யர் நிதானமாக, "சோமு, பதறாதே. உன் மனசு நன்னா புரியறது. நான் சொல்லுகிறதை யோசனை செய்து பார். அவளை நாம் போய் பலவந்தப் படுத்தல்லே. அவாளே சந்தோஷமாக் கொடுக்கறா. உன் கால் கொஞ்சம் சரியாயில்லை என்கிறதைத் தவிர உனக்கு என்ன குறைச்சல்? நாம் சரின்னு சொல்லாமே யிருந்திருந்தால் அவளை யாருக்காவது மூன்றாந்தாரமாகக் கொடுத்திருப்பார்கள்" என்றார்.

சோமசுந்தரத்தின் மனதிலிருந்த வேகம் குறைந்து விட்டது. அவளுக்கு இஷ்டமில்லாமலேயே எனக்கு கொடுக்கிறார்களோ என்னமோ? நான் சொல்லுகிற நிபந்தனையின் பேரில்தான் கலியாணம் நடக்கணும். பெண் என் எதிரே வந்து "சம்மதம்தான்" என்று சொல்லவேணும். சொன்னால் செய்து கொள்கிறேன். இல்லாவிட்டால் நான் நாளை ரயிலிலேயே பட்டணம் போகிறேன், என்றான்.

"அதெப்படியடா நடக்கும்? இது பட்டிக் காடு. பெண்ணோ சிறிசு. அதற்குத் தெரியுமா? தெரிந்தாலும் உன் எதிரே வந்து சொல்லுமா? சொன்னால்தான் நன்றாயிருக்குமா? நான் கவனிச்சிருக்கேன், அவள் சந்தோஷமாய்த்தான் இருக்கிறாள். போறுமா?" என்றாள் தாயார்.

"அதெல்லாம் எனக்கு வேண்டாம். நான் சொல்லுகிறபடி ஏற்பாடு செய்கிறதானால் செய்யுங்கள். இல்லாவிட்டால் நான் இப்போதே பட்டணம் போகிறேன்," என்றான் சோமு.

சதாசிவய்யர் யோசனை செய்துவிட்டு, "சரி நான் கணக்குப்பிள்ளையிடம் கேட்கிறேன். முரட்டுப் பிள்ளையாகப் பிறந்துவிட்டாய். என்ன செய்கிறது?" என்று எழுந்து சென்றார்.

உடனேயே கணக்குப்பிள்ளை ஓட்டமாக ஓடிவந்தார். சோமசுந்தரத்தைக் கண்டதும், "அப்பா, நீ ஏதோ சொன்னயாமே? நீ எப்படி நடக்கணும்னு சொல்றயோ அப்படியே செய்து விடறேன்," என்றார்.

சோமசுந்தரம் தன் மனதிலிருந்த ஏற்பாட்டைச் சொன்னான்.

விளக்கு ஏற்றிய பிறகு கணக்குப் பிள்ளை தம் மகளை ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்யச் சொல்லிவிட்டு, சதாசிவய்யர் வீட்டுக்கு அழைத்து வந்தார்.

கூடத்தில் சதாசிவய்யரும் சோமசுந்தரமும் உட்கார்ந்திருந்தார்கள். அவன் தாயார் தூணுக்குப் பின்னால் நின்றாள். கணக்குப் பிள்ளை தயங்கிக் கொண்டே நடந்து வந்தார். கமலாவோ தலையைக் கவிழ்த்துக் கொண்டு இருதயம் படபடக்க, குதிர் மறைவிலிருந்த இருட்டில் நின்றாள்.

"அய்யர்வாள், அழைத்துக் கொண்டு வந்து விட்டேன். இனிமேல் கமலாபாடு, சோமு பாடு," என்றார் கணக்குப்பிள்ளை, குரல் தழுதழுக்க.

"நீங்களும் இருங்கள். நான் கேட்கிறேன்," என்று சொல்லிவிட்டு, சோமசுந்தரம் கமலா இருந்த பக்கம் திரும்பிப் பார்த்தான். ஒரு கணம் அவன் மனம் படாதபாடு பட்டது. என்ன கேட்பது? எப்படி கேட்பது?

"கமலா!" என்று ஒருதரம் அழைத்தான், அழைத்தவுடன் சங்கோசமெல்லாம் பறந்து போய் விட்டது.

"நீயே யோசித்திருப்பாய், நான் நொண்டி. கால் விகாரமாக இருக்கிறது. என்னைக் கலியாணம் செய்து கொண்டால் நீ என்னுடன் வரக்கூட வெட்கப் படுவாய். நொண்டியைக் கலியாணம் செய்து கொண்டதைவிட யாராவது பரம ஏழையைக் கலியாணம் செய்து கொண்டிருக்கலாமே என்று பச்சாத்தாபப் படுவாய். நிஜத்தைச் சொல்லு. உனக்குச் சம்மதமில்லையே, நான் நொண்டி........."

குதிருக்குப் பின்னாலிருந்து 'விக் விக்' கென்று கேவும் சத்தம் கேட்டது.

சோமசுந்தரம் துள்ளியெழுந்து தூணைப் பிடித்துக் கொண்டான், தன் பெற்றோர்களையும் கணக்குப் பிள்ளையையும் கோபமாகப் பார்த்தான். பிறகு, "பார்த்தீர்களா, பார்த்தீர்களா! அவளுக்கு இஷ்டமில்லை. நீங்களாக என்னை அவளுக்குப் பலவந்தமாக நிச்சயம் செய்துவிட்டீர்கள். பேதைப் பெண் ஒருத்தி கிடைத்தால் இதுமாதிரியா அநியாயம் செய்வார்கள்?" என்று இரைந்தான்.

அம்மூவரும் திடுக்கிட்டுப் போய்விட்டார்கள். தாயார் அழத் தொடங்கினாள். கணக்குப்பிள்ளை தம் பெண் நின்ற பக்கம் பாய்ந்து அவளை யிழுத்து விளக்கு வெளிச்சத்தில் நிறுத்தினார். "சொல்லடி, வாயைத் திறந்து. நீ தானே சம்மதம்னு தலையை ஆட்டினாய். என்னை அவமானப்படுத்தவா அழுகிறாய்? சொல்லு. உன் தலைவிதியே இப்போத்தான் நிர்ணயமாகணும்," என்று திட்டினார்.

சோமசுந்தரம் குறுக்கேவிழுந்து, "அவளை ஏன் வீணாக வைகிறீர்? கமலா உன் மேலே எனக்குக் கோபமேயில்லை. உன் மனசு தெரிந்தவுடனேதான் எனக்கு நிம்மதியாயிற்று. உனக்குத் தகுந்த பிள்ளையாக நான் தேடித்தருகிறேன்," என்றான்.

கமலா குலுங்கக் குலுங்க அழுதுகொண்டே தகப்பனார் கைப்பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு ஓடினாள். கணக்குப்பிள்ளை, "சோமு, அவளுக்கு உடம்பு சரியாயில்லை. நான் நாளைக்கு மறுபடியும் அழைச்சிண்டு வரேன். அவசரப்பட்டு ஏதையாவது பிடிவாதமாப் பேசாதே," என்று சொல்லிவிட்டு, பெண்ணைத் துரத்திக்கொண்டு ஓடினார்.

சோமசுந்தரம், "அதற்கு அவசியமே இல்லை. எனக்குத் தெரிந்துபோய்விட்டது அவள் மனசு. இனிமேல் என்ன?" என்றான்.

சதாசிவய்யர் முகத்தில் ஈயாடவில்லை. ஆனால் அவர் மனைவி தம் பிள்ளையின் இரு கைகளையும்

சேர்த்துப் பிடித்துக்கொண்டு அவன் முகத்தைத் தடவி,

"என் ராஜாவோல்லியோ, இதுமாதிரி அசட்டுத்தனமாக பிடிவாதம் பிடிச்சு கூடாதே. அவள் பயந்த சுபாவம், நீ பளிச்சென்று கேட்டதும் அழுதுட்டாள், உனக்கு கலியாணமாகி நான் பார்க்கவேண்டாமா? கமலாவைவிட நல்ல மாட்டுப்பெண் எனக்கு யார் கிடைக்கப் போகிருள்? பிடிவாதம் வேண்டாமடா," என்று கண்ணீர் விட்டாள்.

சோமசுந்தரம் பரணை வெறிக்கப் பார்த்துவிட்டு, தன் தாயாரிடமிருந்து தன் கைகளை விடுவித்துக்கொண்டு வாசலிற்குச் சென்ருன்.

"அப்போ கலியாணம் நின்றே போயிடுத்தா?" என்று தாயார் கண்ணீரைப் பெருக்கிளுள். சதாசிவய்யருக்குத் தாங்க முடியாத எரிச்சல் உண்டாயிற்று. "இவ்வளவு அழகான பிள்ளைக்குக் கல்யாணம் வேறயா? கால் எப்போ கோணலாகப் போச்சோ அப்பவே மூளையும் கோணலாயிடுத்து, தலையிலெழுத்து!" என்று எரிந்து விழுந்தார்,

சோமசுந்தரம் அதைக் கேட்டுவிட்டுத்தான் போனுன். "யாருக்கு மூளை கோணல்? உங்களுக்குத்தான்!" என்று முணுமுணுத்துக்கொண்டே குறட்டிலிருந்து இறங்கி, தன்னுடைய கொட்டகையையும் தாண்டி, தெருவில் இறங்கினுன். கணக்குப்பிள்ளை வீட்டு வழியாக நடந்தான், அவர் வீட்டில் பலமாக இரைச்சல் கேட்டது, காமரா உள் ஜன்னல் வழியாக, கமலா அழுதுகொண்டு நிற்பதைப் பார்த்தான். மங்கலான அரிக்கன் விளக்கில் தெரிந்தது அவ்வளவுதான். ஒரு கணம் உள்ளே போய் அவரைச் சாந்தப்படுத்தலாமா என்று யோசித்தான். சிறிது நேரம் நின்றுவிட்டு மேலே நடந்தான்,

ஒருத்தியுடைய வாழ்க்கையையே சீர்படுத்தி நேரான வழியில் அமைத்து விட்டோம் என்று அவன் மனம் நினைத்து அதில் ஆழ்ந்துவிட்டது. எவ்வளவு மகத்தான காரியம்! கடவுள் அவனுக்குப் போதிய தைரியம் அளித்தாரே, அதற்காக அவரை வாழ்த்த வேண்டும்.

மறுபடியும் அவன் தனது தனிக் கொட்டகைக்குத் திரும்பும்போது நடுநிசிக்கு மேலிருக்கும். அதுவரையில் அரசலாற்றுப் பாலத்தில் தன்னந்தனியாக உட்கார்ந்து தன்னையே மறந்துவிட்டிருந்தான்.

கொட்டகைக் கதவை மூடி, பூட்டிக்கொண்டு சாய்வு நாற்காலியில் விழுந்தான். வெகு நேரம் தூக்கம் வரவேயில்லை. கடைசியில் கண்ணயரப் போனபோது "சோமு!" என்று மெல்லிய குரல் அழைத்தது. அவன் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்தான். மூங்கில் சட்டங்களுக்கு வெளியே இருளில் நின்றது ஒரு பெண் உருவம்!

"யாரது?"

"நான்தான் கமலா. வெட்கத்தைவிட்டு ஓடிவந்தேன்." விம்மலை அவள் அடக்கிக் கொண்டாள்.

"கமலாவா? என்னைத் தேடிக்கொண்டா? உனக்குப் பயமா இல்லையா?"

"உயிரே போக இருக்கும்போது பயப்பட்டால் முடியுமா?" என்ருள் கமலா.

"உயிரா?" என்று திடுக்கிட்டுப்போனுன் சோமசுந்தரம்.

"ஆமாம். நீ...தான்...உயிர். நான் எத்தனை நாட்களுக்கு முன்னுடி சொல்லியிருக்கிறேன்? உனக்கு...உங்களுக்கு எவ்வளவு ஆத்திரம் இருந்தால் என்னை நாலு பேருக்கு முன்னுல் அழவைத்திருப்பீர்கள், இந்த இருட்டில் பயம் வெட்கம் எல்லாத்தையும் விட்டு வந்து நிற்க வைத்திருப்பீர்கள்!"

"ஓஹோ! உங்க அப்பா பாடம் சொல்லி அனுப்பினுரோ? நான் உனக்கு நல்லதைத்தான் சொல்லுகிறேன். நான் நொண்டி..."

"அதை சொல்லாதீர்கள்," என்று விம்மி விம்மி அழுதாள் கமலா, "நீங்கள் நொண்டியானது எனக்காகத்தான். இல்லேன்னு பணக்கார வீட்டுப் பெண்ணுகப் பார்த்திருக்க மாட்டார்களா?"

"அப்போ என்னதான் சொல்லுகிருய்?"

"நான் பெண்ணுய்ப் பிறந்தவள். வாயை விட்டு மனசிலிருக்கிறதைச் சொல்லக் கூடாதவள். அப்படியும் இங்கே வந்து நிற்கிறேன். உங்களுக்கு இரக்கம் இருந்தா யோசனைசெய்து பாருங்கள். நான் கொடுத்து வைத்திருக்க வேணும்."

கமலா இருளில் மறைந்து விட்டாள். சோமசுந்தரம் அப்படியே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான். சொப்பனமோ என்னவோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. ஊருக்கு வெளியே குடியிருந்த நாயனக்காரன் விடியற்கால சாதகத்தை ஆரம்பித்து விட்டான். அதில் புது ஒலியைக் கேட்டான் சோமசுந்தரம். ●

மந்திரக்கோலின் முனையாலே
மத யானையை மயக்கினான்
மனம்போலே.....

மந்திர சக்திபோல் விரலை
அசைத்த மாத்திரத்தில்
ஜலப்பிரவாகத்தை
அளிக்கும்



மயர்ஸ்
ஆடோமாடிக்
வாட்டர்
ஸிஸ்டம்கள்

MYERS



வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்

செகண்டு லைன் பீச்.....சென்னை.

ஞாபகச் சின்னம்

ஆனை. ஸு. குஞ்சிதபாதம்

பூஜை அலமாரியின் எதிரிலே, குத்துவிளக்கின் அருகிலே அமர்ந்து தேவியின் திவ்விய மங்கள ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்து கொண்டிருந்தாள் ராஜாம்பாள். ஊனுருக, உள்ளங்குழைய, இனிய குரலில் அருள் மொழிகளை ஸ்பஷ்டமாக உச்சரிப்பதிலே எல்லையில்லாத மனச்சாந்தி ஏற்பட்டதேயாயினும் அவள் கண்கள் அடிக்கடி கடிகாரம் இருந்த இடத்தைத் திரும்பி நோக்கின.

விளக்கின் சுடர் தெறித்தது. திடுக்கிட்டது அவள் நெஞ்சம். "அம்பிகே, ரக்ஷி!" என்று சொல்லிக் கொண்டே, விளக்கின் திரியைத் தூண்டினாள். புத்தகத்தை மூடி வைத்து விட்டு நமஸ்காரம் செய்தாள், எழுந்து ஜன்னலோரம் சென்று கதவைத் திறந்தாள்.

மழை நின்றிருந்தது. லேசாகத் தூறல் போட்டுக் கொண்டிருந்தது. பூமியுடன் நிகழ்ந்த கடும் போரில் வெற்றிகண்டதுபோல, மின்னல் மாலைகள் இலங்க, வானம் இடித்து, குமுறி வீர கர்ஜனை செய்துகொண்டிருந்தது. மாடி முகப்பிலிருந்து கண்ணீர்த்துளிகள் போல நீர்த்திவலைகள் சொட்டுச்சொட்டாக, சாரல் அடிக்காமலிருப்பதற்காக ஜன்னல் வெளிப்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள தகரச் சார்பின் மேல் விழுந்துகொண்டிருந்தன. தெருவில்வழிந்தோடிய தண்ணீரில், மின்சாரக்கம்பங்களிலிருந்த விளக்குகளின் பிரதிபிம்பங்கள் சஞ்சலமடைந்து கொண்டிருந்தன. ஆங்காங்கே பதுங்கியிருந்த ஜனக்கூட்டமும், வண்டிகளும் வெளிக்கிளம்பி தெருவில் ஜனசந்தடியும், நடமாட்டமும் ஏற்பட்டன. நீண்ட பெருமூச்சுடன் மறுபடியும் கதவைச் சாத்திவிட்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தாள் அவள்.

ஊஞ்சல் தான் எப்படி ஒவ்வொரு இந்தியப் பெண்ணின் வாழ்க்கையிலும் இன்றியமையாத இடம் பெற்றிருக்கிறது? மழலை மொழி பேசும் குழந்தைப் பருவத்திலே ஊஞ்சலில் உல்லாசப்பிரயாணம் செய்வதிலேதான் எவ்வளவு உத்சாகம்? அப்புறம் கல்யாணத்தின் போது கணவனைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டு ஊஞ்சலில் உட்கார்ந்தாடும் போது மணமகளின் மனமகிழ்ச்சிதான் அளவிடப்படுமோ? குழந்தை பிறந்த பிறகும்,குழந்தையைக் கொஞ்சிக் குலவி மடிமீது கிடத்தி ஊஞ்சலில் உட்கார்ந்து தாலாட்டும்போதும் பெண்கள் தங்கள் வாழ்க்கை லக்ஷியம் நிறைவேறுவதாக உணர்ந்து மௌனமாகப் பேரானந்தம் அனுபவிக்கவில்லையா? அதே ஊஞ்சல் தான் துயரத்தில் ஆழ்ந்த பெண்களுக்கும் அடைக்கலம் தருகிறது. பித்தளைச்சங்கிலிகளில் தொங்கும் வெள்ளிக் குமிழ்கள் பூண்ட கருங்காலிப் பலகையாலான ஊஞ்சலாயினும் சரி, இரும்புச்சங்கிலிகளில் தொங்கும் மாம்பலகை ஊஞ்சலாயினும்சரி, அதைவிடச் சிறந்த ஆசனம் எதையும் எந்தச் சிற்பியும் அமைத்தானில்லை.

ஊஞ்சலில் உட்கார்ந்த ராஜாம்பாளின் முகம் எதிரேயிருந்த கண்ணாடியில் மங்கலான ஒளியில் தென்பட்டது. அதன் பக்கத்தில் அவளுடைய பழைய போட்டோ ஒன்றும் இருந்தது, பத்து வருடங்களில் தான் அந்த முகத்தில் எவ்வளவு மாறுதல்? குதித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்த உள்ளத்தின் கிளர்ச்சியை ஒரு முகம் எடுத்துக் காட்டியது; இன்னொரு முகம் அனுபவம் படிந்து படிந்து அடைந்த மன அடக்கத்தைக் காண்பித்தது. அப்பொழுதைக்கு இப்பொழுது கொஞ்சம் ஸ்தூலித்திருந்தாள். இப்பொழுதும் அவள் முகத்தில் அழகில்லாமல் இல்லை. பருமன் அடைந்திருந்த சதைப்பகுதிகள் அவள் முகத்துக்குப் புதுமெருகு தந்தன. அப்பொழுது அவள் மெல்லிய சம்பங்கிக்கொடி; இப்பொழுது வளர்ந்த ரோஜாச்செடி.

வாசலில் குலுங்கிக்கொண்டு ஓடிய குதிரைச் சலங்கைச் சத்தம் சடக்கென்று நின்றது. கதவைத் திறந்தாள். அவள் கணவன் வந்தான். வண்டிக்காரனிடம் சில்லறையைக் கொடுத்துவிட்டுக்கதவைச் சாத்தினான். ஊஞ்சலில் வந்து படுத்துக் கொண்டான். சற்று நேரம் இருவரும் பேசவில்லை. மௌனம் பயங்கரமாயிருந்தது.

"என்ன சொன்னார் டாக்டர் முடிவாக?" என்று கேட்டாள் ராஜாம்பாள். புன்னகையை வரவழைத்துக் கொள்ளச் சிரமப்பட்டான் அவள் கணவன் ஸ்ரீகாந்தன்.

"ஏன் பதில் சொல்லாமல் இருக்கிறீர்கள்?" என்று மறுமுறையும் கலவரமடைந்து கேட்டாள் அவள்.

"புதிதாகச்சொல்வதற்கு என்ன இருக்கி றது? டி. பி. தான், எக்ஸ்ரேயில் சந்தேகம் இல்லாமல் தான் தெரிகிறதே. குறைந்தது முப்பது ஸ்ட்ரெப்டோமைஸின் இஞ்சக்ஷன் செய்து கொள்ள வேண்டும். மதனப்பள்ளி, பெருந்துறை ஏதாவது ஒரு இடத்துக்குப் போக

வேண்டும். அவ்வளவுதான்!" ராஜாம்பாள் சிந்தனையில் ஆழ்ந்தாள். ஸ்ரீகாந்தனும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"ஆரம்பத்திலேயே சரியான சிகிச்சை செய்து கொண்டு விட்டால் நல்லது, இல்லையா?" என்ருள் அவள். "உம்!" என்று மட்டும் அவன் சொன்னுன்.

ஸ்ரீகாந்தன் வறுமையைக்கண்டு மனம் குலையவில்லை. செல்வத்திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்த தன் மனைவி தன்னேடு வறுமை வாழ்க்கையை மேற்கொள்ளத் தயாராக இருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்பட்டான். நாளடைவில் அந்த அம்சத்தில் பூர்வ ஜன்ம பாக்கியம் இருப்பதாக அறிந்து கொண்டான். தனக்கு எந்தவிதமான குறையுமிருப்பதாகவே ராஜாம்பாள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. வறுமையிற் செம்மையாக அவள் இருக்கத் தலைப்பட்டதைக்கண்டு அவன் திருப்தியடைந்தான். சௌகரியமான நிலைமையிலிருந்த உற்ருர் உறவினரிடம் எதையும் எதிர்பார்ப்பதை அவன் ஈனமாக நினைப்பது போலவே அவளும் நினைத்தாள். தன்னுடைய பெரிய பிறந்த வீட்டில் இருந்தது போலவே சென்னையிலும் ஆவுடையப்பமுதலித் தெருவில் ஸ்ரீகாந்தனுடன் ஒண்டிக்குடித்தனம் இருக்கும் போதும் குதூகலமாகவே இருந்தாள். ஸ்ரீகாந்தன் பத்திரிகைகளுக்குக் கதைகள் கட்டுரைகள் எழுதிக்கொண்டு அன்ன வஸ்திரத்துக்குப் போதுமான அளவு சம்பாதித்தான். பத்து வருஷகாலத்தில் அவன் முதல்தர இலக்கிய ஆசிரியராகக் கருதப்பட்டான், அவன் எழுத்தில் கற்பனை ஜ்வலித்தது. புதிய புதிய முறைகளைக் கொண்டு இன்றையதமிழ் இலக்கியத்தின் நிலைமையையே உயரச் செய்தான். தமிழ் வாசகர்கள் அவன் கதைகளையும் கட்டுரைகளையும் ஆவலுடன் எதிர்பார்த்துப் படித்து மகிழ்ந்தனர்.

ஆனல் கடந்த ஒருமாதமாக அவன் உடல் நிலை மெலிந்தது. இருமலாலும் ஜலதோஷத்தாலும் அடிக்கடி கஷ்டப்பட்டான். மாலை நேரங்களில் சரீர காங்கை அதிகரித்தது. தர்மாமீடர் இயற்கை நிலையைவிட இரண்டு கோடுகள் சூடு அதிகரிப்பதைக் காண்பித்தது. இரவில் உடல் வியர்த்தது. அவனுடைய நண்பரான ஒரு டாக்டர் அவனுடைய தேகஸ்திதியைப் பரிசீலனை செய்து க்ஷயரோகம் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார். எவ்வளவு சிக்கனமாக இருந்த போதிலும், ஆயிரம் முதல் இரண்டாயிரம் ரூபாய்கள் வரை செலவு செய்தால்தான் பூரணமாகச்சௌக்கியம் ஆகும். நாள் கடத்தினல் செலவும் உபத்திரவமும் தான் கூடஆகும். இப்போது இதுதான் விசாரம். வேறு குழந்தை குட்டிகள் இல்லை.

"யோசிக்காதீர்கள் ஒன்றும், என்னுடைய கழுத்துச் சங்கிலியும், கைவளையல்களும் இருக்கின்றன. விற்றுவிடலாம். உங்களுக்கு உபயோகப்படாமல் இருந்து என்ன?" என்று சொன்னுள் ராஜாம்பாள்.

ஸ்ரீகாந்தன் அவளைக் கூர்ந்து நோக்கினுன். அழகே வடிவாக ஊஞ்சலின் கீழே உட்கார்ந்திருந்தாள் அவள். அன்றலர்ந்த மல்லிகை மலரைப்போல எவ்வளவு தூய்மையான உள்ளம் படைத்தவள் அவள்? அந்தப் பதிவிரதா சிரோமணியின் மடிமீது தலைவைத்துக் கொண்டு தேஜஸ் நிறைந்த அவள் முகத்தைப் பார்த்த வண்ணம் கண்ணைமூடி உயிரை விட்டால் நிச்சயம் சுவர்க்க வாசமே சித்திக்கும், ஆனல் அவள்...? அவளுடைய கண்ணீர் முத்து முத்தாக அவள் கன்னங்களில் வழிந்தோடுவதைக் கண்டு அவன் ஆத்மா நிம்மதியாயிருக்குமா? அவள் விம்மியழும் வேதனையைக் கேட்டுச் சாந்தியடையுமா அவன் ஆத்மா? அவன் மெய் சிலிர்த்தது. அவள் அழகைப் பார்க்கச் சகிக்க முடியவில்லை அவன் கண்களுக்கு.

"கொஞ்சம் வெந்நீர் கொண்டுவா போ!" என்ருன் அவன். அவள் போனுள். அவளுடைய நகைகளை வாங்கி விற்கலாமா என்று சிறிது சபலம் அடைந்தான். "சீ! என்ன கேவலமான யோசனை!" என்று இடித்துக் காட்டியது சுயமரியாதை.

ஸ்ரீ காந்தனின் மனதின் அடித்தலத்திலே சில ஆசைகளும், நம்பிக்கைகளும் உலாவிக்கொண்டிருந்தன, ஆழ்கடலின் அடியிலே பெரியகடல் மிருகங்கள் நகருவதைப்போல, அவன் பேனப் பிடித்து எழுத ஆரம்பித்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பியவைகள் அனைத்தும் பிரசுரமாகிக் கொண்டிருந்தன, தமிழ்நாடு முழுவதும், தமிழ் நாட்டைக் கடந்து தொலையில் போயிருக்கும் தமிழர்களிடையேயும் பேன மூலம் அவனுக்குச் செல்வாக்கு இருப்பதாக ஒருபிரமை அவன் மனதைச் சூழ்ந்திருந்தது. ஏதோ ஒரு காலத்தில் சந்தர்ப்பம் ஏற்படும்போது ஒரு பத்திரிகை நடத்தி, பிரசித்தி அடைவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டான், பெரிய பெரிய பத்திரிகாசிரியர்களின் பூர்வஸ்திதியை அலசிப்பார்த்து, தன்னுடைய நிலையுடன் ஒப்பிட்டான். ஆரம்பத்தில் அவர்கள் தன்னைவிடச் சிறந்த நிலையில் இல்லை என்று நினைத்தான். எந்தவிதமான தங்குதடையுமில்லாமல் ஏன் தானும் ஒரு சிறந்த பத்திரிகையின் முதலாளியாகக்கூடாது என்று தன்னைக்கேட்டுக்கொண்டான், ஆசை நம்பிக்கையின் நாற்றங்கால். அவன் கண்கள் ரோஜாமலர்களையே நோக்கின; உதிர்ந்த இலைகளை நோக்கவில்லை. அவனுக்கு வேறு நல்ல உத்யோகம் கிடைப்பது இருக்கட்டும்—அதைப்பற்றி அவன் முயற்

சிக்கவேயில்லை, யோசிக்கவே இல்லை. பத்திரிகாசிரியத்வம்—ஆம், அப்பதவியைவிட்டு அவன் மனம் அப்பால் இப்பால் நகருவதில்லை!

ராஜாம்பாள் அசடு இல்லை, கெட்டிக்காரியே தான், கனவு உலகிலிருந்து அவனைத் திருப்பி மீட்டு ஏதாவது ஒரு நல்ல சம்பாத்தியமுள்ள வேலையில் ஈடுபடச் செய்யவேண்டுமென்று அடிக்கடி இங்கிதமாகச் சொல்வதும் உண்டு. அவனும் திறமைசாலி, எந்தத் துறையிலும் பிரகாசிக்க முடியும் அவன் என்பதும் அவளுக்குத் தெரியும். எழுத்தாளர்களின் நிலைமை முன்னேறாமலிருப்பதனாலே எழுதும்தொழிலே மட்டம் என்று சொல்லிவிடமுடியுமா? அவன் ஒரு லக்ஷியவாதி. அவளால் அவன் மனதை மாற்ற முடியவில்லைதான்!

ஸ்ரீகாந்தனுக்கும் நன்றாகத் தெரியும், இன்னொருபெண் ராஜாம்பாளின் ஸ்தானத்திலிருந்தால் தகராறு ஏற்பட்டிருக்கக்கூடும். ஒவ்வொரு தடவையும் துடைத்துத் துடைத்துப் புரட்டிப் புரட்டிப் பார்க்கும்போதும் பல் நிற ஒளிகள் குன்றாமல் குலுங்கிப் பூரிக்கும் உயர்ந்த வைரம் போல ராஜாம்பாள் அவன் திருஷ்டியில் பட்டாள். ராஜாம்பாள் போன்ற ஒரு மனைவியை அடைந்திருப்பதைவிடப் பெறற்கரிய பேறு என்ன என்று இறும்பூது எய்தினான்.

ஒருவாரம் ஆயிற்று, இடையே கையிலிருந்த பணத்தைக்கொண்டு மருந்துகள் வாங்கி, சிகிச்சை செய்துகொண்டான். டாக்டர் அவன் விஷயத்தில் உதார குணத்துடன் நடந்துகொண்டார். தமக்குக் கிடைக்க வேண்டிய பீஸை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஆயினும் மருந்து, உணவுச் சத்துக்கள் இவைகளையும் யாசிப்பது தகுமா? தனக்கு வேண்டியவர்களான பத்திரிகாசிரியர்கள், பிரசுரகர்த்தர்கள் இவர்களைப் பார்த்து உதவிகோர நினைத்தான். அவன் எழுதியிருப்பவைகளின் 'காப்பிரைட்' உரிமைகளையெல்லாம் கொடுத்துப் பதிலுக்குப் பணம் வாங்குவதில் இகழ்ச்சி என்ன?

ஒருநாள் காலை ஸ்ரீகாந்தன் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தான். தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அழகான எழுத்தில் 'ராஜாம்பாள்' என்று விலாசமிடப்பட்டிருந்தது. தபால் முத்திரை மதுங்கா—பம்பாய் என்றிருந்தது. ராஜாம்பாளின் சகோதரி மீனாக்குட்டியின் எழுத்தா இது? அட, சின்னஞ்சிறு பெண்ணாக, செல்லுலாயிட் பொம்மையைத் தாங்கிக்கொண்டுவந்து, "அத்திம்பேரே, சமத்துப் பாப்பா, பாருங்கோ," என்று சொல்லிக்கொண்டிருந்த அந்த மீனாக்குட்டி மணி மணியாக எழுதியிருக்கிறாளே! மில்லில் உதவி மானேஜராக ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறான் அவள் புருஷன். போகட்டும் சௌக்கியமாக, இருக்கட்டும்—ஸ்ரீகாந்தன் ராஜாம்பாளைக் கூப்பிட்டு, கடிதத்தைக் கொடுத்தான், அவள் வாங்கி உறையைக் கிழித்துக் கடிதத்தைப் படித்துவிட்டுத் தயங்கி நின்றாள். என்ன விசேஷம்? என்று கேட்டான் அவன். அவள் ஒரு காகிதத்தை அவனிடம் கொடுத்தாள். எழுநூறு ரூபாய்களுக்கு பாங்கி டிராப்ட் அது. என்ன செய்துவிட்டாள் ராஜாம்பாள்? மீனாவுக்குத்தன் நிலைமையை விளக்கி எழுதி, பணவுதவி செய்யச் சொல்லியிருக்கிறாள். அவள் என்ன செய்வாள், பாவம்! அனல் குழம்பைக் கக்கிவிடும் எரிமலையின் நிலையிலிருந்தது அவன் மனம். மற்றவர்கள் அவனைப்பற்றி நினைத்துக் கொள்வது இருக்கட்டும், யாரிடமும் பிரதிப் பிரயோசனம் இல்லாமல் உதவி பெறுவது யாசகம்தான். வெட்கம் பிடுங்கித் தின்றது.

வேதனையுடன் ராஜாம்பாளைப் பார்த்தான். அவளைக் கடிந்து ஒருவார்த்தை சொல்லவில்லை. அவனுடைய நன்மை ஒன்றேதானே அவளுடைய விருப்பம்? அவளிடம் திருப்பிக்கொடுத்தான் அந்தக் காகிதத்தை.

"கோபமா? மீனாவின் அகத்துக்காரர் 'வான்லஸ் வாடி' ஸானிடோரியத்தில் உங்களைச் சேர்த்து விடுகிறேன் என்றாராம். மீனாவின் கடிதத்தைப் பாருங்கள்" என்று சொன்னாள் ராஜாம்பாள். அவனுடைய மனப்போக்கு எப்படி இருக்கிறது என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. அவன் மீனாவின் கடிதத்தை முழுவதும் கவனமாகப் படித்தான். "நல்லது" என் விஷயத்தில் எல்லோருக்கும் இவ்வளவு அனுதாபம் இருப்பதைக்கண்டு எனக்கு ரொம்ப சந்தோஷம்". என்று சொன்னான் அவன்.

ராஜாம்பாள் காரியமாகப் போய்விட்டாள். ஸ்ரீகாந்தனின் மனதில் எந்தவிதமான யோசனையும் இல்லை. புத்தி சலனமில்லாமல் மந்தமாக இருந்தது. தியானத்திலிருக்கும் யோகியைப் போலக் கண்களை மூடிக்கொண்டான்.

* * * *

'விநோதினி' பத்திரிகை ஆசிரியர் இராமானுஜலு நாயுடுவின் விசாலமான அறையினுள் ஸ்ரீகாந்தன் வந்தான். இராமானுஜலு நாயுடு மிகுந்த மகிழ்ச்சியுடன் அன்பு கனிய ஸ்ரீகாந்தனை வரவேற்றார். ஸ்ரீகாந்தனிடம் எல்லையில்லாத மதிப்பு இருந்தது அவருக்கு. அவன் தனக்கு க்ஷயரோகம் ஏற்பட்டுவிட்டதாக அவரிடம் சொன்னான். "அடடா! அப்படியா! உடம்பைப் பார்த்துக் கொள்ளவேண்டும் மிஸ்டர் ஸ்ரீகாந்தன்!

ரிஜிஸ்டர்டு

கோத்ரெஜ் நெ.1 நெ.2

Godrej

No.1 No.2

டாய்லெட் (ஸ்நான) சோப்புகள்

பொறுக்கி எடுக்கப்பட்ட புஷ்டியளிக்கும் தாவர எண்ணெய்களையும் இதர மூலங்களையும் சேர்த்து, புகழ் வாய்ந்த சிறந்த முறையில் பிரத்யேகமாய் திறம்படத் தயாரிக்கப்படுகின்றன. அவைகளின் பரிமளங் கமழும் சிறந்த நுரையே அழகை யூட்டி, கிருமிகளையும் கொல்லுகிறது.



கவனியுங்கள்

இந்தச் சௌந்தரிய சோப்புக்கள் சாஸ்த்ரீய முறைப்படி பரிசுத்தமானவை என்றும் நன்மை பயப்பவை என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. சில சோப்புகள் தவறுதலாக, பரிசுத்தமானவைகளாகக் கருதப்படுகின்றன. ஏனெனில் உதாரணமாய்ப் பார்ப்பதற்கு, பளிங்குபோல் தென்படுவதினால், இது அவைகளின் பரிசுத்தத்திற்கோ அல்லது தரத்திற்கோ எவ்வித அறிகுறியுமாகாது.

நெ. 1 — இப் பெரிய கட்டி பணத்திற்கேற்ப உத்தமமான மதிப்பு வாய்ந்தது. உங்களுடைய ஸ்நானங்களில் நீங்கள் திருப்தியைக் காண்பீர்கள்.

ஆராய்ந்தறிந்தோர் உபயோகிக்கும் சோப்புகள்

கோத்ரெஜின் இதர உயர்ரக தயாரிப்புகள்

ஷேவிங் ஸ்டிக் — ஷேவிங் 'ரவுண்டு'
கிளிசரின் — கூந்தல் தைலம்

100 சதம் தூய்மைக்கும் மிருகக் கொழுப்பற்ற தென்பதற்கும் உத்தரவாதமானது

கோத்ரெஜ் சோப்ஸ், லிட். மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வத்தீ

துணிகள் வெண்மையாக சலவை செய்யப் பட்டுள்ளன...
துணிகள் பிரகாசமாக சலவை செய்யப் பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்பினால்
தான்
துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும்
பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 129-50 TM

கவனக் குறைவாக இருப்பது ஆபத்து. அலக்ஷியமாக இருந்துவிடக்கூடாது. என்ன சிகித்சை செய்துகொள்கிறீர்கள்? சியவனப்பிராசம் சாப்பிடுங்கள். பவள பஸ்பம் சாப்பிடுங்கள். எனக்குத்தெரிந்த ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் இருக்கிறார்; பார்க்கச்சொல்லட்டுமா?'' என்றார்.

ஸ்ரீகாந்தன் அவரை வியப்புடன் பார்த்தான். அவருடைய கம்பீரமான ஆகிருதியில் அதிகார தோரணை இருந்தது. அவரது முறுக்கிவிட்ட கெய்ஸர் மீசை யாரும் அவர் சொல்வதற்குக் கீழ்ப்படியவேண்டும் என்று உத்தரவு இடுவது போலிருந்தது. அவரது அடர்ந்த நரைத்த தலைமயிர் அவர் அனுபவத்தை விளம்பரம் செய்தது. அவர் அணிந்திருந்த கதர் ஜுப்பாவும் வெய்ஸ்ட் கோட்டும் அவர் பொதுமக்களின் தலைவர்களில் ஒருவர் என்பதை விளக்கின. அவரது இடது தோளின்மேல் மடித்துப்போட்டிருந்த தூய கதர்த்துண்டு அவர் பிடிவாதத்தை அறிவிப்பதுபோல அசையாமல், சரிந்து நழுவாமலிருந்தது. எப்படி அவரிடம் தனக்குப் பணம் வேண்டுமென்று கேட்கலாம் என்று அவன் தயங்கினான்.

''என்ன ஸ்ரீகாந்தன்? நான் வைத்தியரை உங்கள் வீட்டுக்கு வரச்சொல்லட்டுமா?''

''இல்லை! டாக்டரிடம் வைத்தியம் செய்துகொள்கிறேன். நடுவிலே அதை விட்டுவிட்டு எப்படி...''

''அட, என்ன ஐயா; நமக்கு ஸ்வராஜ்யம் வந்து என்ன பிரயோசனம்? வெளிநாட்டு மருந்துகளில் இன்னும் மோகம் போகவில்லை. சீமையிலிருந்தா இந்த வியாதி வந்தது? இந்த ஊரிலேதானே வந்தது? அதற்கு இந்த ஊரிலே வைத்தியம் செய்துகொள்ளாமல் சீமையிலிருந்து வந்த மருந்தைச் சாப்பிடுகிறேன், சீமையிலிருந்து வந்த இஞ்சக்ஷனைச் செய்துகொள்கிறேன் என்றால் தர்க்க புத்திக்கு ஏற்றதாக இல்லையே. என்ன நான் சொல்கிறது புரிகிறதா?''

''தாங்கள் சொல்வது சரி...எனக்கு இப்பொழுது இருநூறு ரூபாய் பணம் கொடுங்கள். நான் ஒரு நாவல் எழுதிக்கொண்டிருக்கிறேன். கையெழுத்துப் பிரதியை அனுப்புகிறேன். தொடர் கதையாக 'விநோதினியில் போடலாம்.''

''உஹூம்...கூடவே கூடாது. இங்கிலீஷ் வைத்தியம், ஹோமியோபதி வைத்தியம் இவைகளில் எனக்கு நம்பிக்கையே இல்லை, வருஷா வருஷம் மருந்து மாயங்களுக்காக எவ்வளவு ரூபாய்கள் வெளிநாட்டுக்குப் போகின்றன தெரியுமா, எங்கேயோ புள்ளி விவரங்கள் பார்த்தேனே, ஞாபகமில்லை! சரகன், சுசுருதன் தன்வந்திரி, அடடா, எவ்வளவு மகான்கள் பாடுபட்டு ஔஷதங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். 'விநோதினி'யின் வைத்தியப் பகுதியை படித்தீர்களா?''

''நான் பிராமிசரி நோட்டு எழுதித்தருகிறேன், விநோதினியின் பத்திரிகையில் வெளியாகும் என்னுடைய கதைப் பகுதிகளுக்கு அவ்வப்பொழுது தாங்கள் கொடுக்கவேண்டிய சன்மானத்துக்குப் பதிலாக நோட்டில் நான் வரவு வைத்துக்கொடுக்கிறேன்.''

''இந்த யோசனையை நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மருந்திலேபோய் அனாவசியமாகப் பணத்தைப் போடாதீர்கள், செலவு ஆன பணத்தில் காலணா திரும்பி வருமா? சிக்கனம் வேண்டும், த்ஸ, த்ஸ, அப்பப்பா! இந்திய பிரஜைகளில் ஒவ்வொருவரும் தாம் செலவு செய்வதையெல்லாம் நிதானித்துச் செட்டும் கட்டுமாக இருந்தால் பிரதிவருஷமும் எவ்வளவு மிச்சமாகும்? பொருளாதார நிலைமை எவ்வளவு உயரும்? படித்து, பீ. ஏ. பாஸ் செய்திருக்கிறீர்கள் நீங்கள். இந்தச் சின்னவிஷயம் ஏன் உங்களுக்குத் தோன்றவில்லை?''

''நமஸ்காரம் போய்விட்டு வருகிறேன்.''

''ஆகா! போய்விட்டுவாருங்கள். நான் சொல்கிறபடி கேளுங்கள். விநோதினியில் வெளியான கட்டுரையில் வெள்ளைப்பூண்டு க்ஷயவியாதிக்கு நல்லது என்று சொல்லியிருக்கிறது. தினம் கொஞ்சம் பாலில் வேகவைத்துச் சாப்பிடுங்கள். இம்புருச்செடி தெரியுமா, க்ஷீரகாகோலி என்று கேள்விப்பட்டதுண்டா, உயர்ந்த மூலிகைகள்! அந்தக் கட்டுரையைப் படியுங்கள். போய்வருகிறீர்களா? நமஸ்காரம்!''

ஸ்ரீகாந்தன் 'விநோதினி' காரியாலயத்திலின்றும் புறப்பட்டான். இவ்வளவு வயதான மனிதர் கிண்டல் செய்கிறார் என்றும் சொல்வதற்கில்லை. அவனிடம் அவநம்பிக்கைப்படுகிறார் என்றும் நினைப்பதற்கில்லை. ஆயுர்வேத வைத்தியத்தில் அவருக்கு நம்பிக்கை என்றால் எதற்காக அவர் நீர்ரோகத்திற்காக டாக்டரிடம் 'இன்ஸுலின்' இஞ்சக்ஷன் செய்துகொள்கிறார், அதைக் கேட்டிருக்கலாம், அப்பொழுது நினைவுக்கு வரவில்லை. கேட்டிருந்தால் சண்டைவந்திருக்கும். எல்லாம் ஊருக்கு உபதேசம்! ஆயுர்வேத கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிற அதே க்ஷயரோகம்தானா இந்த டி.பி! ஆயுர்வேதமோ, தேரையர் வைத்தியமோ, யுனானி வைத்தியமோ எதுவாக இருந்தாலும் ஆக்ஷேபணை இல்லை, உடம்பு சௌகரியமாகவேண்டும், அவ்வளவுதான்! அதற்காகப் பரீக்ஷை செய்துகொண்டிருக்கமுடியுமா?

உண்மை அன்புடன் உறவு முறையினர் முன் வந்து செய்யக்கூடிய உதவிகளைப் புறக்கணித்து விட்டு அன்னியரிடம் போய், பல்லிளித்து யாசிப்பது கௌரவத்துக்கு உகந்ததா என்று மனதிலே விவாதித்தான். எந்தக்காலமும் இப்பொழுதைப் போலிருந்துவிடாது. எப்பொழுதாவது யாராவது ஜாடையாகச் சொல்லிக் காட்டினால் பிராணன் போவது போலிருக்குமே! ஒருவேளை ராஜாம்பாளே தன்னை மீனாவின் கணவருடன் ஒப்பிட்டு இந்தக் கையாலாகாத மனிதனுக்கு வாழ்க்கைப்பட்டேனே என்று விதியை நொந்துகொள்வாளோ? இப்பொழுது அவள் வாய்திறந்து இளப்பமாகத் தன்னைப்பற்றி ஒன்றும் சொல்லிவிடவில்லை. மனத்திற்குள் என்ன இருக்குமோ? ஸ்திரீகளின் நெஞ்சத்தின் ஆழம் கண்டுபிடிக்க முடியாது என்று பெரியோர் சொல்லியிருக்கின்றனரே! சிந்தனைகள் கொந்தளித்து அவன் புத்தி குழம்பிக்கொண்டிருந்தது.

மணி மூன்றிருக்கும், ஹோட்டலில் ஒரு கப் காபி சாப்பிட்டுவிட்டு, ஒரு சாத்துக்குடி நாரத்தம் பழத்தை வாங்கி உரித்து ஒவ்வொரு சுளையாகத் தின்றுகொண்டே நடந்தான் ஸ்ரீ காந்தன். ரினைஸான்ஸ் பதிப்பகத்தை அடைந்தான்.

ரினைஸான்ஸ் பதிப்பகம் ஒரு பெரிய பங்களாவிலிருந்தது. அதன் சொந்தக்காரர் வன்மீகநாதன் பெரிய பணக்காரர். பொழுதுபோக்குக்காக இலக்கியப் பிரசுரத்தில் ஈடுபட்டார். நாலைந்து சினிமாப் படங்கள் எடுத்து ஏராளமான நஷ்டம் அடைந்து சினிமாத் துறையை விட்டு விட்டுப் புத்தக வெளியீட்டில் கவனம் செலுத்தினார். பத்திரிகைத் தொழில் சிரமம். ஆள்கள் அதிகம் வேண்டும். பிரஸ் வேண்டும். குறித்த காலத்தில் பிரதிகளை வெளியிட வேண்டும். சள்ளைபிடித்த வேலை, போட்டி அதிகம். புத்தகங்கள் அப்படி இல்லை. பிரசுரமாகும் புத்தகங்களைப் பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் விமரிசனம் வரும். அதிகச் செலவும், சிரமமும் இல்லாமல் கியாதி அடையலாம். புத்தகங்கள் மெதுவாக விற்றாலும் சரி, விற்காமல் தங்கினாலும் சரி. நஷ்டம் அபரிமிதமாக வந்துவிடாது. பத்திரிகைகளுக்கு ஒவ்வொரு பிரதிக்கும் ஆயுள் ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் என்றால் புத்தகங்களுக்கு ஆயுள் குறைந்தது ஐந்து அல்லது பத்து வருஷங்கள்.!

ரினைஸான்ஸ் பதிப்பகத்தில் ஸ்ரீ காந்தனின் இரண்டு நாவல்களும், ஒரு சிறு கதைத் தொகுதியும் பிரசுரமாயிருந்தன. அவைகளுக்கு ஏதோ சுமாரான பணமும் கிடைத்தது. மற்றொரு நாவலின் கையெழுத்துப் பிரதி மேற்படி காரியாலயத்திலிருந்தது. விளம்பரத்தில் அந்த நாவலின் பெயரும் '(அச்சில்)' என்று காணப்பட்டது.

கட்டிடத்துக்கும் காம்பௌண்டுக்கும் இடையேயுள்ள தோட்டத்தின்வழியே போகும் போதே ஆபீஸ் பையன் கையெழுத்துப் பிரதிகளை வாசிப்பதை ஸ்ரீ காந்தன் பார்த்தான். அருகில் நெருங்கியதும் அந்த 'பூல்ஸ்காப்' காகிதங்கள் தன்னுடைய நாவல் என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டான். ஸ்ரீ காந்தனைக் கண்டதும் பையன் எழுந்து, "நல்லா எழுதியிருக்கிறீங்க, ஸார்!" என்றான். ஸ்ரீ காந்தனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "இது எப்படிக் கிடைத்தது உனக்கு?" என்று கேட்டான். "ஐயா உத்தரவு. சாதாரண ஜனங்கள் எல்லோருக்கும் புரியவேண்டும். என்னைப் படிக்கச்சொல்லி 'டெஸ்ட்' பண்ணுகிறார், எனக்குப் பிடித்திருந்தால்தான் அச்சுக்கு அனுப்பலாம். சும்மா உட்கார்ந்திராமல் படிக்கச் சொன்னார். என்னாங்க! நல்லா இருக்குதுங்களே!" என்றான் பையன்.

ஸ்ரீ காந்தன் ஒன்றும் பதில் சொல்லாமல் உள்ளே போகப் புறப்பட்டான். "ஸார் கொஞ்சம் உட்காருங்கள். ஐயா உத்தரவைக் கேட்டுக்கொண்டு போகலாம்" என்று சொல்லிவிட்டு ஒரு பித்தானை அமுக்கினான். ஸ்ரீ காந்தன் ஒரு பிரம்பு நாற்காலியின்மீது உட்கார்ந்தான். "என்னங்க, ஏழ்ாவது அத்தியாயத்திலே ரொம்ப வேதாந்தம், தத்துவம் எல்லாம் எழுதியிருக்கிறீங்களே, சாதாரண ஜனங்களுக்குப் புரியாதுங்களே!" என்று சொன்னான் பையன். "உனக்குப் புரிகிறதோ இல்லையோ?" என்று கேட்டான் ஸ்ரீ காந்தன். "எனக்குப் புரியுது" என்றான் பையன். சிரித்துக்கொண்டே, "அது போதும்! நீ புரிகிறதென்று ஆமோதித்தால் போதும், எனக்குத் திருப்திதான்! பொது ஜனங்கள் இருக்கட்டும்!" என்றான் ஸ்ரீ காந்தன்.

மின்சார மணி தொடர்ந்து ஒரு நிமிஷம் அடித்தது. "சற்று இருங்கள்" என்றான் பையன். சிறிது நேரத்தில் ட்ரிங், ட்ரிங் என்று இரண்டு தடவைகள் மணி அடித்தது. "இப்பொழுது போகலாம்" என்றான் பையன். ஆச்சரியப் பட்டுக்கொண்டே உள்ளே சென்றான் ஸ்ரீ காந்தன்.

விஸ்தாரமான ஹால். கீழே கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. மேலே மின்சார விசிறி சுழன்றது. ஒருபுறத்தில் பெரிய ரேடியோ கிராம் ஒன்று இருந்தது. சோபாக்களும், மெத்தை நாற்காலிகளும் கிடந்தன. ஒரு மேஜையின் அருகிலே நாற்காலியிலமர்ந்து ஒருநவநாகரிக நாரீமணி போட்டோப்

படங்களை வைத்துப் பார்த்துக்கொண்டிருந் தாள். வன்மீக நாதன் நாஸூக்காக உடை யணிந்து சிட்டியடித்துக்கொண்டு நின்றார், அறை முழுவதும் நறுமணம் கமழ்ந்தது. ஸ்ரீ காந்தன் ஒரு மாதம் முன்பு இங்கு வந்திருந்த போது இந்த இடம் இந்தமாதிரி இல்லை, அப் போது அடுக்கடுக்காக அச்சிடப்பட்ட காகி தங்கள் கிடந்தன; பைண்டர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள்.

"ஹலோ, வாருங்கள் ஸ்ரீ காந்தன்! எங்கே ஒரு மாதமாகக் காணோம்? ஒரு மாதப் பத்தி ரிகை ஆரம்பிக்கப்போகிறோம். மல்லிகா என்று பெயர். 'மல்லிகா!.' 'மல்லிகா!' பெயர் நன்றாக இல்லை? எல்லாம் உண்மைச் சம்பவங்கள் கொண்ட கதைகள். இவர்தான் ஸ்ரீ மல்லிகா. 'மல்லிகா!' பத்திரிகையின் ஆசிரியை. "ஸ்ரீமதி மல்லிகா! இவர்தான் ஸ்ரீ. ஸ்ரீ காந்தன். பிரபல எழுத்தாளர்." என்றார் வன்மீக நாதன்.

அந்தப் பேசும் பொற்பதுமை போன்ற சௌபாக்கியவதி எழுந்துநின்று வளையல்கள் குலுங்க, "நமஸ்தே!" என்று கூவி, கரம் கூப் பினாள். ஸ்ரீ காந்தனும் உபசாரத்துக்குக் கும் பிடு போட்டான்.

"வன்மீக நாதன்! இப்படி வாருங்கள்! உங்களிடம் ஒரு முக்கிய விஷயம் பேசவேண் டும்."

"சும்மா சொல்லுங்கள் ஸ்ரீ காந்தன்! இப் படியே சொல்லுங்கள். மல்லிகா இருந்தால் பரவாயில்லை."

மல்லிகா மெதுவாக நகர்ந்தாள்.

"ஓ, நோ, நோ! நீ இருந்தால் பாதகமில்லை, மிஸ் மல்லிகா! நீங்கள் சொல்லுங்கள் ஸார்! என்ன விஷயம்?"

வன்மீக நாதன் உட்கார்ந்தார். ஸ்ரீ காந்த னும் உட்கார்ந்தான், அவர் அருகில் சோபா வில், மல்லிகா போட்டோக்களில் மனம் ஒன் றினாள்.

"எனக்கு உடம்பு சௌகரியமாக இல்லை, டாக்டர் டி. பி. யாக இருக்குமோ என்று சந் தேகப்படுகிறார்."

"ஓ,! டி. பி! ரொம்ப கெடுதலான வியா தியே அது. அப்புறம்?"

"இருநூறு ரூபாய் இப்பொழுது கொடுத் தீர்களானால் புது நாவலின் சன்மானத்திலே ஈடு செய்துகொள்ளலாம், இந்த நாவல் சினி மாவுக்கு ஏற்றதாக இருக்கும் என்று நினைக் கிறேன். அந்தத் துறையில் உங்களுக்கு அனு பவம் உண்டல்லவா? அதற்கான ஒப்பந்தம் உங்களிடமே எழுதித்தருகிறேன். இப் பொழுது அவசரத்துக்குச் செய்யும் உதவி பேருதவியாகும்."

"ப்ஸூ! சினிமாவிலே இதெல்லாம் எடு படாது ஸார்! அதெல்லாம் ஹாலிவுட்டிலே! 'தி குட் எர்த்,' 'தி ரெயின்ஸ் கேம்' மாதிரி நல்ல புத்தகங்கள் வெளியானால் அங்கே எடுப் பார்கள். இங்கே எல்லாம் கதை, வசனம் யார் எழுதினால் என்ன? சினிமாவிலே நல்ல டான்ஸ் வேண்டும், பாட்டு வேண்டும், முக வெட்டுள்ள நடிகைகள் வேண்டும். உங்க ளுடைய புஸ்தகங்களையெல்லாம் தேடி., யாரா வது சினிமாக்காரர்கள் வருவார்கள் என்று கன வுகளைக் காணவேண்டாம், அந்தப் பைத்தியக் கார எண்ணத்தை யெல்லாம் விடுங்கள்!"

"அது எப்படியாவது போகட்டும்! இப் பொழுது நீங்கள் இருநூறு ரூபாய் கொடுங் கள்."

"புஸ்தகம் பிரசுரமாவதற்கு முன்னால் பணம் கேட்டால் கொடுக்கமுடியுமா? புஸ் தகங்கள் அதிகம் விற்பனையாவதில்லை; கைப் பிடிப்புத்தான்! என்னுடைய ஸ்தானத்தில் நீங்கள் இருந்தால்தான் தெரியும். தமிழ் நாட்டில் எவ்வளவு எழுத்தாளர்கள் இருக்கி றார்களோ அவ்வளவு வாசகர்கள் இருக்கிறார் களா என்பது சந்தேகம்? நீங்கள் எழுது வதைப் பிறர் வாசிக்கவேண்டும் என்று நினைக் கிறீர்களே, பிறர் எழுதுவதை நீங்கள் வாசிப்ப துண்டோ? எத்தனை புஸ்தகங்களை விலை கொடுத்து வாங்கியிருக்கிறீர்கள்?"

"வாசிக்காமல் இருக்க முடியுமா? எல்லா வற்றையும் வாசிக்க முடியாதுதான். புஸ்தக மும் வாங்கிக் கொண்டிருக்கிறேன்."

"உம், எப்பொழுதாவது ஏதாவது 'பெங்கு வின்' புஸ்தகம் வாங்குவீர்கள். தமிழ்ப் புஸ்த கம் விலைகொடுத்து வாங்குவது உண்டா என்று கேட்கிறேன்."

"அதிகம்இல்லை. ஏதோ சில வாங்கியிருக் கிறேன்,"

"பாருங்கள், பாருங்கள். தமிழ் எழுத்தாள ரான நீங்களே இப்படியிருந்தால் மற்றவர் களைப்பற்றிக் கேட்கவேண்டுமா? இன்று எவ் வளவு பேர்கள் எழுதுகிறார்கள் என்று நினைக்கி றீர்கள்? காலேஜ் மாணவர்கள் மாணவிகளில் குறைந்தது பத்துப் பேர்களுக்கு ஒருவர் வீதம் எழுத்தாளர்கள்! இன்னும் மற்றவர்கள் நிறைய இருக்கிறார்கள். எழுதி எழுதி, பத்தி ரிகைகளுக்கு அனுப்புகிறார்கள். நன்றாக இல்லை என்ற காரணத்தினால் மட்டும் திரும்பி வருவதில்லை நூற்றுக்கு எழுபத்தைந்து. இடம் போதவில்லை ஸார் தெரியுமா? ஓடியாடித்

திரும்பிவரும் கதை கட்டுரைகளையெல்லாம் கடைசியில் பேரீச்சம்பழக்காரனிடம்தான் நிறுத்துப்போடவேண்டும். தமிழ் இலக்கியம் வீசை நாலணுவுக்கு வாங்கலாம் ஸார்! வீசை நாலு அணு! எழுதாத கடிதமாயிருந்தால் உபயோகப்படும். திரும்பி வந்த கட்டுரைகளுள்ள 'ஒரு பக்க' காகிதத்தால் நோட்டுத் தைத்தால் மற்றவர்கள் படித்துப் பரிகாசம் செய்வார்களோ என்ற சந்தேகம்!''

மல்லிகாவின் கலகலவெனச் சிரிக்கும் இன்னெலியினல் ஹால் நிறைந்தது.

"ஷட்டப்,மல்லிகா!'' என்ருர் வன்மீக நாதன் பொய்க் கோபம் வருவித்துக்கொண்டு.

"எழுத்தாளர்களைப்பற்றித் தாங்கள் கொண்டுள்ள அபிப்ராயத்துக்கு நான் வருத்தப்படுகிறேன்.'' என்று ஸ்ரீ காந்தன் சொன்னன்.

"நீங்கள் எதற்காக வருத்தப்படவேண்டும்? இருக்கிற நிலைமையைச் சொன்னேன். அது போகட்டும். 'மல்லிகா' வுக்கு ஒரு முதல்தர காதல் கதையாக எழுதிக்கொடுங்கள்.''

"உண்மைச் சம்பவம் நிறைந்த கதைகள் என்று சொன்னீர்களே.''

"சொல்லுகிறதுதான் ஸார்! நீங்கள் உண்மைச் சம்பவத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதுங்கள், எனக்கு ஆக்ஷேபணையில்லை, ஆனல் ஜாக்கிரதை, எவனவது இ. பி. கோ. 500 வது பிரிவுப்படி மான நஷ்டத்துக்குத்தாவா போட்டு விடப்போகிருன். உண்மைச் சம்பவத்துக்கு காது மூக்கு வைத்து மாற்றி, வேறு பெயர்கள் பாத்திரங்களுக்கு வைத்து எழுதுங்கள். ஒரு கதைக்கு உங்களுக்கு மட்டும் நூறு ரூபாய் தருகிறேன். ஸ்பெஷல் கேஸ்! சிருங்காரரசம் சொட்டவேண்டும். டி. எச். லாரென்ஸ் மாதிரி, பால்ஸாக் மாதிரி, எமிலி ஸோஸி மாதிரி — ரியலிஸம்,!''

"என்னவோ பார்ப்போம்!''

"இன்னெரு விஷயம். சொன்னல் விகல்பமாக நினைக்கமாட்டீர்களே!''

"சொல்லுங்கள்! ரியலிஸம் என்ருல் உங்கள் அபிப்ராயப்படி பச்சை, பச்சையாக எழுதுவதா?''

"மல்லிகாவில் ,தத்ரூபம்' எல்லாச் சம்பவங்களையும் உயிருள்ள மனிதர்களை வைத்துப் போட்டோ எடுத்துப் போடுகிருேம். இதிலே ஒன்றும் தவறு இல்லை. எழுத்தாளர் 'ஜாங்கிரி' சொன்னர்— உங்கள் மனைவியார் ரொம்பவும் லக்ஷணம் என்று. அவர்களைச் சில படங்கள் எடுக்கச் சம்மதிக்கச் சொல்ல வேண்டும். தற்காலத் தமிழ் இலக்கிய முன்னேற்றத்துக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமை இது.''

"உங்களிடம் பணம் இருக்கிறது, நான் உங்களிடம் பிச்சைக்கு வந்திருக்கிறேன் என்ற அகம்பாவத்தினல் இப்படிப் பேசுகிறீர்களா! இந்த நிமிஷம் முதல் பேனு எடுத்து ஒருவரிகூட எழுதுவதில்லை. இது சத்தியம்; சத்தியம். கம்பன் போற்றி வளர்த்த தமிழை, இளங்கோ எந்த மொழியால் பாடினனே அந்தத் தமிழை, பாரதி உள்ளத்துணர்ச்சியையெல்லாம் எந்தத் தேனினுமினிய மொழியால் கொட்டினனே அந்தத்தமிழை, நீங்களா பாதுகாக்கப் போகிறீர்கள்?...... "என்று வீராவேசத்துடன் சீறினன் ஸ்ரீ காந்தன்.

மல்லிகா: "என்ன ஸார் இது? அடுத்த இதழில் என்னுடைய படங்கள் வரும், இதோ பாருங்கள்; என்னுடைய கௌரவம் குறைந்து விட்டதா? எதற்காக இப்படித் துடிக்கிறீர்கள்? என்னுடைய சகோதரியான தங்கள் மனைவிக்கு ஒரு ஆபத்தும் வந்துவிடாது; நான் பார்த்துக்கொள்கிறேன். இதோ பாருங்கள் என் படங்களை;'' என்று சொல்லிக்கொண்டே அவனிடம் கொடுத்தாள் படங்கள் சிலவற்றை.

கண்களைப் பரக்கவிரித்து விழிகளை உருட்டி நோக்கிய ஸ்ரீ காந்தன் அந்தப் படங்களை வாங்கி வெடுக்கென்று கிழித்து அவள் தலையில் போட்டுவிட்டு வெளியே ஓடலானன்.

"பைத்தியம்!'' என்ருர் வன்மீக நாதன் திடுக்கிட்டு எழுந்து.

தெருவிலே ஓடினன் ஸ்ரீ காந்தன். 'ஹஹ் ஹஹ்ஹா! என்று பயங்கரமாகச் சிரித்தான். ஆந்தை கினை கூட்டுவதைப்போல் அலறினன். யானை பிளிறுவதைப்போல விபரீதமாகச் சத்தமிட்டான். தெருவிலே போவோர் வருவோர் வியந்த கண்களால் பார்த்தனர். மார்பு நடுவில் சட்டையின் இடையே இரு கைகளையும் விட்டுப் பற்றி, "அடே! நரசிம்மாவதாரத்தைப்போல, குடலைக் கிழித்து விடுவேன்'' என்று இடி முழக்கம்போலக் கர்ஜித்து, டர்ர்ர் என்று கிழித்தான் சட்டைத்துணியை. கலைந்திருந்த தலைமயிரைப் பிய்த்துக் கொண்டான். ஆயிரம் பேய்களாக அவன் உள்ளத்திலே புகுந்து கொண்டு அல்லோல கல்லோலப் படுத்துவதுபோலத் துள்ளிக் குதித்தான். பூமியே அவன் கால்களுக்கு அடியிலிருந்து நழுவுவது போலிருந்தது. எங்கேயோ போய்விட்டு, வன்மீக நாதனின் மோட்டாரில் வந்துகொண்டிருந்த எழுத்தாளன் 'ஜாங்கிரி'. மோட்டாரை நிறுத்தச் சொல்லிவிட்டு இறங்கி ஓடிவந்து ஸ்ரீ காந்தனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்;

மார்பின்மேல் கைவைத்துப் பார்த்தான். தணலெனக் காய்ந்தது உடம்பு. ஸ்ரீ காந்தனின் தோள்மேல் ஒரு கையை வைத்துக்கொண்டு இன்னொரு கையால் அவனுடைய தலைமயிரைக் கோதினான். "என்ன ஸார் இப்படி! உடம்பு சரியாக இல்லை. ஆஸ்பத்திரிக்கு

199319

அழைத்துக் கொண்டு போய் விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஸ்ரீகாந்தனின் கையைப் பற்றினான். உதறித் தள்ளிவிட்டு ஸ்ரீகாந்தன், "நான் ஒரு எழுத்தாளன். முன்சிப் வேதநாயகம் பிள்ளை, ராஜம் அய்யர், வ. வே. சு. ஐயர் மாதவய்யா வழியிலே வந்த எழுத்தாளன். புது எழுத்தாளன் இல்லை... ஹஹ்ஹஹ்ஹா !... தமிழ்இலக்கியம் வீசை நாலணா! தமிழ் மலிந்துவிட்டது. தெருவெல்லாம் தமிழ்வெள்ளம், வாரீரோ மாந்தர்காள்! அள்ளி அருந்துவோம் தெள்ளமுதை, தெவிட்டாத தேன்தமிழை!" என்று உரத்துக் கத்தினான். அவன் உடல் கட்டுக்கொள்ளாமல் ஆட்டமாக ஆடியது. ஜாங்கிரி "மோட்டாரிலே ஏறுங்கள். இப்படி வாருங்கள். என்ன வந்துவிட்டது இப்போது?" என்று மறுபடியும் ஸ்ரீகாந்தனிடம் நெருங்கினான்.

"அடேடேடே! புதுமை வேண்டுமடா, தமிழிலே புதுமை! தமிழா! உறக்கம் கலைந்தெழடா! ஐடியலிஸ்ம். ரியலிஸம், மாக்காபர்ர்ர்! ட்ரலலலா! மாக்காபர்! லலலா!" என்று ஊளையிட்டுக்கொண்டே ஓடினான் ஸ்ரீகாந்தன்.

'ஜாங்கிரி' ஒன்றும் விளங்காமல் விழித்தான். எப்போழுதுமே நிதான புத்தியுடன் இருந்த ஸ்ரீகாந்தனுக்கு என்ன நேர்ந்து விட்டது! ஏதாவது கஞ்சா, அபின் சேர்ந்த மருந்தினால் வந்தகோளாறு? உடம்பு அசௌகரியம் என்று கேள்வி, பைத்தியம் பிடித்திருப்பதைத்தான் இடக்கரடக்கலாகச் சரீர அசௌகரியம் என்று சொல்லிவைத்தார்களா? எங்கேயாவது மோட்டாரிலே அடிபட்டுச் செத்துவிடப் போகிறதே" என்று ஜாங்கிரியும் பின்னால் துரத்திக்கொண்டு ஓடினான்.

பெரிய வீதி, டிராம்கள், பஸ்கள், சின்ன மோட்டார் கார்கள், பெரிய கார்கள், லாரிகள் எல்லாம் ஓடிக்கொண்டிருந்தன. ஓரத்திலிருந்த நடைபாதையில் மனிதர்கள் நடந்துகொண்டிருந்தார்கள். பத்திரிகை விற்கும் பையன்கள், பலூன், பனியன், ஐஸ்ப்ரூட், கத்திரிக்கோல், தட்டுமுட்டுச் சாமான்கள் விற்பவர்கள், ஜேப்படி வித்தைக்காரர்கள், பிச்சைக்காரர்கள், மைனர்கள், காலேஜ் பெண்கள்—மனித வர்க்கத்தில் எவ்வளவு ரகமானவர்கள் உண்டோ அவ்வளவு பேர்களும் போவதும் வருவதுமாயிருந்தார்கள், ஸ்ரீகாந்தனின் மனதில் சிதறிய சிந்தனைகளைப்போல.

போலீஸ்வானின் ஒலிபெருக்கி "ஏனப்பா ஓடுகிறாய்? பிடி, பிடி ஆளைப்பிடிய்ப்பா! அவன் தானய்யா, பரட்டைத்தலை, கிழிஞ்ச சட்டை! பைத்தியமா!" என்று அலறியது. சிலர் ஸ்ரீகாந்தனை வளைத்தார்கள். குறுக்கே தெருவில் ஓடினான் பிடிபடாமல். மோட்டார்ஹாரன்கள் "ஹாட்! ஹாட்" என்று சப்தித்தன. டிராம் வண்டிகளின் மணியோசை இடைவிடாமல் கலவரத்திலேயும் கேட்டது. ஒரு லாரி ஸ்ரீகாந்தன்மேல் மோதி, கீழே உருட்டிவிட்டது. போக்குவரவு ஸ்தம்பித்தது. போலீஸ் கான்ஸ்டபிள் ஓடிவந்தான். கூட்டம் கூடியது. ஒரே ரத்தவெள்ளம் பெருகியது. ஜாங்கிரி' ஓடோடிவந்து கூட்டத்தினிடையே நுழைந்து பார்த்தான். ஸ்ரீகாந்தனின் வாய் கடைசியாக' "தமிழ் இலக்கியம் வீசை நாலணா!" என்று ஈனசுரத்தில் முணுமுணுத்தது தெளிவில்லாமல்.

தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளில் ஸ்ரீகாந்தனின் மரணத்தைப்பற்றிய செய்திகள் வந்தன. செய்தியின் அடியிலே அவனுடைய இலக்கியத்தைப் புகழும் குறிப்பும் காணப்பட்டது. எழுத்தாளன் 'ஜாங்கிரி'யின் முயற்சியால் சத்தியமூர்த்தி ஹாலில் அனுதாபக் கூட்டத்துக்கு ஏற்பாடு ஆயிற்று. 'விநோதினி' ஆசிரியர் திரு. இராமானுஜலு நாயுடு தலைமை வகிக்க இசைந்தார். மேடைமீது தலைவர், ஸ்ரீ. வன்மீகநாதன், ஸ்ரீமதி மல்லிகா, 'ஜாங்கிரி' எல்லோரும் அமர்ந்தனர், கடவுள் வணக்கத்திற்குப் பிறகு காலஞ்சென்ற ஸ்ரீகாந்தனின் ஆத்மா சாந்தியடைவதற்காக எல்லோரும் ஒரு நிமிஷம் மௌனமாக எழுந்து நின்றனர். அவர்கள் பேசியதின் சாராம்சம் பத்திரிகைகளில் வெளிவந்தது. அவர்களுடைய புகைப்படமும் வந்தது.

திருவாளர் நாயுடு: "காலஞ்சென்ற ஸ்ரீகாந்தனின் எதிர்பாராத முடிவினால் நமக்கு ஏற்பட்டுள்ள துயரத்தைத் தெரிவிப்பதற்காக இந்த இடத்தில் கூடியிருக்கிறோம். இலக்கிய ஆசிரியர்கள் அவர்கள் ஆயுள்காலத்திலே பாராட்டப்படாமல் இருப்பது பெரிய துரதிர்ஷ்டம். இது நம்முடைய அனுபவம். இப்பொழுது பத்திரிகை படிப்பவர்கள் அதிகம். ஆனால் எழுத்தாளர்களுக்கும், வாசகர்களுக்கும் நேரடியான தொடர்பு இல்லை. எங்களைப் போன்ற பத்திரிகாசிரியர்தாம் சிறந்த எழுத்தாளர்களின் இலக்கியத்தைத் தேடி வாசகர்களுக்குத்தர வேண்டும், ஸ்ரீகாந்தனின் பலகதைகளையும், கட்டுரைகளையும் 'விநோதினி' யில் படித்துத் தமிழர்கள் மகிழ்ந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற அறிஞருடைய எழுத்தோவியங்களைப் பிரசுரிப்பதின் மூலம் ஏதோ என்னால் இயன்ற அளவு தமிழ்மொழி வளர்ச்சிக்குச் சேவை செய்திருக்கிறேன். இதைத் தமிழ்நாடு நன்கு உணரும்; தமிழர்கள் வேறு இடங்களில் இருந்தாலும் உணருவார்கள், இப்பொழுதாவது எழுத்தாளர்களின் நிலைமை முன்னேறியிருக்கிறது என்று சொல்லலாம். நான் பத்திரிகைத் தொழிலில் பிரவேசிக்கிற காலத்தில் எழுது

ஜல தோஷம்,
மார்-சளி
உடம்பு வலிகளுக்கு
நிவாரணமளிக்கிறது

'ஜீவான்ஜன்'

சரீரத்தின் மேல் தடவி
தேய்ப்பதற்கும் ஆவியாக
சுவாசிப்பதற்கும்
உபயோகரமானது
ரஸாயனக் களிம்பு, மிருக
கொழுப்பு சேராதது

தயாரிப்பவர்கள்
ஜீவான்ஜன் லாபொர்ரட்டரீஸ் லிட்
மதராஸ்-14

ஸோல் ஏஜன்டுகள்
கே.கே.பிள்ளை & கோ
ராயப்பேட்டை...மதராஸ்-14

ஜீவான்ஜன்

வசந்த ருதுவா!

என பரவசமடையச்
செய்யும்
மலர்ந்த மலர்களின்
மனதை மயக்கும்
மணம் கொண்டது

நீபா ஹேர் ஆயில்

உபயோகிக்க
உபயோகிக்க
உங்கள் உள்ளம்
உவக்கும்

★

கங்கா ஒர்க்ஸ், அடையாறு, சென்னை-20.

வதைத்தொழில் என்று சொல்லமுடியாது. சேவை, தொண்டு, என்றுதான் சொல்லவேண்டும். ரொம்பவும் தியாகம் செய்துதான் வாழ்க்கை நடத்தவேண்டும். இலக்கியப் பணியிலேயே என் தலை மயிர் நரைத்துவிட்டது. அப்பொழுது நாங்கள் கரடுமுரடான பூமியைச் செப்பனிட்டு, பக்குவப்படுத்தித் தோட்டம் போட்டதின் பலன்தான் இன்றைய இலக்கியப் பூங்காவில் ஸ்ரீகாந்தன்போன்ற புஷ்பங்கள்! அரசியல், பொருளாதாரம், சமூக சீர்திருத்தம் முதலிய அரிய பெரிய விஷயங்களிலே மட்டும் அந்த நாட்களில் நாங்கள் கவனம் செலுத்த முடிந்ததனாலே மறுமலர்ச்சி இலக்கியத்தைக் கவனிக்க முடியவில்லை. வீடுபற்றி எரிகிற காலத்திலே நந்தவனத்துக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியுமா? நான் தற்புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை, அன்று நாங்கள் ஊன்றிய மறுமலர்ச்சி இலக்கிய விதை இன்று பெரிய விருக்ஷமாக வானளாவ வளர்ந்தோங்கியிருப்பதைக் கண்டு நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன், பேச்சு வளருகிறது. ஸ்ரீகாந்தன் காலம் ஆகிவிட்டார். ஸ்ரீகாந்தனின் நினைவு இன்னும் சில காலம் உங்களிடையே நிலைத்திருப்பதற்கு வேண்டிய சாமக்கிரியைகள் என்னிடம் உள்ளன. அவர் இறந்து போவதற்குச் சிறிது நேரம் முன்னர் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது இவ்வளவு சீக்கிரம் மாய மாய் மறைவார் என்று எனக்குத் தெரியவில்லையே. அவர் காலமான செய்தி தெரிந்ததும் அவர் என்னிடம் கொடுத்திருக்கும் கதைகள் சிலவற்றைப் படித்தேன். அணைவதற்கு முன் சுடர் வீசும் விளக்குப்போல அவைகளில் அவருடைய கற்பனை மிளிர்கிறது. அக்கதைகளைத் தொடர்ந்தே பிரசுரிக்க வேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆவல் எனக்கு ஏற்பட்டாலும் கூட, அவருடைய ஞாபகம் நீடித்திருப்பதற்காக ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு கதையாகப் பிரசுரிக்க எண்ணுகிறேன். நீங்கள் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் அவருடைய கதைகளில் ஒன்று வீதம் போட்டு உங்களை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கப் போகிறேன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் வெளியாகும் ஒவ்வொரு 'விநோதினி' இதழையும் வாங்கி அதிலே ஸ்ரீகாந்தனின் கதை இருக்கிறதா என்று தேடவேண்டும். கதை இருந்தால் உங்கள் அதிர்ஷ்டம். இல்லாமலிருந்தாலும் அவருடைய நினைவு வரும். இந்த யோசனை என்னைத் தலைமை வகிக்கக் கூப்பிட்டபோதுதான் ஸ்புரித்தது. 'விநோதினி'யின் மூலம் அவருடைய கதைகளைக் கொண்டே அவரைப்பற்றிய ஞாபகம் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் மனதிலே ஏற்படுத்துவதுதான் சரியான யோசனையென்று தோன்றுகிறது. ஸ்ரீகாந்தனின் ஆத்மா சாந்தியடையுமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

* * * *

ராஜாம்பாளுக்கு ஈடுசெய்ய முடியாத பெரு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அப்பூங்கொடியின் எழில் வதனம் வாடி வதங்கிவிட்டது. கைம்மை விரதம் பூண்டாள். ஸ்ரீ காந்தன் இன்ஷ்யூரன்ஸ் செய்து ஒரு தவணைக்கு மேல் பிரீமியம் கட்டாததினால் அப்பொழுதே பாலிஸி மதிப்பு இழந்துவிட்டது. பத்திரிகைக்காரர்கள் ஸ்ரீ காந்தனின் குடும்பப் பாதுகாப்புநிதி திரட்டினார்கள். அந்த நிதியின் தாத்பர்யம் அவளுக்கு விளங்கவில்லை. கணவனின் மரணத்தினால் அவள் பயன் அடைய விரும்பவில்லை. இருபத்து மூவாயிரம் ரூபாய்கள் சேர்ந்தன. பெரிய தொகைதான் அவளுக்கு இது இப்பொழுது. ஒவ்வொரு எழுத்தாளரும் செத்துப்போகிறவரையில் தமிழ்நாடு அவர்களைக் கௌரவிக்கக் காத்துக்கொண்டிருக்கவேண்டாம் என்று எண்ணினாள். "சிரமப்படும் எழுத்தாளர்களுக்குச் சமயமறிந்து உதவி செய்து அவர்களை நிம்மதியுடன் இலக்கியச் சிருட்டியில் ஈடுபடச்செய்தால்தான் தமிழின் எதிர்காலம் சோபையுடன் திகழும்; ஸ்ரீ காந்தனின் குடும்ப உதவி நிதியை மூலதனமாகக் கொண்டு, இந்த நோக்கத்துடன் ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தவேண்டும்; அவருடைய ஞாபகச் சின்னமாக இந்த டிரஸ்ட் விளங்கட்டும்," என்று 'விநோதினி' ஆசிரியர் திரு. இராமானுஜலு நாயுடுவுக்கு ஒரு கடிதம் எழுதினாள் ராஜாம்பாள்.

ஜெய் ஸோம்நாத்

தொடர் கதை

கே. எம். முன்ஷி — ஸுரேந்திரநாத் சாஸ்திரி

மொழி பெயர்ப்பு — கீழையூர் தி. சேஷாத்திரி

அத்தியாயம்—6

சாமந்தனின் தோழன்

சௌளாவின் ஞாபகம் சாமந்தனை ஊக்கிக்கொண்டிருந்தது. அவன் தன் தகப்பனுரை எப்படியாவது முந்திவிட வேண்டும் என்ற முடிவை முன்னமேயே செய்துவிட்டான். அதற்கும் தடங்கல் வரலாம் என்று அவன் இளஉள்ளம் ஒப்புக்கொள்ளவே தயாராக இல்லை. ஒட்டகைகளின் காற் சதங்கைச் சத்தத்தை ரசித்துக்கொண்டே அவன் பிரயாணம் செய்தான். ஆபூ, சந்திராவதி இரண்டையும் ஒருபுறம் விட்டான். ஸ்ரீமாலில் கொஞ்சநேரம் தங்கினுன். பிறகு பரமார்களின் தலை நகாரன ஜாலோரைப் போயடைந்தான். ஜாலோரின் அரசரான வாக்பதி கோகாபாபாவுக்குச் சம்பந்தியாக வேண்டும்.

சாமந்தன் ஜாலோர் போய்ச் சேர்ந்தவுடன் அதன் அடிவாரத்தில் ஒரு பெரிய ஒட்டகங்களின் கூட்டம் தங்கிக் கிடப்பதைப் பார்த்தான். அவன் தன் ஒட்டகையைவிட்டு இறங்கினுன். மிக அழகு பொருந்திய ஒரு வீரன் ஆயுதங்களணிந்துகொண்டு அவனை நோக்கி வந்தான். சாமந்தன் அவன் முக அடையாளம் முன் தெரிந்ததுபோலிருக்கக் கண்டான். எங்கே பார்த்தான், எப்பொழுது பார்த்தான் என்பதை மட்டும் அவன் ஞாபகப்படுத்திக் கொள்ளமுடியவில்லை.

"எங்கிருந்து வருகிருய்," என்று அந்த வீரன் இனிமையான குரலில் சாமந்தனைக் கேட்டான்.

சாமந்தன் குரலைக் கேட்டதும் விழித்துக்கொண்டான். ஸோமநாதன் ஆலயத்தில் சௌளா நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தபொழுது இந்த மனிதன் அங்கே நின்றுகொண்டிருந்தான். சாமந்தனுக்கு அந்த விஷயம் ஞாபகம் வந்ததும் ஆவலுடன், "நீங்கள் வந்த இடத்திலிருந்துதான்" என்ருன்.

"பட்டணிலிருந்தா?" என்று அந்த மனிதன் ஆச்சரியம் கலந்த குரலில் கேட்டான்.

"இல்லே, பிரபாஸியிலிருந்து. நீங்கள் கங்க சர்வக்ஞர், பட்டண் பீமதேவன் இவர்களுக் கருகே உட்கார்ந்திருந்தீர்கள்."

"அப்படியானுல் நீங்களும் அங்கே இருந் தீர்களா?"

"ஆம்!" என்ற சாமந்தன் தன் வேகம் கொண்ட புத்தியின் உதவியினுல் அவன் வந் திருந்த காரணத்தையும் ஊகித்துக்கொண் டான். "நீங்களும் என்னைப்போல் ஸோம தேவருடைய உத்தரவைச் சிரமேற்றுங்கி வந் திருக்கிறீர்கள் என்றே நினைக்கிறேன். தங்கள் பெயரென்னவோ?" என்று கேட்டான்.

"நான் பீமதேவருடைய மந்திரி விமலன்." என்று சொல்லி விமலன் சாமந்தனை அங் கிருந்து தனித்து அழைத்துச் சென்றுன்.

"நீங்கள் யார்?" என்று கேட்டான் விம லன்.

"நான் இப்பொழுது ராணுவாக இருக்கும் கோகாதுர்க்கத்தின் தலைவனின் மகனின் மகன். என் பெயர் சாமந்தன்." என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு அந்த வீர இளைஞன், "தாங்களும் அந்த மிலேச்சனை உத் தேசித்துத்தானே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அனுபவம் வாய்ந்த விமலன், "நீங்கள் எதற் காக வந்தீர்கள்?" என்றுன்.

"நான் கோகாபாபாவுக்குச் சமாசாரம் சொல்லப்போகிறேன். என்னைக் குருதேவர் அனுப்பிவைத்தார்."

"நல்லதாய்ப் போயிற்று நாம் சந்தித்தது." விமலன் இதைச் சொல்லிவிட்டு மேலே பேசி னுன். "இவ்விடத்து அரசன் உங்கள் சம்பந்தியல்லவா! நீங்களும் என்னுடன் வந்தால் அவரிடம் சொல்லி ஒப்பவைக்கலாம்."

"ஏன், அவரிடம் என்ன சொல்லவேண்டும்?"

"ஜாலூர் உதவி செய்தால், பட்டண் இங்கே வரலாம். எல்லோரும் சேர்ந்து கஜினிக்கு முடிவுகட்டலாம்."

சாமந்தன் கடகட என்று சிரித்தான். ஆனுல் கஜினி இந்தப்புறம் வந்தாலல்லவோ அந்த ஏற்பாடு! நடுவிலே கோகாபாபா உட் கார்ந்திருக்கிருரே, பாலே வனத்தின் அரசர்! ஸபாதலக்ஷத்தின் வீரநாயகர், ஹஜாரிகோட் டையின் தலைவன்; நாங்தோர், கன்னேசி, சூர சாகரம் முதலியவர்களை மறந்தேவிட்டீர்களே!"

"அது சரிதான். ஆனுல் எவ்வளவு ஏற்பாடு செய்தாலும்தான் போதாதே! எல்லாம் ஸோமநாதரின் வேலைதான்."

"கொஞ்சம் கூடப் பயப்படவேண்டாம். கோகாபாபா எதிரியை விரல் வழியாக நழுவ விட்டுப் பிறகு விழிக்கிறவர்களைச் சேர்ந்தவர் அல்ல!"

"இது எனக்குத் தெரியாதா?" விமலன் இளைஞனின் உத்ஸாகத்துக்கு உதவிபுரிந்தான்.

இருவரும் இந்தவிதம் பேசிக்கொண்டிருக்கும் போது அவர்கள் ஒட்டகங்களும் களைத்திருந்த படியால் தனியே நின்று களைப்பாறிக்கொண் டிருந்தன. அந்தச் சமயம் கோட்டை வாயிலைத் திறந்து ஒட்டகங்களின் ஒரு சிறிய கூட்டம் வெளியேறுவதை விமலன் பார்த்தான். அந்தக் கூட்டம் வாயில்தாண்டி மேடிறங்கி வடபக்கம் போக ஆரம்பித்தது. விமலன் கண்கொட்டா மல் அதைப் பார்க்க ஆரம்பித்தான்.

இரவிலே வாக்பதி அரசன் மெத்தையில் படுத்துக்கால் பிடிக்கச் சொல்லிக்கொண்டிருந் தார். அவருக்கு எழுபது வயதிருக்கும். அவர் நீண்டகைகள் அப்பொழுதும்வலிவிழக்கவில்லை. இவ்வளவு வயதாயிருந்தபோதிலும் அந்த வீர னுடைய கண்கள் ஒளி குறையவில்லை. அவ ருக்கருகே சாமந்தன் உட்கார்ந்திருந்தான். கிழவர் அடிக்கடி மிகுந்த அன்பின் காரண மாக அவன் முதுகைத் தடவிவிட்டுக்கொண்டி ருந்தார். மெத்தையின் கீழே விமல் மந்திரி வணக்கத்துடன் உட்கார்ந்துகொண்டிருந்தான் அருகே ஐந்தாறு உறவினர் அமர்ந்திருந்தனர்.

"பாபூ" என்று விமலன் ஆரம்பித்தான். "என்னைக் குருதேவர் கங்கசர்வக்ஞரும் என் தலைவர் பீமதேவரும் அனுப்ப நான் இங்கே வந்திருக்கிறேன். சாமந்த சிங்கும் அதே காரணமாகத்தான் வந்திருக்கிருர். இப்பொ ழுது நீங்கள் உதவி செய்தாகவேண்டும்."

உறவினர்களும் கால் பிடித்துக்கொண்டி ருந்தவனும் எழுந்து வெளியே சென்றனர்.

"என்ன விஷயம், சொல்லு" என்று அர சர் கேட்டார்.

"கஜினி சுல்தான் ஸோமநாதரின் ஆல யத்தை உடைக்க வருகிறுன் என்று தாங்கள் அறிந்திருக்கலாம்."

'ஆம், ஆமாம்," என்று சொல்லியவாறே கடகட என்று சிரித்த அரசன் "இதை என் கோட்டை முழுவதும் அறியுமே!" என்றுர்.

சாமந்தன் அவர் சிரித்த விதத்தையும் அவர் கண்களில் தோன்றும் பரிகாசக் குறியை யும் பொருதவனுய், "அது எப்படி?" என்று கேட்டான்.

உங்களுடைய விவசாயப் பண்ணை சாதனங்களை விருத்தி செய்து
அதிக லாபம் அடைய இதுவே தகுந்த தருணம்.

PLAN YOUR 1950 MECHANISATION NOW!

The Fordson Major with the famous F-R Mounted Plough

பண்ணைக்கு உகந்த விவசாய சாதனம் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர். காரணம்? அதை ஓட்டும் செலவு குறைவு. ஒவ்வொரு காலன் ஆயிலுக்கும் அது செய்யும் வேலை அதிகம். ஸ்பேர் பார்ட்டுகளும், ரிப்பேர் சார்ஜுகளும் சொல்பம். மேஜர் ஹைட்ராலிக் பவர்லிப்ட் என்னும் கருவி மிகவும் சிறந்தது. இதனால் மேஜரினுடைய உபயோகம் அதிகரிக்கிறது. போர்ட்ஸன் ஆயுதங்கள் லேசாகவும், ஆனால் பலம் பொருந்தியதாயும், ஏற்றச் சுலபமாயும், ஓட்டச் சௌகரியமாயும், இடம்விட்டு இடம் மாற்ற எளிதாயும் இருக்கும். இதனால் காலத்தைச் சிக்கனப்படுத்துவதுடன், உழைப்பில் அதிக உபயோகத்தையும் அளிக்கிறது. மேஜரைப்போல் அவைகளையும் வாங்க லாபகரமாயுமிருக்கும்.



Three screw levers within easy reach of the tractor seat enable the F-R plough to be accurately adjusted in work.

1. Depth Control 2. Front furrow width for side land work 3. Levelling

You get more work out of a Fordson

Fordson

MAJOR TRACTOR

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்
202, 203 மவுண்ட்ரோடு, சென்னை-2
கிளைகள் : பெங்களூர், உதகமண்டலம், திரிச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn.)
டெப்போ : கோயம்புத்தூர்

"மூல்தான் அஜய பாலன் இல்லையா? அவன் இப்பொழுது இங்கே வந்திருந்தான். அவன் மிலேச்சனுடைய தூது கொண்டு வந்தவன் இப்பொழுதுதான் போனான்."

இதைக்கேட்ட இருவரும் "மிலேச்சன் தூதா?" என்று ஒரே குரலில் கேட்டனர்.

"ஆம் அப்பா! அட, முழுவதையும்தான் கேளேன்! சுல்தான் முல்தானிலிருந்து எனக்கு இனும் அனுப்பியிருந்தான்."

"இனுமா?"

"ஆம்! அவனுக்கு என் உதவி வேண்டுமாம். ஜாலூர் வழியே செல்ல என் அனுமதியைக் கேட்கிறான். சோணகிரி சௌகாரிடம் அவன் நடுங்குகிறான்"

"பிறகு"

"நான் வெகுமதியை வாங்கி, பொக்கிஷத்தில் சேர்த்துக்கொண்டேன்."

சாமந்தன் பொங்கி எழும் கோபத்தை மறைத்துக் கொண்டு, "நீங்கள் உதவி செய்வதாக வாக்குக் கொடுத்துவிட்டீர்களா?" என்று கேட்டான்.

"நான் சொல்லிவிட்டேன். குஜராத் போக வேண்டும் என்றால் போய்க்கொள். உன் இஷ்டம். ஆனால் பரமார்களின் ராஜ்யத்தில்

மட்டும் கால் வைக்காதே. வைத்தாயோ வரும் ஆபத்துக்கு நான் பொறுப்பல்ல.''

சாமந்தன் குறுக்கிட்டுப்பேசினான்; ''ஆனால் மாமா, விமல் மந்திரி தங்களிடம் உதவிபெற அல்லவா வந்திருக்கிறார். நீங்களும் பீமசேனரும் ஒன்று சேர்ந்தால் கஜினி மிலேச்சனைப் பாலைவனத்தின் நடுவிலேயே வறுத்து எடுத்து விடலாமே!.''

''ஓஹோ. பீமன் என்னையும் வேண்டும் காலம் வந்ததோ!'' அரசன் குரலில் மூர்க்கத்தனம் பிடிவாதம் செய்தது. ''போன வருஷம் நான் மேவாட்டின்மேல் படை எடுக்க ஆயிரம் குதிரைகளும் இருநூறு ஒட்டகங்களும் கேட்டேனே, அப்பொழுது அவன் காதுகள் கேட்கவில்லையே! சரி சரி போ. பீமதேவனிடம் சொல்லு. 'நீ போட்ட விதை. அதன் பலனை நீயே அறுத்துக்கொள்' என்று. எனக்கு என்ன வந்து கிடக்கிறது?''

''ஆனால் மஹாராஜா! இது குஜராத்துக்கு மட்டும் வந்த சங்கடம் இல்லையே! மிலேச்சன் ஸோமநாதரை உடைக்க அல்லவா வருகிறான்? இது தர்மத்தைக் காப்பாற்றும் வேலை அல்லவா!'' என்று விமலன் பேசினான்.

''இது பீமதேவரின் சொந்த விஷயமல்லவா? மதுரையை உடைத்தானே மிலேச்சன், அப்பொழுது பீமதேவர் வரக்காணோமே காப்பாற்ற!''



''மஹாராஜா! நீங்களே யோசியுங்கள், மிலேச்சனைசபாதலக்ஷம், நாந்தோல், ஜாலோர். ஆபூ, பட்டண் எல்லாவற்றையும் தாண்டி, பிரபாஸி செல்லவிடுவது சரிதானா?''

''அட, பரமார் வீரன் உடலில் ரத்தம் ஓடும் வரையில் அந்த மிலேச்சன் ஜாலோரில் காலை வைத்து விடுவானா?''

''இப்படிப் போகா விட்டாலும் வேறு எந்த வழியாகவாவது போகத்தானே செய்வான்? வெற்றி அவனுடையதாகத்தானே போய்விடும்.''

வாக்பதியாசன் அசட்டையாக, ''வெற்றி யடைகிறவனைப் பார்த்தானடா போடா'' என்றார்.

''கோவிலில் மூர்த்தி உடைந்தால் அந்த அவமானம் எல்லா க்ஷத்திரியர்களையும்தானே சேரும்?''

''அதைப்பற்றி என்ன? இது பீமதேவனுடைய இடம் தானே. தன் இஷ்ட தெய்வத்தைக் காப்பற்றக்கூட அவனுக்குச் சௌரியம் இல்லையா?''

''ஆனால், பெரியப்பா, ஒரு வேற்றுத்தேச மிலேச்சன் நம் ராஜ்யத்தின் வழியாகச் செல்வது, சென்று நம்முடைய கோவில் விக்ரஹங்களை உடைப்பது, நாம் எப்படித்தான் பார்த்துக்கொண்டிருக்க முடியும்? இவன் கோப்பிராம்மண விரோதி அரக்கனல்லவா? நம்முடைய கோப்பிராம்மண தெய்வ விக்ரஹங்களை உடைப்பதையே தொழிலாகக்கொண்ட பொல்லாதவனல்லவா? அவனை இந்த வழியில் செல்ல நாம் இடம் கொடுக்கலாமா?''

''அதனால்தான் நான் கண்டித்துவிட்டேன். என் பூமியில் கால் வைத்தால் மென்னியைத் திருகிவிடுவேன் என்று.''

''அப்படியானால் பிறருடைய பூமியில்...மஹாராஜா!'' விமலன் மேலே சொன்னான்: ''என்றாலும் உங்களுடைய ஜனங்கள்தானே மடிவார்கள்; உங்கள் தெய்வங்கள்தானே நாசமடையும்.''

''அட! நீ தாமோதரமேதாவிடம் பாடம் படித்தவன், உன் பாடம் எல்லாம் இங்கே ஏறாது! உன் இனிய வார்த்தைகளுக்கு உயிரைக்கொடுப்பதற்கு நான் தயாராக இல்லையப்பா!''

''அப்படியானால் நீங்கள் இந்த விரோதி மிலேச்சனை எதிர்ப்பதில் உதவிபுரிய மாட்டீர்களா?'' என்று கேட்ட சாமந்தன் குரல் அவன் உள்ளேயிருந்த கோபத்தின் புகையில் தோய்ந்து வந்தது. ''இது என்ன வாக்பதி அரசருக்கு நன்றாய் இருக்கிறதா?''

''அட பயலே!'' வாக்பதி அரசன் குரலில் திரஸ்காரம் எக்களித்தது.

"நான் உன் தாத்தாவைப்போல இல்லை; வழியில் போகிறவர்கள் வம்பையெல்லாம் வாரித் தலையில் போட்டுக்கொள்ள."

சாமந்தன் படபடத்தான். "மாமா, கோகாபாபா எல்லாவற்றையும் மற்றவர் நன்மைக்காகவே துறந்துவிட்டார். அவருக்குத் தமதென்றும் பிறிதொருவரதென்றும் கிடையாது."

விமலன் கோபத்தைக் குறைக்கும் முயற்சியுடன், 'மகாராஜா, என் தலைவர் எதைக் கேட்டாலும் தருவதற்குத் தயாராயிருக்கிறார்.'

'இப்பொழுது என்ன அவசரம்? மாளவா, ஆபூ கோட்டை இரண்டையும் ஜயித்தாக வேண்டாமா?"

"ஆனால் மஹாராஜா! அவர் இப்பொழுது தங்கள் கையில் இருக்கிறார். அவருக்கு எப்படியாவது தெய்வ பூமியைக் காப்பாற்றவேண்டும். நீங்கள் கேட்பதைக் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை."

"நீங்கள் முதலிலேயே வந்திருந்தால் சரியாயிருந்திருக்கும், ஆனால் இப்பொழுது நான் வார்த்தை கொடுத்துவிட்டேன்.! வாக்பதி அரசன் கொடுத்த வாக்கு வழுவாது. நான் மிலேச்சனுக்கு வழிகொடுக்கவில்லை, ஆனால் பீமதேவனுக்கும் உதவி செய்யமுடியாது."

"எங்களைக் கொன்றுவிட்டு மிலேச்சன் தங்களையும் கொல்லவந்தால்...?"

"எல்லாம் தெரியும் அவன் சூரத்தனம்!"

"பிரபாஸிவனை அந்த மிலேச்சன் தீ மூட்டிவிட்டால் அது யாரை விட்டுவிடும்?" என்று விமலன் கேட்டான்.

"போடா பயலே! எல்லோரும் உன் ஸ்வாமி போல என்று நினைத்தாயா? பரமார்களின் வீரத்தை நீ பார்த்ததில்லை; பார்க்கலாம் அந்த மிலேச்சன் இங்கே எப்படி அடி வைக்கிறான் என்று?"

"தங்கள் சூரத்தனம் மிலேச்சனை அடித்து விரட்டுவதில் அல்லவா இருக்கிறது?"

"ஏய்! சின்னப்பயலே! நிறுத்தடா. சிறிய வாயை வைத்துக்கொண்டு பெரிய பேச்சல்லவா பேசுகிறான். போய், கோகாபாபாவிடம் கேளடா, வாக்பதிஅரசனின் சூரத்தனம்எங்கேயிருக்கிறதென்று?"

சாமந்தன் எழுந்து நின்றான். "எங்கள் பெரியவருக்கு இது சொல்லவேண்டிய கஷ்டம் வேண்டாம், பாலைவனத்தரசன் இருக்கும்போது, பார்க்கலாம், எந்த மிலேச்சப்பதர் முன்னேற முடிகிறதென்று? நீங்கள் உங்களிஷ்டம்போல் உத்ஸவம் கொண்டாடிக் கொண்டிருங்கள், தற்பெருமையின் குருட்டுத்தனத்தில். மிலேச்சன் வந்துசேர்ந்தால் உங்களையும் விடப்போகிறதில்லை" என்று சொல்லிவிட்டு, கோபம் வார்த்தைகளாகமாறிப் பிளிற ஆரம்பிக்குமுன்னமேயே அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

"அட, கோகாபாபாவின் குடும்பமே அவசரப்பட்டதுதான்!" என்று முணுமுணுத்த வாக்பதி ராவலன் விமலன் பக்கம் திரும்பி, "போ! உன் எஜமானனிடம். நான் என் வார்த்தையை மாற்றமாட்டேன்."

"நாளைக் காலை நான் மறுபடியும் தங்களைச் சந்திக்க வருகிறேன்."

"நான் என்னவோ ஒன்றுக்கு மற்றொன்று செய்கிறவனில்லை."

"எல்லாம் தங்கள் கையில்தான்" என்று விமலன் வணக்கமாய்ச் சொல்லிவிட்டு, பணிந்து விடை பெற்றுக்கொண்டான். வாக்பதி அரசர் மீண்டும் தம்மவர்களை உள்ளழைத்துக்கொண்டார்.

2

ராவலனுடைய சுயநலம் நிறைந்த இந்தத் தற்பெருமையைக் கண்டு சாமந்தனுடைய கோபம் பொங்கி வழிந்தது. அவன் ஆத்திரத்துடன் கோட்டையிலிருந்து கீழிறங்கித் தன் தோழர்களையும் விளித்தான். 'சரி' கிளம்பத் தயாராகுங்கள்' என்று உத்தரவு தந்தான். கொஞ்சநேரம் கழிந்து மிகவும் கம்பீரமான முகப்பொலிவுடன் விமலன் வந்தபோது சாமந்தன் ஆத்திரம் பொங்கத் தரையைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

விமலன் அவன் மனத்தாங்கலைக் கவனித்து, "சௌஹான்வீரா! மனது சஞ்சலப்படாதே" என்று கனிந்த குரலில் அந்த இளைஞனைத் தைரியமூட்ட முயன்றான்.

"வாக்பதி அரசனுடைய வீழ்ச்சியைப் பார்த்தீர்களா? பசுவையும் அந்தணரையும் அழிக்கும் அரக்கன்-அந்த கஜினிஅமீர்-தடதட என்று நுழைந்து வருகிறான். ஜாலோர் அரசன் லஞ்சம் வாங்கிக்கொண்டு அவனுக்கு வழி விடுவதாமே! சூரியன், சந்திரனுக்குக்கூடவல்லவா களங்கம் ஏற்பட்டுவிட்டது. கோகாபாபா இந்தச் சமயம் இங்கிருந்தால் இவர் தலையையே பறக்கவைத்திருப்பார்".

இப்படி ஆத்திரத்தால் துடிக்கும் சாமந்தனை விமலன் பெருமையுடன் பார்த்து, "ஆனாலும், சகோதர, நாம் இப்பொழுது அவர் விருந்தின

ராக அல்லவா இருக்கிறோம். இவ்விதம் பேசலாகுமா?'' என்று கேட்டான்.

"நான்தான் எதிரேயே கேட்கிறேனே. வாக்பதியரசன் பேசுகிற பேச்சைப் பார்த்தால் பூமியே பாதாளத்தில் அழுந்திவிடுமே!''

"நம்பிக்கை இழக்கவேண்டாம். நாளை மறுபடியும் சொல்லிப் பார்க்கலாம்''

''அவரிடமா? அவர் கேட்பது ஒருநாளும் இல்லை. அவர் ஜாலோர் ஏதோ ஒரு தனியுலகம் என்று எண்ணுகிறார். பசு செத்தால் என்ன? பிராமணர் அழிந்தால் என்ன? ஸோமநாதர் கொடியே அறுந்து வீழ்ந்தால்தான் என்ன? அவருக்கு அதை எல்லாம் பற்றி ஒரு கவலையு மில்லை. அவருக்கு ஒரே கவலைதான், மிலேச்ச னிடமிருந்து வாங்கிய லஞ்சம் செரிக்க வேண்டும்; அவர் கொடுத்த வாக்கு இருக் கிறதே, அதைக் காப்பாற்ற வேண்டும். குலம் போனால் என்ன, தர்மம் போனால் என்ன?'

''அது இருக்கட்டும் சௌஹான் வீரா, மன திழந்து என்ன லாபம்? மிலேச்சன் ஜாலோர் வழி வரவில்லை என்றால் எந்தவழி வருவான்?''

''அட, கோகாபாபா பாலைவனத்துள் நுழைய விட்டு விடுவாரா?''

தேர்வலான் மந்திரி யோசித்தவாறே சொன்னான்: ''எப்படியோ வந்துவிட்டான் என்று வைத்துக் கொள்ளலாம். மார்வாடின் வழிதானே வரவேண்டும். வேறு என்ன வழி?''

''அவர்களும் வழி விடவே மாட்டார்கள்.''

''நான் இங்கிருந்து மார்வார் போக வேண்டும். நீங்களும் வருகிறீர்களா?''

''முடியாது. ஸோமநாதர் கட்டளை: எனக்குக் கோகாதுர்க்கம் போய், கோகாபாபாவுக்குச் சமாசாரம் தெரிவிக்கவேண்டும்.''

''அடபாபூ! மிலேச்சன் கோகாதுர்க்கம் போவதென்றால் எப்போழுதோ போயிருப் பானே.''

''அது அப்படியே நடந்திருந்தால் இதுவரை அவன் இந்த உலகிலேயே இருக்கமாட்டான்.''

''அப்பொழுது அவஸ்தை தொலைந்தது. இன்று உங்களுக்கு நல்ல தூக்கம் வரும்.'' விமலன் லேசாகச் சிரித்தான்.

''அது வராது. அவருடைய வார்த்தைகள் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன''

''நீர் இளம் வயதினர். இந்தவிதமான, இதைப் போன்ற நிகழ்ச்சிகள் நாளும் நடந்து கொண்டேதானிருக்கின்றன. இதனால் கல வரப்படவேண்டிய நெருக்கடியில்லை. இதற் கும் வழி கண்டுபிடிக்கலாம். இரவு வாருங் கள்.''

''எங்கே?'' சாமந்தன் குரல் திடுக்கிட் டதைக் குறித்தது.

''அந்த முல்தான் தலைவன் இருக்கின்றா னல்லவா? அவன் மார்வார் போய்ச் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்று சொன்ன விமலன் பார்வையில் பொருளாழம் காணப்பட்டது.

''அதற்கு இரவு என்ன? இதோ கிளம் புங்கள். இந்த நேரமே! உடனே சென்று பிடிக்கவேண்டும்.'' என்று சொல்லிக் கொண்டே சாமந்தன் எழுந்து நின்றான்.

''அப்படியானால் நீங்களும் கிளம்ப ஏற்பாடு செய்யுங்கள், நானும் என் ஆட்களைத் தூண்டி விட்டு வாக்பதி ராவலனிடம் விடைபெற்று வருகிறேன்.'' இந்தவிதம் சொல்லிவிட்டு விமலன் எண்ணங்களும் வழிகளும் நிறைந்த மனதுடன் ராவலனிடம் சென்றான்.

ராவலனும் இந்த விருந்தாளிகளுக்கு விடை கொடுப்பதற்குத் தயாராகவே இருந்தான். ஒரு மாதிரி கொஞ்சம் பிடிவாதம் காட்டி விட்டுப் பிறகு கோட்டைவாயில்களைத் திறந்து விட்டான். சாமந்தனும், மந்திரி விமலனும் வேகமாக முல்தான் தலைவனைப் பின்தொடர்ந் தனர். இருட்டிய இரவுதான் என்றாலும் நேர் வழியானபடியால் வருத்தம் ஒன்றின்றி முன் னேறிச் சென்றனர்.

கொஞ்சம் தூரம் சென்றதும் விமலன் ஆரம் பித்தான், ''சௌஹான் வீரா, அவனை ஜாலோ ரிலிருந்து தொலைவில் சென்று மடக்குவதுதான் நல்லது'' என்று சொல்லி இனிமை கலந்த குரலில் மேலும் அதைத் தொடர்ந்து சொன் னான். ''ஒரு வேண்டுகோள் உங்களிடம், பாபு'' அப்பொழுது அவனுடைய அழகிய முகத்தில் ஒரு வெற்றி வீரநகை விளையாட ஆரம்பித்தது. சாமந்தனும் எப்பொழுதோ மந்திரியின் பெரு மையை உணர்ந்து கொண்டு விட்டான். அதனால் அவனுக்கு மந்திரியின் வார்த்தையைக் கேட்பதில் ஒரு பெருமை ஏற்பட்டிருந்தது.

விமலன் தன் வார்த்தையைத் தெளிவு படுத் திச் சொல்ல ஆரம்பித்தான். ''பாருங்கள், பாபு, முல்தானின் தலைவன் மிகுந்த அனுபவ முள்ளவன். அவனைப் பின் தங்கச் செய்வதோ அல்லது தடுத்து நிறுத்துவதோ எளிதான

செய்கையல்ல. நீங்கள் எல்லாம் அரசர்கள். அவனுடன் பேசி எங்கேயாவது பேச்சுவாக்கில் பிடிபட்டு விட்டீர்களோ...!''

''அட! நான் வாயே திறக்கவில்லை, ஒரு சொல்லாவது சொன்னால்தானே! நீங்கள் ராவலனிடம் பேசும் போதே உங்கள் பேச்சுத் திறனைக் கண்டு வியந்தேன். கோகாபாபாவுக்கும் இப்படி தங்களைப் போன்ற ஓர் மந்திரி கிடைத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும் தெரியுமா!''

'பாபூ! நீங்கள் என் குருவைப் பார்த்ததேயில்லையே!'

''உங்களுக்கும் குரு ஒருவர் இருக்கிறாரா?''

''நம்முடைய தாமோதர மேதாவுக்கு எதிரே நான் ஒரு குழந்தை. அவர் வாயைத் திறந்தால் போதும்; எதிரேயுள்ளவனைத் தான் விரும்புகிறபடி ஆட்டியே விடுவார். அவன் அவர் சொல்வதைச் செய்வதைத் தவிர வேறு வழி காணான். ஒரு சிறப்பு அல்லவா? இந்தப் பத்து வருஷங்களில் நான் அவரை ஒரு முறை கூடத் தம் அமைதியை மீறக் கண்டதேயில்லை!''

''சரிதான் போமய்யா! சினக்கவே தெரியாதவர் என்ன மனிதர் ஐயா?''

''மேதாவும் எங்கள் அரசரிடம் அதைத்தான் சொல்லுவார்: '**சினம் கொள்ளத் தெரிந்த அரசன் பெரியவன். சினத்தை அடக்கத் தெரிந்த மந்திரியே சிறப்பு வாய்ந்தவன்.**'

''உங்களுக்குத்தான் கோபமே வருகிறதில்லை போலிருக்கிறதே!''

''எங்கே எனக்கும்தான் சில நேரங்களில் சினம் தோன்றி விடுகிறதே! அதனால்தான் தாமோதரருடன் போட்டியிட முடியவில்லை. கோபம் அதிகம் வந்தாலும் அரசனாகி விடலாம்!'' என்று சொல்லிய விமலன் நன்றாக வாய் விட்டுச் சிரித்தான். சாமந்தனும் மனம் கனியத் தன் புது நண்பனைத் திரும்பிப்பார்த்தான்.

முதல் தங்குமிடம் வந்ததும் இருவரும் தங்கினர். அங்கு முல்தான் தலைவன் இரண்டாம் இடத்தில் தங்குவதாக முடிவுசெய்து போயிருக்கிறான் என்று தெரிய வந்தது. விமலனுக்கு இதைக் கேட்டதில் மகிழ்ச்சியே. அவன் ஜாலோரிலிருந்து தொலைவில் போய்விட்டான்.

சற்று நேரத்திலேயே அவர்களிருவரும் இரண்டாம் இடத்துக்கு வந்து அடைந்தனர். சந்திரன் நேரம் சென்று உதித்துக்கொண்டிருந்தான். அவனுடைய மங்கிய நிலவொளியில் விமலன் பனைமரங்களருகே நின்றுகொண்டிருந்த ஒட்டகங்களைக் கண்டான். மனது குளிர்ந்தது, முல்தான் முதல்வனிடம் சொற்போராடச் சரியான வாய்ப்பு ஏற்பட இருக்கிறது. அதில் இவன் வெற்றி பெற்றால் பட்டண், ஸோமநாதர் இருவருக்கும் வெற்றி. அந்த எண்ணத்தால் ஒரு ஊக்கம் கொண்ட அவன் நடையைக் கொஞ்சம் முடுக்கிச் சென்றான். முல்தான் முதல்வனின் கூட்டம் கிளம்பத் தயாராயிருந்தது. அதைத் தடுத்து நிறுத்தினான். அவன் நேரே அந்த வீரனிடம் சென்று, ''முல்தான் முதல்வனுக்கு ஜாலோர் ராஜ்யத்திலிருந்து ஓர் செய்தி கொண்டுவந்திருக்கிறேன்'' என்று போட்டான் ஒரு போடு. அந்த வயதான பொல்லாத வீரன் ஒட்டகத்தின் மேல் ஏறும் தறுவாயில் இருந்தான். இதைக் கேட்டதும் இறங்கி முன்னால் வந்தான். அவன் கண்கள் உள்ளே எழுந்த ஓர் ஐயப்பாட்டை மறைக்க இயலாமல் மின்னின.

''நீ யாரப்பா? எங்கிருந்து வருகிறாய்?''

''நான் ஜாலோரிலிருந்து வருகிறேன். இதோ நிற்பது சாமந்தசிங்க சௌஹான். ராவலனுக்கு மருமகன் முறையாகவேண்டும். தங்களிடம் கொஞ்சம் உறவுமுறைப் பேச்சுப் பேசவேண்டும்'' என்று சொல்லி விமலன் அழகு என்கிற ஒட்டகத்திலிருந்து குதித்து எதிரே வந்து வீரனை வணங்கினான். அவன் வணங்கும் முறையிலேயே சீர் விளங்கிற்று. ''உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை ஏற்படவில்லையா?''

ஐயம்கொண்ட கண்களின் வெறுப்புத் தோன்றும் பார்வையால் அந்த 'முதல்வன்' இந்த இனிய சொல்லால் மந்திரி விமலனைச் சற்றுநேரம் பார்த்தே நின்றான். விமலன் அவனை மற்றவர்களிடமிருந்து பிரித்துத் தனித்து அழைத்துச் சென்றான். பிறகு மிகவும் தனித்த குரலில் ''நான் நேராக ராவலரிடமிருந்தே வருகிறேன். சந்தேகமிருந்தால் சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் அவரைச் சந்தித்தீர்கள். அவருக்குக் காணிக்கையும் தந்தீர்கள். ராவலர் வழிதர மறுத்தாலும் தாம் சண்டையில் சம்பந்தப்படுவதில்லை என வாக்குத் தந்தார். இதுகூட உண்மையில்லையா? இப்பொழுதாவது நம்பிக்கை ஏற்பட்டதா? நான் பொய் சொன்னாலும் இந்தச் சௌஹான் இளவரசரைக் கேளுங்கள்.''

முல்தான் முதல்வன் கொஞ்சம் நம்பிக்கை கொண்டான். ''சரி, அப்படியானால் எந்தக் காரணத்தைக் கொண்டு ராவலர் உங்களை என்னிடம் அனுப்பியிருக்கிறார்?'' என்று கேட்டான்.

"ராவலனுக்கு ஒரு சந்தேகம். மார்வாட் அரசன் ரணமல் ஒருகால் தங்கள் வார்த்தையை நம்பி ஒப்புக்கொள்ளாது போனுல்...? அதனுல் எங்களையும் அனுப்பி, ஜாலூர் கண்டி பாய்ச் சண்டையில் சேராது என்று சொல்லச் சொல்லியிருக்கிருர்."

முதல்வனின் சந்தேகம் மறையவில்லை. "அப்படிச் சொல்லவேண்டியதற்குத் தனிக் காரணம்...?" என்று கேள்வியைக் கேட்டுப் பதிலை எதிர்பார்த்தான்.

விமலன் துணிந்து ஆட்டக்காய்களை எறிய ஆரம்பித்தான். 'அன்ஹில்வாட் பட்டண் அரசர் பீமதேவர் ராட்டெனர் வீரனைச் சண்டையில் உதவி செய்வதற்காகத் தூது அனுப்பிக் கேட்டிருக்கிருர். அதுதான் காரணம்."

முதல்வன் விழிகள் பிதுங்கி நின்றன. "அப்படியா?" என்ருன்.

"ஆம் ஐயா, சரி வாருங்கள் போகலாம்." என்று சொன்ன விமலன் கிளம்புவதில் இருந்த துடிப்பை நடையிலே காட்ட ஆரம்பித்தான்.

"நான் என்னவோ ராட்டெனர் வீரனிடம் பீமதேவன் சொல்வதைக் கேட்காதே! என்று சொல்லத்தான் போகிறேன்." என்றும் சொல்லி வைத்தான்.

'அதுவும் அப்படியா?' என்ருன் முல்தானி. அதிகம் பேசுவதில் அவன் அக்கரை காட்டியவனல்லன். ஆதலால் உடனே அவன் ஒட்டகத்தின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டான். இரண்டு ஒட்டகைக் கூட்டங்களும் சேர்ந்தே நடக்க ஆரம்பித்தன.

மூல்தானி முழுவதுமே நம்பிவிட்டான் என்று சொல்லமுடியாது. சற்றுவது நம்பினுன் என்பது ஐயம்தான். அவன் பாதிமூடிய கண்களுடன் தூங்கி வழிபவன்போல் வேஷம் போட்டுக்கொண்டே விமலன் உள்ளத்தைத் திருட்டு விழிகளால் தடவிக்கொண்டிருந்தான். அவன் தானும்பேச முயலவில்லை, பேச முயன்ற விமலனுக்கும் ஊக்கம் அளிக்கவில்லை.

கொஞ்ச நேரம்வரை ஒட்டகையின் காலடிச் சத்தம் தவிர வேறென்றும் கேட்கவில்லை. சாமந்தன் வாக்குக் கொடுத்திருந்தான். அதை அவன் காப்பாற்றினுன். விமலன் மட்டும் தன் ஒட்டகத்தை மூல்தானியின் ஒட்டகத்துடன் ஒட்டி நடக்கவிட்டுக்கொண்டே அவனைக் குடையும் கண்களால் பார்த்துக்கொண்டே சென்ருன். இருவரும் ஒருவருக்கொருவர் மற்றவரை உற்றுப் பார்ப்பதில் சளைக்கவில்லை. நேரம் செல்லச்செல்ல விமலனும் பொறுமை யிழக்க ஆரம்பித்தான்.

நாழிகளோ அவசர அடிவைத்துச் செல்கின்கின்றன. மூல்தானியோ வாயைத் திறக்கும் வழியைக் காணேம். இரவின் பின்நேரம் விடியற்காலையாக மாற ஆரம்பித்துவிட்டது. விமலனுடைய உள்ளமோ இழந்த பொறுமையின் காரணமாக மிகவும் துடித்தது.

பொழுது புலர ஆரம்பித்ததும் விமலனின் உள்ளக் கலவரம் எல்லை மீறிற்று. வாய்ப்பு எல்லாம் கைநழுவப் போய்க்கொண்டிருந்தது. கடைசி ஒரு வாய்ப்பும் தவறிவிடுமோ என்று பயப்பட ஆரம்பித்தான். மூல்தானியோ தன் ஒட்டகையின் மீது 'ஹாய்'யாக அமர்ந்து காலைக்காற்றை நிம்மதியாய் உட்கொண்டிருந்தான். விமலனல் பொறுக்கப் போகவில்லை. அவன் தன் ஒட்டகத்தை அவன் ஒட்டகத்துடன் ஒட்டி ஓட்டினுன். பின்னல் திரும்பி, தன் மனிதர்களுக்கு ஓர் சைகை காட்டினுன். மின்னல் மின்னும் நேரத்தில் தன் வாளையுருவி முல்தான் முதல்வன்மேல் வீசிவிட்டான்.

விமலனுடைய இந்த மின்பாய்ச்சலின் பயனைக் கண்டு அவனடைந்த வியப்புக்கு எல்லையில்லை. மூல்தானி கண்களைப் பாதி மூடி, தூங்கிவழிந்து கொண்டிருக்கவில்லை. அவன் முன்னேற்பாடாக இதை எதிர்பார்த்திருந்தவன் போலவே காணப்பட்டான். ஏன் என்ருல் விமலனுடைய உருவின வாள் பாயுமுன்னமேயே அவனுடைய வாளின் முனை விமலுடைய மார்பைத் தொட்டுவிட்டது. ஓகோ! அந்தக் கிழ 'எத்தன்' விழித்துக் கொண்டேயிருந்திருக்கிருன்! விமலன் லாவகமாக ஒட்டகையின் மேலிருந்து பாய்ந்து வாள்தன் மார்புள் புகாமல் தடுத்துக்கொண்டான். அதைக் கண்ட மூல்தானியும் தன் ஒட்டகையின் மேலிருந்து தாவினுன்.

இரண்டு கூட்டத்தினரும் இதை எல்லாம் பார்த்திருந்தனர். விமலன் வாள் மின்னிய உடனேயே ஒட்டகத்தின் மேலிருந்த வீரர்கள் அனைவருடைய வாள்களும் மின்னி ஜ்வலிக்க ஆரம்பித்துவிட்டன. அவர்கள் தம்மருகே வரும் வீரர்களைத் தங்கள் வாட்களால் தாக்க ஆரம்பித்து விட்டனர். சில அம்புகளும் விடப்பட்டன. ஒட்டகங்கள் வெறித்து ஓடின. கூச்சலும் கேட்க ஆரம்பித்தது. நான்கு பக்கங்களிலும் கொலையும் குத்தும் ஏற்பட்டன.

மூல்தானி உருவிய வாளுடன் பாய்ந்தான். இவனுடைய பயங்கரமான நீண்ட வாள் விமலன் தலைமேல் யமன் போல் சுழல ஆரம்பிக்கும் தருணம். அந்தச் சமயம் சாமந்தனுடைய கத்தி ஜ்வலித்து மின்னல்போல் வெளியே நிற்று, கீழிறங்கிற்று. முல்தான் முதல்வன் கழுத்தில் செருகிற்று. மூல்தானியின் மேலேறிய கை கீழே தணிய, அவன் கையில்

ஏந்தியிருந்த வாள் தொலைவில் சென்று விழுந்தது. முல்தானியைப் பூமாதேவி அணைத்துக் கொண்டாள். நிமிர்ந்து நின்ற விமலனை முல்தானுடைய மூன்று மனிதர்கள் சூழ்ந்துகொண்டனர். அச்சுறும் வண்ணம் ஆர்த்துக் கொண்டே சாமந்தனும் ஒட்டகையிழந்து அவர்களிடையே வந்து நின்ருன். முல்தானின் முதல்வனுடைய அசைவற்ற சரீரத்தைச் சுற்றிலும் பெரிய சண்டை நடக்க ஆரம்பித்தது. எல்லோரும் அங்கே ஓடிவந்தனர். முதல்வனின் தோழர்கள் அவனைக் காப்பாற்றக் கடுகினர். விமலன் சாமந்தனுடைய ஆட்களும் அவர்களைக் காப்பாற்ற வந்தனர். ஐந்து நிமிஷங்கள் நெருப்புப் பொறி பறந்தன. நானகைந்து ஆட்கள் புண்பட்டு விழ்ந்தனர். பார்ப்பதற்குப் பூவுடல் பொருந்திய விமலன் கண்டிராத துள்ளல் ஓட்டத்துடன் வாள்வீசிக்கொண்டிருந்தான். சௌஹான் குலத் தோன்றலான அந்த வீர இளைஞன் அச்சுறுத்தும் உறுமலுடன் ரத்தப் பிரவாகத்தை அதிகரித்து நான்கு பக்கங்களிலும் பாய்ந்து வந்து கொண்டிருந்தான். மயக்கம் நீங்கிய முதல்வன் கண்களைத் திறந்தான். அருகே விமலன் நின்று சண்டை புரிவதைக் கண்டான். கண்கள் இருண்டு வந்து கொண்டிருந்தன. இருப்பினும் அற்புதமான வலிவை வருவித்துக் கொண்டான். தன் அருகே கிடந்த வாளை எடுத்தான். உதட்டை மடித்து ஒரு கையில் உடலைத் தாங்கி அமர்ந்து மறுகையால் வாளைப் பலம் கொண்ட மட்டும் வேகமாக விசிறினுன்.

சாமந்தன் கண்கள் இதை எப்படியோ கவனித்துவிட்டன. கர்ஜனை செய்துகொண்டு வந்து விழுந்தான். வேகமாக வாளை அவன் உடலுள் செலுத்தினுன். தலைவனின் வாயில் இரத்தம் வர ஆரம்பித்தது. அவன் வாயைப் பிளந்து உயிரைவிட்டுக் கீழே சரிந்தான்.

சாமந்தன் உறுமலைக் கேட்டு எல்லோரும் மூல்தானி பக்கம் திரும்பிப் பார்த்தனர். எல்லோரும் அவன் உயிர் துறப்பதைப் பார்த்தனர். மூல்தானியினுடைய ஆட்கள் ஊக்கம் குன்றி நம்பிக்கையிழந்து வாளை எறிந்து ஓட்டம்பிடித்தனர்.

விமலன் இருமுறை தன் உயிரைக் காப்பாற்றிய சாமந்தனை, "சாபாஷ்! சௌஹான் விரா! என்று பாராட்டினுன்."

சாமந்தன் ஒரு விசித்திரமான நோக்குடன் இறந்துவிட்ட முதல்வனைப் பார்த்துக்கொண்டிருந்தான். "ஸோமநாதருடைய விரோதிகள் எல்லாம் இந்தவிதம் தான் சாவார்கள்!" என்று சொல்லிக்கொண்டே அவன் உள்பாய்ந்திருந்த தன் கற்கள் பதித்த கத்தியை உருவி எடுத்துத் தன் இடையில் செருகிக்கொண்டான்.

"இப்பொழுது ஜாலூர் ராவலனுடைய செய்தி இங்கேயே தங்கிவிடுமல்லவா?" என்று சிரித்துக்கொண்டே விமலன் சொன்னுன்.

மூல்தானியினுடைய ஒன்பது ஆட்கள் செத்திருந்தனர். மூவர் பிடிபட்டிருந்தனர். விமலனுக்கு எழுவர் நஷ்டம். நால்வர் காயமுற்றிருந்தனர். சாமந்தன் தன்வழி செல்லப் பரபரப்புக் காட்டினுன்.

விமலன் நன்றி நிறைய, "நீங்கள் என்னை, இருமுறை உயிர்ப்பிச்சை தந்து காத்தீர்கள். இதற்கு என்ன கைம்மாறு செய்வேன். என் தோலையே செருப்பாய்த் தைத்துப் போட்டாலும் போதாது" என்ருன்.

"மந்திரி!" என்ருரம்பித்த சாமந்தன் மிகவும் கனிந்த உள்ளத்துடன் "நீர் அப்படி ஒன்றும் செய்ய வேண்டாம். என்னை அன்பனுக ஏற்றுக் கொள்ளும். கோகாதுர்க்கத்தைத் தங்கள் வீடாகக் கொள்ளும்" என்று வேண்டிக் கொண்டான்.

"நீங்களும் குஜராத் பக்கம் வந்தால் அவசியம் எங்களை மறக்காமல் வர வேண்டும்."

இருவரும் பிறகு ஒருவரையொருவர் கட்டிக் கொண்டனர். பிறகு தங்கள் தங்கள் வழி செல்ல ஆரம்பித்தனர். விமலன் முல்தானியினுடைய பிடிபட்ட ஆட்களையும் ஒட்டகைகளின் மேல் ஏற்றிக்கொண்டு மார்வாட் பக்கம் சென்ருன். வழியிலே அந்த ஆட்கள் கஜினியின் சேனையைப்பற்றிச் சொல்லிய செய்திகள் எல்லாம் அவனை மிகவும் கலங்க வைத்தது.

கஜினி சேனையில் முப்பதாயிரம் குதிரை வீரர்கள், ஐம்பதினுயிரம் வில்லாளிகள், யானை மூவாயிரம், காலாட்படை மூவாயிரம் இருந்தன. மூன்ருயிரம் ஒட்டகைகள் தண்ணீர் சுமந்து வந்தன. இவற்றைத் தவிர ஆயிரக் கணக்கான ஆட்கள் உதவிக்கிருந்தனர். ஏதோ பட்டணமே புரண்டு போவதுபோல் இருந்தது அந்தச் சேனை. அது நடக்கும்போது பூதேவியே அழுந்தி எழுந்தாள். அதன் துந்துபி நாதத்தில் ஆகாயமே கிழிந்துநின்றது. விமலன் இந்த வர்ணனையைக் கேட்டுத் திகைத்தான். 'உண்மைதானு! கற்பனை' என்று எண்ணிக் கொஞ்சம் சிரிக்கவும் சிரித்தான். என்ருலும் அவன் உள்ளத்தில் குடிகொண்ட பயம் பரவி ஆழமும் கொள்ள ஆரம்பித்தது.

அத்தியாயம் — 7

கோகாராணுவின் புகழ் மாலை.

விமலனைப் பிரிந்து சென்ற சாமந்தன் உள்ளம் உவகை பொங்கிக் கொண்டிருந்தது.

கஜினி அமீருடன் முதல் சண்டையில் அவனுக்கு வெற்றி. 'முதல் அடி ராணுவினுடையது' என்று அவன் புரியாத குரலில் தானே சொல்லிக்கொண்டான்.

அவனுடன் இரண்டு மனிதர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவனுக்குச் சற்றுக் காயம். மற்றக் காயமடைந்தவர்களையும் கைதிகளையும் அவன் விமலனுடன் அனுப்பிவிட்டிருந்தான். அவனுக்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போகவேண்டும் என்ற ஆவல். நேர் வழியில் அநேக தங்குமிடங்கள் இருந்தன. ஆதலால் அவன் கஷ்டமின்றி முன்னேறிச் சென்றுகொண்டேயிருந்தான்.

நான்காவது நாள் அவனுக்குச் சில மனிதர்கள் வழியில் காணத் தொடங்கினர். சிலர் ஒட்டகையின் மீதும் சிலர் குதிரையின் மீதும் வந்தனர். சிலர் நடந்தும் வந்துகொண்டிருந்தனர். அவர்களை விசாரித்ததில் அவர்கள் படை எடுத்துவரும் மிலேச்சர்களுடைய வெற்றியைக் கேட்டுப் பயந்து ஓடுகிறவர்கள் என்று தெரியவந்தது. சாமந்தனும் ஒவ்வொருவராகக் கேட்டான். ஒருவன் அவர்கள் சபாதலக்ஷம் வரை வந்துவிட்டனர் என்றான். மற்றொருவன் இங்கிருந்து இரண்டே நாள்நடைதொலைவில் இருக்கிறார்கள் என்றான். மூன்றாமவனுக்கு அவர்களிடம் இருக்கும் "பறக்கும் ஒட்டகங்களைப் பற்றிச் சொல்லத்தான் ஞாபகம் இருந்தது. மீண்டும் ஒருவன்,. "அட, என்ன ஐயா! அந்த ஆள் பாலைவனத்தில் புது ஆறுகளே ஏற்படுத்தி விடுகிறான்." என்று வாயையும் கண்ணையும் பிளந்து நின்றான்.

"வருகிறான்...இதோ வந்து விட்டான்... அதோ, !" என்பதைத்தான் அவர்கள் அறிந்தனர். அவர்கள் ஓடுவதற்கு அந்தச் செய்தி ஒன்றே போதுமானதாகவும் இருந்தது, சாமந்தன் இன்னும் இரண்டு நாள் முன்னேறினான். போகப்போக எதிரே வருகிறவர்கள் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கிற்று. கிராமங்கள் முழுவதுமே திரண்டு வந்தன: பெண்கள், ஆண்கள், குழந்தைகள், குதிரைகள், ஆடு மாடு கால்நடைகள் உள்பட, முடிந்ததை வாரிக் கட்டிக்கொண்டு ஓடுகிற அவர்களுக்கு உயிர்கூட அவர்களிடமில்லை! அவர்கள் சொல்லும் வார்த்தைகளும் புதுப் புது மாதிரியாக வெளிவந்தன. "அந்த அரக்கனுக்கு மூன்று கண்களும் எட்டுக்கால்களும் உண்டு" என்று நம்பிச் சொன்னவர்கள் எவ்வளவோ பேர். அவனிடம் ஆறு கை நீளம் உள்ள வாளைப்பற்றி வர்ணித்தவர்களும் உண்டு. அவனுடைய சேனையைப்பற்றி வர்ணிக்க முயன்றார் சிலர். பறக்கும் யானைகளைப்பற்றிப் பகர ஆரம்பித்தனர் சிலர். சிறகுகள் தாங்கிய குதிரைகளைப் பற்றியும் செப்பினர் சிலர். அதுமட்டுமா! பச்சை மாமிசத்தை அப்படியே மென்று தின்னும் கறுத்த அரக்கர்களை அந்தச் சேனையிடையே பார்த்தவர்களும் இருந்தனர். அமீர் செல்லுமிடம் எல்லாம் மேகம் சூழ்வதைக் கண்டவர் அப்படியே வருணித்தனர். அவன் வாளுருவும்போதெல்லாம் ஆகாயம் மின்னுவதைப் பார்த்தவரும் பலர்.

சாமந்தனும் எவ்வளவோ முயன்றான் உண்மையான பொருள் நிலையை அறிந்துகொண்டு விடலாம் என்று, ஒருவருக்காவது உள்ளது உள்ளபடி பார்த்த அறிவு இருப்பதாகவே தெரியவில்லை. ஆனால் சுல்தான் சபாதலக்ஷம் வரை வந்துவிட்டான் என்பதை மட்டும் சாமந்தன் அறிந்துகொண்டான். அதற்குப் பொருள் சுல்தான் கோகாதுர்க்கம் தாண்டிவிட்டான். அல்லது அதை ஒட்டி ஒதுக்கிவிட்டு வந்துவிட்டான். அவன் உள்ளத்தில் அச்சம் குடிகொண்டது. நான்கு பக்கங்களிலிருந்தும் சிதறிவருகிற மனிதர்களின் மனதில் அலைந்துகொண்டிருந்த பயம் இவன் உள்ளத்திலும் திரண்டு உருண்டு வந்து மோதிற்று. அந்தப் பயம் அவன் நடையைத் துரிதப்படுத்திற்று. பப்பரியாவில் அவன் தந்தை அவனை எதிர்பார்த்து நிற்பார். கங்க சர்வக்ஞர் விருப்பப்படி ஸோமநாதரின் ஆணையைக் கோகாபாபவிடம் சேர்ப்பித்தாகவேண்டும். என்ன ஆகப் போகிறது? என்ன ஆகி இருக்கிறது? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

எங்கும் மயானம்போல் மனம் துணுக்குற்றது. பதினைந்தாவது நாள் அவனுடைய காயமடைந்த தோழன் உடல் நிலையும் மிகக் கெட்டுவிட்டது. அவனை மேலே அழைத்துச் செல்வது அரிதாகிவிட்டது. ஆதலால் அவனையும் விட்டு அவனைப் பார்த்துக்கொள்ள மற்றொரு வீரனையும் அங்கேயே பணித்துவிட்டு, அவன் தனியாகவே வழிகடக்க ஆரம்பித்தான். அவன் வீரர்கள் அவனைத் தங்கவைக்க மிக முயன்றனர். ஆனால் அவன் அதை எல்லாம் கேட்க விரும்பவில்லை. அச்சம் அவன் உள்ளத்தில் அமர்ந்து விரிய விரிய அவனுடைய போகும் வேகமும் போகவேண்டும் என்ற எண்ணத்தின் தீவிரமும் அதிகமாகிக்கொண்டே வந்தன.

என்னவோ ஏதோ உருப்புரியாத ஓர் மனவேதனையில் பொசுங்குவதைவிட, பயத்தின் ஊற்றிலேயே சென்று மறைவது நல்லது என்று எண்ணினான் அவன்.

பப்பரியாவும் நெருங்கிவிட்டது. இன்னம் இரண்டே நாள் வழிதான் மிஞ்சியிருந்தது. அங்கே அவன் தந்தை காத்திருப்பார். பிறகு அங்கிருந்து கோகாதுர்க்கம் எவ்வளவு தூரம்?

சாமந்தன் மனதிலே ஓர் இனிய எண்ணம் எழுந்தது. பப்பரியாவில் தங்கியிருக்கும் தன் தோழர்கள் தன்னை எதிர்கொண்டழைக்க வந்தாலும் வருவார்கள். இந்த எண்ணம் அவன் காதில் சில ஒட்டகையின் காலடிகளின் ஒலியைக்கூட கேட்கவைத்தது. அவன் கண்கள் வானம் பூமியுடன் சேரும் வரை இடுக்கிப் பார்த்தன, முகம் அங்கும் இங்கும் திரும்பிற்று. ஆனால் அவர்களின் உருவ அடையாளங்கூடத் தென்படவில்லை.

அவன் சிறுவன். இப்படிப்பட்ட தனிமையுடன் அவன் இதற்குமுன் அளவளாவியதில்லை. ஒருமுறை இரைந்து கூச்சலிடுவோமா என்று எண்ணினான். ஒருமுறை உங்காரமும் செய்தான். பயம் திருகிற வழியாக இல்லை. அந்த உங்கார ஒலி பயத்திலே ஒளிந்து உருக்குலைந்து வந்தது. அதனுடைய எதிரொலியைக்கேட்டு அவனே நடுங்கிப்போனான். ஸோமநாதன் பெயரை ஒரு முறை நினைவில் கொண்டுவந்தான், அவர் பெயரைக் கூவிக்கொண்டே ஒட்டகையை முடுக்கினான். அவன் முன்னால்தான் சென்றுகொண்டிருந்தான். ஆனால் அவன் உள்ளத்தில் பாம்பு போல் நுழைந்து படம் எடுத்துச் சீறிக்கொண்டிருந்த பயம் அவன் உணர்வை மயக்கியிருந்தது. அவன் எங்கோ ஓடுகிறோம் என்று எண்ணினான்.

எண்ண அலைகளில் மனப்படகை ஏற்றி இறக்கிக்கொண்டே சென்ற அவன் ஒரு தங்குமிடத்தில் இறங்கி ஒரு குடிசையில் நடுப்பகலைக் கழித்தான். அவன் குழந்தையாயிருந்தபோது கேட்ட சில கதைகள் ஞாபகம் வந்தன. அதிலே ராக்ஷஸன் ஒருவனின் கோபத்தால் அழிந்துவிட்ட ஒரு நகரம், அந்த நகரத்தைப் போலவே இந்தத் தங்குமிடமும் தோற்றம் அளித்தது. கிணற்றில் ஜலம் இல்லை. துரவுகள் காய்ந்துகிடந்தன. கோயிலில் அம்மன் உருவம் இருந்தது. அதுவும் வெகு நாட்களாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தது. மூன்று குடிசைகள் இருந்தன ஒரு கேடுமில்லாமல். ஆனால் அவைகளில் என்றாவது மனிதப்பூண்டு இருந்ததா என்ற ஐயம் தோன்றிக்கொண்டிருந்தது.

ஒரு குடிசைக்குள் அடுப்பின்மேல் ஏதோ மூடிவைக்கப்பட்டிருந்தது. ஆனால் அடுப்பில் வெகுநாள் முன் அணைந்த கொள்ளிக்கட்டை செருகியபடி வைத்திருந்தது. அடுப்பின்மேலிருந்த பாத்திரத்திலிருந்து எறும்புகள் சாரி சாரியாய், காய்ந்த எதையோ இழுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தன. ஏதோ தெய்வத்தின் சாபம்போலும், இப்படித் திடீரென்று மனித சஞ்சாரமே அற்றுப்போயிருந்தது.

கொஞ்சநேரம் சென்று சாமந்தன் பயம் குறைய ஆரம்பித்தது. அவனுக்கே தன்னுடைய பயந்த தன்மையைப்பற்றிக் கோபம் வந்தது. சௌஹான்வீரன், கோகாபாபாவின் பேரன் மகன், ஸோமநாதரின் கட்டளை எடுத்துச்செல்பவன், அவனே இந்தவிதம் மனதிழப்பதா? பயப்படுவதா? உதட்டைக் கடித்து அச்சத்தைக் கரைத்து எழுந்து நின்றான். மேலே செல்லத் துணிந்து பிரயாணத்தைத் துவக்க முற்பட்டான்.

தன்னுடைய கோழைத்தனத்தைத் தானே பரிகாசம் செய்துகொண்டு மேலே சென்றான்.

3

எதிரே தணிந்திருந்த வானத்திரையில் இரண்டு ஒட்டகங்கள் உருவம் காட்டி எழுந்தன. சாமந்தன் தாகம் கொண்டவன் நீர் நிலையை நெருங்குவதுபோல் நெருங்கினான்.

வந்த இருவரும் ஆயுதம் தாங்கிய ராஜபுத்திர வீரர்கள். ஒருவன் நடு வயதினன்; மற்றொருவன் இளைஞன். அவர்களிடமிருந்து அவன் தெரிந்து கொண்ட விஷயம் அவன் உள்ளத்தை ஒடித்தது.

பப்பரியாவை நெருங்கும்வரை சாமந்தனை மீண்டும் யாரும் சந்திக்கவில்லை. அவன் பாதையில் ஒரு விசேஷ சம்பவமும் குறுக்கிடவும் இல்லை. அதனால் உண்மை நிலையை எண்ணித் தெளியப் போதிய நேரம் கிடைத்தது. முல்தான் மிலேச்சன் வசம் ஆகிவிட்டது. சபாதலக்ஷம் தோற்றுவிட்டது. சௌஹான் முடிமணியான வாமல தேவனும் யமனுலகடைந்துவிட்டான். மிலேச்சன் கோரபரேவியைவிட்டு, பாலைவனத்தில் ஏதோ வழியாக முன்னேறிக்கொண்டிருக்கிறான். வழியில் உள்ள கிராமங்களும் நாசமடைந்து காணப்படுகின்றன. அப்படியானால் கோகா துர்க்கம் என்ன ஆயிற்று? அது முல்தானிலிருந்து சபாதலக்ஷம் போகும் குறுக்கு வழியிலல்லவா இருக்கிறது. மிலேச்சன் என்ன அதையும் மண்ணோடு மண்ணாக்கிவிட்டுச் சென்றானா அல்லது அதை விட்டு, நேரே சபாதலக்ஷம் போய்விட்டானா! கோகா பாபா என்ன ஆனார்! சாமந்தனின் தந்தைக்குத்தான் என்ன நேர்ந்தது? சாமந்தன் இதயம் புண்ணடைந்து வேதனை பெருகிற்று. ஆனால் அவன் கண்கள் வானமும் பூமியும் சேருமிடத்தையே நோக்கிக் கொண்டிருந்தன. நாக்கு ஸோமநாதருடைய பெயரை விடாமல் சொல்லிக் கொண்டேயிருந்தது. மகாதேவனுடைய கட்டளையை நிறைவேற்ற இருக்கும் அவனுக்கும் அவன் குலத்துக்கும் என்ன பரிசு தர எண்ணியிருக்கிறார் அந்தப் பிரபு?

அவனுடைய உற்சாகம் குன்றியது. அவநம்பிக்கை அதிகரித்தது. தொலைவில் பப்பரியாவின் கோட்டை தெரிய ஆரம்பித்தவுடன் மயங்கிக்கிடந்த உற்சாகம் திரும்பிப்படுத்தது. ஆனால் அது ஒரு கணநேரத்துக்குத்தான். மீண்டும் அது மறைந்துவிட ஆரம்பித்தது. பப்பரியாவின் கோட்டையின் தலையிலிருந்து கழுகுகள் பறந்தெழுந்து அமருவதைக் கண்டான் அவனுக்கு என்னவோ செய்தது. அவன் ஹா! என்றலற ஆரம்பித்தான்.

மண் காட்டில் பரந்து பயமுறுத்திய தனிமையின் ஒருமையில் அறுநூறு கை உயரம் கொண்ட மேட்டின்மேல் பப்பரியா கோட்டை பயங்கர அமைதியின் நடுவே நின்றுகொண்டிருந்தது. அவன் உள்ளத்தில் கல் எறிந்து அலை எழுப்பிய கழுகுக் கூட்டங்களும் பறந்து சென்று விட்டன. பார்வையின் எல்லைக் கடைசி வரையில் ஒரே மௌனம்தான்! உயிரற்ற சூனியம்தான்.

பப்பரியா கோகா துர்க்கத்தின் வாயிற்படி போல இருந்தது. அங்கே அதன் கோட்டைக் காவலாளி இருந்து வந்தான். சில கால்படையாட்களும் இருந்தனர். இடையர்களின் இருப்பிடமும் இருந்தது. அவை தவிர அங்கே கோகாபாபாவுக்கு ஒரு அரண்மனையும் இருந்தது. அதனுடன் ஒரு மகாதேவன் கோயிலும் இருந்தது.

வந்துபோகிற கூட்டங்கள் எல்லாம் தங்கி, கோகாபாபாவினுடைய விருந்தை ஏற்றுப் போகிற வழக்கம், அந்த இடம் எல்லாருக்கும் பிடித்த இடம். ஒட்டகங்களையும் அந்த இடம் மிகவும் ஆகர்ஷித்திருந்தது. அதனால் அந்த இடம் எப்பொழுதும் ஜனங்கள் நிரம்பி, கோலாஹலமாய் இருப்பது வழக்கம். அது இந்தச் சமயம் கதவு திறந்து பல்விழுந்த வாய் போலப் பயமுறுத்திக்கொண்டிருந்தது. கதவுக்கெதிரேயும் ஒரு ஆளும் இல்லை. ஒரு ஒட்டகைகூட இல்லை. சாமந்தனுடைய உள்ளம் பொங்கிவந்தது. கண்களில் நீர் நிரம்ப அவன் மேலே பார்த்தான். பப்பரியாவின் கோவிலில் கொடி பறந்த இடம் சும்மா இருந்தது. கோகாபாபாவின் பெருமைக்கு அடையாளமான அது மறைந்துவிட்டது. சாமந்தனுக்கு எதிரே இருள் கறுத்துப் பறந்து விழுங்க வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டுமொருமுறை பார்த்தான். தாலியறுந்து பொட்டிழந்த இளம் பெண் போல, பப்பரியா கொடியற்று, திரு இழந்து காணப்பட்டது. அவனுக்கு நடுக்கம் ஏற்பட்டது. அவன் ஒட்டகத்தை ஓட்டினான்.

உண்மைதான். அசைவற்ற சித்திரத் திரையிலே அவன் ஒட்டகம் ஒன்றுதான் உயிருடையதாக இருந்தது. வாயில் திறந்தது திறந்தபடி வைத்திருந்தது, யமனின் குகை வாயிலோ என்ன? கோட்டையின் தளங்கள் இருந்தபடி இருந்தன — மனிதர்களுடைய காலடிகள்; உணர்ச்சியற்று ஒட்டகம் வேகமாகச்சென்று கோட்டை மேடேறிற்று. ஆனால் அவன் விடும் பெருமூச்சைத்தவிர வேறு ஒரு சப்தமும் கேட்கவில்லை. அவன் கோட்டை வாயிலை நெருங்கினான். வாயில் உடைந்திருந்தது. அதன் வழியே உள்ளே சென்று அங்கே பரவியிருந்த சூனியத்தைப் பார்த்தான். கட்டடங்கள் எல்லாம் இருட்டில் திக்குமுக்காடிக் கொண்டிருந்தன. ஒரு வௌவால் சிறகடித்துப் பறந்தது. பறந்து இவனருகே வந்தது. பிறகு அவன் தலையைச் சுற்றிற்று. எங்கேயோ பறந்து சென்றுவிட்டது!... பயங்கரம்!

துர்க்கபாலனுடைய வீடு திறந்திருந்தது. அதன் வாயிலுக்குப் போய் நின்றான். அவனுக்குத் திடுக்கிட்டது. சூனியத்தில் ஒரு பயங்கரமான சப்தம் கேட்டது. ஒரு பெருச்சாளி பட்டப்பகலிலேயே எதையோ சுரண்டிக் கொண்டிருந்தது. அந்தத் துணிவுமிக்க பெருச்சாளி சுரண்டுவதை நிறுத்தி அவனையே சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தது.

அவன் இதயத்தில் பனிக்கட்டி உறைந்து நின்றது. "கோட்டைக் காவலா, கோட்டைக் காவலா கோட்டைக் காவலா?" எதிரொலி கோட்டைக் காவலனின் பெயரால் கோட்டை முழுவதையும் நிரப்பிற்று. அவன் தன் தந்தையைப்பற்றி நினைத்துக்கொண்டான். இங்கிருந்துதான் அவர் சாமந்தனை எதிர்கொள்வதாகச் சொல்லியிருந்தார். இங்கேதான் சாமந்தன் தன் தந்தையின் மடியில் அமர ஆசை கொண்டு வந்தான், "அப்பா, அப்பா, அப்பா!" என்று உயர்குரல் கொடுத்து அழுதான். எதிரொலியும் இரக்கமின்றி அப்பா அப்பா, என்றழைத்து அவனைப் பரிகசித்துவிட்டு சூனியத்தில் மறைந்தது. அவன் ஒட்டகத்தை அவிழ்த்துக்கொண்டு கோயிலுக்குள் ஓடினான். அவன் பற்கள் இடித்துக்கொண்டிருந்தன. அவன் நரம்புகள் ஆட்டம் கண்டிருந்தன, தனியாக அலறிப் புடைத்துக்கொண்டு அந்தத் தனிமையில் பூதங்களின் சேனையால் துரத்தப்பட்டவன்போல் ஓடினான். அவனுக்கு மூச்சுக்கூட விட முடியவில்லை.

பப்பரியா மஹாதேவருடைய கோயில் எதிரே தான் இருந்தது, எந்த நிலையில்? அதை அவன் பார்க்கவில்லை. துவஜ ஸ்தம்பம் முறிந்து கிடந்தது, கலசம் பொடித்துக் கிடந்தது. சலவைக்கல்லாலான அழகிய நந்தி பகவான் தலைவேறு உடல் வேருய்ச் சிதறிக் கிடந்தான். இயற்கையே ஊழிக்கூத்து ஆடித்

தோற்றம் அளித்தது, அவன் கண்கள் சிவந்தன; பயம் கொண்டன; மனிதத் தன்மையை இழந்து நின்றன. அவன் மூச்சு வெட்டி வந்தது. அவன் பொட்டுப்பொடிக்க ஆரம்பித்தது. அவன் கோயிலுக்குள்ளே ஓடிச்சென்று அமர்ந்துகொண்டான். 'சம்போ, சம்போ, சம்போ'



என்று இரைந்த குரலிட்டுக் கூவி அழைக்கத் தொடங்கினன். கோவிலின் உட்புறத்தி லிருந்து எதிரொலி அதிர்ந்து எழுந்தது— சம்போ, சம்போ, சம்போ!

எங்கே அந்தச் சம்போ?

அங்கே குலதேவதை பப்பரியா மஹாதேவ ருடைய பாணம் (லிங்கம்) இரண்டாய் முறிந்து கிடந்தது. அவன் புத்தி தடுமாறியவன்போல் கூச்சலிட ஆரம்பித்தான்—ஒன்று, இரண்டு, மூன்று...... அவன் உணர்வு அவனைக் கைவிடத் தொடங்கிற்று. பின்னல் சென்று சுவரின் உதவியை நாடினன். அப்படியே கொஞ்சதூரம் சென்ருன். கடைசியில் கீழே விழுந்தேவிட்டான். தேவாலயம் சுற்றிற்று. அந்த நிலையில் உடைந்த லிங்கத்தின் முன்னல் கையில் விளக்குடன் நிற்கும் ஓர் கிழவனைப் பார்த்தான். அவன் அறிமுகப்பட்ட பெரியவன் போல் காணப்பட்டான். அவனை எங்கே பார்த்தோம் என்பது மட்டும் அவனது நினை வுக்கு வரவில்லை.

4

சாமந்தன் உள்ளத்தை ஒரு இள மங்கை ஆடரங்கமாகக் கொண்டிருந்தாள். அவள் அவனைப்பார்த்துச் சிரித்துக்கொண்டி ருந்தாள். தன் தளிரிளங் கையினல் விபூ தியை எடுத்து அவன் நெற்றியில் தடவினள். குயிலும் வெட்கிக் குன்றும் குரலில் — 'வீரா, அண்மையிலேயே திரும்பி வந்துவிடு' என் றும் சொன்னள். ஆனல் சாமந்தன் தலை பொடித்துக்கொண்டிருந்தது, முதலிலிருந்த அவ்வளவு இல்லை; கொஞ்சம் குறைவுதான். ஒரு கை ஏதோ ஏந்தி அவன் வாயில் ஊற்றிக் கொண்டிருந்தது. யாருடையது? அவளு டையதுதான? ஆம், இந்தப் பற்றி எரியும் தருணத்தில் அந்த நரம்புகளுக்குக் குளுமை தரக்கூடிய கை வேறு யாருடையதாயிருக்க முடியும்? அவன் அந்தக் கையைப் பிடித்துக் கொண்டான். அந்தக் கையை ஆவலுடன் பிடித்தான். அந்தக் கையை அவன் இனி விட மாட்டான்; பல பிறப்புக்களிலும் விடமாட் டான். மற்றொரு கை அவன் தலையைத் தடவிக் கொண்டிருந்தது — தடவியா கொண்டிருந் தது? இல்லை பூ உதறிக்கொண்டிருந்தது. அவன் கண்களைத் திறக்க முயன்ருன்; முடிய வில்லை. அவன் அந்த முகத்தைக் கண்கொண்டு பார்க்க விரும்பினன். அந்த மெல்லியல் கொண்ட, நன்கமைந்த ஒளிபொருந்திய முக அமுதத்தைக் கண்கள்கொண்டு பருக விரும்பி னன். ஆனல் அவன் கண் திறந்தபோது அங்கே நின்றது அவன் களைத்த மனதைக் களிப்பித்த அந்த இளநங்கையல்ல! ஒரு கிழவனே அவன் எதிரே நின்ருன். அவன் முகம் எங்கே? அந்த இனியாளின் முகம் எங்கே? அவன் மறுபடியும் கண்களை மூடி அந்தப் பெண்ணின் முகத்தை எண்ண ஆரம்பித்தான். ஆனல் அப்பொழுதும் இந்த ஒட்டி உலர்ந்த நரைத்த கிழ முகமே எதிர்ப் பட்டு நின்றது. அவனுடைய சிறிய கண் களிலிருந்து நேயக் கண்ணீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது.

அவன் மிகுந்த பிரயாசையுடன் கண்களைத் திறந்தான். அந்த முகம் அவனுக்கு விளங்கி விட்டது, அந்தமுகத்தை அவன் சிறு பிள்ளை முதல் பார்த்திருக்கிருன். அந்த முகம்தான் அவனுக்குக் காயத்ரி சொல்லிக்கொடுத்த முகம். அந்தக் கைதான் அவனுக்குப் பேனப் பிடிக்கச் சொல்லித் தந்தது. அவை ராஜகுரு நந்திதத்த னுடைய அவயவங்கள்.

"ராஜகுரு!" என்று அழைத்தவாறே எழுந்து உட்கார முயன்ருன். ஆனல் இடுப்புத் தளர்ந்து தன்னைத் தாங்க முடியாத நிலையிலிருந் தான். நந்திதத்தன் அவனுக்கு உதவிசெய்தான். அவன் பயத்தால் அங்கும் இங்கும் சிதற விழிக்க ஆரம்பித்தான்.

அவன் உள்ளம் கொஞ்சம் நிலைபுரிய ஆரம் பித்தது. இது பப்பரியாவின் சிவாலயம். இதன் கோட்டைக்குத்தான் அவன் வந்திருந் தான். அங்கேதான் சிவனுடைய உருவம் உடைந்து கிடைக்கிறது. எதிரே ராஜகுரு அமர்ந்து அவனையே பார்த்துக்கொண்டிருக் கிருன். அதைத் தவிர எல்லாம் அசை வற்று நின்றன.

"குழந்தாய்! அமைதி பொறுமை இல்லாமல் ஒன்றும் ஆகாது. சிருஷ்டிக்குப் பிரளய காலம் வந்திருக்கிறது.

5

"இந்த அழிந்த உலகத்தில் நீயும் நானும் தான் எமனுக்குத் தப்பியவர்கள்."

"முதலில் கோகாபாபா எங்கே என்று சொல்லுங்களேன்!"

"என் எஜமானர், அழியாப் புகழாளன் கைலாசத்தை அடைந்துவிட்டார்."

"ஊம்? மற்றவர்கள்? பப்பரியா ஏன் இப் படி உயிரே அற்றுச் சீறுகிறது? சொல் லுங்கள். சீக்கிரம் சொல்லுங்களேன்."

"சொல்லுகிறேன். சொல்லாமலா இருக்க முடியும் ஆனல்," ...நந்திதத்தன் நிறுத்திக் கேட்டான். "கேட்க மனவலுவிருக்கிறதா?"

"இருக்கிறது, இல்லை! நடந்ததை நடந்த வாறே கேட்பது கேட்டேயாகவேண்டும்."

"அப்படியானுல் கற்பனைக்கும் எட்டாது நடந்த அந்தச் செய்திகளைக் கேள். அதற்கு முன் இதோ கொஞ்சம் கூழ் தயார் செய்து வைத்திருக்கிறேன், அதைச் சாப்பிடு. ராப் (சர்பத்தும்) இருக்கிறது. அதையும் பருகு."

சாமந்தன் அதைச் சுவைத்து நொட்டை விட்டான். பிறகு சர்பத்தையும் அருந்தினுன். அது முடியும்வரையில் நந்திதத்தன் அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தான், காதல் கனிந்த கண்களுடன்.

முடிந்தவுடன் சாமந்தன் கண்களில் படம் இட்டு எழும் கேள்விக் குறியைக் கண்டு நந்திதத்தன்... 'சொல்கிறேன், அப்பா, சொல்கிறேன்.' என்று ஆரம்பித்தான்.

சாமந்தன் குரலில் பரபரப்புத் தோன்ற, "சொல்லுங்கள் ராஜ குரு, நான் இங்கிருந்து சென்றபிறகு நடந்ததை எல்லாம் வரிசை மாருமல் சொல்லுங்கள்."

"கொஞ்ச நாட்கள் கழிந்த பிறகு கஜினிஅமீர் எண்ணற்ற வீரர்கள்சூழப்

படையெடுத்து வருகிருன் என்ற செய்தி கிடைத்தது. பகவான் ஸோமநாதருடைய ஆல யத்தைப் பாழ் செய்து அவர் மூர்த்தியை உடைக்கவே வருகிருன் என்று கேட்ட நாங் கள் வாய் விட்டுச் சிரித்தோம்.''

ராஜகுரு பெருமூச்சுவிட்டு ஆரம்பித்தார்.

''கோகாபாபா மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டே பெருமை பொங்கச் சொன்னுர். 'ஓஹோ! வருகிருனு! வரட்டும். என் பையன் பீமதேவன் லோஹத் கோட்டையில் உட் கார்ந்திருக்கிருன். முல்தானில் அஜயசிங் வழி யடைத்து நிற்பான். பாலைவனத்தின் வாயிற் படியில் நான் எதற்கு இருக்கிறேன்? சபாத லக்ஷத்தில் என் வீரத்தோழன் வாமல தேவனல்லவா இருக்கிருன்! வரட்டும், நன் ருய் வரட்டும்! நாக்கை நொட்டை விட்டுக் கொண்டுகூட வரலாம்.; நல்ல விருந்து கிடைக் கும்!,''

''ஊம்?'' சாமந்தன் சுவாரஸ்யமாய்க் கேட் டான்.

''கொஞ்ச நாட்கள் கழித்து வருத்தப்படும் செய்திகள் கிட்ட ஆரம்பித்தன. ஜயபாலன் மகன் பீமபாலன் மிலேச்சனுக்கு வழி விட்டு விட்டான். அந்தக் கோழை தன் கீர்த்திக்கே உலைவைத்துக்கொண்டான். அந்தக் கசடன் உயிரைக் காப்பாற்ற உலகத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டான்,'' கிழவன் இதைச் சொல்லிவிட்டு, கனத்த தலையை அசக்கிக் கொண்டான் — கனத்தை உதறுபவன்போல! சாமந்தனும் உயிரைக் காப்பாற்ற உலகத்தைக் காட்டிக் கொடுக்கும் இரண்டொரு உதாரணங் களை நேரே பார்த்திருந்தான். அதனுல் வாய டைத்து உட்கார்ந்திருந்தான்.

நந்திதத்தன் தொடர்ந்தான்:

''முல்தான் முதல்வன் கஜினி அமீரைப் பூரண கும்பம் வைத்து வரவேற்றுவிட்டான். சூரிய சந்திர வம்சத்தவர்கள் 'புல்லைக் கடித்து' புல்லி யர்களுக்கு அழைப்புத் தந்தனர். அவர்கள் அடிபணிந்தனர். இரவும் பகலும் முல்தான் கஜினியில் உத்ஸவம் கொண்டாடினுன். ராஜ புத்திரர்களும் பசு பிராமணர்களைக் காப்பாற் றும் தொழிலைவிட்டு, கடவுளுக்குத் துரோகம் செய்யும் தொழிலில் அவனுக்கு உதவிதந்தனர். அங்கிருந்து மிலேச்சன் நம்முடைய பாபா வுக்குச் செய்தி அனுப்பினுன்.

''என்ன அனுப்பினுன்?''

''நாம் எல்லாம் கோட்டைக்குள் இருந்தோம். மிலேச்சனுடைய தூதைக் கேட்டுக்கொண்டு. முல்தானில் மிலேச்சன் வந்ததைக் கேட்டதி லிருந்து கோகாபாபா பேசுவதையே நிறுத்தி யிருந்தார். அவருக்குக் கோபம் வந்தால் எப் படியிருப்பார் என்றுதான் உனக்குத் தெரி யுமே! அவர் கண்கள் மின்னல்போல் ஒளித் தன. அவருடைய உதடுகள் இரும்புக் கிடுக்கி கள் போல் மூடிக்கொண்டன. அவருடைய மீசைகள் படம் எடுத்து நின்றன. அவர் இப்படிக் கோபம் கொண்டால் ஒருவரும் அவரை நெருங்கமுடியாது. சில சமயங்களில் நான் மட்டும்தான் போகலாம். ஆனுல் அந்தச் சமயம் நான் நெருங்குவதும் கடினமாகி விட்டது,''

''தூதுவன் கொணர்ந்த செய்தி என்ன ஆயிற்று?''

''உடன்படிக்கைச் செய்தி கொண்டு இரண்டு ஆட்கள் வந் திருந்தனர். ஒருவன் இளைஞன் மசூத் என்ற சேனைத் தலைவன். நல்ல உயரம், ஒளி பொருந்திய தோற்றம். பெருமை தாங்கும் உள்ளம். மற்றொருவன் நடு வயதையடைந்த ஒரு தேசத் துரோகி; தர்மவிரோதி.

"யார்? ராஜபுத்திரன் யாராவதா?"

"இல்லை, அவன் பிறவியில் பரிகாரி. ஆனால் மிலேச்சனுக்குப் பாதம் தாங்கி முன்னேறியவன். அவன் துபாஷ் (மொழி பெயர்ப்போன்) வேலை பார்த்துவந்தான். அவன் பெயர் திலகன். நாங்கள் உட்கார்ந்திருந்தோம். அங்கே அவன்வந்தான். முத்துவைரங்கள்நிறைந்த ஒரு தட்டைக் கோகாபாபாவிடம் காலடியில் வைத்து நின்றான். கோகாபாபா சுட்டெரிக்கும் கண்களுடன் வாய்திறவாமல் பார்த்துக்கொண்டு இருந்தார். அதைக் கண்டு நானே கேட்க ஆரம்பித்தேன். 'ஏன், எதற்காக வந்திருக்கிறாய்? இந்தக் காணிக்கை எதற்காக வந்திருக்கிறது?" என்று கேட்டேன். திலகன் மிகவும் மரியாதையாகக் கை கூப்பி முடிவணங்கிச் சொல்லலுற்றான். 'கோகா ராணா! கஜினி அரசன் யமீனுத் தோலா மஹ்மூத் தங்கள் வீர சூரத்தைக் கேள்விப்பட்டுப் பெருமைகொண்டு இந்தக் காணிக்கையை அனுப்பியிருக்கிறார்,' இந்த வார்த்தைகளைக் கேட்டதுதான் ஞாபகம். உயர எழும் பறவைகளின் இறகுகள் போல் அவர் மீசைகள் படபடக்க ஆரம்பித்து விட்டன. ஆனால் சேர்ந்த உதடுகள் ஒரு வார்த்தையைக்கூட வெளியேற விடவில்லை.

"நான் முன்னேறி 'அவன் என்ன வேண்டுகிறான்?' என்று கேட்டேன். திலகன் வணக்கத்துடன் 'கஜினி அமீர்' பாலைவனத்துக்கு அரசன் கோகாதுர்க்கத்தின் தலைவனிடம் பாலைவனம் வழியாகப் பிரபாசி நகரத்தை அடைய அனுமதி வேண்டுகிறான்." என்று சொல்லி நின்றான்.

"அவன் அதைச் சொன்னதுதான் தாமதம்; கோகாபாபாவின் கைகள் மீசையை முறுக்கி விட்டன, அவர் கண்களின் ஒளி சூரிய ஒளியையும் மங்கவைத்துக் கொண்டு எரிந்து எழுந்தது. சரி, இடிதான் விழப் போகிறது என்று நான் தீர்மானம் செய்துவிட்டேன், எண்பது வருஷங்கள்வரை பெருமைக்குச் சிறுமை தரும் ஒரு செயலையும் செய்தறியாதவன் இன்று அமீருக்கா வணங்குவான்? மீசையை முறுக்கி விட்டுக்கொண்டே இருக்கும் கோகாபாபாவுக்கெதிரே திலகன் அசைவற்று நின்றான்.

"கொஞ்ச நேரம்வரை ஒருவரும் பேசவில்லை. இடிவிழும் முன் ஏற்படும் மேக கர்ஜனைபோல் அதிர ஆரம்பித்தது. கோகாபாபா கேட்க ஆரம்பித்தார் :

"உன்னுடைய அமீர் வழிகேட்கிறானா?— இங்கிருந்து சென்று ஸோமநாதர் கோயிலை உடைக்க?...அதற்கு இது காணிக்கையோ?

"திலகன் பதில் சொன்னான், 'ஆம்—அரசே!' சேனாதிபதி மசூதும் மீசையை நெருடிவிட்டுக் கொண்டு நின்றான். விழும் இடிபோல் மின்னி எழுந்தார் கோகாபாபா. அவர் சப்தத்தில் கோட்டையே அதிர்ந்து எழுந்தது, 'அடே! போ. அந்தப் பதரிடம் 'வல்லமையிருந்தால் வா, பாலைவனத்தில் அடிவை, என்று சொன்னேன் என்று சொல், ... கோகாபாபாவின் உடலில் ஒரு துளி இரத்தம் இருக்கும் வரை அவனால் எது முடியுமோ அதைச் செய்து கொள்ளட்டும்!' என்று சொல்லிவிட்டு உதறிய அவர் காலில்பட்ட தட்டு இடி விழுந்த மலை போல் பிளந்து சிதறிற்று."

இதைக்கேட்ட சாமந்தன் தன்னையறியாமலே 'பாபா! நல்ல காரியம் செய்தீர்கள்' என்றான்.

"மேலே கேள், நாங்கள் பதினைந்து நாள் தயார் செய்தோம்.—கோட்டைப் பராமரிப்பை அதிகரித்தோம். படைக்கலங்கள் அமைத்தோம். சாரணர்களின் உணர்ச்சியூட்டும் பாட்டுக்கள் கேட்டோம். வீரதிலகம் இட்டு அரசகுல வீரர்கள் சண்டைக்கு எழும்பி நின்றனர். விதம்விதமான வாத்யங்கள் முழங்கின. சௌஹான் வீரர்களின் மனைவியர் தங்கள் கணவன்மார்கள் வெற்றியடைய வேண்டி, தெய்வங்களை வழிபட்டனர். நானும் 'சதசண்டி' மந்திரத்தைப் பாடம் சொல்ல ஆரம்பித்தேன்.

"ஒருநாள் நாங்கள் கோட்டையில் நின்று பார்த்துக்கொண்டேயிருந்தோம். அந்தச் சமயம் ஆதிசேஷனே ஊர்ந்து வருவது போல, கஜினியினுடைய சேனைத்தொடர் ஆகாயத்தின் அடிவானத்திலிருந்து நுழைந்து வருவதைப் பார்த்தோம். என் உள்ளம் பயம் உற்று மயங்கிற்று. சேனை இவ்வளவு பெரிது இருக்கும் என்று நான் கற்பனையும் செய்து பார்த்ததில்லை. கோகாபாபாவைத் திரும்பிப் பார்த்தோம். அவர் கண்கள் பயங்கரமான தோற்றம் கொண்டிருந்தன; பார்க்கவே பயமாயிருந்தது. அவருடைய வலது கை இடையில் செருகியிருந்த கத்தியுடன் விளையாடிக்கொண்டிருந்தது. நான் துணிந்து அவரிடம் "பாபா, இந்த மிலேச்சனுடைய சேனை இவ்வளவு எல்லைமீறியிருக்கும் என்று எண்ணவேயில்லையே?" என்றேன்.

"கோகாபாபா கலகல என்று நகைத்துச் சொன்னார்: 'நந்திதத்தரே! திரிசூலம் தரித்தவன் யாருடன் இருக்கிறானோ அவன் ரோமத்தைக்கூட ஒருவரும் அசைக்கமுடியாது. அவர் இந்தவிதம் சொல்லிவிட்டு வருகிற சேனையைச் சற்றுநேரம் விடாமல் பார்த்துக்கொண்டேயிருந்தார். திடீரென்று நொடித்துத் திரும்பிய அவர் என் கையைப் பிடித்தார். நான் தயாராய் நின்றேன். 'பிராமணதேவா, நீங்கள்

எங்கள் குலகுரு. தங்கள் ஆசிர்வாதத்தால் தான் எங்களுடைய கௌரவம் பிரகாசிக்கிறது. தயவுசெய்து ஒரு வாக்குக் கொடுங்கள்' என்றார்.

"நான் சரி என்று சொன்னேன். கோகா பாபா மெல்லிய குரலில் சொல்ல ஆரம்பித்தார்.

"கோகாராணாவின் எண்ணம் ஈடேறும் எனத் தோன்ற வகையிருப்பதாகத் தெரியவில்லை. உயிர்போனால் நன்றாய்ப் போகட்டும். ஆனால் ஒரு இம்மி பூமிகூட அவனுக்குக் கொடுக்கமாட்டேன். ஒருகால் என்னைக் கைலாசநாதர் அழைத்துக் கொண்டுவிட்டால் என்னுடைய ஈமக்கடன்களை நீங்களே செய்யுங்கள். சாமந்தனிடமும் ஸஜ்ஜனனிடமும் சொல்லி, கயை சென்று எனக்குச் சிராத்தம் செய்யச் சொல்லுங்கள்" என்றார்.

"முதலில் எனக்கு இந்த வாக்கைத் தர மனமே வரவில்லை. என் எஜமானர் இல்லாது நான் பூமிக்குப் பளுவாக வாழமுடியும் என்று எண்ணவே முடியவில்லை. என்றாலும் அவர் ஆணையை எப்படித் தட்டிநிற்க முடியும்? நானும் சரி என்று சொல்லிவிட்டேன். அந்த ரணவீரர் உற்சாகம் நிறைந்த கைகளால் தம் சங்கை எடுத்து வாயில் வைத்து இன்பம் பெருகும் இதயம் ஒலிக்க அதை முழக்கினார். சேனை சேர ஆரம்பித்தது.

"பிறகு?"

"விதியின் வழியைத் தேக்க யாரால் முடியும்? கோகா கோட்டையில் எண்ணூறு ராஜ புத்திரர்களும் முந்நூறு மற்றவர்களும் எழுநூறு பெண்களும் இருந்தனர். எதிர்க்கட்சியிலோ மனித மாக்கடலே அலை அடித்துக் கொண்டிருந்தது. திலகன் மீண்டும் வந்தான். வணக்கம் செய்து, 'எதற்காக வீணில் யமன் குகையில் நுழைய வழி தேடுகிறீர்கள்?' என்று சொல்லிப் பார்த்தான். கோகாபாபா அதற்குச் செவிசாய்க்கிறவராயில்லை. 'அட, சாவா? பிறந்த அன்றேதான் சாவு பிடரியில் ஏறி அமர்ந்திருக்கிறதே! போடா போ! சவுரியம் இருந்தால் சண்டை போட்டே முடி, போ' என்று சொல்லிவிட்டார். பிறகு கோட்டைக் கதவுகள் மூடப்பட்டன. சுவர்களின்மேல் வில்வீரர்கள் ஏறி நின்றுகொண்டனர். கீழே மைதானத்தில், நின்ற அமீர் பல்லை நெறித்தான். யவனர்களுடைய பதினெட்டு அக்குரோணி கொண்ட சேனை கருடன்போல் கோட்டையின்மேல் அமர்ந்திருக்கும் கோகா பாபாவின் புகழ் பாடிக்கொண்டு நின்றது. மாலை ஆயிற்று. அமீர் என்ன செய்வான் என்று நாங்கள் ஆவலுடன் கவனித்துக்கொண்டிருந்தோம். பலம் பொருந்திய கோட்டையை முறியடிப்பது என்பது இயலாதகாரியம்! அதனுடைய நேரே எழும்பும் அகன்ற மேட்டின் மேல் ஏறுவது என்பதும் பகற்கனவுதான். யானைகளும் குதிரைகளும் அதில் ஏற என அடிகூட எடுத்து வைக்க மாட்டா. அதன் மிக உயர்ந்த சுவர்களைத் தாண்டி அம்பு செலுத்த எந்தத் தாய் வீரனைப் பெற்றிருக்கிறாள்?'

நந்திதத்தன் கதையைச் சாமந்தன் தன்னை மறந்து உடலே காதாய்க் கேட்டுக்கொண்டிருந்தான்.

"நாங்கள் பார்த்தோம். அமீருக்கு உதறல் தான். கோகா துர்க்கத்தைக் கைப்பற்ற வருஷக் கணக்கில் கழியும். பிறகு ஸோமநாதர் கோயிலை உடைப்பது என்று மனதிலே எழுந்த ஆவல் மனதிலேயே மடிந்துவிடும். முழு இரவும் அவனுடைய சேனையில் ஏதோ ஓட்டமும் பிடியும் காணப்பட்டன. சில தீவட்டிகள் ஓடின. குதிரைகள் கால்வாங்கின. முரசு கொட்டிற்று. விடியற்காலை ஆகவே ஆதி சேஷன் போன்ற சேனை கோட்டை முனை வழியே பாலைவனத்தில் முன்னேற ஆரம்பித்தது. யவனன் தோல்வியுண்டான். கோகா துர்க்கம் தன் வழிவந்த பெருமையைக் காத்து அசைவற்று, எதிர்ப்பார் பல்பிடுங்கி நின்றது. எங்கள் கழுத்திலிருந்து எழுந்து ஒலித்த, 'ஹர ஹர மஹாதேவா', என்ற சப்தம் யவனன் சேனையைக் கூர்மை கொண்டு தாக்கித் தத்தளிக்க வைத்தது. (தொடரும்)

டால்டாவில்

பொரித்த மசாலாதிணித்த குடமிளகாய்களினால் உங்கள் உணவை அதிக சத்துடையதாகச் செய்யுங்கள் !

தேக ஆரோக்கியத்திற்கு அவசியமான தாதுப்பொருள்களும், விடமின்களும் குடமிளகாய்களிலிருக்கின்றன. அவைகளை இப்படி தயாரித்து சாப்பிடுங்கள். முதலாவதாக, மிளகாய்களை நீராவியில் வெந்து காம்பு பாகத்தை நறுக்கி விதைகளை அகற்றவும். பிறகு வேகவைத்தபட்டாணி, காரட் அல்லது வெந்து பொடிசெய்த முட்டை, வெந்து உதிர்த்த உருளைக்கிழங்கு அல்லது வெந்து துருவப்பட்ட மாமிசம் இவைகளுடன் அரிந்து வதக்கிய வெங்காயம், நறுக்கிய இஞ்சி, கொத்தமல்லி இலை, கடுகு, உப்பு, எலுமிச்சஞ்சார் இவைகளைகலந்து மசாலாசெய்து அதனுட் திணிக்கவும். காம்பு பாகத்தை மிளகாய்களின் மேல் வைத்து குச்சிகளினால் பொருத்தவும். குழிவுகுறைந்த வாணலியில் டால்டாவை சூடாக்கி அதில் மிளகாய்களை பக்குவமாகும்வரை பொரிக்கவும்.
டால்டா ஒரு சுத்தமான தாவரக்கொழுப்பாகையால் அது அதிக நேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக முழுவதும் பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.

எதிர்பாராத அதிதிகளுக்கு
நொடிப்பொழுதில் உணவு!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள் !

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



HVM. 110-379 TM

பெண்களுக்கு மட்டும்

ஷிபாலி செளத்ரி — சாரி

சுசீலாவின் தபால் பெட்டி

அக்கா, இந்த விந்தையைக் கேள். என் காதில் தோடு போட முடியாமல் புண் வந்தது. கொஞ்சம் 'ஸல்பா' ஆயின்ட்மெண்டு உபயோகித்தேன். மறுநாளே முகம் பூராவும் சிவந்து வீங்கி, தடிப்புக்கள் ஏற்பட்டு, அரிப்புத் தாங்க முடியாமல் நான் படும்கஷ்டம் சொல்லிச் சாத்யமில்லை, டாக்டரைப் போய்க் கேட்டதற்கு நான் 'ஸல்பா' மருந்துகளுக்கு அலெர்ஜிக் என்றுசொன்னார். எனக்குச் சிரிப்பு வருகிறது. இப்படிக் கூட இருக்குமோ? மேலும், இந்தத் தொந்தரவு நீங்க நான் என்ன சிகிச்சை செய்து கொள்வது?

பாமா

வெகு காலம் முன்பு, எனக்குக் காதில் இம்மாதிரி புண் ஏற்பட்டது நினைவுக்கு வருகிறது. அப்போதெல்லாம் 'ஸல்பா' மருந்துகள் தோன்றவில்லை. நானும் எதெதோ களிம்புகள் தடவியும் சிறிதும் பயன் கிட்டவில்லை. நகையைக் கழற்றி வைத்திருப்பேன்; சுவஸ்தமானது போல் தோன்றும்; ஒரு நாள் காதில் அணிவேன்; புண் திரும்பவும் வரும். தோட்டைப் பிரித்துக் கட்டிக்கூட அணிந்து பார்த்தேன்; பயனில்லை. கடைசியில் நகை அணியாமலே, துவாரம் தூர்ந்து போகாமல் இருக்கமாத்திரம் ஒரு குச்சியை அணிந்து கொண்டேன். புண்ணுக்கு ஒரு களிம்பும் தடவவில்லை. பிரதி தினம் ஸ்நானம் செய்ததும் லைஸால் (Lysol) என்கிற கிருமிநாசினி [அந்தக் காலத்தில் டெட்டால் கிடையாது.] ஜலத்தில் காது துவாரம், அதில் அணியும் குச்சி இவற்றை நன்றாக அலம்பி, திரும்பவும் குச்சி அணிவேன். புண் ஆறிற்று! முற்றிலும் குணமாகி, காது வழ வழப்பாய், பழைய நிலைக்கு வந்தும்கூட வெகு நாள் வரை நகையை எடுத்துப் போட்டுக் கொள்ளத் துணிவு வரவில்லை. ஒரு நாள் நகையையும் லைஸால் லோஷனில் ஊற வைத்து அலம்பி அணிந்தேன். என்ன ஆச்சர்யம்! பிற்பாடு ஒரு தடவை கூட எனக்கு இந்தத் தொந்தரவு ஏற்பட்டதில்லை.

இதனால் ஒரு பாடம் கற்றுக் கொண்டேன். ஒருபொழுதும், ஸ்நானம் செய்யும் போதோ முகம் கழுவும் போதோ, நகையை அணியக் கூடாது; திருகு கடகடத்துப் போனால்கூடப் பாதகமில்லையென்று, சோம்பற் படாமல் கழற்றி வைத்து, காது ஈரமே இல்லாமல் உலர்ந்த பின் அணிய வேண்டும், என்பதே அது. நாம் உபயோகிக்கும் சோப்பில் உள்ள சோடா காரம் ஈரம்சேர்ந்து, மெல்லிய சதையைப் புண்ணாக்கி விடுகிறது; நகையிருந்தால் காதைச் செம்மையாய்த் துடைத்து, காய வைக்கச் செளகர்யப் படாது; என்று நான் தீர்மானித்தேன்.

முற் காலத்தில் பாட்டிமார்கள், தங்கள் காதில் 12 காரட் வைர ஓலைகளையும், பொன், சிவப்பு ஓலைகளையும் அணிந்து நிர்விசாரமாய்க் காலம் தள்ள வில்லையா? தினமும் கழற்றியா வைத்தார்கள்? அவர்களுக்கு இம்மாதிரி தொந்தரவு நேர்ந்ததாகக் கேள்விப் பட்டதுண்டோ? என்று நீ கேட்கலாம். உண்மை தான். ஆனால் பாட்டிகள் மஞ்சளும், உடம்புப் பொடியும் தேய்த்துக் குளித்தது தவிர, வாசனைச் சோப்புகளைக் கையால் தொட்டு அறியார்களே.

இப்பெழுதும் ஏதோ சிலர் தவிர எல்லாருக்கும் இம்மாதிரி நேர்வதில்லையே, ஏன் என்று நீ கேட்கலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் உன் டாக்டர் கண்டு பிடித்த அலெர்ஜிக் அதாவது சிலருக்குச் சில வாசனைகள், சில மருந்துகள், சில உணவுகள் ஒத்துக்கொள்வதில்லை—என்கிற உண்மை பொருத்தமென்று தோன்றுகிறது. மங்களூர் குங்குமத்தை வாசனை மெழுகு வைத்து நெற்றியில் அணிந்த சிலருக்கு

அந்த இடத்தில் சுட்ட மாதிரி புண் ஆவதை நான் பார்த்திருக்கிறேன். அதே வஸ்துக்களால் பழையகாலனா அளவுக்குப் பொட்டு வைத்துக்கொள்ளும் பெண்மணிகளை இந்த நாளிலும் நான் பார்க்கிறேன். இவர்களுக்கு ஒரு தொந்தரவும் கிடையாது! சுகத்திற்கும் சுத்தத்திற்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு. பாமாவின் காதில் ஏற்பட்ட புண் அவளுடைய சுத்தக் குறைவினால் என்று சொல்ல நான் முன் வரவில்லை. ஆனாலும், நகை அணியும் போது ஈரம் என்பது பெயரளவில் கூட இல்லாமல் காது சுத்தமாக இருந்தால், புண் ஏற்பட ஹேதுவில்லை என்று சொல்லலாம். என் நண்பர், ஒரு டாக்டரம்மா. தம்மிடம் நர்ஸ்வேலை கற்க வரும் படித்த பெண்களை, சுத்தத்தில் அவர்களுக்குள்ள கவலையைப் பரீக்ஷிக்கும் பொருட்டு, "இந்தாம்மா, துடைப்பத்தை எடுத்து இந்த அறையைக் கூட்டு, பார்ப்போம்" என்பார்!

ஆகையால், பாமா, உனக்கு ஏற்பட்டுள்ள கோளாறு நீங்கும் வரை பொறுமையாக இரு. என்னுடைய பழங்கால சிகிச்சையை உன் காதுக்கு வேண்டுமானால் செய்து பாரு. நகை அணிய அவசரமே படாதே.

சுசீலா

*

அழகுக்கு உதவி!

இடுப்பைச் சுற்றி அழகைக் கெடுக்கும், அனாவசியமான சதையைக் குறைக்க இந்த இரண்டு உடற்பயிற்சி அப்பியாசங்களைச் செய்து பாருங்கள்; விடாமல் செய்தால் நிச்சயம் பலன் கிட்டும்.

(A) நேராக நில். முழங்கால்கள் ஒன்றுக் கொன்று பத்து இஞ்சு தூரத்தில் இருக்கட்டும். தோள்களைப் பின்

(A)

2

புறம் தள்ளியும் வயிறு உள்ளே இழுக்கப் பட்டும், முழங்கைகள் உடம்பை ஒட்டி நேராகவும் இருக்கட்டும்.

[A. 1-ஆவது படத்தைப்போல்.] இப்பொழுது கைகளை வலது புறமாகத் தூக்கு; அதே சமயம் உடம்பையும் அதே பக்கம் இழுக்க முயற்சிப்பதில், வயிறு இடுப்பு இவைகளின் தசைகள் உன்னால் இயன்றவரை இறுக்கி இழுக்

கப்படவேண்டும். இதே நிலையில் ½ நிமிஷம் நிற்கலாம். [A. 2-ஆவது படம்.] முதல் நிலைக்கு மெதுவாய் வரவேண்டும். இதே கசரத்தை இப்பொழுது இடது புறம் செய்யவும். மெதுவாய்த் துவக்கி, வர வர வேகமாய் டிரில் போல் செய்யவும்.

(B) இடை சிறுத்து, பொற்கொடியாவதற்கு இதுவும் ஒரு பயிற்சி:— கால்களைச் சேர்த்து, கைகளைத்தோள் உயரம் நீட்டி நிமிர்ந்து நிற்கவும். [B. 1ஆவது] இப்பொழுது கைகளை வலது புறமாக வீசும் பொழுது, உடலை அதற்கு எதிர்ப் புறமாய் இழுக்க முயற்சிக்கவும். பிறகு கைகளை இடது பக்கம் வீசி, உடலை வலது புறம் முறித்து இழுக்க வேண்டும். இப் பயிற்சிகளைக்காலையும் மாலையும் தவருமல் ஐந்தைந்து, நிமிஷம் செய்யுங்கள்.

2

(B)

1

சமையல் பகுதி

பதிஷப்தா. வங்காளத்தில் செய்யும் ஒரு இனிப்புப் பண்டம்!

தேவையானவை:—

அரிசி மா	— —	1 பெரிய கப்
மைதா மா	— —	½ கப்
கோவா	— —	1 கப்
சர்க்கரை	— —	½ கப்
திராக்ஷைப்பழம்-		½ கப்
பிஸ்தா / பாதாம்	துண்டங்கள் -	2 டேபிள் ஸ்பூன்.
ஏலப்பொடி	— —	1 டீஸ்பூன்.

தயாரிக்கும் விதம்:—

அரிசி மாவையும், மைதா மாவையும் ஜலம் சேர்த்து, தோசைமாவு திட்டத்தில் கரைத்து வைத்துக் கொள்ளவும்.

கோவாவில், பருப்புகள், திராக்ஷைப் பழம், சர்க்கரை, ஏலப்பொடி, துளிபால் சேர்த்துப் பிசைந்து இரண்டு அல்லது மூன்று இஞ்சு நீளத்தில் உருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும். தோசைக் கல்லில் துளி நெய் தடவி, மாவு ஒரு



சுருட்ட வேண்டும். பிறகு ஒரு நிமிஷம் தோசைக் கல்லில்சுட்டு எடுத்துவிடவும். கோவாவுக்குப் பதிலாகத் தேங்காய்ப் பூர்ணம் செய்து தோசைக்குள் வைக்கலாம்.

பாகற்காய் கறி

வட இந்தியாவில் கைக்கும் இந்தக் காயைக்கூட ருசியாய்ச்செய்து சாப்பிடுகிறார்கள். இதை எந்த

டேபிள்ஸ்பூன் ஊற்றி, ஒருசிறிய தோசை வார்த்துத் திருப்பிப் போடவும். ஒரு கோவா ரோலைத் தோசையின் ஓரத்தில் வைத்து, தோசையை அதன் மேல்

விதத்தில் தயாரித்தாலும் முதலில் மேலேயுள்ள முள்களை லேசாக நீக்கி, உப்பில் பிசிறி, கொஞ்சம்நேரம் கழித்து, தேய்த்து அலம்பி விடுவார்கள். உப்



போடு கைப்பும் கரைந்து போய்விடுகிறது.

வெள்ளை நிறமான 6 நீளப்பாகற்காய்களை மேலே சொன்ன பிரகாரம் தயார் செய்து கொள்ளவும்.

கொத்தமல்லி விதை	–	டேபிள்ஸ்பூன்
வெங்காயம்	—	ஒன்று (பெரிது)
மிளகாய் வற்றல்	—	4
உப்பு	—	தகுந்த அளவு

இவைகளை அம்மியில் அரைத்து, விழுதில் 2 டேபிள்ஸ்பூன் கடலை மாவும், ஒரு மூடி எலுமிச்சம் பழ ரசமும் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். காய்களை நடுவில் பிளந்து, விதை நீக்கி, மசாலை விழுதை உள்ளே திணித்து, லேசாக ஒரு நூலினால் கட்டி விடவும். பாகற்காய் அதிக நீளமாயிருந்தால் இரண்டாக நறுக்கிப் பிளந்து கொள்ளலாம். வாணலியில் சற்று அதிகமாக எண்ணெயும் நெய்யும் கலந்து வைத்து, அரை டீஸ்பூன் கடுகு வெடிக்கவிட்டு, காய்களை ஜாக்கிரதையாக அதில் பரத்தி மேலே ஒரு பாத்திரத்தினால் மூடிவிடவும். அடுப்பு மெதுவாக எரிய வேண்டும். சற்றுநேரத்தில் காய்களைத் தோசைத் திருப்பியின் உதவியினால் மெதுவாய்த் திருப்பிவிட்டு, நன்ருய்ப் பக்குவமானதும் எடுத்துவைக்கவும். வெங்காய வாசனை பிடிக்காதவர், அதில்லாமல் மசாலை தயாரித்து இதைச் செய்யலாம்.

* * *

வீட்டை அழகு படுத்துங்கள்

உங்கள் சார்பாய்களுக்கு படத்தில் உள்ள மாதிரி கவர் தைத்து இசைந்தது போல் ஒரு நீளமான திண்டும் தயாரித்துப் போட்டால் விருந்தினர் அமர்ந்து சல்லாபிக்கத் தகுந்த ஆசனமாகும். ஒரு பழைய புடவையை உபயோகித்து இந்தக் கவர் தைத்து விடலாம். திண்டுக்குப் பூக்கள் போடுவதில் கைவேலையைக் காண்பிக்கலாமல்லவா?



தையல் பகுதி.

உங்கள் சாதாரண ரவிக்கைகளை இந்த உல்லாசமான கோடுகளினால் எளிதில் அழகு படுத்தலாம். தைப்பது சுலபம். வர்ணம் சேர்ப்பதில் கவனம் செலுத்தினால், வேலை அழகு பெறும். 'லேசி டெய்சி' தையல்களை முதலில் தைத்து மத்தியில் 'சாடின்' தையலினால் நிரப்பி விடவும். இந்த, 'சாடின் தையல்' வேறு நிறத்தில் இருக்க வேண்டும்.

சட்டை நீலம் அல்லது வேறு எந்த வெளுத்த நிறமாகவோ இருந்தால் அடியிற் கண்ட விதம் நூல்களை உபயோகியுங்கள்.

கோடு (1) சிவப்பு நிறத்தில் 'லேசி டெய்சி'; மத்தியில் வெள்ளை.

(2) கறுப்பு நிற 'லேசி டெய்சி'; நடுவில் மஞ்சள்.

(3) ஆரஞ்சு நிற 'லேசிடெய்சி'; மத்தியில் நீலம்.

உங்கள் சட்டை கறுப்பு நிறமாக இருந்தால் :—

(1) சிவப்பும், மஞ்சளும்.
(2) பச்சையும், ஆரஞ்சும்.
(3) நீலமும், மஞ்சளும்.

* * *

"இவ்வுலகின் வழியே ஒரு தடவையே நான் போவேன் என்று எதிர்பார்க்கிறேன்; ஆகையால் இன்னொருவனுக்கு நான் காட்டக் கூடிய ஆதரவு ஏதேனும் இருந்தால், அதைக் காண்பிக்கத் தயங்கவோ, ஒத்திப்போடவோ கூடாது; ஏனென்றால் மறுபடி நான் இவ்வழி வர மாட்டேன் அல்லவா ?"

லேசி டெய்சி



1

2

3

இதோ எழில்மிக்க ஏ. ஆர். சகுந்தலா தன்
அழகிய சருமத்தைப்பாதுகாக்க ஏன்
லக்ஸ் டாய்லட்
சோப்பை
தேர்ந்தெடுத்திருக்
கிறார் என்பதை
கூறுகிறார்
LUX
LUX TOILET SOAP
''நான் லக்ஸ் டாய்லட் சோப்பை மிகவும் விரும்புகி றேன். சருமத்தைப்பாதுகாக்க சிறந்த முறை இந்த சுத்தமா னதும் மிருதுவானதுமான சோப்பைத்தவருமல் உபயோகிப் பதுதான் என்பதை நான் அறிவேன். அது சருமத்தை மிருது வாக்கி பட்டுப்போல் மழமழப்பாக்குவதுடன் எல்லாவிதத் திலும் அழகுடையதாகச் செய்கிறது. மேலும், லக்ஸ் டாய்லட் சோப்பின் மனதை மயக்கும் பரிமளத் தையும் நான் மிகவும் விரும்புகிறேன்.''
இனிய மணத்துடன்
கூடிய இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தையும் வசீகரமாகச்செய்யும்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 246-172 TM

இனும்



எமது நெ. **501** கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும், இது மயிர்கள் உதிர்ந்துபோவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. **2—4—0;** **3** புட்டிகள் (பூரா முறை) ரூ. **5—15—0.**

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்டுவாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்டு வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (c.k.)

JULLUNDUR CITY. Pb.

1950-ல்

என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1950 க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய கட்டு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri
Swami Satnarayan Jotish Ashram

(C. K.) HOSHIARPUR.

விளம்பரத்தில் வள்ளுவர்

"சுகி"

திருவள்ளுவருக்குக் கொடுக்கும் பெருமைகளைப் பார்த்தால், அவரை ஓர் கற்பனை நிறைந்த கவி, சிந்தனை தேங்கிய சொல்லோவியன், கருத்துச் செறிந்த தத்துவ ஞானி என்பதாகக் கவிதைக்கும் கருத்துக்கும் ஐக்கியப்படுத்தாமல் மற்றக் காரியங்களில் வல்லவர் என்பதை அவர் தலையில் சுமத்துகிறார்கள். பெயர் பெற்ற யாரையும் அந்தத்துறையைத் தவிர மற்றத் துறைகளில் 'சூரன்' எனச் சமூகம் அழைக்கும். கம்பரைப் பெரிய வக்கீல் என்றும் இல்லை, சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியென்றும், அதெல்லாம் தவறு அவர் ஒரு ஆகாய விமானப்படை தளகர்த்தர் என்றும் போற்றுவதைப் பிரசங்கங்களில் பார்க்கிறோம். "கம்பரும் நகர சுத்தமும்" என்பது பற்றி ஒரு 'சானிட்டரி இன்ஸ்பெக்டர்' பேசினார். "கம்பரும் கவி குலுக்கும் வானரமும்" என்பதுபற்றி ஓர் பிராணி நூலாசிரியர் பேசினார். "கம்பரும் நீர் நிலையும்" என்பதைப்பற்றி ஒரு அணைக்கட்டு இஞ்சினியர் பேசினார்.

இப்படியாக, கம்பரைப் பல கோணங்களில் பார்த்து வந்த தமிழ் உலகம், கவிதைக்காக ரஸிக்காமல் தங்கள் தொழில் முறையோடு கம்பனை அணைத்துக்கொண்டு போகிறார்கள். மகா கவி கம்பருக்குப் பிடித்த யோகம்—இது யோகமா?—வள்ளுவருக்கும் பிடித்திருப்பதை ஓர் புத்தகத்தில் பார்த்தேன். புத்தகமென்றால் அது விளம்பரப் பட்டியல். ரயில்வே கால அட்டவணைபோல அந்தப் பட்டியல்தாரர்களுக்கு எதையாவது அச்சடிக்க வேண்டும். அந்த விளம்பரத்துக்கு அடியிலே குறள் போட்டிருந்தார்கள். வள்ளுவருடைய குறள் மாணிக்கங்கள் என்பதற்காக, அவர்கள் பொறுக்கினார்களா? மாணிக்கக் குறள் என்பதற்காக அச்சுக் கூலி அதிகம் கேட்கப்போகிறார்களோ? இல்லை; வள்ளுவர் குறளாக இருப்பினும், வண்டிமை விற்பனை விளம்பரமாக இருப்பினும் இரண்டுக்கும் ஒரே அச்சுக் கூலிதானே! ஷ விளம்பரங்களைத் தொகுத்தவர்கள் காலண்டர்களிலே பொன் மொழிகள், சிந்தனைச் சிதர்கள் அச்சடிப்பதுபோல, விளம்பரத்துக்கு அடியில் வள்ளுவர் வாய் மொழியைக் கொடுத்திருந்தார்கள். தெரிந்தோ தெரியாமலோ ஒரு சில வாய் மொழிகள் விளம்பரத்திற்கும் துணை புரிந்து புது மெருகிட்டன.

உடனே, "அடடா! வள்ளுவர் எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும்படியான தீர்க்கதரிசி. அவர் குறள் 1950-ஆம் வருஷத்திற்கும் பயன்படும். எந்தத்துறையில் உள்ளோரும் இதைப் பயன்படுத்தலாம். ஆகவே வள்ளுவர் ஓர் விளம்பரக் கவிஞர்" என்ற முடிவுக்கு வந்தேன். முடிவுக்கு வந்துவிட்டதைச் சில மேற்கோள்கள் விளக்கங்கள் மூலம் விளக்கி விட்டால் நீங்களே மற்றதைப் பயன்படுத்தலாம்.

வள்ளுவருக்குப் புதிய சிறப்புக்களை நம்முடைய ஆராய்ச்சியாளர்கள் கற்பிக்கிறார்கள். சமீபத்தில் வள்ளுவரை ஓர் விஞ்ஞானி என்று ஒருவர் சொன்னார். அதாவது முதல் குறள் இருக்கிறதே,

> அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு.

இதில் பகவன் — என்ற சொல்லை 'பகலன்' என இருக்கவேண்டுமென்றும், இந்த உலகத்திற்கே பகலன்—சூரியனே ஆதிகர்த்தா என்றும், இச்சூரியனே உலக சிருஷ்டிக்குத் தந்தை என்றும், ஆகவே, 'பகலன்' ஆட்டிவைக்கிறான் உலகத்தையென்று வள்ளுவர் சொல்லி விட்டதற்காக, அவரை ஓர் விஞ்ஞானி என்றும் சொன்னார். இந்த விஞ்ஞானப் புலவரை நான் கண்ட அட்டவணைப் பட்டியலில் விளம்பரப் புலவர் ஆக்கி இருந்தார்கள்.

> ஒன்ணுங்கிளாஸ் முதல் பி. ஏ. எம். ஏ. வகுப்புவரை எந்தப் பாட பாட புஸ்தகங்களும் எம் மிடம் கிடைக்கும்.
>
> தற்குறி பதிப்பகம்
> அஞ்ஞான புரி

என்ற முதல் பக்கத்து விளம்பரத்துக்கு அடியிலே இருந்த குறள் 'அகர முதலே......'

வள்ளுவர் "அ"வில் ஆரம்பித்து, தமிழ் மொழியில் கடைசி எழுத்தான "ன்"ல் முடித்திருப்பது தமிழில் உள்ள அகர வரிசையை நன்கு கற்றவர், கற்றுக் கசடற அதன்படி நிற்பவர் என்பதை ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். கடைசிப் பக்கத்து விளம்பரத்துக்குரிய குறளைப் பார்க்குமுன் இன்னும் சிலகுறள் விளம்பர விளக்கங்களைப் பார்த்து விடுவோம்.

> குரங்கு மார்க் குல்கந்து வாசனைத் திரவியங்கள் சரசமான விலைக்கு கிடைக்கும்
>
> குறிப்பு: தார் எண்ணை, பினைல் விற்பனையும் உண்டு

கற்றதனா லாய பயனென்கொல்
வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

விளம்பரக் கலையிலே வாலுக்கும் குரங்குக்குமுள்ள தொடர்பை என்ன வாகக் கையாண்டிருக்கிறார்கள் என்று வியந்துகொண்டிருக்கும்போது, ஸலூன் விளம்பரம், மயிர்க் கூச்செறியவைத்தது. முடி சிங்காரிக்கும் அலங்காரக்கூடம் நம் கண்ணைக் கவர்கிறது. எப்படியெப் படி நமக்குத் தலை திருத்தப்படும், சிகை குறுக்கப்படும் என்ற சிரம் சீவும் விளம் பரம் செய்திருந்ததற்கு அடியிலே உள்ள குறள் :—

மழித்தலும் நீட்டலும் வேண்டா
உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

துறவறத்தை வள்ளுவர் 'மழித்தலும் நீட்டலும் வேண்டாம்' எனக் குறிக்கப் போக, இங்கே ஸலூனுக்கு மாற்றிக் கொண்டார்கள், விளம்பர நிபுணர்கள். அடுத்தபடியாக சினிமாவிலே தாஸிகள், கெட்டுப்போகும் காதலிகள் பாகத்தைத் திறம்பட நடிக்கும் ஓர் பெண் மணியின் படத்தைப்போட்டுவிட்டு அதற்கடியில் பொய்யாமொழிப் புலவருடைய இக் குறளையும் போட்டுவிட்டார்கள்.

தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

இந்த மாதிரி வள்ளுவர் குறளை விளக் கம் செய்ய விளம்பரம் சேகரித்தார் களா, இல்லை விளம்பரத்திற்கு விளக்க மாகக் குறளைத் தேடிப் பிடித்தார்களா எனச் சிந்தனையில் ஆழ்ந்த போது

செயற்கரிய செய்வார் பெரியர்,
சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

என்னுங் குறள் கண்ணை உறுத்திற்று. ரொம்பவும் உயர்வான தத்துவம் நிறைந்த குறள். செய்வதற்கரிதான விஷயம் உலகில் பலவாக இருக்கின்றன. மகான்கள் செய்யக்கூடிய காரியங்கள், தொண்டுகள் எல்லோரும் செய்துவிட முடியாது. இவ்வளவு அற்புதமான குறள் எந்த விளம்பரத்துக்கு அடியில் இருந்தது தெரியுமோ?

> தமிழ் நாட்டிலும் வட நாட்டிலும் வெளி நாட்டிலும் பிரசுரமான ஆகப்போகும் சகல பழைய பேப்பர் பிரதிகளும் எம்மிடம் கிடைக்கும்.
>
> பழைய பேப்பர் பையர்
> அண்டு செல்லர்

செயற்கரிய செய்வார் காரியத்தை எவ் வளவு சுவையுடன் செய்துவிட்டார்கள் விளம்பரதார்கள். "இடுக்கண் வருங் கால் நகுக" என்ற வள்ளுவர் மொழியை, மதுரைக்கும் மானா மதுரைக்கும் போகும் ரயில்வே கால அட்டவணை விளம்பரத் துக்கு அடியிலே பொறித்திருந்தார்கள். ரயில் பிரயாணத்தில் ஷி ஸ்டேஷன் களுக்கு ஊடாக என்ன விதமான இடுக் கண் நேரிடுகின்றதோ, அதைச் சிரித்துச் சமாளிக்க அந்த லைனில் தானா போக வேண்டும்? அல்ல, இந்த விளம்பரதார்,

மதுரைக்கும் மானமதுரைக்கும் ஓடும் ரயில் வண்டிகளின் கால அட்டவணை கொடுப்பதே வியாபார விளம்பர நோக்கம். வள்ளுவர் எழுதிய 1330 குறளில் ஏதேனும் ஒரு குறள் மதுரைக்கும் மானமதுரைக்கும் அடியிலேவர வேண்டும். அப்படி வந்த பெருமை 'இடுக்கண்' ணுக்குக் கிடைத்தது.

'இடுக்கண்' மதுரைக்கும் மானமதுரைக்கும் போகும் கால அட்டவணை அடியில் அகப்பட்டதுபோல, 'தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் ஆற்ற இனிதே' என்ற கருத்து அமைந்த குறளைப் பழனி பஞ்சாமிர்தத்திற்கும் வாசனை விபூதிக்கும் அடியில் கொடுத்திருந்தார்கள். பழனி விபூதிக்கும் பஞ்சாமிர்தத்திற்கும் அடியிலே 'ஒருவனுக்குணவில்லையெனில் அவனைப் படைத்தானே கடவுள் அவன் தலையைக் கொய்துவிடுவோம்' என்ற கருத்தமைந்த குறளைப் போடாது போனது பாக்யமே.

இன்சூரன்ஸ் அவசியத்தை விளக்கிய ஒரு கம்பெனி விளம்பரத்திற்கு அடியிலே வந்த குறள்

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

சாவுக்கும் பிறப்புக்கும் தொந்தமுண்டு என்று சிரித்தபடியே மறு பக்கம் பார்த்தால்

ரிவால்வர் பெரிய துப்பாக்கி
லைசென்ஸ் மருந்துகள் விற்பவர்கள்

கரு மருந்து வியாபாரிகள்
கல்லுக்கட்டி, காரைக்கட்டி

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனுஞ் சொல்'

அடாடா வள்ளுவர் தகப்பனுக்கும் பிள்ளைக்கும் கொடுத்த ஐக்கிய பாவத்தைத் துப்பாக்கி, ரிவால்வர் வியாபாரிகள் சுட்டுத் தள்ளுகிறார்கள்.

'துப்பார்க்குத் துப்பாய துணை மழை' அடியிலே பித்தளைப் பாத்திரங்களையும் எவர்சில்வர் பாத்திரங்களையும் வைக்கிறார்கள்.

கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்

என்ற குறளுடன் மேலாக ஜவுளி வியாபாரக் கடையின் விளம்பரம். முகத்தில் கண் உடையோர் பார்க்க வேண்டிய சினிமாவும், மானம் வரின் உயிர் நீப்போர் வாங்க வேண்டிய சிகைக்காய்ப் பவுடரும், சான்றோன் எனக் கேட்டதாய் உபயோகம் செய்யவேண்டிய ஸ்னோவும், உழுதுண்டு வாழ்வார் தொழுதுண்டு செல்ல வேண்டிய புகையிலையும், கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின், பற்களைக் காட்டி வேண்டிய டாக்டரின் விலாசமும், பிறவிப் பெருங்கடல் நீந்துவார் வாங்க வேண்டிய பெருங்காயமும இன்னோரன்ன.

வள்ளுவருக்குப் பிரசாரம் செய்கிறோம் என்ற நினைப்பில் விளம்பரத்துக்குள் குறள் எழுதுவது அபத்தம். அத்தனையும் ரஸாபாஸம். இது எப்படி இருக்கிறது என்றால்

தலையில் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

என்ற குறளைப் போலவே. குரங்கை நினைத்துக் கொண்டு மருந்து சாப்பிட்டவன் கதையாக வள்ளுவர் தந்த தத்துவத்தைப், பொருட்செல்வத்தை, கவிதைச் சிறப்பை மறந்து அக்குறள்களை விளக்கம் கேட்கும்போதும், படிக்கும்போதும் மேற்சொன்ன விளம்பரப் பொருள்களே நினைப்பு வரும். கவிதைக்குரிய அலங்காரமும்பண்பும் போய், வெறும் போலிப் பொருள்களில் எண்ணம் பதிந்து வர வர ரஸிகத் தன்மையை இழந்து விடுவோம்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ் நாட்டில் தான் இப்படிப்பட்ட பிரசாரங்கள் நடமாடுகின்றன. இம்மாதிரி வள்ளுவர் தமது கவிதைகள் கருத்துக்கள் சீரழியும் என்பதைக் கண்டாரா? ஐயோ அப்பாவி, அவருக்கு நன்கு வேண்டும். 'கனி இருப்பக் காய் கவர்ந்தற்று' என்றாரே, அதே கதை தான் அவருக்கும் நடைபெற்று வருகிறது. ●

காவேரியின் கலக்கம்

ஏ. எஸ். ராகவன்



வெளிறிய ஆகாயத்தையும், எதிரே மணற் பரப்பிடையே கொந்தளிக்கும் பொன்னி ஆற்றையும் ஒருமுறை பார்த்துவிட்டுப் பெருமூச்சுவிட்டான் கிழவன் பெரிய கறுப்பன்.. அவனுடைய உள்ளத்தின் அடித் தளத்திலிருந்து புறப்பட்ட வெம்மைக் காற்று

படபடப்புடன் வெளியே வரும்பொழுது அவன் முகத்தில் வளைந்து சுருண்டு நின்ற வெள்ளை மீசையை ஒருதடவை ஆட்டிவிட்டு வந்தது, உள்ளத்தின் படபடப்பை ஓரளவு உணர்த்தும் நிலையில்.

அவன் எதிரில் அமர்ந்தபடி தரையில் கைகளால் ஏதேதோ கோடுகளை வரைந்துகொண்டிருந்தாள் ஒரு பெண். அவள் தலை கவிழ்ந்திருந்தது. ஆனால் அந்த நிலையிலும் அள்ளிச் செருகிய கட்டுக்கடங்காக் கருங்கூந்தல் அவள் பேரழகி என்று அறிவுறுத்தியது. வார்த்தைகள் தடுமாறியபடி வெளிவர, "அப்பா...... அதை நீங்க ஏன் மொதலேயே சொல்லலை?... வைக்கல் போரில் பூராவாக நெருப்புப் பத்திக்கிட்டு எரியும்போது எப்படி அணைக்கமுடியும்?...... என் மனசு வெடிச்சிடும் போல இருக்குது... தயவு செய்து என்னைக் கொஞ்ச நேரம் தனியா விடுங்கள்" என்று அழுதாள். கண்களில் நீர் சுரந்தது. ஆனால் தான் அழுவது தகப்பனுக்குத் தெரியக்கூடாது என்ற எண்ணம் போலும்! முகத்தை வேறு புறம் திருப்பிக்கொண்டாள்.

ஆனால் கிழவனுக்கா தெரியாது? காலம் அவன் உடலில் தளர்ச்சியையும், அர்த்தமற்ற கீறல்களையும் எழுதிவிட்டிருந்தாலும், அந்த உள்ளத்தை — கிழ ஜீவனின் வயதோடு வளர்ந்துவிட்ட அனுபவமுள்ள ஆத்மாவை— ஒன்றும் செய்யமுடியாதே!

"அழாதே, காவேரி, நீ அழுது நான் பார்க்கச் சகிப்பேனா?... என் வாழ்க்கையை இது நாள்வரை உனக்காகவே தானே ஓட்டிவந்தேன்... என் உயிர் அல்லவா நீ?... இதோ எதிரே ஓடும் காவிரி என் ஒரு ஜீவன், மற்றொன்று நீ..." என்று தழுதழுத்த குரலில் கூறிய கிழவன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பிறகு மீண்டும், "இப்படி நேருமென்று கனவில்கூட நான் நெனைக்கிலை...அது அவன் விருப்பம்போலிருக்குது...அப்படியானல் நீ சின்னனை மறந்துட வேண்டியதுதான்...அவன் இனிமேல் உன் அண்ணன் தான்" என்றான்.

காவேரி ஒன்றும் பேசவில்லை. பொத்துக்கொண்டு வெளிப்படும் நீராவி போலக் கண்ணீர் மட்டும் அருவியாக ஓடிக்கொண்டிருந்தது, பேதை. அவள் என்னசெய்வாள்! அந்தச் செய்தி சாமான்யமானதா என்ன?

கிழவனுக்கு ஒரு கணம் எல்லாம் பிரமையாய் இருந்தது. அவன் இப்படித் தள்ளாத வயதில் குடிசையே கதியாய்க் கிடப்பதும் ஒரு பிரமைதான். அந்தக் காலத்தில் குமரனாக இருந்த பெரியகறுப்பன் இந்தப் பொன்னி ஆற்றையே அரசாண்டு வந்தான், கோலைக் கையில் பிடித்துவிட்டால் படகு சொன்னபடி கேட்க வேண்டும். அத்துடன் பாட்டு வேறு. நிலாக் காலமாயிருந்தால் கேட்கவேவேண்டாம், ஒரே கொம்மாளம். எவ்வளவு மடுவானல் என்ன, எவ்வளவு பெரிய சுழலானல்தானென்ன, பெரியகறுப்பன் படகோட்டும்வரை கவலையே கிடையாது என்ற நம்பிக்கை ஜனங்களுக்கு. இன்று அவன் ஸ்தானத்தை ஆக்ரமிப்பவன் ஒரே ஒருவன்தான். அவன்தான் சின்னன், மற்றப்படி முன்பு ஒரே ஒரு குடிசை இருந்த இந்தத் திடலில் இப்போது பத்துப் பன்னிரண்டு குடிசைகள், எல்லோரும் இந்தக் காவேரி நதியை அண்டித்தான் வாழ்கிறார்கள். காவேரியும் அவர்களைக் காப்பாற்றாமல் விடுவதில்லை.

"அப்பா...நான் இப்படியே வெளியே போய் வாறேன்..." என்று கூறிவிட்டு எழுந்து நடந்தாள் காவேரி. ஜீவனற்ற அவளுடைய நடையையே கவனித்த கிழவன் பெருமூச்சு விட்டான். அந்த இளம் உள்ளம் சுக்கு நூறாக அல்லவா ஆகிவிட்டது?

வெகு தூரம் நடந்தாள் காவேரி. கிழவனுக்கு அவள் உருவம் ஒரு புள்ளி போலத் தெரிந்தது. கிழவன் நிராசையுடன் குதிபோட்டு ஓடும் ஆற்றைப் பார்த்தான். பிறகு லேசாகச் சிரித்தான். "காவேரித் தாயே, நீ இருக்கும்வரை எனக்கு ஒரு கவலையும் இல்லை... இத்தனை நாள் வாழும் வகையைக் காண்பித்து வந்தாய்...இப்போது நீ என்னை உன்னேடு சேர்த்துக்கொண்டு விடு. அந்த வழியும் நீ எனக்குக் காட்டுகிறாய்" என்றான். உடனே கிழவனுக்குக் காமாட்சி மடுவின் ஞாபகம் வந்தது. அப்பா! அது எவ்வளவு ஆழமான மடு. அங்கு மாண்டவரின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. அவ்வளவு சுழற்சி, அவ்வளவு கவர்ச்சி!

மடு என்றதும் கிழவனுக்குப் பழைய ஞாபகங்கள் வந்துவிட்டன. அங்கேதான் அவனும் தன் இளம் சிறுவனைப் பலி கொடுத்தது. அன்று ஆடி பதினெட்டு. காவேரி நொப்பும் நுரையுமாக எக்களிப்புடன் ஓடிக்கொண்டிருந்தது. பெரியகறுப்பன் அப்போதுதான் ஒரு மகனுக்குத் தகப்பனாக ஆகியிருந்தான். இளம் மனைவியின் பராமரிப்பில் அவன் ஒரு காளை போல இருந்தான். மிட்டாதார் வீட்டுக்கு அன்று உல்லாசப் படகு ஓட்டினான். பாட்டு பிறந்துவிட்டது, மிட்டாதார் பட்டைச் சரிகை வேட்டி, ஒரு வெற்றிலைப் பெட்டி இரண்டும் சன்மானமாகத் தந்தார். பெரிய கறுப்பன் குஷாலாக வீட்டுக்கு வந்தான். ஆனால் அங்கே வயிற்றைக் கலக்கும் சேதி காத்திருந்தது அவனுக்கு? அவனுடைய மகன் — அருமையான செல்வச் சிறுவன்—எங்கோ காணோம்! வலை வீசாத இடம் பாக்கியில்லை. கடைசியில் அந்தப் பொல்லாத காமாட்சி மடுத்தான்

விழுங்கிவிட்டது என்ற தீர்மானத்துக்கு வந்தான் பெரியகறுப்பன். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு, பழைய துக்கம் மறையும்வகையில் காவேரி பிறந்தாள். ஆனால் கொஞ்ச காலத்திற்குள் தன் மனைவியை இழந்தான் பெரிய கறுப்பன்!

அதெல்லாம் ஒரு கதை போல. இன்றோ கிழவனுக்கு மகன் கிடைத்துவிட்டான். மடுவிலே மாண்டு மறைந்துபோன மகன் திடுமென்று பருவக்காளையாக அவன் முன் நிற்கிறான். இந்த விசித்திரத் தகவலை வீராண்டி கொடுத்தான். வீராண்டி பழுத்தகிழம், அந்திய காலத்தின் அழைப்பிதழ் அவனுக்கு வந்துவிட்டது. இன்றைக்கோ, நாளைக்கோ என்று தவிக்கும் அந்தக் கிழஆத்மா, தான் சாகும் போது இந்தப் பெரிய ரகசியத்தையும் உடன் கொண்டு செல்ல விரும்பாதது போல, அதை அப்படியே ஒப்படைத்துவிட்டது பெரிய கறுப்பனிடம். சாதாரண சமயமாயிருந்தால் கிழவன் துள்ளிக் குதிப்பான். ஆனால் இப்போழுதோ? காவேரியும் சின்னானும் கணவனும் மனைவியுமாக ஆகப் போவதைக் கனவு கண்டு, களியோடு கூத்தாடும் வெண்ணிலவில் கருமேகம் போல அல்லவோ இச்செய்தி படர்ந்துவிட்டது!

"மாமா!......" என்றகுரல் கேட்டு, கிழவன் திரும்பினான். அங்கே சிரித்த முகத்துடன் சின்னான் நின்று கொண்டிருந்தான்: அவன் கண்கள் மட்டும் சலனமிட்டுக் குடிசையினுள்ளும், வெளியிலும் காவேரியைத் தேடிக் கொண்டிருந்தன. "அப்பாடா! இந்தப்படகு தள்ளறத்துக்குள்ளே தாவு தீந்து போவுது, மாமா! இன்னிக்குத் தண்ணி சாஸ்தி வேறே" என்று கூறிக்கொண்டே மணலில் உட்கார்ந்தான்.

கிழவன் அவனையே கூர்ந்து நோக்கினான். அடுத்தகணம் தூக்கமுடியாத சுமையைத் தூக்கி வந்ததால் வெடித்துவிட்ட லாரியின் டயர்போல ஒரு பெருமூச்சுப் பீறிட்டது வெளியே. "சின்னு!" என்று அழைத்தான்.

சின்னான் விழித்தபடி நோக்கினான்.

"நீ காவேரியை மறந்துவிட வேண்டியதுதான்."

திடீரென்று தண்ணீருக்குள்ளிருந்து ஒரு திமிங்கலம் தன் படகை அடித்துக் கவிழ்த்துவிட்டது போன்ற பிரமை உலுக்கியது சின்னானை. ஆயிரம் தேள்கள் ஒரே காலத்தில் கொட்டி விட்டது போன்ற வலி. கண்கள் சுழல, வாய் தடுமாற, "என்ன சொல்றீங்க, மாமா?" என்று கேட்டான்.

அவனுடைய தடுமாற்றத்தைக் கண்டு மனம் வருந்திய கிழவன் அவன் தோள்மீது தன் கைகளை வைத்தான். அவனையே கூர்ந்து நோக்கினான். சின்னான் எவ்வளவு அழகாக இருக்கிறான், அந்தக் காலத்தில் பெரிய கறுப்பன் இருந்ததைப் போல!......

"சின்னு, நீ என் மகன்..." என்றான் கிழவன்.

"என்ன?..."

"ஆம், உன்னை ஐந்தாவது வயதில் இழந்தேன், பதினெட்டாம்பெருக்கில் நீ துலைந்து போனாய். அந்தக் காமாட்சி மடுதான் உன்னை விழுங்கிவிட்டது என்று எண்ணினேன்... ஆனால் நீ இப்போது எனக்குக் கிடைத்துவிட்டாய். ஆனால்...ஆனால்..." கிழவன் மேற்கொண்டு பேச முடியாமல் தத்தளித்தான். நீர் ஆறாக வழிந்தது கண்களின் வழியாக. சின்னானை அணைத்துக்கொண்டு அவனுடைய எண்ணெய் வழியும் கிராப்புத் தலையை வருடினான் கிழவன்.

சின்னானுக்கு ஒன்றும் புரியவில்லை. திடீரென்று ஒரு மின்னல், அதைத் தொடர்ந்து இடி. அதன் பலனாகக் கண் போயிற்று என்பது போன்ற திடுக்கிடும் செய்தியாக இருந்தது இது. வீராண்டியிடம் இவ்வளவு நாள் வளர்ந்த சின்னான் இன்று பெரியகறுப்பனின் மகனாக மாறிவிட்டான்.

"இது நெசந்தானா?"

"ஆமாம்...வீராண்டிதான் இதைச் சொன்னான்" என்றான் கிழவன்.

பிரமை கொஞ்சம் நீங்கிற்று சின்னானுக்கு. வீராண்டி கூறிய இத்தகவல் நிச்சயம் பொய்யாக இருக்காது. சிறு வயது முதல் தன் மகன் போல வளர்த்த வீராண்டி இத்தனை நாள் இந்த ரகசியத்தை ஏன் மறைத்து வைத்திருக்க வேண்டும்? இதில்தான் ஏதோ விசேஷமிருக்க வேண்டும். ஆனால் அநாவசியமாக வீராண்டி பொய்கூறியிருக்க அவசியமே இல்லை, ஆகவே அந்தச் செய்தி நிஜம்தான். அப்படியானால் காவேரி – இனிமேல் அவன் தங்கை!...ஆம், இனி அவனுடைய நலனுக்காக அவன் பாடுபடவேண்டும். வேறு எந்த எண்ணமும் கூடாது!

"மாமா......இல்லை......அப்பா! காவேரி எங்கே?" என்று கேட்டான் சின்னான் கடைசியில்.

கிழவன் முதலில் தடுமாறினான். "இதோ இந்தப் பக்கம் போச்சு" என்றான் கடைசியில்.

சின்னான் அந்தத் திசையில் நடக்க ஆரம்பித்தான், வானத்தில் சந்திரன் உதயமாகிவிட்டான். நிர்மலமான அதன் ஒளியில் இப்போது ஒரு ஜீவனும் இல்லை. அதன் ஒளி பட்டு மின்னும் காவிரியின் நீர்கூட ஏதோ கலவரத்துடன் ஓடிக்கொண்டிருப்பது போலத்தான் காணப்பட்டது. நன்றாகப் பழுக்கக் காய்ச்சின இரும்பை தண்ணீரில் போட்டதும் ஏற்படும் கொந்தளிப்பில் சின்னானின் உள்ளம் தத்தளித்துக்கொண்டிருந்தது.

எவ்வளவு தூரம் நடந்தானோ தெரியவில்லை. கால்கள் வலி எடுக்க ஆரம்பித்ததும் தான் நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். சந்திரன் இப்போது மறைந்துவிட்டிருந்தது. எங்கும் நிசப்தம். தவளைகள் மட்டும் பாராக்காரர்கள் போலக் குரல் கொடுத்துக்கொண்டிருந்தன,

சின்னானுக்கு இப்போது எங்குப் போவது என்ற கவலையோ பிரமிப்போ கிடையாது. இப்படியே காவிரியுடன் நடந்துசென்று அது ஐக்யமாகும் இடத்தில் அவனும் கலந்துவிடத் தயார்.

சிறிது சிறிதாக அந்த இடம் அவனுக்குப் பழகிய இடமாகத் தோன்றியது. ஆம், அது அவனுடைய மாமனின் ஊர். அதாவது வீராண்டியின் மைத்துனன் குடியிருந்தது. இப்போதோ வீராண்டியின் உறவு மாறிவிட்டாலும் பழைய பிணைப்பு அவ்வளவு சிக்கிரம் அறுந்துவிடுமா என்ன?

நடு இரவில் தன்னந்தனியே விரித்த தலையுடன் வந்த சின்னானைக் கண்டதும் ஆச்சரியமடைந்தான் மாமன். "வாப்பா, சின்னு! ஏது இந்த அர்த்த ராத்திரிலே?...... அப்பனுக்கு உடம்பு எப்படி இருக்கு?" என்று கேட்டான்.

சின்னானுக்கு அப்போதுதான் வீராண்டி காயலாகப் படுத்து அபாயகரமான நிலையில் இருப்பது நினைவுக்கு வந்தது. "ஏதோ தோணிச்சு வந்தேன்... வந்து... அப்பனுக்கு உடம்பு தேவலை" என்றான்.

"அங்கே அப்படி இருக்குது! நீ புறப்பட்டு வந்திட்டியே?... சரி, உள்ளேபோய்ச் சாப்பிடு. காலையிலே பேசிக்கலாம்..." என்றான்:

சின்னான் சாப்பிட்டுப் படுத்தான், உடம்பை வலித்தது, தலை கனத்தது, அந்த உடல் நிலையில் மனமோ குழம்பித் தத்தளித்தது.

காலையில் "எளுந்திரு, சின்னு!" என்று மாமன் எழுப்பியதும்தான் கண் விழித்தான் சின்னான். ஆனால் அவனால் எழுந்திருக்க முடியவில்லை. கண்கள் இருண்டன. "மாமா, என்னால்...ஒண்ணும் செய்ய முடியல்லியே!..." என்று குழறினான்.

மாமன் குனிந்து அவன் உடலைத் தொட்டுப் பார்த்தான். "ஐயோ! உடம்பு அனலாய்க் கொதிக்குதே!..." என்றான். பிறகு பரபரப்புடன் வைத்தியருக்கு ஆள் அனுப்பி மருந்து வாங்கிக் கொடுத்தான்.

சின்னான் தன் உடல் நிலையைப்பற்றிக் கவலைப்படுவதற்குப் பதிலாக ஆனந்தமாக இருந்தான். இவ்வுலக வாழ்க்கையிலிருந்து சிக்கிரம் விடுதலை கிடைத்துவிடும் அல்லவா?

* * * *

வீராண்டிக்கு இன்றைக்கோ நாளைக்கோ என்றிருந்தது. வரவர அவனால் பேசக்கூட முடியவில்..., தொண்டையில் ஏதோ அடைத்துக்கொண்டது போலிருந்தது.

அவன் படுக்கை அருகில் பொன்னு உட்கார்ந்திருந்தான். பெற்ற மகனானாலும் சின்னானுக்கு ஈடு ஆகுமா இந்தப் பொன்னு என்று கிழவன் எண்ணினான் போலும்! கிழவனின் கண்கள் நாலாபுறமும் யாரையோ தேடின. சின்னான் அருகில் இல்லையே என்ற ஏக்கம் வினாடிக்கு வினாடி அவனைப் புல்லரித்தது. அதே சமயம் புரிபடாத ஏக்கம், தான் இவ்வுலகத்தை விட்டுப்பிரிந்து செல்லவேண்டிய யாத்திரையின் கஷ்டம் எல்லாம் அவனை ஒடுக்கிக்கொண்டிருந்தன.

பெரியகறுப்பன் தள்ளாடித் தள்ளாடி வீராண்டியின் படுக்கையண்டை வந்தான். அவனைக் கண்டதும் வீராண்டியின் கண்கள் ஒரு வினாடி அப்படியே விறைத்து நின்றன, வாய் குழறியதற்கறிகுறியாக உதடுகள் அசைந்தன. அந்தக் கடைசி நிமிஷத்தில் அவன் என்னென்ன விஷயங்களைக் கூற வேண்டும் என்று எண்ணினானோ!

பெரியகறுப்பன் தன் குடிசையை அடைந்தபோது அங்கு காவேரி ஏதோ பாட்டை முணுமுணுத்துக்கொண்டிருந்தாள். இப்பொழுதெல்லாம் அவளுடைய நடத்தையில் புரியாத கலவரம், அர்த்தமற்ற தன்மை புகுந்துகொண்டுவிட்டது.

கிழவன் அவளருகில் சென்று தலையை வருடினான். சொரிந்து கொடுத்ததும் அதிகச் சுரப்புக் கொடுக்கும் பசுப்போல அது அவளுக்கு அதிக கண்ணீரைத்தான் வரவழைத்தது.

"மாமா!" என்ற கரகரத்த குரல் குடிசையின் வெளிப்புறமிருந்து வந்தது.

கிழவன் வெளியே பார்த்தான். அங்கே பொன்னு நின்றுகொண்டிருந்தான். உடலில் புது ஆடை, வாயில் வெற்றிலைக் காவி—இவற்றுடன் மாப்பிள்ளை போலக் காட்சி அளித்தான் அவன்.

தகப்பனை அந்த நிலையில் விட்டுவிட்டு இவன் வந்துவிட்டானே, என்ன விசேஷமோ என்ற கவலையுடன் கிழவன் வெளியே வந்தான்.

பொன்னு சிரித்தான். கிழவன் அவனையே ஆச்சரியத்துடன் பார்த்தான். சிரிப்பதற்கு என்ன இருக்கிறது இப்போ?

"என்ன விசேஷம் தம்பி?" என்று கேட்டான் கிழவன்.

"விசேஷம்தான், மாமா!... உங்களைத் தனியாக் கேக்கணும்னு நெனச்சுக்கிட்டிருந்தேன். இப்போதான் முடிஞ்சுது.," என்று பல்லைக் காட்டியபடியே கூறினன் பொன்னு.

கிழவனுக்கு அவன் என்ன சொல்கிறுன் என்றே புரியவில்லை.

"காவேரியின் விசயமாத்தான்...சின்னுன் தான் உங்க மவனுயிட்டானே... அதனுலே எனக்கே அவளை..."

பொன்னு அதற்குமேல் பேசவில்லை, கிழவன் கடகடவென்று சிரித்தான். அந்தச் சிரிப்பில் அருகிலிருந்த பூவரசமரம்கூடக் கலந்து கொள்வதுபோல லேசாக அசைந்தது. பொன்னி ஆறு லேசாக நழுவிக் கொண்டிருந்தது பாறையின் மீது.

சிரித்தபடியே குடிசைக்குள் நுழைந்தான் கிழவன். காவேரி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனுல் கிழவன் மட்டும் சிரிப்பதை நிறுத்தவில்லை.

பொன்னுவுக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது நேரம் அங்கேயே நின்றுன், பிறகு விர்ரென்று விட்டை நோக்கி நடந்தான்.

*   *   *   *

சின்னுனுக்கு உடல் நிலையில் அபிவிருத்தி ஏற்படவில்லை, மாமனுக்குக் கவலை புகுந்து கொண்டது. ஐயோ! சின்னுன் ஒரு வேளை இந்தக் காய்ச்சல் காரணமாக இறந்துவிட்டால்? பெற்றவர்களுக்கு அவன் என்ன பதில் சொல்வான்? ஆகவே ஆள் அனுப்பினுன் வீராண்டிக்கு.

பாதி வழி தூரம் சென்ற பிறகு அந்த ஆள் மற்ருெரு புது ஆளுடன் திரும்பி வந்து சேர்ந்தான், அந்தப் புது ஆள் வீராண்டி இறந்த தகவலைக் கொண்டு வந்தான்.

மாமன் அழுதான். சின்னுனுக்கும் அழுகை வந்து விட்டது. என்ன இருந்தாலும் அன்புடன் வளர்த்த தந்தையல்லவா வீராண்டி?

தன் தங்கை விதவைக் கோலத்துடன் நிற்கும் காட்சி உலுக்கியது மாமனை. உச்சஸ்தாயியில் கதற ஆரம்பித்தான் அவன். "அடி ஆத்தா, ஊரார் பிள்ளையை எல்லாம் கட்டிக் காத்தாயே! இப்போ நீயே நிர்க்கதியாய் நிற்கும்படி ஆச்சே......!" என்று அழுதான்.

சின்னுனை இந்த வார்த்தைகள் உலுக்கி விட்டன. மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்தான். "மாமா! இப்ப 'ஊரான் பிள்ளை' என்று சொல்லி அழுதீர்களே! யாரைப்பற்றிச் சொன்னீர்கள்?" என்று கேட்டான்.

மாமன் சிறிது அழுகையை நிறுத்திவிட்டு, "யாரைப்பற்றிச் சொன்னுல் உனக்கென்ன?... நீ தூங்கு, சின்னு!" என்றுன்.

சின்னுன் விடவில்லை, "சொல்லுங்கள், மாமா! அந்த வியாதிதான் என்னைக் கொல்லுது" என்றுன்.

மாமன் சொல்ல ஆரம்பித்தான், "எனக்கு ஒரு மைத்துனன் இருந்தான், சிறு வயசு, நல்ல சம்பாத்தியமும்கூட. அவனுக்கேத்தாப்பலே நல்ல அளகான பொண்சாதியும் அமைஞ்சா அவனுக்கு. ஆனு, அந்த ஜோடியை பாத்து கடவுளுக்கு பொறுக்கல்லே...... அவனை சிக்கிரமே தன்கிட்ட சேத்துக்கிட்டாரு. புருசன் போனபிறகு அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அடேடே, மறந்துவிட்டேனே! அவர்களின் பிள்ளைதான் நீ... அவ பைத்தியத்திலே கண்டபடி பேசுவா, பாயைக் கிளிப்பா... ஒரு சமயம் உன்னைக்கூடக் கிணத்திலே எறியத்தெரிஞ்சா...அதனுலே உன்னை வீராண்டிகிட்ட அனுப்பினேன்," என்றுன்.

சின்னுவுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. வீராண்டி கூறிய தகவல் – அதாவது பெரிய கறுப்பனின் மகன் அவன் என்பதுகூடப் பொய் தான். அப்படியானுல் காவேரி அவன் தங்கை அல்ல!

தன் உடலில் புது ஆவேசமும், சக்தியும் பாய்வதை உடனே உணர்ந்தான் சின்னுன். படுக்கையிலிருந்து எழுந்து மாமனிடம் வந்தான். "உடனே புறப்படலாம், மாமா" என்றுன்.

"என்ன?... இந்த உடம்போட நீயும் வர்ரியா?" என்று கேட்டான் மாமன்.

"எனக்கு உடம்பு சரியாப்போச்சு, மாமா!" என்ருன் சின்னுன் சிரித்தபடியே,

* * * *

காவேரி எப்பொழுதும் அழுதுகொண்டே இருந்தாள். காவேரி ஆற்றின் நீர்கூட நிதானமாக சுவாரசியமில்லாமல் ஓடிக்கொண்டிருந்தது. கிழவன் எப்போதும் காவிரிக்கரையிலேயே உட்கார்ந்து பழைய சிந்தனைகளில் ஊறிக்கிடந்தான். இருவரும் சரியானபடி சாப்பிடுவதில்லை, எதுவும் பேசுவதுமில்லை.

ஆனல் பெரியகறுப்பன் சும்மா இருக்கவில்லை. காவேரிக் கரையில் அமர்ந்தபடியே ஆற்றின் சுழலையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான் அவன். அதோ தெரிகிறது காமாட்சி மடு! கரையிலிருந்து முப்பது கஜ தூரத்தில். அந்த இடத்தை மட்டும் அடைந்து விட்டால்... பிறகு அமைதி. நிரந்தர அமைதி!

கிழவன் ஏதோ யோசனையுடன் வீட்டிற்கு வந்தான். "காவேரி!" என்று அன்பொழுகக் கூப்பிட்டான். கலைந்த தலையும், அழுக்கடைந்த உடையும் அணிந்து பிச்சைக்காரப் பெண் போலத் தோற்றமளித்த காவேரி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"நான் படகு ஓட்டறேன்... நீ வர்ரயா?" என்று கிழவன் கேட்டான்.

காவேரி பதிலே பேசவில்லை.

கிழவன் மட்டும் லேசாகச் சிரித்துக்கொண்டான். ஒரு விஞடி அவன் படகு ஓட்டினல் எப்படி இருக்கும்? என்ற சிந்தனை. நடுங்கும் கைகள், உடலில் எலும்புதான் தோற்றமளிக்கிறது—இந்த நிலையில் படகு எவ்வளவு தூரம் ஓடும்?

காவேரி அவன் பின்னலே நடந்தாள். கிழவன்மட்டும் தைரியமாகவே புறப்பட்டுவிட்டான், அமைதியை எவ்வளவு சீக்கிரம் பெறலாமோ, அவ்வளவு சீக்கிரம் பெற.

இருவரும் படகில் ஏறினர். கிழவன் கோலைப் பிடித்தான். ஆசை அவனை அமுக்கிற்று. அவன் கோலை அமுக்க முயற்சிசெய்தான். ஆனல் அது நழுவிற்று. இருந்தாலும் அவன் விடவில்லை, உறுதி தளராமல் கோலைச் செலுத்தினன். சரளைக்கல்லில் கோல் பாவாமல் புரண்டது.

தான் எங்கே போகிருள் என்ற கவலையே இல்லை காவேரிக்கு. எங்கே போனல்தான் என்ன? எல்லாம் ஒன்றே. அவள் மனம் அப்படிக் கலங்கி விட்டது.

படகு மெள்ள நகர்ந்தது. காற்றும் சுமாராக வீசியது. பத்துக் கஜம் சென்றுவிட்டது. இன்னும் இருபது கஜம்தான், அதோ சுழி எக்காளமிட்டு வட்டமிடுகிறது! அதன் மடியில் தங்கி விட்டால், எல்லா வியாதிகளுக்கும், கவலைகளுக்கும் நிரந்தர விடுதலை கிடைத்து விடும்,

"காவேரி!...மாமா!"என்ற குரல் பிய்த்துக் கொண்டு வந்தது. கிழவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கரையில் சின்னுன் நின்று கொண்டிருந்தான், எலும்பும் தோலுமாக!

கிழவன் பரபரப்படைந்தான். தன் உறுதி நழுவிவிடக் கூடாதே என்ற கவலை. சின்னுன் ஆண் பிள்ளை, எப்படியும் பிழைத்துக் கொள்வான். ஆனல் பேதைப்பெண் காவேரி இனித் தன் வாழ்க்கையை எப்படிச் சந்தோஷத்துடன் ஏற்று நடத்தப் போகிருள்! ஆகையால் அவளுடன் மடுவில் ஐக்யமாகி விடுவதே சிறந்தது. இந்த உறுதியை வலுப்படுத்தப் பெரிய கறுப்பன் கோலை வேகமாகச் செலுத்த ஆரம்பித்தான்.

படகு மேல்நோக்கிச் செல்வதையும், கிழவன் தத்தளிப்பதையும், இன்னும் சிறிது தூரத்தில் சுழல் அவர்களை நெருங்கிக் கொண்டிருப்பதையும் கவனித்த சின்னுன் அவர்களை எதிர்நோக்கி இருக்கும் அபாயத்தை உணர்ந்தவனுய் ஆற்றில் குதித்தான். ஆனல் தளர்ந்த உடல் நிலையில் நீந்துவது சிரமமாக இருந்தது. ஆனல் உறுதி அவனை உந்தித் தள்ளியது. கைக் கெட்டியது வாய்க்கெட்டாது போலிருக்கிறதே!

படகு சுழலை நெருங்கி விட்டது. கிழவனுக்கு ஆனந்தம். "காவேரி, நாம் இனிமேல் உயிருடன் இருக்கவேண்டாம். நிராசையையே இதுவரை அனுபவித்து விட்டோம்......இதோ காவேரி ஆத்தாள் நம்மை அழைக்கிருள்...... உம், வா......குதி......" என்ருன். ஆனல் காவேரி எழுந்திருக்கவில்லை. அவன் என்ன சொல்கிருன் என்பதே புரியவில்லை போலும் அவளுக்கு!

கிழவன் காவேரியைப் பிடித்து இழுத்தான். அடுத்த கணம் இருவரும் நீரில் குதித்தனர்!

சின்னுன் பதறினன். என்ன அறிவீனம்! இருவரும் மடுவில் பலியாகி விடுவார்களோ என்று மனம் துடிக்க, கைகள் பதற, வேகமாக முன்னேறினன். சுழலை அடைந்து விட்டான். துழாவினன் நீருக்குள். கைப் பிடியில் என்னவோ அகப்பட்டது. அப்போது அவன் உடல் நிலையும் அனேகமாகத்

தளர்ந்து விட்டிருந்தது. நீரோட்டத்தோடு சிறிது தூரம் நீஞ்சி, மணல் தட்டுப்பட்டதும் நின்றான். படகு மெதுவாக அசைந்து வந்து அங்கே நின்றது. மிகுந்த சிரமத்துடன் அவளுடைய உடலை அதில் போட்டு, தானும் ஏறினான், ஆனால் கண்கள் இருண்டு, மயக்கம் வந்துவிட்டதால் சுருண்டு படகில் விழுந்துவிட்டான்,

கரையில் பெருங்கூட்டம் கூடிவிட்டது. சின்னான் பலவீனமான நிலையில் தத்தளிப்பதையும், அவன் செய்த வீரச்செயலையும் கண்டு எல்லோரும் வியந்தனர். அதற்குள் இருவர் தண்ணீரில் குதித்து நீந்திப் படகை அடைந்தனர். படகு கரை சேர்ந்ததும் இருவரையும் சக்கரத்தில் போட்டுச் சுழற்றினர்.

பொன்னுவும் கூட்டத்தில் ஒருவனாக நின்று கொண்டிருந்தான். அவன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. காவேரியை மணந்துகொள்ள வேண்டும் என்று அவன் மிகப்பெரிய திட்டம் போட்டிருந்தான். அது நிறைவேறவில்லை. அதற்குப் பதிலாகச் சின்னானின் தெய்வீகமான காதலை அவன் இப்போது உணரும் நிலையில் இருந்தான். ஆனால் இந்தப் புனர் ஜன்மம் மிகவும் நாள் கழித்து ஏற்பட்டதாகப் போய்விட்டது!

கூட்டத்தில் பரபரப்பு. "ஐயோ! அதோ கிழவனின் குடிசை தீப்பற்றி எரிகிறதே!" என்று ஒருவன் கூவினான். எல்லோரும் அந்தத் திக்கில் பார்த்தனர். ஆம். அங்கு கிழவன் பெரிய கறுப்பனின் குடிசை தீக்கிரையாகிக் கொண்டிருந்தது,

எல்லோரும் ஓடி, கிடைத்த பாத்திரங்களில் தண்ணீர் மொண்டு தீயை அணைக்க முற்பட்டனர். சின்னான் மெல்லக் கண் விழித்தான். அவன் அருகில் பொன்னு கண்ணீரும் கம்பலையுமாக உட்கார்ந்து கொண்டிருந்தான். தூரத்திலே எரியும் தீ அவன் உள்ளத்தில் இதுகாறும் அடைத்துக்கிடந்த பொருமைக் குப்பைகளைப் பொசுக்கிவிட்டது போலும்!

"சின்னு! நான் பெரும் பாவி........ என்னை மன்னித்ததாகக் கூறு......" என்று குமுறினான் பொன்னு. அவனுடைய முரட்டுக் கைகள் சின்னானின் காலைப் பிடித்துக்கொண்டன.

மயக்கம் பூராவாகத் தீராத நிலையில் சின்னானால் ஒன்றும் பேசமுடியவில்லை. பொன்னுவே பேச ஆரம்பித்தான்: "சின்னு, நீ காவேரியைக் கல்யாணம் பண்ணிக்கத் தீர்மானிச்சதை எப்படியாச்சும் கலைக்கணும்னு தீர்மானிச்சு, அதற்காக என் அப்பனைப் பொய் சொல்லச் சொன்னேன்...... அநாதையான உன்னை பெரியகறுப்பனின் மவனாவச் செய்துவிட்டால் பிறகு காவேரி எனக்குத்தான் என்று மனப்பால் குடிச்சேன்...... ஆனால் கிழவன் என் எண்ணத்தை கண்டு எள்ளி நகைச்சான்...... எனக்கு ஆத்திரம் தாங்கமுடியல்லே...... தகப்பன் இறந்தபோது உன்னோடு வந்த மாமன் என்னிடம் எல்லா விஷயங்களையும் கூறிட்டான். அதன்படி உன் பிறப்பு ரகசியம் உனக்குத் தெரிஞ்சுட்டது என்பதைப் புரிஞ்சுகொண்டேன்...... ஆகையால் நீ காவேரியை கட்டிக்க போறே என்று பொருமை பட்டேன்...... அதோ அந்த குடிசை தீப்பத்தி எரியுதே! அதற்குக் காரணம் நான்தான்...... நான் பாவி, ஆனால் இப்போ என் உள்ளம் மாறிவிட்டது. ஒன்தியாவம், ஒன் காதல் எனக்குப் புரிஞ்சுட்டது...... என்னை மன்னிச்சிடு."

* * * *

காவேரி, சின்னான் இருவரும் பிழைத்துக் கொண்டனர். முன்பு பெரிய கறுப்பன் குடிசை இருந்த இடத்தில் இப்போது சிறிய ஓட்டுவில்லை வீடு தெரிகிறது. அதன் முன் அதே பழைய பூவரசு மரம். அதன் கீழ் ஒரு சிறுவனும், சிறுமியும் விளையாடுகின்றனர். ஒருவேளை இவர்கள் காவேரியின் குழந்தைகள் போலும்!

காவேரி கலக்கமின்றி, பளிங்கு போன்ற நீருடன் ஓடுகிறது. அதேபோல அச்குடிசையிலும் காவேரி இப்போது ஆனந்தமாக வாழ்கிறாள்.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ பம்பாய்-4.



எமது முதல்தரமான சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

DON'T WORRY!!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA-33.

கீழ்க் கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) இண்டோ மெடிகல் சப்ளைஸ், 29-வைத்யநாதமுதலித் தெரு, சென்னை-1., (2) ராஜா மெடிகல்ஹால், 31-தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்., (3) C. கன்னைய நாயுடு & சன்ஸ், கொல்லம், (S. I.) (4) நியூ டவுன் ஏஜன்ஸீஸ், 804 B. "ஹரிணிவாஸ்" வின்ஸெண்ட் ரோடு, தாதர், பம்பாய் 14., (5) ஸிந்தி, 172-A, பிரின்ஸஸ் தெரு, (ஹனுமான் மந்திர் மேல்புரம்) பம்பாய்-2., (6) ஷா கம்பெனி, மங்களூர் (S. K.) (7) ஓவர்ஸீஸ் ஜெனரல் ஏஜன்ஸி, 72, அம்பாங் தெரு, கோலாலம்பூர் (மலேயா).

Wanted Stockists in Unrepresented Areas on Favourable Terms

READ WHAT SATISFIED CUSTOMERS SAY!

K. P., Bombay-"More than four months' overdue was restored to its usual state after using only 2 phials of Special Tablets."

V. K. East Africa-"Tried many similar products. None ever worked but only one packet of your Extra-Spl. tabs. brought wonderful results."

K.L.R., Ceylon—"Remember. I bought two phs. of your medicine which relieved my patients wonderfully. Send 6 phs. more per return."

Mrs. David Bangalore—'Your KUMARI is a miraculous preparation. You have saved my life. I must introduce this to my friends,'

Almost daily, lot of unsolicited appreciations pouring in our files from differnt parts of the World.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறூர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

அக்பர் லோட்டா

ராமயோகி

கிருஷ்ணஸ்வாமி நாயுடுவுக்குச் சாப்பாட்டுக்கு வேண்டிய அளவு சொத்து இருந்தது. திருவல்லிக்கேணி பெரிய தெருவில் அவருக்கு ஒரு பெரிய வீடு இருந்தது. மாடியில் அவர் குடியிருந்து கொண்டு கீழ்ப்பகுதியை வாடகைக்கு விட்டிருந்தார். அதன் மூலம் ஏறக்குறைய நூற்றைம்பது ரூபாய் வாடகைப் பணம் வந்துகொண்டிருந்தது. அவருக்குக் குழந்தைகுட்டிகள் இல்லை. அவர்தான் அவருடைய மனைவிக்குக் குழந்தை; அவருடைய மனைவி தான் அவருக்குக் குழந்தை. ஆகவே அவர்கள் நன்றாக உண்டு உடுத்தி ஆனந்தமாகப் பொழுதைப் போக்கிக்கொண்டு வந்தார்கள். ஆனாலும் சேர்ந்தாற்போல அவர்களால் முந்நூறு–நானூறு ரூபாயைப் பார்க்க முடிவதில்லை. பத்தும் ஐந்துமாகத்தான் பார்க்க முடிந்தது.

ஒரு நாள் திடீரென்று நாயுடுவின் மனைவி தனக்கு இருநூற்றைம்பது ரூபாய் வேண்டும் என்று கேட்டாள். அதைக் கேட்டதும் நாயுடுவின் மூளை ஒரேயடியாகச் சுழன்றது. அவருக்கு என்ன பதில் சொல்லுவது என்று விளங்கவில்லை. அவர் பேய் அறைந்தவரைப் போல உட்கார்ந்திருப்பதைக் கண்ட அவருடைய மனைவி, "இதற்காக வருத்தப்படாதீர்கள். உங்களிடம் பணம் இல்லையென்றால் என் அண்ணாவைக் கேட்டு வாங்கிக் கொள்ளுகிறேன். இது என்ன பிரமாதம்?" என்றாள்.

நாயுடுவுக்குத் தம் மனைவியின் அவ்வார்த்தைகள் தம்மை ஏளனம் செய்வதுபோலப் பட்டன. அவர் கொஞ்சம் ரோசத்துடன், "இந்த இருநூற்றைம்பது ரூபாய்க் காசுக்கு உன் அண்ணனிடம் போய்ப் பல்லைக் காட்டிக் கொண்டு நிற்கவேண்டுமா? நான்தருகிறேன், வாங்கிக்கொள்" என்றார்.

"ஆனால் ஒன்று. அந்தப்பணம் எனக்கு இந்த ஜன்மத்துக்குள்ளேயே வேண்டும். அடுத்த ஜன்மம் வரைக்கும் இழுத்துக்கொண்டு போய்விடாதீர்கள். என்ன நான் சொல்லுவது புரிகிறதா?" என்றாள் நாயுடுகாருவின் மனைவி.

"இந்த வாரக் கடைசிக்குள் வாங்கிக்கொள்ளேன்!"

"ஆமாம், உங்கள் கணக்கில் வாரம் என்றால் ஏழு நாட்களா அல்லது ஏழு வருஷமா? அதை முதலில் சொல்லுங்கள்!" என்று இன்னும் கிண்டலாகக் கேட்டாள் அவருடைய மனைவி.

கிருஷ்ணஸ்வாமி நாயுடு எழுந்த வண்ணம் "சரியாக இன்றைக்கு ஏழாவதுநாள் நான் பணம் கொடுக்கவில்லை என்றால் என் பெயரை மாற்றி அழை." என்று வெகு அழுத்தமாகச் சொன்னார்.

"சொன்ன சொல் மாறமாட்டீர்களே!"

"கிருஷ்ணஸ்வாமி நாயுடு சொன்னால் சொன்னதுதான்! தெரியுமா?" என்றார் நாயுடு.

ஆனால் நான்கு நாட்கள் ஓடிவிட்டன. நாயுடுவினால் பணத்துக்கு ஒன்றும் ஏற்பாடு செய்ய முடியவில்லை. வரவர அவருக்குக் கவலை அதிகரித்தது. மனைவியிடம் சொன்ன சொல்லைக் காப்பாற்றியாகவேண்டுமே! தன் மானத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். எப்பாடு பட்டாவது அவளுக்குப் பணம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஏழு நாட்களுக்குள் தருகிறேன் என்று சொல்லிவிட்டுக் கொடுக்காமல் இருந்தால், அவள் தன் மனதில் என்ன நினைத்துக் கொள்ளுவாள்? அப்புறம் அவள் அவரைச் சட்டை செய்வாளா? அவர் தம்மைப்பற்றி அவளிடம் என்னவெல்லாமோ பெருமையடித்துக்கொண்டிருந்தார். வாய்திறந்து அவள் பணம் கேட்டது இதுதான் முதல்தடவை. முதல்தடவையே அவளுடைய ஆசையைப் பூர்த்திசெய்ய முடியாமற் போய்விட்டால், அப்புறம் அவளுடைய முகத்தில் எப்படி விழிப்பது? "சொன்ன சொல் மாற மாட்டீர்களே!" என்று அவள் கேட்டஅந்தக் கேள்வி இன்னும் அவருடைய காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது.

அடுத்த நாள் பொழுதும் விடிந்துவிடவே அவருக்கு இன்னும் கவலை அதிகரித்தது, ஆகவே, அவர் தம் நண்பர் மாசிலாமணி முதலியாரிடம் சென்று தம்முடைய கஷ்டங்களை எடுத்துச் சொன்னார். முதலியாரிடம் அன்று தம்பிடி என்றால் தம்பிடிகூட இல்லை. ஆகவே, அவர், "நாளை எங்கேயாவது கேட்டுப் பார்க்கிறேன். கிடைத்தால், நாளைச் சாயந்திரம் உம்முடைய வீட்டுக்கே கொண்டுவந்து தருகிறேன்" என்றார்.

மறுநாள் மாலை கிருஷ்ணஸ்வாமி நாயுடு மாசிலாமணி முதலியாரை வெகு ஆவலுடன்

எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். நாயுடு தம் மனைவிக்குக் குறிப்பிட்டிருந்த கெடுவுக்கு இன்னும் ஒரே ஒருநாள் தான் பாக்கி இருந்தது. மறுநாள் அவள் கேட்ட அந்த இருநூற்றைம்பது ரூபாயைக் கொடுக்க முடியவில்லை என்ருல், அவருடைய மரியாதை-மட்டு எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து விடும். பணம் கொடுக்கவில்லை என்பதற்காக அவருடைய மனைவி அவரைக் கழுவில் ஏற்றி விடவோ, சிரசாக்கினை செய்து விடவோ போவதில்லை. அவரைப் பார்த்து அவள் ஏளனம் செய்வாள்; சிரிப்பாள். அவ்வளவுதான். அவளுடைய அந்த ஏளனச் சிரிப்பைச் சகிப்பதைக் காட்டிலும், தற்கொலை செய்து கொண்டு செத்துவிடுவது எவ்வளவோ உத்தமம் என்று தோன்றியது நாயுடுவுக்கு.

இன்னும் ஏன் மாசிலாமணி முதலியார் வரவில்லை? இன்று சாயந்திரத்துக்குள் வருவதாகச் சொன்னுரே! அவர் கைகொடுத்து உதவினுல்தான் உண்டு. ஆமாம், அவர் வராமல் இருந்துவிட்டால்?...?... அவராலும் பணத்துக்கு ஒரு ஏற்பாடு செய்யமுடியவில்லை என்ருல்?...?...

இந்தச் சிந்தனையில் உழன்ற வண்ணம் நாயுடு மாடியில் இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தார். அவர் வராமல் இருந்துவிட்டால்?... என்று நினைத்ததுமே நாயுடுவுக்கு நாக்கு ஒரேயடியாக வறண்டுவிட்டது. அவர் தம் மனைவியைக் கூப்பிட்டுத் தாகத்துக்குத் தண்ணீர் கொண்டுவரும்படி சொன்னுர்.

அவருடைய மனைவி ஒரு பழைய காலத்து லோட்டாவில் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தாள். கிருஷ்ணஸ்வாமி நாயுடு வாய் திறவாமல் அந்த லோட்டாவைக் கையில் வாங்கிக் கொண்டார். அந்த லோட்டாவைக் கண்டாலே அவருக்கு எரிச்சல் எரிச்சலாக வரும். அதே லோட்டாவில் வேலைக்காரன் தண்ணீர் கொண்டுவந்திருந்தால் வீடு அமளி-துமளிப்பட்டிருக்கும்; நிர்த்தூளிப்பட்டிருக்கும்.

நாயுடு பேசாமல் லோட்டாவை வாங்கிக் கொண்டதற்குக் காரணம் என்னவென்ருல், அவர் மாதர்களுக்கு மிகவும் மரியாதை அளிப்பவர். அதைத்தானே இக்காலத்தில் நாம் நாகரிகம் என்று பெயர் சொல்லி அழைக்கிருேம்; எந்தக் கணவன் தன் மனைவிக்கு மனைவியாக வில்லையோ அவனைக் கணவன் என்று எப்படி அழைப்பது? அதுமட்டும் இல்லை; வாயைத் திறந்தால் வீடு ரணகளப்பட்டுவிடும் என்ற விஷயம் அவருக்குத் தெரியாததா? நாயுடு தண்ணீருடன் கோபத்தையும் சேர்த்து 'மடக், மடக்' கென்று விளக்கெண்ணெய் குடிப்பதுபோலக் குடித்தார். அப்பொழுது அவர் மாடிக் கைப்பிடி சுவருக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார்.

நம் நாட்டுப் பேரறிவாளர்கள் தண்ணீர் குடிக்கும் விஷயத்தில், "நின்றபடி தண்ணீர் குடிக்காதே! தூங்கி விழித்ததும் தண்ணீர் குடிக்காதே! ஓடிவிட்டு வந்ததும் வராததுமாகத் தண்ணீர் குடிக்காதே!" என்றெல்லாம் சட்டதிட்டங்கள் செய்திருக்கிருர்களே! கைப்பிடி சுவருக்கருகிலும் நின்றுகொண்டு தண்ணீர் குடிக்கக்கூடாது என்ற பிரிவை ஏனே அந்தச் சட்டதிட்டத்தில் சேர்க்க வில்லை! அவர்கள் இந்த மாபெரும் விஷயத்தை மறந்து விட்டது ரொம்ப காலம் வருந்தத்தக்க விஷயம் தான். ஆகவேதான் நாயுடு கைப்பிடி சுவருக்கருகில் நின்றுகொண்டு தயங்காமல் தண்ணீர் குடிக்கலானுர். அவர் இரண்டொருவாய்கூடக் குடித்திருக்க மாட்டார். அகஸ்மாத்தாக அவர் கையிலிருந்த அந்த லோட்டா நழுவிவிட்டது.

நழுவத்தான் நழுவிற்றே, உட்பக்கமாக விழுந்திருக்கக்கூடாதா? வெளிப்பக்கமாகவா விழுந்திருக்கவேண்டும்? அப்பப்பா! விழும்பொழுதுதான் அதற்கு என்ன வேகம் என்கிறீர்கள்!

கிருஷ்ணஸ்வாமி நாயுடு திடுக்கிட்டுத் திகைத்தார், ஜன நடமாட்டம் அதிகமுள்ள தெருவில் — அதுவும் மூன்ருவது மாடியிலிருந்து ஒரு லோட்டா கீழே விழுவது என்ருல் அதைச் சாதாரண விஷயம் என்று சொல்லிவிட முடியுமா? அது எவன் தலையில் விழுந்து கபால மோட்சம் அளிக்குமோ, யார் கண்டார்கள்?

நினைத்தபடியேதான் ஆயிற்று. மறு நிமிஷம் தெருவெங்கும் ஒரே கூக்குரலும் கூச்சலுமாகக் கேட்டது. கிருஷ்ணஸ்வாமி நாயுடு மாடிப்படி இறங்கி வருவதற்குள் வீட்டு முற்றத்தில் ஒரேயடியாகக் கூட்டம் கூடிவிட்டது. அந்தக் கூட்டத்தில் ஒரு வெள்ளைக்காரன் தலையெல்லாம் தொப்பமாக நனைந்து நிற்பதையும் அவனுக்குப் பக்கத்தில் அந்தப் பாழும் லோட்டா கிடப்பதையும் கண்ட கிருஷ்ணஸ்வாமி நாயுடு கதிகலங்கிப் போனுர்.

அந்த லோட்டா கிருஷ்ணஸ்வாமி நாயுடுவினுடையது என்பது தெரிந்ததும், அந்த வெள்ளைக்காரன் வைவதற்காகத் திறந்த வாயை மூடவேயில்லை. கிருஷ்ணஸ்வாமி நாயுடுக்கு ஆங்கிலத்திலும் அவ்வளவு வசவுகள் இருக்கின்றன என்பது அன்றுதான் தெரியலாயிற்று.

அதே சமயம் மாசிலாமணி முதலியார் கூட்டத்துக்கு மத்தியில் புகுந்து முற்றத்துக்கு வந்து ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு, அந்த வெள்ளைக்காரனைப் பார்த்து,

"உங்களுக்கு ரொம்ப காயம் பட்டுவிட்டாற் போலிருக்கிறது. இந்த நாற்காலியில் உட்காருங்கள் !" என்ருர்.

அந்த வெள்ளைக்காரன் மாசிலாமணி முதலியாருக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, நாற்காலியில் உட்கார்ந்தான். பிறகு, கிருஷ்ண

சுவாமி நாயுடுவைச் சுட்டிக்காட்டி, "உங்களுக்கு இந்த மனுஷ்யனைத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியவே தெரியாது. இந்த மாதிரி ஆளைத் தெரிந்து கொள்ளுவதே ரொம்பத் தப்பு. வழியில் போகிறவர்களை லோட்டாவினால் இப்படி அடிப்பது என்றால்......"

"...இவன் பைத்தியக்காரனாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்."

'இல்லை..., இல்லை! இவன் சுயபுத்தியுடனே செய்திருக்கிறான். இவனைச் சும்மாவிடக்கூடாது' என்றார் மாசிலாமணி முதலியார்.

ஆண்டவன் மட்டும் முக்கண்ணனைப் போல, திரிபுரத்தையும் சுட்டெரிக்கும் சக்தியைக் கிருஷ்ண

"போலீஸில் இப்பொழுதே இதைப்பற்றி 'ரிப்போர்ட்' செய்துவிடுவதுதான் நல்லது."

"போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?"

"பக்கத்தில்தான் இருக்கிறது. வாருங்கள் காட்டுகிறேன்."

"புறப்படுங்கள்!"

"இதோ வந்துவிட்டேன். ஒரு நிமிஷம் பொறுங்கள். இந்த லோட்டாவை முதலில் விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறேன்—ஏன், அப்பா! இதை விலைக்குத் தருகிறாயா? ஐம்பது ரூபாய் தருகிறேன்" என்று மாசிலாமணி முதலியார் நாயுடுவைப் பார்த்துக் கேட்டார்.

கிருஷ்ணஸ்வாமி நாயுடு பதில் பேசவில்லை.

ஸ்வாமி நாயுடுவின் கண்களுக்கு அளித்திருந்தால், அவர் மாசிலாமணி முதலியாரை அப்படியே சுட்டு எரித்திருப்பார். மாசிலாமணி முதலியார் இப்படிப் பேசக் காரணம் என்னவென்று கிருஷ்ணஸ்வாமி நாயுடுவுக்கு விளங்கவேயில்லை.

அந்த வெள்ளைக்காரன். மாசிலாமணி முதலியாரைப் பார்த்து, "இப்பொழுது என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

அந்த வெள்ளைக்காரன், "இந்த ஓட்டை லோட்டாவுக்கு ஐம்பது ரூபாய் கொடுப்பதா?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டான்.

"இந்த லோட்டாவைச் சாதாரண லோட்டா என்று நினைக்காதீர்கள்! இது சரித்திரப் பிரசித்திபெற்ற லோட்டா. இது பாதுஷா அக்பரின் லோட்டாவாயிருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன். இதைத் தேடிக் கண்டு

பிடிக்க உலகத்தில் உள்ள "மியூசியம்" எல்லாம் என்னபாடுபடுகின்றன தெரியுமா?"

"அப்படியா?"

"ஆமாம், ஸார்! பதினாறுவது நூற்றாண்டிலே பாதுஷா ஹுமாயூன் ஷேர்ஷாவிடம் தோற்று ஓடி, சிந்துவிலுள்ள பாலைவனங்களில் எல்லாம் சுற்றிச் சுற்றித் திரிந்தார். அப்பொழுது அவருக்குத் தாகம் தாளாமல் உயிர் போய்விடும்போலாகிவிட்டது. அப்பொழுது ஒரு பிராமணர் இந்த லோட்டாவில்தான் தண்ணீர் கொடுத்து அவருடைய உயிரைக் காப்பாற்றினர். ஹுமாயூனுக்குப் பிறகு சிம்மாசனம் ஏறிய அக்பர் அந்தப் பிராமணரைத் தேடிக் கண்டுபிடித்து, அவருக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து இந்த லோட்டாவை வாங்கிக்கொண்டார். அதுமுதல் அக்பர் இதில்தான் தண்ணீர் குடித்துவந்தார். கி. பி. 1857 வரையில் இது முகலாய பாதுஷாக்களின் அரண்மனையில் இருந்துவந்தது. அதற்குப் பிறகு இது எங்கோ மறைந்துவிட்டது. இந்த லோட்டா எப்படி இந்த மனிதனிடம் வந்தது என்பது விளங்கவில்லை. 'மியூஸியம்' ஆசாமிகளுக்குத் தெரிந்தால் இதற்கு நல்ல விலை கொடுத்து வாங்கிக்கொண்டுபோய் விடுவார்கள்" என்றார் மாசிலாமணி முதலியார்.

இதைக் கேட்டதும் அந்த வெள்ளைக்காரனுடைய விழிகள் ஆச்சரிய மிகுதியினால் மலர்ந்தன. அவன் மாசிலாமணி முதலியாரைப் பார்த்து, "இந்த லோட்டாவை வாங்கி நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் பிரான்ஸ், ஜெர்மனி முதலிய வெளிநாடுகளுக்கு இதை அனுப்பி விற்பேன்!"

"அப்படியா?" என்று கேட்டுவிட்டு அந்த வெள்ளைக்காரன் சிறிதுநேரம் பேசாமலிருந்தான். பிறகு அவன், "நானே இந்த லோட்டாவை விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறேன்" என்றான்.

"நீங்கள் வாங்குவதாவது? அதெல்லாம் முடியாது. நான்தான் வாங்கப்போகிறேன். இதை வாங்க எனக்குத்தான் உரிமையுண்டு."

"அது எப்படி? எனக்குத்தான் அதிக உரிமை உண்டு."

"உங்களுக்கு எப்படி உரிமை உண்டு?"

"இந்த லோட்டா உங்கள் தலையில் விழுந்ததா, என் தலையில் விழுந்ததா?"

"உங்கள் தலையில் தான்!"

"இது உங்கள் கால் கட்டை விரலைக் காயப்படுத்திற்றா அல்லது என்னுடைய கால்கட்டை விரலையா?"

"உங்களுடைய கால் கட்டை விரலைத்தான்!"

"ஆகையால் இதை வாங்க எனக்குத்தான் அதிக உரிமை உண்டு."

"அந்தப் பேச்செல்லாம் இங்கே நடக்காது. நீங்களும் விலை கேளுங்கள்; நானும் கேட்கிறேன். யார் அதிக விலை கொடுக்கிறார்களோ, அவர்கள் வாங்கிக்கொள்ள வேண்டியது," என்றார் முதலியார்.

"அப்படியே ஆகட்டும். சரி, நீங்கள் ஐம்பது ரூபாய்க்குத்தானே கேட்டீர்கள். நான் நூறு ரூபாய்க்குக் கேட்கிறேன்!"

"நான் நூற்றைம்பதுக்குக் கேட்கிறேன்"

"நான் இருநூறு கொடுக்கிறேன்!"

"நான் இருநூற்றைம்பது கொடுக்கிறேன்!" என்று சொல்லி விட்டு மாசிலாமணி முதலியார் இருநூற்றைம்பது ரூபாய் பணத்தை எடுத்துக் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவின் முன்னால் வைத்தார்.

அந்த வெள்ளைக்காரனுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. "நீங்கள் இருநூற்றைம்பது தானே கொடுக்கிறீர்கள்? நான் ஐந்நூறு தருகிறேன். இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்?" என்றான்.

மாசிலாமணி முதலியார் முகத்தில் ஏமாற்றம் ததும்பத் தம் பணத்தை எடுத்துக்கொண்டார். "அப்படியானால் நீங்களே லோட்டாவை எடுத்துக் கொள்ளுங்கள். என்னிடம் இப்பொழுது இருப்பு இருநூற்றைம்பது ரூபாய் தான்!" என்றார்.

இதைக் கேட்டதும் அந்த வெள்ளைக்காரனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை. அவன் வெகு ஆவலுடன் லோட்டாவை எடுத்துக்கொண்டான். பிறகு "நான் இனிமேல் சந்தோஷமாக எங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போவேன். மேஜர் டக்ளஸின் தற்புகழ்ச்சியைக் கேட்டுக்கேட்டு என் காது புளித்து விட்டது" என்றான் அவன்.

"மேஜர் டக்லஸா? யார் அவர்?"

"மேஜர் டக்லஸ் என் பக்கத்துவீட்டுக்காரர். புராதனப் பொருள்களைச் சேகரிப்பதில் எனக்கும் அவருக்கும் எப்பொழுதுமே போட்டி

உண்டு. போன வருஷம் அவர் இந்தியாவுக்கு வந்திருந்தார். அப்போது ஜஹாங்கீர் முட்டையைக் கொண்டு வந்தார்."

"ஜஹாங்கீர் முட்டையா? அது என்ன முட்டை அது?"

"உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாதே!"

"ஜஹாங்கீர் ரொம்ப பத்திரமாக வைத்திருந்த ஒரு புறா முட்டை அது. நூர்ஜஹானுக்கும் ஜஹாங்கீருக்கும் காதல் ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாக ஒரு புறா இருந்தது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்றே எண்ணுகிறேன். ஒரு புறா எப்படிப் பறந்து போயிற்று? என்று ஜஹாங்கீர் பாதுஷா கேட்டாராம். "இப்படித்தான் பறந்து போயிற்று!" என்று சொல்லிக் கையிலிருந்த புறாவையும் நூர்ஜஹான் பறக்கவிட்டு விட்டாளாம். நூர்ஜஹானின் அந்தக் கள்ளங்கபடமற்ற மனப்பான்மையைக் கண்டு ஜஹாங்கீர் அவள்மேல் காதல் கொண்டாராம். ஆனால் அந்தப் புறா செய்த நன்றியையும் அவர் மறக்கவில்லையாம், அதன் ஞாபகார்த்தமாக அவர் அதனுடைய ஒரு முட்டையை மிகவும் பத்திரமாக எடுத்து வைத்திருந்தாராம். அதைப் போன வருஷம் மேஜர் டக்லஸ் ஒரு முஸ்லிமிடம் முந்நூறு ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டு வந்தார்."

"அப்படியா சமாசாரம்?"

"ஆமாம். ஆனால் இனிமேல் அவர் என்னிடம் வால் ஆட்ட முடியாது. என்னுடைய "அக்பர் லோட்டா" அந்த 'ஜஹாங்கீர் 'முட்டை'யைவிட ஒரு தலைமுறை முந்தியது அல்லவா?"

"அப்படி உறவு பார்க்கப்போனால் உங்கள் லோட்டா அந்த முட்டைக்கு அப்பன் ஆக வேண்டும் இல்லையா?" என்றார் மாசிலாமணி முதலியார்.

வெள்ளைக்காரன் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவுக்கு ஐந்நூறு ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டு, அந்த லோட்டாவுடன் புறப்பட்டான்.

கிருஷ்ணஸ்வாமி நாயுடுவுக்கு உண்டான சந்தோஷத்துக்கு ஓர் கங்கு கரையில்லை. அவர் மாசிலாமணி முதலியாரைப் பார்த்து, "உம்மிடம்தான் பணம் இல்லையே! இருநூற்றைம்பது ரூபாய் உமக்கு எப்படிக் கிடைத்தது? யார் கொடுத்தார்கள்? எப்படிக் கொடுத்தார்கள்?" என்று கேள்விக்கு மேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டே போனார்.

"அந்த ரகசியம் கடவுளுக்கும் எனக்கும் மட்டும்தான் தெரியும். அந்த ரகசியத்தை நான் என் தலையே போவதாயிருந்தாலும் சொல்ல முடியாது." என்று சொல்லியவாறே மேலும் பேச்சுக்கு இடம் கொடுக்க விரும்பாமல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட எழுந்தார்.

"என்ன? அதற்கு முன் புறப்பட்டுவிட்டீர்களே! சற்று இருங்கள் போகலாம். உங்களிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது" என்றார் கிருஷ்ணஸ்வாமி நாயுடு.

எனக்கு இப்பொழுது கேட்க நேரம் இல்லை. அப்புறம் சாவகாசமாக வருகிறேன். பிறகு பேசிக்கொள்வோம். முதலில் கிடைத்திருக்கும் ஐந்நூறு ரூபாயை எடுத்து பர்ஸ் உள்ளே வையுங்கள்!" என்று சொல்லிவிட்டு மாசிலாமணி முதலியார் அவ்விடத்தை விட்டு நடையைக் கட்டினார்.

* * * *

அன்றிரவு வெகு நேரம்வரை மாசிலாமணி முதலியாருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அவர் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தார். மணி ஒன்று அடித்தது. மெதுவாக எழுந்து பூனைபோல அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த தம் மனைவியை அணுகினார். சத்தப்படுத்தாமல் அவள் கழுத்துச் சங்கிலியில் ஊக்கினால் சேர்த்து மாட்டப்பட்டிருந்த சாவியைக் கழற்றினார். அப்புறம் அடி ஓசை கேளாமல் அவளுடைய அறைக்குச் சென்று அவளுடைய பெட்டியைத் திறந்து இருநூற்றைம்பது ரூபாயையும் முன் இருந்த மாதிரியே வைத்தார். பிறகு பெட்டியைப் பூட்டிச் சாவியைப் பழையபடி மனைவியின் கழுத்துச் சங்கிலியில் சேர்த்து மாட்டிய பின்புதான் அவருக்கு மன நிம்மதி ஏற்பட்டது. 'அப்பாடா?' என்று மனச்சாந்தியுடன் படுக்கையில் படுத்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் 'கர்ர்-முர்ர்' என்று அவருடைய குறட்டைச் சப்தம் அறை முழுவதும் வியாபித்தது.

அமர நிருத்யம்

ஆர். எஸ்.

நாலு வருஷங்களுக்கு முன்னால் என் நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து ஹம்பிக்குப் போய் விஜயநகரத்துப் பாழடைந்த சின்னங்களைப் பார்க்க வேண்டுமென்று கிளம்பினார்கள். ஆர்வத்துடன் அந்தத் தீர்மானத்தை வரவேற்றவர்களில் நானும் ஒருவன். பதினைந்து நாட்களுக்குமேல் அங்கே சுற்றி விட்டுத் திரும்பியபோது எல்லோரும் அவரவர்கள் ஒவ்வொரு சாமானைக் கொண்டு வந்தார்கள்.

நான் எதையும் கொண்டு வரவில்லை. கலைச் செல்வியின் கதை ஒன்று மட்டுமே என்சிந்தனை பூராவையும் கவர்ந்து கொண்டுவிட்ட பிறகு என் மனம் வேறு ஒன்றை எப்படி நாட முடியும்?

ஹம்பிக்குப் போய்ச் சேர்ந்த மறுநாள் பாழடைந்த அரண்மனையைப் பார்க்கக் கிளம்பினோம். வழியில் ஒரு கட்டிடத்தைக் காண்பித்து "இது என்ன?" என்று ஒருவர் கேட்டார்.

"புத்தகத்தில் போடவில்லையே?" என்று ஒரு நண்பர் 'கெய்டை'ப் புரட்டினார்.

அது ஒரு சீர்குலைந்த வீடு. அதன் முன் வாயிலில் பெரும்பாகம் இடிந்து போயிருந்தது. பாழாகாமல் மிகுதியாயிருந்த வீட்டின் உட்சுவர்களில் சித்திரங்கள் தீட்டியிருந்தன. பலவித நடனத் தோற்றங்களை அங்கே எழுதியிருந்தார்கள். உற்று நோக்கியதில் எல்லாச் சித்திரங்களும் ஒரு பெண்ணின் பலவித தோற்றங்கள் என்பது தெரிந்தது.

"இது என்ன? இவையெல்லாம் யாருடைய சித்திரங்கள்?" என்று எங்களுடைய வழிகாட்டியைக் கேட்டேன்.

"அதுவா? அது பெரியகதைங்க! சொல்லிக்கிட்டே வறேன். கேட்டுக்கிட்டே எல்லாவற்றையும் பாருங்க!" என்று அவன் தொடங்கினன். கதை தொடங்கிய பிறகு என் கருத்து கட்டிடங்களில் செல்ல வில்லை. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால், இந்தப் பாழ்நகரம் செல்வமும் செழிப்புமாய்த் திகழ்ந்த காலத்துக்கே போய்விட்டது.

2

விஜயநகர சாம்ராஜ்யம் வளர்ந்து கொண்டிருந்த காலம். அவ்வளவு பெரிய ஹிந்து சாம்ராஜ்யம் வித்திலிருந்து வளர்ந்து வேரூன்றிப் பெரிதானது எல்லோருக்குமே வியப்பைத் தரும்படியானது தான். அவ்வளவுக்கும் காரணமாகச் சொல்லக்கூடியது ஏதாவது ஒன்று உண்டானல் அது கிருஷ்ணதேவ ராயருடைய சாமர்த்தியமும் சாதுர்யமும் என்றுதான் சொல்ல வேண்டும்.

போர் முறையில் நிகரற்று விளங்கிய அவர் எந்த ஆசைக்கும் பணியாதவர். ஆசைகாட்டி அவரை ஏமாற்றிவிட முடியாது. அவ்வளவு திடசித்தராக இருந்த அவருக்கு ஒரு விஷயத்தில் மட்டும் மனத்தை அடக்க முடியவில்லை. அபூர்வமான கலை எதுவானலும், கண்ணால் பார்த்து மகிழ்வதாக இருந்தாலும் காதால் கேட்டு மகிழ்வதாக இருந்தாலும் அதனிடம் மனதைப் பறிகொடுக்காமல் அவரால் இருக்க முடியாது. தவிர, பொம்மைகளைச் சேர்த்துப் பெட்டியில் வைத்துப் பூட்டும் குழந்தையைப் போல அந்தக் கலைவிற்பன்னர்களை யெல்லாம் தம்முடைய சபையிலேயே கொண்டு வந்து சேர்த்துவிடுவார்.

நெல்லூர் ஜில்லாவில் அந்தக் காலத்தில் மாணிக்கம் என்றொரு கணிகை இருந்தாள். இப்போது அழகு மங்கிவிட்ட இந்த ஹம்பியைப்போல, கிருஷ்ணதேவராயர் ஆளும்போது அவள் அழகு மங்கிவிட்டது. ஆனலும் அவள் தன் இனத்தார்களுக்கே ராணி போன்றவள். நாட்டியக் கலையை அலட்சியமாகக் கற்றறிந்தவள், புதிதாகப் பதம் எழுதப்பட்டால் அதற்கேற்ற அபிநயம் மாணிக்கத்தைத்தான்

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள்:

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும்
கிளை ஆபீஸ்கள் உள்ளன.

கேட்பார்கள். அவளுக்குக் கலைச் செல்வி என்று ஒரு மகள் இருந்தாள்.

முத்து வயிற்றில் இரத்தினம் என்பார்களே அதுபோல மாணிக்கத்தின் வயிற்றில் அவள் பிறந்தாள். கலை ஆர்வம் அவளுக்குத் தாயை விட ஒருபடி அதிகமாகவே இருந்தது. பரதமும் சங்கீதமும் கற்று அவளுக்கு அலுத்து விட்டது என்றுகூடச் சொல்லலாம்.

யார் என்ன சொன்னால் என்ன? எதற்காக இவ்வளவையும் கற்றுக்கொண்டேன்? உண்மையில் நான் கலையை வளர்ப்பேனா? அல்லது கலைஞர்களின் கண்ணையும் குருடாக்கிவிடுவேனா! இந்த நாட்டியத்தினால் என்ன பிரயோஜனம்?'' என்று தாயாரைக் கேட்பாள்.

"நீதானா கேட்கிறாய்? மகளே! நான் கேட்பதற்கு விடைசொல், பார்க்கலாம். வஸந்த காலத்தில் மரங்களும் செடிகளும் பூத்துக் குலுங்குவதால் என்ன பிரயோஜனம்? பௌர்ணமி இரவில் பூரண சந்திரன் பால் பொழிகிறதே அதனால் என்ன உபயோகம்? மயில் ஆடுவதினாலும் குயில் பாடுவதினாலும் என்ன பயன்? கலைகளின் பலனும் அவ்வளவுதான் அம்மா! அதைப் பயிலுவதிலேயே ஓர் ஆனந்தம் இருக்கிறது. அந்த ஆனந்தத்தை நீயே அனுபவித்திருக்கிறாயே? நீ ஆடும்போது நாட்டியந்தான் ஆடுகிறாயா, அல்லது ஆனந்த வெள்ளத்தில் மிதக்கிறாயோ என்று நான் ஆச்சரியப்படுவதுண்டு. இன்றைக்கு ஏன் இப்படிப் பேசுகிறாய் அம்மா?''

காதளவு நீண்ட கரிய கண்களில் முத்துப் போல் இரு கண்ணீர்த்துளிகள் ததும்பக் கலைச் செல்வி சொல்வாள்: "அம்மா! கலையை வளர்க்க நீயும் நானும் தேவையில்லை. கலையைக் கைதூக்கி விடுவதாக எண்ணி நாம் அந்தக் கடலில் இறங்குகிறோம், அதுவே நம்மைக் கவர்ந்து இழுத்துக் கொள்கிறது. கலையை வளர்க்க நம்மால் முடிவதில்லை. கலையினால் மெருகேறி நிற்கும் இளமையை, பூத்துக் குலுங்கும் எழிலை விற்று நாசமாகிவிடுகிறோம். இந்த வாழ்க்கையினால் என்ன பிரயோஜனம்? என் உயிர் போகும்வரை நடனத்துக்கு, அமர கலையான நிருத்யத்திற்கு என் வாழ்வை அர்ப்பணிக்க நான் தயார், ஆனால் அதை மதித்து, அதற்காக என்னைக் கௌரவித்து என்னை வாழ்விக்கச்செய்ய ஒருவர் வரவேண்டும். அதுதான் என் ஆசை.''

மகளுடைய ஆசையை அவளால் அறிய முடிந்தது. அனுபவசாலியான அவள் மகளைத் தேற்றும்குரலில், "உன் எண்ணம் நிறைவேறாமல் போகாது குழந்தாய்! விஜயநகரத்து அரசர் கலைப்பித்துக்கொண்டவர் என்று எல்லோரும் சொல்கிறார்கள். உன்னால் முடியுமானால் உன் கலைச்செல்வத்தினால் அவரை ஆகர்ஷிக்க முடியுமா என்று முயற்சி செய்து பாரேன்'' என்று சொன்னாள்.

அந்தப் பேதைப் பெண்ணின் மனத்தில் இவ்வாறு தோன்றிய இந்த ஆசை வேரூன்றிவிட்டது, ஒவ்வொரு நாளும் அவளுடைய நடனத்தில் கலையழகு ஒளிர்ந்து வளர்ந்தது.

அவளுடைய இதய பூர்வமான அந்த ஆசை ஈடேறும் நாளும் வந்தது.

3

நெல்லூர் ஜில்லாவில் உதயபுரிக் கோட்டையைக் கைப்பற்றிய கிருஷ்ணதேவ ராயர் உம்மாத்தூர் மன்னனை எதிர்த்துச் சென்று சிவசமுத்திரம், ஸ்ரீரங்க பட்டணம் கோட்டைகளைப் பிடித்துக் கொண்டு திரும்பிய போது கலைச்செல்வியின் புகழ் அவர்காதை எட்டியது. நீண்ட காலப் போருக்குப் பின் மறுபடியும் அவர் மனம் கலையின்பத்தை அநுபவிக்க ஆவல் கொண்டது. அரசசபையில் நடனத்தை அரங்கேற்றுமாறு கலைச்செல்விக்கு அரசரிடமிருந்து உத்தரவு வந்தது.

கலைச்செல்வியின் உள்ளம் மகிழ்ச்சியினால் பூரித்தது. வாழ்நாள் முழுதும் தன் மனதில் தாங்கி நின்ற ஆசை நிறைவேறும் நாள் வந்ததை எண்ணி அவள் மகிழ்ந்தாள்.

கலைச் செல்வியின் நடன அரங்கேற்றம் நடைபெறும் நாளன்று அரச சபையில் கூட்டம் சொல்லி முடியாது. கலைச் செல்வியைப் போன்றஒருபேரழகி, நாட்டியக்கலையில் தேர்ந்தவள், அரசருக்கு முன்னால் செய்யப் போகும் அரங்கேற்றத்தைக் காண எல்லோருக்கும் ஆவல் மிகுந்திருந்ததில் வியப்பொன்றுமில்லையல்லவா!

நடனம் தொடங்கியது. ஆரம்பத்தில் அரசருடைய நன்மதிப்பைப் பெறவேண்டும் என்கிற கவலையினாலும் முதன் முதலாக அரச சபையில் ஆடுவதினாலும் அவள் அதிகமாக நாட்டியத்தில் மனதைச் செலுத்த முடியவில்லை. நேரம் ஆக ஆக அவளுக்குத் தன் நினைவும் தன் சூழ்நிலையைப் பற்றிய எண்ணமும் மறந்து போய் விட்டது. செதுக்கி எடுத்த பொற்சிலையைப் போன்ற அவள் உருவம் பம்பரமாகச் சுழன்று எல்லோர் மனத்தையும் கவர்ந்து இழுத்தது. தங்களைப் பற்றிய நினைவும் தாங்கள் இருக்கும் இடமும் அவர்களைக் கட்டுப் படுத்தவில்லை. தலைவனைப் பிரிந்த தலைவியின் தாபத்தையும், முகிலைக் கண்டு ஆடும் மயிலின் சாயலையும், உலகனைத்தையும் ஆட்டி வைத்துத் தானும் ஆடும் பொன்னம்பலப் பெருமானையும் அவர்கள் கண் முன்னே பார்த்தார்கள்.

நடனம் முடிந்த பிறகு தம்முணர்வு பெறுவதற்கு அவர்களுக்குச் சிறிது நேரம் ஆயிற்று. நடனத்தை முடித்துவிட்டு வணங்கித் தலையை நிமிர்த்தி நோக்கிய கலைச்செல்வியின் கண்கள் அரசருடைய கண்களை ஒரு கண நேரம் சந்தித்தன. மேலும் அந்தப் பார்வையை எதிர் நோக்கத் திடமில்லாமல் அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

அன்றிலிருந்து கிருஷ்ணதேவராயருடைய மனம் எதிலும் பற்றுக் கொள்ளாமல் போயிற்று. அவருடைய தன்மை அறிந்து அவரோடு பழகினவர்களுககு இது ஆச்சரியமாக இருந்தது. அதுமுதல் கலைச்செல்வியின் நாட்டியம் எங்கேயாவது ஒரு கோயிலிலோ வேறு எங்காகிலுமோ நடந்தால் அங்கெல்லாம் அரசர் போய்வரத் தொடங்கினர். எப்போதாவதுவேறு முக்கியமான காரியங்களை முன்னிட்டு அவர் போக முடியாமல்நேர்ந்துவிட்டாலும் அப்போதெல்லாம் அவர் பிரமை பிடித்தாற் போல் ஒன்றும் தோன்றாமல் உட்கார்ந்திருப்பார்.



அவர் மனதில் கலையின் பெயரால் குடிகொள்ள ஆரம்பித்த அந்த எழில் உருவம் நாளாக ஆக அவர் உள்ளம் முழுதையும் கவர்ந்தது. அவரையறியாமல் அவ்விதம் படர்ந்த அந்தப் பற்றை அறுத்து எறிய அவரால் முடியவில்லை. அவர் ஆசைப் படவுமில்லை.

கலைச்செல்வியின் நடனத்தைப் பார்க்கப்போய் எவ்வளவோ நாட்கள் அவர் அவள் உருவத்தைக் கண்டு தம்மை மறந்திருந்ததுண்டு. அவளுடைய பார்வையில் கவனத்தை இழந்து அவள் முக பாவங்களைக் கவனிக்கத் தவறிய துண்டு. நடனம் முடிந்து விட்டதாக அறியும்போது அவளை விட்டுப் போக வேண்டியிருக்கிறதே என்று எண்ணி வருந்துவார்.

கடைசியில் கலைச் செல்விக்குத் தான் வெற்றிகிடைத்தது. அவளுக்கு முன்னால் அரசர் தம் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அரசர் அவளைத் தலைநகரத்திலேயே ஒரு வீட்டில் கொண்டு வந்து குடியேற்றினர். அவளுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீட்டில் அவளுடைய பலவித நடனத்தோற்றங்களைச் சித்திரங்களாக எழுதச் செய்தார். அவளுக்கு எந்தவித குறைவும் இல்லாமல் பார்த்துக் கொண்டார்.

ஒரு கணிகை மாதை மணந்து கொள்ளக்கூடிய தைரியம் அந்தக் காலத்து அரசர்களுக்குக் கிடையாது. அதனால் முறைப்படி அவரை மணந்துகொள்ளும் பேறு அந்தப் பேதைக்குக் கிடைக்காமலே போயிற்று. அரியாசனத்தில் ஏறி அமர்ந்து கொள்ளும் பாக்கியம்

இல்லாவிடினும், அரசரைப் பொறுத்தவரை அவளே அவர் இதய ராணியாகத் திகழ்ந்தாள்.

4

அதுமுதல் கலைச்செல்வியின் வாழ்க்கையே மாறிவிட்டது. அரசரும் அவளும் தங்களுடைய கடமையைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் மறந்தே போய்விட்டார்கள். பெரும்பாலும் அரசர் அவள் வீட்டிலேயே இருந்தார். முக்கியமான விஷயங்களுக்கான ஆலோசனைக்குக்கூட அரசரை அவள் வீட்டுக்குப் போய்த் தான் காணவேண்டியதாயிற்று.

கிருஷ்ணதேவராயரின் மனோபாவம் விசித்திரமானதாக இருந்தது. கலைச் செல்வியினுடைய அழகும், இளமையும், கலைஞானமும் தம்முடையவை; தமக்காக அர்ப்பணிக்கப்பட்டவை என்று அவர் எண்ணினர். அவளுடைய வாழ்வின் இன்பம் யாவற்றுக்கும் தாம் மட்டுமே காரணமாக இருக்கவேண்டுமென்றும் எண்ணினர். அதனல் வேறு யாரும் அவளுடைய கலைத்திறனைப் போற்றுவதையோ. பார்த்து மகிழ்வதையோ அவரால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. நாட்டியம் ஆடுவதற்காக அவள் வெளியே சென்ருல் அவர் மனம் நிம்மதியை இழந்தது.

கலைச்செல்விக்கு அவருடைய உறவு எவ்வளவோ ஆனந்தமாக இருந்தது. அவளுடைய கலைத்திறனை மதித்து அதற்காக அவளிடம் மதிப்பும் அன்பும் வைத்து அவளுடைய குலத்தையும் பார்க்காமல் அன்பு பாராட்டிய அவர் பெருந்தன்மையை எண்ணி அவள் மனம் வியந்தது. அவருடைய உறவில், அவரோடு சேர்ந்து கழித்த ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் அவளால் மறக்கக் கூடாததாக இருந்தது. இருந்தும், சிற்சில சமயங்களில் அவர் மன நிம்மதியை இழந்து நிற்பதற்குத் தான் காரணம் என்பதை அறிந்தபோது அவளுடைய உள்ளம் திடுக்கிட்டது.

அது எந்தவகையானது என்று அறிந்த பிறகு அது மேலும் அதிகரித்தது. 'அரசர் தன்னை நேசிக்கிருர்; உயிரையே தன்னிடம் வைத்திருக்கிருர். தன்னுடன் இருப்பதற்காக அரசபோகங்களையும் துறந்து வந்திருக்கிருர். அவ்வளவு தியாகத்தையும் செய்த பெருந்தன்மை நிறைந்த அவர் மனம் அவளைப் பூரணமாக அவ்ருடைய உடைமையாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறது. அவளுடைய இளமையையும், எழிலையும், கலைத்திறனையும் அவர் மட்டுமே கண்டு அனுபவிக்க அவர் விரும்புகிருர். அவளைப் பிறர் ஏறெடுத்துப் பார்ப்பதைக்கூட அவர் விரும்பவில்லை!

இந்த உண்மையை அறிந்தபோது அவளுக்கு ஆனந்தமும் ஆச்சரியமும் உண்டாயின. ஆனல் அதனுடன் அவள் அதுகாறும் அனுபவித்திராத ஒரு வேதனையும் உண்டாயிற்று. அப்படியானல் அவள் நடனக்கலையையே மறந்துவிட வேண்டியதுதானு? அதுவரை அவள்

வாழ்வின் ஜீவநாடியாக இருந்துவந்த அந்த நிருத்யக்கலையை அறவே துறக்க அவளால் எப்படி முடியும்? தாளத்துடன் சேர்ந்து ஒலிக்கும் அந்தச் சதங்கை ஒலி, உணர்வுடன் இழைந்துசெல்லும் அங்க அசைவுகள். இவையெல்லாம் இனிமேல் அவளைப் பொறுத்தவரையில் பழங்கதைகளா! எதன் மூலமாக அவரை அடைய அவளால் முடிந்ததோ அதையே அவள் மறந்துவிட வேண்டியதுதானா?

அவருக்கு இஷ்டமில்லாவிட்டால் அது அவளுக்கும் இஷ்டமில்லைதான். அவருக்காக வளர்த்தகலை, அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட கலை, அவருக்காகவே அழியவேண்டியதுதான் என்றால் அதைத்தடுக்க அவள்யார்? அவள் மனதில் கொஞ்சம் கொஞ்சமாகத் திடம் ஏறியது. தன்னுடைய ஆசையைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருக்கினாள். நாளடைவில் நடனம் ஆடுவதையே நிறுத்தி விட்டாள். அரசருக்குப் பணிவிடை செய்வதில், அவருடைய முகம் வாடாமல் பார்த்துக் கொள்வதிலேயே, தன்னுடைய காலத்தைக் கழித்தாள். கலைச்செல்வியின் உருவமும் ஞாபகமும் மக்கள் மனத்திலிருந்து மெல்ல மெல்ல மறைய ஆரம்பித்தது.

அவளையும் மீறிச் சில சமயம் அவள் மனம் குமுறும். நகைப்பெட்டியைத் திறக்கும்போது பதக்கமும், சதங்கையும் கண்ணை உறுத்தும். அரசருக்கும் அவளுக்கும் முன்னால் யாராவது நடனம் ஆடினால் அவள் கால்களும் நடனமாடத் துடிக்கும். எதை மறந்து வாழ வேண்டுமென்று அவள் ஏங்கினாளோ அதுவே அவள் மனதில் வந்து சூழ்ந்தது. எங்கே திரும்பிப் பார்த்தாலும் சுவரில் எழுதப்பட்டிருந்த நடனத்தோற்றங்கள் அவள் மனதை அரித்தன.

அவள் வாழ்வு சித்திரவதையாக இருந்தது. கலைக்கும் காதலுக்கும் இடையில் அவள் தத்தளித்தாள். சிறு பருவத்திலிருந்து பயின்று போற்றிய கலையைப் பருவப் பெண்ணானபின் பறிகொடுத்த துயரம் அவளால் தாங்கமுடியாததாக இருந்தது. நாளாக ஆக அதுவே அவள் உடல் நலனைப் பாதிக்கத் தொடங்கியது. ஏக்கம் சூழ்ந்த மனத்துடனும் வாடிய ஆசைகளுடனும் அவள் குதூகலம் சுருங்கிக் கொண்டே வந்தது. கொஞ்ச நாட்களில் அவள் உடல் மிகவும் பலவினமடைந்தது.

5

நல்ல நிலாக்காலம். நிலா வெளிச்சத்தில் கட்டிலில் படுத்திருந்த தேவியின் முகம் வெளுத்துக் களையிழந்து போயிருந்தது. அருகே உட்கார்ந்திருந்த அரசரின் முகத்தில் கவலைக்குறி காணப்பட்டது.

"எங்கேயோ இருந்த இந்த ஏழைப் பெண்ணைத் தேடிவந்து சிநேகம் பூண்ட தங்களுக்கு நான் செய்யக்கூடியது என்ன இருக்கிறது? கள்ளத்தனமாக எப்படியோ என் மனத்தில் புகுந்து விட்டீர்கள். அரங்கேற்றத்துக்குப் பிறகு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இரவும் தங்களை எண்ணியே காலம் கழித்தேன்.

முதல் தடவையாக நீங்கள் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு என் கையை உங்கள் கையோடு சேர்த்துவைத்துக் கொண்டீர்கள். கையை இழுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசையும், வேண்டாமென்ற உணர்வும் உள்ளத்தில் போரிட நான் சும்மா இருந்தேன்.

நீங்கள் என் அருகில் உட்கார்ந்திருக்கிறீர்கள்; நம் இருவருடைய கரங்களும் ஒன்றுபட்டிருக்கின்றன என்ற உணர்ச்சிதான் என் மனதில் தங்கி இருந்தது. அந்த நினைவு என்னை வானவெளியில் தூக்கிக்கொண்டுபோய் மேக மண்டலங்களின் மேல் மிதக்கச்செய்தது. என் வாழ்க்கையில் அதுவரையில் காணாத புதுமை—யாருக்கும் கிட்டாத பெரும் பாக்கியம் கிடைத்துவிட்டதாக—எனக்குத் தோன்றியது, அதனால் என் கண்களுக்கு உலகமே புதிய தோற்றம் கொண்டது. வானத்திலும் வையத்திலும் அதுவரை காணாத வனப்புகளையெல்லாம் கண்டேன். மல்லிகையும், முல்லையும், செண்பகமும் நீலவானமும், வெண்ணிலாவும், பட்சி ஜாலங்களும், "நீ கொடுத்துவைத்தவள்" என்று என்னைப் பார்த்து வியந்ததாக எனக்குத் தோன்றின. அப்போதெல்லாம் எனக்குத் தானாகவே பாட்டுப்பாட வந்தது. ஆட்டத்தில் அளவிலாத உற்சாகம் உண்டாயிற்று. நடனக் கலையில் நான் அடைந்த துரிதமான அபிவிருத்தியைக் கண்டு எனக்கே பிரமிப்பு உண்டாயிற்று.

ஆனால், அப்படியெல்லாம் அரும்பாடுபட்டு உங்களுக்காக அர்ப்பணித்த நாட்டியக்கலை, பிள்ளைப் பருவத்திலிருந்து என்னைப் பைத்தியமாக அடித்த நாட்டியப்பித்து, நீங்கள் என்னை ஆட்கொண்ட பிறகு என்னைவிட்டு அகல வேண்டியதாயிற்று. தங்களுடைய மனச்சந்துஷ்டியையும் சந்தோஷத்தையும் கருதி என் பேதை உள்ளத்தின் ஆசைகளை விட்டுவிட்டேன். என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்று எண்ணி இருந்துவிட்டேன்.

துரதிருஷ்டசாலியான நான் அதிகம் நாள் ஜீவித்திருக்கமாட்டேன். உங்களைப் பிரிந்து போகிறேனே என்கிற துக்கம் என்னை வாட்டுகிறது. அப்படி இறந்துபோவதற்கு முன்னால் உங்களை ஒன்று கேட்கிறேன். நாளைப் பௌர்ணமியன்று ஸ்வாமி சன்னிதியில் தங்களுக்கு முன்னால் இந்த அடியாள் ஒரு தடவை—ஒரே ஒரு தடவை—கடைசியாக, சதங்கைக் காலும் பதக்கக் கழுத்துமாய், பின்னிவிட்ட ஜடையும் அரைக்கச்சுமாய் ஆடுவதற்கு வரம் தரவேண்

டும். அதுதான் என் கடைசி ஆசை. உங்களை நான் வேண்டுவதெல்லாம் அவ்வளவுதான்.''

அவள் குரல் நெகிழ்ந்துபோயிருந்தது. அவருடைய பாதங்களைப்பற்றிய கைகள் நடுங்கின,

''அப்படியே ஆகட்டும் கலைச்செல்வி!'' என்று தழுதழுத்த குரலில் சொன்னார் அரசர்.

* * * *

பௌர்ணமி தினம். வெண்ணிலா தலை தூக்கியது. கோயிலில் ஸ்வாமி சன்னிதியில் ஊரே திரண்டுவந்திருந்தது. அரசர் நடுவே அமர்ந்திருந்தார். உடையணிந்து சிலம்பொலிக்க, கலைச்செல்வி மேடையில் ஏறினாள். நோயினால் நலிந்துபோயிருந்த அந்த நிலையிலும் அந்த ஆடையில் அவள் அழகு திகழாமல் போகவில்லை. அவள் ஆசை நிறைவேறப்போகும் சந்தோஷம் அவள் முகத்தில் பிரகாசமாகப் படர்ந்தது. சோர்ந்த கண்கள், ஆவல் ததும்ப அரசரையே சுற்றி வட்டமிட்டன,

நடனம் தொடங்கியது. பளிச்சென்று சொல்லிவைத்தாற்போல் அங்கே நிசப்தம் ஏற்பட்டது. நட்டுவனாரின் கர்தாளத்துக்கும் அவர் பாடிய ஸ்வர ஜாதிகளுக்கும் இணங்க அவள் ஆடினாள். மத்தளச் சத்தத்தோடு கலந்து பாதச் சலங்கை ஒலி கல் கல் என்று சப்திக்க நிருத்யம் ஆடினாள்.

அதில் மின்னலின் விரைவு காணப்பட்டது. மான்குட்டியின் துள்ளல் தோன்றியது. கானமயிலின் சாயல் விளங்கியது. சிலசமயம் அவள் பூமியில் நின்று ஆடினாள்; சிலசமயம் வானமண்டலத்துக்குச் சென்று வெண்மதியின் கிரணங்களில் நின்றாடினாள்; விண் மீன்களின் மத்தியில் சுழன்று சுழன்றாடினாள்.

இப்படியெல்லாம் பிரமைகொண்ட சபையோருக்குச் சில சமயம் அவள் தங்களுடைய கண்ணின் உள்ளே ஆடுவதாகத் தோன்றியது. தங்கள் இருதயமாகிய அரங்கமேடையில் நின்று குதூகலமாக ஆடுவதாகவும் பிரமை உண்டாயிற்று.

அவள் பம்பரம்போலச் சுழன்றாடியபோது பார்த்துக்கொண்டிருந்தவர்களின் கண்கள் சுழன்றன; கோயில் கோபுரமும் தூங்காமாடத்துத் தங்கஸ்தூபியும், அகல் விளக்குகளும் சுழன்று சுழன்று வந்தன.

தலைவனைப் பிரிந்துவாடும் நாயகியைப் பற்றிய கட்டம் வந்தபோது நிரந்தரமாக அரசரைப் பிரியப்போகும் நினைவு, வேதனை கலந்த அவள் எண்ணங்கள், அவள் முகத்தில் படர்ந்தன. அந்தப் பேதை தன் இதயப்பாடுகள் வெளியாகும்படி முகபாவங்களினாலும் சைகைகளினாலும். கை விரல்களின் முத்திரையினாலும் உணர்ச்சியோடு கலந்து அற்புதமாக அபிநயம் பிடித்தாள்.

அவளுடைய ஆசையின் ஆவேசம் அவளை அப்படி ஆடச்செய்தது. அவளை அரித்துக் குலைத்த ஏக்கம் அவ்விதம் பொங்கி வெளிப்பட்டது. மனதுக்குள்ளேயே எரிந்து அவளைக் கருக்கிய அந்தத் தாபம் அங்கே உணர்ச்சியாகப் பெருகியது. ஆனால் அதற்கு வேண்டிய சக்தியும் வலுவும் அவளுக்கு இல்லை.

அவளுடைய இடை சோர்ந்தது. கால்கள் தள்ளாடின. ஸ்வாமிக்கு முன்னால் அரசரின் கால்களில் அவள் உடல் விழுந்தது. அதை அறிந்து தன் உணர்வுபெறவே எல்லோருக்கும் கொஞ்சம் நேரம் ஆயிற்று.

அவளுடைய அமர நிருத்யம் முடிந்தது, அத்துடன் அவள் வாழ்வும் முடிந்தது.

6

அதற்குப்பிறகு கிருஷ்ணதேவராயர் உற்சாகமும் ஊக்கமும் இழந்துபோனார். அடிக்கடி பிரமை பிடித்தாற்போல் கலைச்செல்வியின் வீட்டில் வந்து உட்கார்ந்திருப்பார். அங்கே சுவரில் எழுதியிருந்த ஒவ்வொரு சித்திரமும் அவருக்கு அவளுடைய கடைசி ஆசையை—அவள் அவருக்காகச் செய்த தியாகத்தை—நினைவூட்டும். அது அவரால் தாளமுடியாத வேதனையைக் கொடுத்தது. அப்போதெல்லாம் அந்த வீட்டையே அழித்துவிட அவர் எண்ணியதுண்டு.

ஆனால் அவள் சபையில் வந்து நடனமாடத்தான் அவர் அனுமதி கொடுக்கவில்லை. சித்திரத்தில்கூட அவள் அவ்விதம் இருக்கக்கூடாது என்று தடுக்க அவர் யார்? அந்தச் சித்திரங்களை அழித்துவிடக்கூடிய துணிவு அவருக்கு ஏற்படவில்லை.

* * * *

அந்தத் தேவியின் வீடுதான் இது என்று கதையை முடித்தான் அவன்.

என் மனம் பிரமித்து நின்றது. அந்த அமர நிருத்யத்தை நான் நேரே பார்க்கவில்லை. அவ்வளவு பெரிய பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. ஆனால் சோகம் ததும்பும் பார்வையுடன், சோரும் கால்களுடனும், துள்ளும் உள்ளத்துடனும் ஆடும் ஒரு நங்கையின் உருவம் என் மனத்தைவிட்டு அகலவில்லை.

ஹம்பியை விட்டுவந்து எவ்வளவோ நாட்களாகிவிட்டன. ஆனால் இன்னும் ஹம்பியை நினைக்கும்போதெல்லாம் எனக்கு அந்த நினைவுதான் வருகிறது, எல்லோருக்கும் ஹம்பியில் பாழடைந்துபோன வீடுகளும் மாளிகைகளும் தான் கண்ணுக்குத் தெரியலாம். ஆனால் எனக்கோ உயிரோடு உருக்குலைந்துபோன கலைச்செல்வியின் உருவம்தான் புலப்படுகிறது.

● ● ●

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

மலரணைமீது பன்னீர்த் திவலைகள் மெல்லெனப் பறக்கின்றன. தளிர் விசிறியிலிருந்து இளங்காற்று இழைந்து வீசுகின்றது. மாதரின் மதுரகீதம் மந்தமாருதம்போல் எழும்பிப் பரவுகின்றது. வீணாகானம் தும்புரு நாரதரின் கைவரிசையையும் விஞ்சியெழுகின்றது. இவ்வளவு சிதளபோகங்கொண்டும், பூச்சேக்கையில் இருப்புக்கொள்ளவில்லை.

மதுரை மன்னவன் புரண்டு புரண்டு கொடுக்கிறான்; படுக்கையின் பூக்களெல்லாம் கரிந்துபோவதைப் பார்க்கிறான்; உடலின் வெப்பத்தைப் பிறர் அறியமுடிந்தாலும், உள்ளத்தின் வெப்பத்தை உணரமுடியாதேயென உருகுகின்றான்! அங்கமெல்லாந் துடிக்க, வெடுக்கென எழுந்து உட்காருகின்றான்; மணி மந்திர ஔஷதங்களிலும் இவ்வெப்பு நோய் தீரவில்லையேயென்று துடிக்கின்றான்.

வேந்தன் படும் பாட்டைக் கண்டு, பட்டமகிஷியும் பாடல் மகளிரும் பதைக்கின்றனர். "ஈதென்ன வெப்புநோய்! அன்று ஆலவாய்ப்பெருமான் வெஞ்சினம் பூத்து, நெற்றிக்கண்ணைக் காட்டியதும், தன்வெம்மை தாங்காமல், பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி மூழ்கியெழுந்து, ஐயகோ என்று நக்கீரன் அலறியதுபோலவே, நமது நாதன் நைந்தழிகின்றான்; என்ன செய்வேன்," என்று அம் மாதேவி கண்ணீர் சிந்துகின்றாள்.

குலகுருவும், கூரிய மேதையும், சீரிய சீலருமான நீலகண்ட தீட்சிதரும் விரைந்துவந்து, வேந்தனது நிலைமையைக் கண்டு, நெக்குருகி நிற்கின்றார். மாதேவி அப்பெரியாரின் அடியிணைகளில் வீழ்ந்திறைஞ்சி, "ஐயனே! எங்கள் கண்கண்ட தெய்வமே! தாங்களும் இவ்வெப்பு நோயின் வகையறியாது வழிகூறாது வருந்திநின்றால், நாங்கள் உய்வதெங்ஙனம்? தங்களிடம் பேசுந்தெய்வமான கயல்கணம்மையை வழுத்திப்பாருங்கள்," என்று கூறி நின்றாள் கூப்பிய கையினளாய்.

அக்கணமே, நீலகண்டதீட்சிதர் தம்மை மறந்து, மீனாட்சியம்மையை மனத்திலே இருத்தலானார். சிறிதுநேரஞ் சென்றதும், அக்குலகுரு சுயநினைவுகொண்டு, தமது இடுப்பிலிருந்து விபூதிப் பையை எடுத்து, "தடாதகைப்பிராட்டியே! சுந்தரேசுவரப்பெருமானே!" என்று துதித்து,



ஒரு சிறிது திருநீற்றை அவ்வேந்தனது நெற்றியில் பூசலானார்.

அவ்வளவில், "ஆற்ற முடியாத வெப்புநோய் சற்றே தணிந்துள்ளது; எல்லாம் மீனாக்ஷியம்மையின் இன்னருள்," என்று கூறி ஆறுதலுக்கு அடையாளமாகப் பெருமூச்சு விடுத்தான், அத் திருமலைநாயக்கன். அப்பால், "இதோ

வருகிறேன்,'' என்று அத்திட்சிதர் கூறி, விரைந்தகன்ருர் அந்தப்புரத்தைவிட்டு.

நாட்கள் பல சென்றும், தீக்ஷிதரைப் பற்றிய தகவலெதுவும் தெரியவரவில்லே. திருமலேநாயக்கனது கொடிய வெப்பு நோயும் மறையவில்லே. வாய்விட்டரற்ருமல், ஆறியிருக்கும் நிலேகொண்ட அந்நரபதி, ''நம் திட்சிதர் எங்கே? அவரைக் காணும்வரையில் அன்னபானமெதுவுங் கொள்ளேன்,'' என்று சபதஞ் செய்தான்; அதன்பின், சித்தத்தைச் சிவன் பால் இருத்தியவன்போல் சிறிதுநேரம் சும்மா இருப்பான்; பின்பு பெரும் பித்தனேப்போல் வாயில் வந்ததையெல்லாம் பிதற்றுவான்; அப்பாலோ, இவ்வெப்பு நோய் எப்போது தீரும்? எப்போது என் மனம் நிம்மதிகொள்ளும்? என்று பேசிப் பேதுறுவான்.

உணவு கிடையாது, ஒரு துளி நீரும் பருகுவது கிடையாது. அதனல் பார்த்திபனது உடம்பு துரும்பாகியது; அத்துடன் காந்தி கருகியும் துர்க்கந்தமெடுத்தது. அதுகண்டு, திருமலே மன்னவனு இவன், என்று காதல் மனேவியரும் ஐயுறவு கொள்ளலாயினர்,

''முற்பகல் செய்யின், பிற்பகலே விளேயும் என்பதுபோல் இப்பிறவியிலேயே வினேயின் பயனே அனுபவிக்கின்ருன்போலும்,'' என்று ஊரார் சிலர் உரைக்கத் தொடங்கினர். ''விஜயநகர வேந்தன்மீது பொருமை பூத்துத் தக்காண முகம்மதியரை வருவித்து, நமது செஞ்சிநாட்டை அன்னருக்கு வசமாக்கி வைத்த வினே விடுமோ?'' என்ருன் ஒருவன்.

''அங்கயற்கண்ணம்மையே குலதெய்வமெனக்கொண்ட இக்கொற்றவன் அத்தேவியைப் பூசித்துத் திரும்பிய பட்டர் புதல்வியை — முன்னமெல்லாம் தனது புதல்வியெனப் பாராட்டிப்பேசிய பெண்மணியை — அந்தப்புரக் கிழத்தியாகக் கொண்ட பாவமே இவ்விதம் வந்து சூழ்ந்துள்ளதுபோலும்,'' என்ருன் மற்ருெருவன்.

''ஜன்மப் பகைவனுக்கும் இக் கொடிய வெப்புநோய் வரக்கூடாது. அந்தோ! பாவம்! பாவம்! அதுபற்றிய வகைதுறை தேடிவரப்போனர் நீலகண்ட தீட்சிதர். அப்பெருமான் இன்னும் திரும்பிவரவில்லேயே. அவர் வந்தாலன்றிப் பரிகாரம் கிட்டாது. அவரைத்தேடிச் சென்றுவருதல் வேண்டும். மன்னவனது விகார வடிவையும் மாருத வெப்புநோயையும் கண்கொண்டு பார்க்கச் சகிக்கவில்லேயே,'' என்று கூறி, ஓட்டமும் நடையுமாகப் புறப்பட்டான் வேருெருவன்.

''பாவிக்கும் இரங்குவாருண்டு இப்பாருலகில், என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ?'' என்ருன் இன்னெருவன்.

''பாண்டியன் மகளாய் வந்து, பாராண்ட பெருந்தேவியின் மனங்குளிர்ந்தாலன்றி, நம் இறைவனது தீயநோய் தீராது தீராது. தெய்வம் உளதென்பார் தீயசெயப் புகின், தெய்வமே கண்ணின்று நின்ருெறுக்கும், என்னும் நீதி வாக்கியம் பொய்க்குமோ? தெய்வதண்டனே தீர வேண்டுமாயின், தெய்வ கருணேயே வேண்டும்,'' என்றும் பலர் பேசிநின்றனர். ஊர் வாயை மூடுவார் யார்?

பட்டமகிஷிக்கோ பார்த்திபனது பரிதாபத்தில் ஒருபக்கம், பாரோரின் பழிப்புரை ஒருபக்கம், போன தீட்சிதர் வரவில்லேயே என்பது ஒருபுறம், மங்கல நாண் நிலேக்கவேண்டுமே என்னும் கவலே ஒருபுறம், சூழ்ந்துகொள்ளவே, தீயை மிதித்தவள்போல். நிலேகொள்ளாமல் துடித்துத் திரியலானுள்.

''பட்டரின் புதல்வியே! எனதருமைச் செல்வியே! மதிபிசகிப்போனேன். என் மீதிரக்கங்கொள்! என்னே மன்னித்தருள்! இன்றேல், நான் பிழைப்பதரிது'' என்று அத்திருமலேநாயக்கன் ஒருசமயம் தன் மனத்தூடே எண்ணி மாழ்குவான்.

மற்ருெரு சமயமோ, ''தமிழகமே! தயவுகாட்டு! தவறிழைத்துவிட்டேன். அன்ருெரு பாண்டியகுமரன் மண்ணசை கொண்டு, டில்லிமாநகரஞ்சென்று, மலிக்காபூர் என்பானே இங்கழைத்துவந்தான்; நானே தனியரசில் ஆசைவைத்து அத்தக்காண முகம்மதியருக்குத் தாம்பூலம் வைத்து, அச்செஞ்சிநாட்டை அடிமைப்படுத்தினேன். மதியிழந்தேன், மாசுகொண்டேன். தமிழகம் தயவுகூர்ந்து, தண்ணளி காட்டுதல் வேண்டும்,'' என்று கூறி உள்ளம் உடைவான்.'

மூலதனம்

அதிகாரம்பெற்றது	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்டது	,,	72,00,000
செலுத்தப்பட்டது	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும்
நடத்தப்படும்.

N. கோபால அய்யர்,
செக்ரெடரி.



தி இந்தியன் பாங்க் லிட்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 ***SUNDARI ELIXIR***
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 ***PHOSPHORUS OIL***
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 ***MASTANA PILLS***
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

பரிசு ரூ. 1000

(ஒரு நூதன கண்டு பிடிப்பு)

மாய மோதிரம்

இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம்மோதிரத்தை அணிந்துகொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அல்லது தடுக்க முடியாத விபத்தாகஇருந்தாலும் வெற்றி பெறுவர். அஃது உங்களை எல்லாவிதமான ஆபத்துகளினின்றும் வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும். துர்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தன் காதலரை (அவரானாலும் அவளானாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவரானாலும் அவளானாலும் உங்களுக்குக் கட்டுப்பட்டு, தன் செய்கைக்காகப் பச்சாதாபப்படுவார். நீங்கள் காதல் உத்தியோகத்தில் வெற்றிபெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல்இரவே காணுங்கள். விலை ரூ. 1—15—0 ஸ்பெஷல் ரூ. 3—0—0 மிக்க சக்தி வாய்ந்தது ரூ. 3—15—0, போஸ்டேஜ் தனி. பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal,
SHINING MESMERISM HOUSE (C. K.)
Kartarpur (E. P.)

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பிடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City.

ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள் ?

DEVI PILLS (தேவி பில்ஸ்)

(Patent Regd. No. CDL / 688)

ஆயிரக்கணக்கான பாராட்டுக் கடிதங்களிலிருந்து எடுக்கப்பட்ட சில விவரங்கள் :

NOTE :-

Our product DEVI PILLS has been duly analysed by the Director Central Drugs Laboratory of India under Patent Regd. No. CDL/688.

Ceylon—

ஐயா,

நான் மகிழ்ச்சியுடன் தெரிவிப்பது யாதெனில், தங்களிடமிருந்து வரவழைத்த தேவி பில்ஸ் 4 நாட்களுக்குள் எதிர் பார்த்த குணத்தை கொடுத்தது என்பதுடன், ஜனங்களுக்கும் சிபார்சு செய்வது யாதெனில் இந்த மாதிரியான வியாதிகளுக்கு தேவி பில்ஸ் ஒருவித சக்தியுள்ள மருந்து என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(Sd.) N. A. Doraiswamy Raja,
Great Grandson of the
Ex. King of Kandy.

* * *

Travancore—

ஐயா,

சுமார் 7 மாதம் கஷ்டப்படும் என் மனைவி பல மருந்துகள் சாப்பிட்டும் எவ்வித குணமும் ஏற்படவில்லை. கடைசியில் தங்களுடைய தேவி பில்ஸை கொடுத்ததில் 36 மணி நேரத்தில் நின்றுபோன மாத விடாய் எவ்வித கஷ்டமின்றி வெளிபட்டது என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்

(Sd.) P. S. Peter, Mannar P. O.

* * *

Bombay—

ஐயா,

'தேவிபில்ஸ்' உபயோகித்ததில் என் மனைவிக்கு குணம் ஏற்பட்டதுடன் நல்ல திடகாத்திரத்தையும் கொடுத்தது. இது பெண் இனத்திற்கே ஒரு துணைவி என்றும் ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Sd.) K. E. K. Sharma

* * *

Ceylon—

ஐயா,

"தேவி பில்ஸ்" என்னும் மருந்தை பாவித்துப் பார்த்தோம். அது உண்மையாய் ஒரு கிழமைக்குள் நல்ல சித்தையை தந்தது. இம்மருந்தை ஒருவித பயமின்றி சாப்பிடலாம் என்பது எமது துணிபாகும்.

(Sd.) J. S. Chellappa, Mathanai.

* * *

Mysore —

ஐயா,

தங்களுடைய "தேவி பில்ஸை" உபயோகித்ததில் 2 நாளில் பூரண குணத்தை அடைந்தேன் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

(Sd.) B. R. Balakrishna Rao,
Engr. M. S. Co. Ltd., Mandya.

Madura—

ஐயா,

தங்களுடைய தேவி பில்ஸ் (ஸ்பெஷல்) 4 மாதமாக நின்றுபோன மாதவிடாயினால் கஷ்டப்படும் ஒரு நோயாளிக்கு உபயோகித்ததில் அவள் நன்றாகக் குணமடைந்து சௌக்யமாக இருக்கிறாள் என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன், மேன்மேலும் விருத்தி அடைய விரும்புகிறேன்.

(Sd.) Dr. J.S. John, LMSH, Melur.

* * *

Colombo—

ஐயா,

வெகுநாட்களாக பல மருந்துகள் உபயோகித்தும் அதனால் நம்பிக்கை இல்லை என்று கைவிடப்பட்ட என் மனைவிக்கு தங்களுடைய "தேவி பில்ஸ்" காந்தம் போல் வேலை செய்தது.

(Sd.) G. Ramaswamy, Monaragala.

* * *

Mysore—

ஐயா,

இதற்கு முன் பல மருந்துகள் சாப்பிட்டு வந்த ஒரு பெண்மணிக்கு 4-வது மாதம் தேவி பில்ஸை உபயோகப் படுத்தும்படி சொன்னதின் பேரில் 6 நாட்களுக்குள் மாதவிடாய் சரிவர ஏற்பட்டுவிட்டது. இதனால் ஷை நோயாளி மிகவும் திருப்தி அடைந்தாள்.

(Sd.) Dr. K. Krishnappa, LAM & S
Sri Venkatesa Pharmacy, Arekke.

Chidambaram—

ஐயா,

நின்றுபோன மாதவிடாயினால் கஷ்டப்படும் என் மனைவிக்கு தங்கள் தேவி பில்ஸினால் 4-ம் நாள் எதிர்பார்த்த குணம் ஏற்பட்டது. நான் தங்களுடைய மருந்தின் குணாதிசயங்களை நன்றாக தெரிந்து கொண்ட பிறகு இந்த லெட்டரை நானே பலவந்தமாக எழுதலானேன்.

(Sd.) A. Kannaian,
Head Clerk, Taluk Office.

* * *

Ceylon—

ஐயா,

நான் 14—7—50 "தேவி பில்ஸ்" (ஸ்பெஷல்) வாங்கி உபயோகித்ததில் எனக்கு பூரண நம்பிக்கையையும் குணத்தையும் அளித்தது.

தங்களுடைய "தேவி பில்ஸ்" ஒருவித அபூர்வ தயாரிப்பு என்று தெரிவிக்கிறோம்.

(Sd.) S. Ponnudurai,
Abeguldia Rozella.

* * *

Shimoga—

ஐயா,

நான் தங்களுடைய "தேவி பில்ஸ்" தடைபட்ட (Ammenorrhea) மாதவிடாயினால் கஷ்டப்படும் பெண்களுக்கு ஒருவித வரப்பிரசாதம் என்றே சொல்லுவேன். கொஞ்ச நாளைக்குமுன் இந்த தேவி பில்ஸை உபயோகித்த என் சொந்த அனுபவத்தினாலே என்பதை தெரிவிக்கிறேன்.

(Sd) H.V. Murthy, LAMS & AV
Ayanur.

* * *

Calicut—

ஐயா,

3 நாளைக்கு சேர்ந்தாற்போல் தங்கள் தேவி பில்ஸை உபயோகித்ததில் என் மனைவிக்கு வெள்ளை நீர் (**Leucorrhea**) வடிதல் நின்றதுடன் முதுகு இடுப்பு வலிகள் நின்றது என்பதை மனப்பூர்வமாக தெரிவிக்கிறேன்.

(Sd.) D. Theophlis Engg. Supervisor.

* * *

Kaira.—

ஐயா,

ஒரு வருஷமாக நின்று போன மாதவிடாயினால் கஷ்டப்படும் என் மனைவிக்கு தங்களுடைய "தேவி பில்ஸ்" இரண்டு புட்டிகள் கொடுத்தேன். 15 தினத்திற்குள் நல்ல குணத்தை கொடுத்தது என்று தெரிவிக்கிறேன்.

(Sd) Master Ulphilos Jerome,
Methodist Mission School, Salol.

மாதவிடாய்

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. CDL/688 எக்காரணத்தினாலும். எத்தனை மாதமானாலும் நின்றுவிட்ட மாதவிடாய் உடனே வெளியாகும். உத்தரவாதமுள்ளது. போலி மருந்தை வாங்கி ஏமாறாதீர்கள். Ordinary ரூ. 7-0-0. (ஸ்பெஷல் ரூ. 9-0-0)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ் Regd./266) 12 நாட்கள் சாப்பிட்டால் சாசுவதமாக 6 வருஷம் கு. கருவை தடுக்கும். மாதவிடாய் தவறாது. (ஸ்பெக் ஜெல்லி) டெம்பரவரியாக தடுக்கும். பில்ஸ் ரூ. 10—0—0. ஜெல்லி ரூ. 5—8—0. த. செ. தனி.

SEENU & Co. P. B. No. 1638 (3) **MADRAS-1**

Branch: 134, Serangoon Road, SINGAPORE

Agents: NEW COLOMBO MEDICAL STORES,
82, Main Street, COLOMBO-11

தி ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்

உடுமலைப்பேட்டை

•

100 நெ. வரை மெல்லிய ரக நூல்கள்,
மல், காடா ரகங்கள் உற்பத்தி
செய்வதில் பிரசித்தி பெற்ற

இந்திய ஸ்தாபனம்

•

மானேஜிங் ஏஜண்டுகள் :—

G. V. கோவிந்தசாமி நாயுடு அண்ட் கம்பனி

ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள், இவர் பெயரைக்கேட்டாலே நடுங்குவர். காணமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K.)

JULLUNDUR CITY. Pb.

"நீலகண்டரே! நீரும் என்னைக் கைவிட்டீரோ? என் முகத்தில் விழிக்க உமக்கு மனமில்லையோ," என்று மனங் கரைவான்.

* * *

புனைவேடத்திலே புனித புருஷனொருவன் ஊர் ஊராகத் திரிந்தான்; தச்சநல்லூர் சேர்ந்து, தலைசிறந்த கல் தச்சர் உளரோ, என்று உசாவினன்; கொங்கு நாட்டிலுள்ள தாரமங்கலம் குறுகி, இங்கே சீர்மிகுந்த சிற்பியர் உண்டோ, என்று ஆராய்ந்தான். காஞ்சி சென்றால், கருதியது கிட்டுமென ஒரு சொல் காதில்பட்டது. அவ்வளவில் காஞ்சிபுரம் நோக்கிக் கடுகி நடந்தான் அவ்வியன் புருஷன்.

தற்செயலாக அப்புண்ணியன் ஆங்குள்ள பிள்ளைபாளையஞ் சேர்ந்தான். அப்பாளையத்திலே பழமையான மாடி வீடொன்று கண்ணில் பட்டது. அது ஒரு தனி வீடு. அக்கம்பக்கத்திலே வீடுகள் எதுவுமில்லை. ஆயினும் கல்லும் மண்ணும் காரையும் அங்கே நிரம்பிக் கிடந்தன. ஈதென்ன இடிபாடு, என்று உற்று நோக்குகையில், அத் தனி வீட்டின் வாயிலிலே வியன் வடிவமொன்று வா வா என்றழைத்தது.

விரும்பி யழைப்பது யாரென அறிய வேண்டிக் கிட்டச் சென்றான் அக் கண்ணிய புருஷன். அவ் வடிவமோ வாய் திறக்கவில்லை; ஆனாலும், அதன் முக மலர்ச்சியும் காந்தியும் அவன் மனத்தைக் கவர்ந்தன. ஊடுருவி நோக்கிய பின்னர், அது கல்சிலை என்றே கருத்தில் பட்டது. அவ்வேளை, வீட்டினுள்ளே நோக்க, அங்கே ஒருசபை கூடியிருப்பதைக் கண்டான் அப் புண்ணியவான்.

உடனே உள்ளே நுழைந்தான். வரிசை வரிசையாக மாந்தர் வீற்றிருப்பதே போல் தோன்றிற்று. அவர்களின் தோற்றமும் வடிவும் சாயலும் அமைப்பும் அப் புருஷனைப் பரவசப் படுத்தின. வாளும் வேலும் தாங்கிய வீரனொருவன் புன்னகை பூத்து வருக வருக என்றான். கருணாகரன் ஒருவன் ஒரு கையில் பாலும் ஒரு கையில் பழமும் கொண்டு, அன்பு ததும்ப அழைத்தான் கண்ணைக்காட்டி.

கசிந்த மனமும் மந்தகாசமும் வாய்ந்த ஒருவன் அருகேயுள்ள ஆசனமொன்றைக் காட்டி, இங்கே வீற்றிருங்களென விளம்பி நின்றான். மார்பிலே யோக வேஷ்டியும் முப்புரி நூலும் பூண்டு கைகளிலே சுவடி தரித்துக் கருத்துடன் படித்து நிற்கும் ஒருவன் பரவசமாக விளங்கியிருந்தனன். புல்லாங்குழல் வாசிப்பவனும் மத்தளம் அடிப்பவனும் வந்த மனிதனுக்குப் பரவசம் ஊட்டி நின்றனர்.

அதிசயம் அனைத்தையும் பார்த்து மகிழ்ந்த அப் புதிய மனிதன், "எல்லாம் உயிர்ச் சிற்பங்கள்! இங்குமங்கும் இயங்குவதுதான் இல்லை. இது கொண்டு கல்சிலை என்று கூறுவார் கசடரேயாவர். இராம பிரானை நோக்கி, கைவண்ணம் அங்குக் கண்டேன் என்றான் விசுவாமித்திரன். அக் கைவண்ணமோ உயிரை வாங்கியது. இக் கைவண்ணமோ உயிரை ஊட்டியுளது. இதற்கு ஈடு ஏது? தாரமங்கல சிற்பமும் தாடிக் கொம்பு சிற்பமும் இதற்கு எந்தமூலை! என்று வியந்து, நிற்கும் வேளை.

"தீட்சித ஐயா! தெண்டம் சமர்ப்பிக்கின்றேன்! இன்றுதான் சுதினம். தன்யன் ஆனேன். தாங்கள் எழுந்தருளிய காலையில், இங்கே நான் இல்லாது போனேன். அதுபற்றி என்னை மன்னித்தல் வேண்டும், தங்களை வரவேற்க யாருமில்லாப் பாவியானேன். இப்பாவத்திற்கு என்ன செய்வேன்? தாங்கள் இங்கு வந்து நெடுநேரமாயிற்றோ? கால் கடுக்க நிற்கிறீர்களே! வீற்றிருங்கள் இந்த ஆசனத்தில்," என்று கையுடன் கருத்தும் குவிந்தவனாய்க் கூறினான் சிற்பசேகரன் சுமந்திர சந்திரன்.

"சிற்பசேகர! இன்றே சுதினம் எனக்கும்! என் வேந்தனுக்கும்! உனது புத்திரர்களான இச்சிற்பச் செல்வங்கள் என்னைப் பரிந்தழைத்தன; எனக்குப் பரவசமும் ஊட்டின. ஆதலின் நீ சிறிதும் வருந்தவேண்டாம். உனது கலையும் கீர்த்தியும் காசினி யெங்கும் ஓங்கி உயருமாக! இனி நீ காட்டிய பீடத்தில் நான் எங்ஙனம் அமர்வேன்? அதனூடே கையில் வீணையுடன் கலைமகள் காட்சியளிக்கின்றாளே" என்றார் நீலகண்ட தீட்சிதர்.

"வேதவித்தகரை நிற்க வைத்தா நான பேசுவது? பக்கத்திலிருக்கும் ஆசனத்தில் அமருங்கள்," என்றான் அச்சுமந்திர சந்திரன். "அந்த ஆசனத்திலே திரிமூர்த்திகளையும் காண்கின்றேனே. எங்ஙனம் அமருவேன்? தெய்வ அபராதத்துக்கு என்னை ஆளாக்க நினைப்போ?" என்றார் திருமலை நாயக்கரின் குலகுரு.

"அங்ஙனமாயின், அதோ காணும் பளிங்குக் கல்லில் பாங்காக அமரலாம்," என்றான் அச்சிற்பி. அதனூடே வள்ளி மணாளனது வடிவமன்றோ தோன்றுகிறது?" என்றார் தீட்சிதர். "இந்த மணைப்பலகையில் சற்றே இருங்கள்," என்றான் அவன். "திருமகள் அதிலே காட்சியளிக்கின்றாள். கலைக்கோயில் இது. இதில் நான் எங்ஙனம் வீற்றிருப்பேன்? கலைமகள் உனது கைகளிலிருந்து நடனமிடுகின்றாள். உன் பாக்கியமே பாக்கியம்!" என்று உள்ளம் பூரித்தார் அத்தீட்சிதர்.

"ஐயனே! தாங்கள் இங்கெழுந்தருள யாது காரணம்? அடியேனால் ஆவது ஏதும் உண்டோ? உண்டாயின், அங்கிருந்து ஓர் ஓலை நறுக்கு விடுத்தால் போதுமே. தட்சணமே சமுகம் வந்து சேர்ந்திருப்பேன். வந்த விவரத்தை அறிய ஆவலாயிருக்கின்றேன்," என்று வினவினான் சுமந்திரன்.

"சிற்பசேகர! புடைத்தல் கடவுளான அப்பிரமனை நானும் கண்ணால் கண்டதில்லை. அவன் படைக்கும் உயிர்களோ கால அடைவில் உயிரிழக்கும். ஆயினும் கண்கண்ட பிரமனாகிய நீ படைக்கும் வடிவங்களோ உயிரற்றன என்று ஊன் கண்ணுக்குத் தோன்றும். மனக்கண்ணினுக்கோ மகிமையான உயிருள்ளனவேயாம். நீ படைக்கும் வடிவங்கள் என்றும் உயிரிழக்கா? எனவே அயனிலும் அதிகன் நீ. உனக்கும் உன் கலைக்கும் வணக்கம்," என்றார் நீலகண்டர்.

"தங்கள் வசனம் அனைத்தும் எனக்கு ஆசியுரையே யாகும். அடியேனால் ஆக வேண்டிய பணி யாது? காத்திருக்கின்றான் சுமந்திரன்," என்றான் சிற்பி.

"அப்பனே! மதுரைத் தெய்வம் மீனாட்சியம்மைக்கு வசந்த உற்சவம் செய்ய வேண்டும். அதியற்புதமான வசந்த மண்டபமொன்று சமைக்க வேண்டும். புதுமைக்கு ஓர் இலக்காய் அது துலங்குதல் வேண்டும். அங்ஙனம் அரும் பணியாற்றின், அம்மையின் மனங்குளிரும். என் இறைவனது வெப்பு நோயும் தீரும். அது பற்றியே உன்னைத் தேடி வந்தேன். உனது கைவரிசையை அக்கயல்கணம்மை கண்டு களிக்கவேண்டும் என்பதே எனது ஆவல்," என்று கோரி நின்றார் நீலகண்ட தீட்சிதர்.

"மதுரைச் சீமையில் எனது கலைத் திறனைக் காட்ட நீண்ட நாளாக அவாக் கொண்டிருந்தேன். அம்மைக்கான வசந்த மண்டபம் சமைத்தல் அடியேன் பண்ணிய பாக்கியமாகும். மீனாட்சியம்மையே! சோமசுந்தரா! உங்கள் சீர்பாதத்தை இங்கிருந்தே மனத்தால் வழுத்துகின்றேன்; இதோ புறப்பட்டேன்," என்றெழுந்தான் சுமந்திர சந்திரன். நீலகண்ட தீட்சிதரும், 'நல்லது எல்லாம் அம்மை அருள்' என்றார். இருவரும் பல்லக்கிலே புறப்பட்டனர் மதுரையை நோக்கி.

* * *

ஆயிரத்து அறுநூற்று இருபத்தெட்டாம் வருஷம் மேமாதம் (அட்சய ஆண்டு, வைகாசித் திங்கள் பத்தாந் தேதி) மதுரையிலே திருமலை நாயக்கனது அந்தப்புரத்தில் ஒரே குதூகலம். அன்று மீனாட்சியம்மன் ஆலயத்திலே புது மண்டபங் கட்டுவதற்கு அடிகோலும் விழா. முகூர்த்தக்கால் நாட்டியதும், மன்னவனது வெப்பு நோய் வெகுவாகத் தணிந்து விடும் என்பதே சோதிடரின் வாக்கு. நீலகண்ட தீட்சிதரின் கருத்தும் அதுவே.

ஏகபாத மூர்த்தமொன்றை ஒரு பெருங் கல்லில் செதுக்கி, அதனையே விழாக்காலாகக் கொண்டான் சுமந்திர சந்திரன். ஏகபாத மூர்த்தம் என்றால், ஒரு பாதத்துடன் பரமசிவன் விளங்க, ஒருபுறம் நான்முகனும், ஒருபுறம் திருமாலும் நின்று துதிக்கும் ஒப்பற்ற வடிவமாகும். அம்மூர்த்தங் கண்டதும், வைணவரானோர் கொதிப்புக் கொண்டனர். திருமாவின் பரத்வம் குறையும்படியான காலையா நாட்டுவது, என்பதே அவர்களின் கூக்குரல்.

திருமலைநாயக்கன் வைணவப் பற்று மிகுந்தவனாதலின், அவன் பரிவாரத்தாரும் அக்கூக்குரலில் பங்கு கொண்டனர். அதுகண்டதும், சைவரானோர்,

"எங்கள் சிவபெருமானுக்கே பரத்வம்! எனவே ஏகபாத மூர்த்தத்தையே நிலை நாட்டியாக வேண்டும்," என்று கும்பு கூடி வாதித்தனர். பட்டமகிஷி அதனை அறிந்து, "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே! கைக்கெட்டியது வாய்க் கெட்டாமல் போய்விடுமோ?" என்று பதறலானாள்.

பரத்வம் யாருக்கென அரசவையில் வாதித்து முடிவுகட்டிய பின்பே, முகூர்த்தக்கல் நாட்டவேண்டும் என்று இரு சாராரும் கச்சை கட்டினர். அரசியின் கவலையையும் சைவ, வைணவரின் அவலத்தையும் அச்சிற்பி கண்டவுடனே பூஜை வேளையில் கரடி புகுந்தது போலாயிற்றே! திருமலையின் வினைப்பயன் மீண்டும் இவ்வாறு வடிவெடுத்துளதோ," என்று பெரிதும் வெதும்பினான்; உடனே சமரஸஞ் செய்யவும் சித்தம் வைத்தான்.

"பெரியோர்களே! உங்கள் எல்லாருக்கும் எனது வந்தனம். சிற்பக் கலைவாணனாகிய எனக்குத் தெய்வ வேற்றுமை என்பது கிடையாது. சிவன் கோயிலாதலின், ஏகபாத மூர்த்தம் வகுத்தேன். விஷ்ணு ஆலயமாயிருந்தால், வேறு விதமாக மூர்த்தம் வகுத்திருப்பேன். சூரியனைப்போல் ஆண்டவனும் ஒருவனே. உலகனைத்தினுக்கும் ஜோதி ஒன்றே. அவரவர் அவரவருக்குத் தோன்றியவாறு நாமமும் வடிவமும் வகுப்பார்.

"ஏக பரம்பொருளான ஈசுவரனது ஆக்கல், அளித்தல், அழித்தல், எனும் அவசரங்களுக்கு ஏற்ப அயன், அரி, அரன் என்பனவெல்லாம் மானிடரின் கற்பனையேயன்றி வேறன்று. ஒருருவே மூவுருவாய் நின்றான் என்று நாயன்மார்களும் ஆழ்வாராதியரும் ஓதி உணர்த்தியிருப்பதை அறியாமல் வீண் வாது செய்தல் விபரீதமேயாகும். மன்னவனது உடல் நோயும் மனநோயும் விரைவில் தீரவேண்டின் வீண் சழக்கு வேண்டாம். இதுவே எனது வேண்டுகோள்," என்றான் சிற்பி.

சமயச் சழக்கர் அதுகேட்டு வாயடங்கினர். "சிற்ப நூலில் மட்டுமன்றி எல்லாச் சமய நூலிலும் வல்லவனாகவே காண்கின்றான் இச் சுமந்திரன். இவன் முன்னே வாதம் புரிய வாய் திறப்பார் யார்?" என்று அனைவரும் வியப்பும் மகிழ்வும் ஒருங்கே எய்தினர். குறித்த நேரத்தில் முகூர்த்தக் கால் நாட்டு விழா வெகு சிறப்பாக நடந்தேறியது, வசந்த மண்டப வேலையும் வேத கோஷத்தினுக்கிடையே துவக்கமாயிற்று.

ஆனதும், திருமலையின் வெப்பு நோய் முக்கால் வாசி மறைந்து விட்டதெனவே மொழிய வேண்டும். தெய்வப் பணியில் தன்னை மறந்து முயன்றான் சுமந்திர சந்திரன். அவனது கைத்திறனைக் கண்டு களிப்பதிலேயே காலங் கழித்து வந்தான் அக்கொற்றவனும். சுமந்திரன் சிற்றுளி எடுப்பதும், உருவம் சமைப்பதும், கண் திறப்பதும் இந்திர ஜாலமே போன்றிருந்தன. நீலகண்ட தீட்சிதரும் அடிக்கடி வந்து, அந்த அதிசயங் கண்டு, பரவசமே கொண்டு நிற்பார்.

சிற்பி சுமந்திரன் சதா வெற்றிலை போடுதல் வழக்கம். அதற்காக அடைப்பைக் காரனொருவன் அயலேயிருந்து தாம்பூலத்தை நீட்டியவண்ணம் நிற்பான். நுண்ணிய உருவங்களுக்குக் கண் திறக்கையில், வாயில் வெற்றிலை இல்லை என்றால், சிற்பியின் கைகள் சற்றே சோரும்; சிற்றுளியும் தளரும்; ஆனால் கணக்கிலே இம்மியும் தவறா. அது சமயம் வெற்றிலைச் சுருளைச் சிற்பியின் வாயிலிடுவான் அடைப்பைக்காரன். உடனே சோர்வும் தளர்வும் மறைந்து போம்.

வஸந்த மண்டபத்தின் முகப்பிலுள்ள தூண்களை உற்றுப் பார்க்கவேண்டும். பார்த்தால், அத்தூண்களிலே மிக மிகச் சிறிய உருவங்கள் பல காணப்படும். அந்த உருவங்களின் நுட்பத்தை நோக்க நோக்க, "மனிதனது கைவேலையா இது? தெய்வ சிருஷ்டியன்றோ," என்றே நாம் பிரமிக்க நேரும். ஒரு நாள் அத்தூணொன்றிலே பலவாறான சிறிய உருவங்களை மிக நுணுக்கமாக அமைத்து வருகின்றான் சிற்பசேகரன்.

அதன் அருமை பெருமையைக் கண்டு நிற்கும் கொற்றவனும் பெருமக்களும், "இவன் மானிடன் அல்லன்; தெய்வத் தச்சன் விசுவ கர்மனது மறுபிறப்பே," என்று பூரித்து நிற்கின்றனர், உருவங்களுக்குக் கண் திறக்கும் நேரம். சுமந்திரன் தன்னை மறந்து வேலை செய்கிறான். அவனது கையும் சிற்றுளியும் சற்றே சோருகின்றன. பக்கத்திலே அடைப்பைக்காரன் இல்லை; சிறுநீர் கழிக்க வெளியே சென்றிருந்தான்.

சிற்பியின் சோர்வுகண்டதும், திருமலை நாயக்கன் தானே வெற்றிலையை மடித்து, அவனது வாயில் இட்டனன். இட்டதும், சிற்பியின் சோர்வு அகன்றது! உருவங்களுக்கு அதியற்புதமாகக் கண் திறந்தது! பின்னர் அத்தாம்பூலத்திலே சுண்ணும்பு சற்று அதிகமாயிருந்ததை அவன் உணர்ந்து, "கெட்டான் இவன்? சரிவரச் சுண்ணும்பு திட்டவில்லை," என்று கூறி, இடது கையில் சுத்தியை வாங்கி வீசும் சமயம்.

மன்னவன் திருமலையைக் கண்டுவிட்டான் அச்சிற்பி. அடைப்பைக்காரனே காணப்படவில்லை. உடனே அவனுக்கு விஷயம் விண்டது தெள்ளென. அச்சிற்பச் செல்வன் திடுக்கிட்டெழுந்து, "அரசே! ஆராயாமல் பெரும் பிழை செய்துவிட்டேன். மன்னிக்கவேண்டும்," என்று மன்ருடினுன்.

அதற்கு, அத்திருமலை, "சிற்ப வேந்தே! கலைவல்லாய்! முன்னம் பாண்டிய மன்னவனெருவன் மாறுவேடத்தில் கம்பனுக்கு அடைப்பைக்காரனுக இருந்தான் சோழ வேந்தனது சபையில். மன்னவன் நீட்டிய வெற்றிலைச் சுருளைக் கம்பன் கை நீட்டி வாங்கிக்கொள்ளவில்லை. கவியரசனுக்கு வெற்றிலைச்சுருள் தரும் பாக்கியம் அப்புவியரசன் பெற்றுனில்லை. நான் பாக்யசாலியாதலின், கலைவல்ல புலவனுக்கு வெற்றிலைச் சுருள் தரும் பாக்கியம் பெற்றேன். பெரு மகிழ்ச்சி கொண்டேன்," என்று பரிவுடன் பேசினன்.

அவ்விதம் திருமலை செப்பி நின்றுலும் சிற்ப வேந்தனது சிந்தாகுலம் தீரவில்லை. ஆதலின், "சுத்தியை வாங்கி வீசிய விரல்களை இதோ நறுக்கிக்கொள்கிறேன்" என்று சுமந்திரன் கூறிச் சூரிகொண்டு தனது விரல்களை நறுக்கத் தொடங்கினன். திருமலை அதுகண்டு, பரபரப்புக்கொண்டு, விரைந்து தடுக்கலானுன். அவ்வேளை தற்செயலாக அத்திருமலையின் விரல்கள் இரண்டு நறுக்குண்டு கீழே விழுந்தன.

அருகேயிருந்தோர் அனைவரும் அது கண்டு, ஆ ஆ என்று அரற்றினர். சுமந்திர சந்திரனும் திகைத்து நின்றுன். அத்தறுவாயில் திருமலை நவில்வான்:—

"சுமந்திரா! பெரும் பிழை புரிந்தவன் நானே! அளவு பார்த்துச் சுண்ணும்பு தடவினேனில்லை. ஆதலின் என் விரல்கள் வெட்டுண்டு வீழ்ந்தன. தெய்வச் சிற்பியான உனக்கு அச்சிறு ஊழியமும் புரிய நான் கொடுத்து வைக்கவில்லை. சிற்பக் கலையில் வல்ல உனக்கு ஆயிரம் ஆயிரமாகப் பொன்காசு கொடுத்தாலும், மனப்பூர்வமான ஊழியத்துக்கு ஈடாமோ? உன்னுலன்றே என் உயிர் ஓடாமல் இருக்கிறது. இதற்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்?"

அவ்வாறு மதுரை மன்னவன் கூறி, மனங்கரைந்து நின்றும், சுமந்திரன் நிம்மதி கொள்ளவில்லை. அத்தருணம் தற்செயலாக நீலகண்ட தீட்சிதர் அங்கே தோன்றினுர்; சுமந்திரனது சிந்தாகுலத்தை நோக்கினுர். அவனுக்கு ஆறுதலளிக்க நினைத்தார். அதன் விளைவாக அவர் புகன்றது இது:-

"வினையின் பயன் யாரை விட்டது? வெப்புநோய் காரணமாக இவ்வேந்தன் அன்றே மாய்ந்திருக்க வேண்டும். அம்மையை வேண்டி அன்று திருநீறிட்டேன். உடனே அந்நோய் சிறிது தணிந்தது. இம்மண்டபம் கட்டத் தொடங்கியதும் திருமலையின் தலைக்கு வந்தது கைவிரல்களுடன் போயிற்று. வினையின் விளைவை வேந்தன் என்றும் மறவாதிருக்க வேண்டுமல்லவா? பொன் விரல்கள் இரண்டு கொண்டு இறைவன் திருப்தி அடையவேண்டும். நீயும் அப்படியே!"

மதுரை வஸந்த மண்டபம் எழுந்த வரலாறு இது. அதனைப் புது மண்டபம் என்றும் புகல்வர். சிற்பக் கலையின் சீரிய பொக்கிஷம் அது. அதன் சிற்ப நேர்த்தியைக் கண்கொண்டு களிக்க வேண்டும். கல்லில் கடைந்து குடைந்த வேலையா இது! என்றே கலைவல்லார் பலரும் பிரமிப்பர்.

கலைக் கோயிலும் பொக்கிஷமுமான அம் மண்டபத்தில் இப்போது கடைகள் பல தோன்றி, நம் கருத்தையும் கண்ணையும் கெடுக்கும்! கலைவல்லார் கண்ணீர் வடிக்க நேரும்! தமிழகத்திலே கலைச் செல்வங்களை நன்கு பாதுகாக்கும் நாள் எந்நாளோ?

● ○ ●

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்—பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிற போட்டோ படங்கள், தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பது போன்ற நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை யெல்லாம் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. கல்யாணமாகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2–12–0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2—12—0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5—0—0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்

M/s. French Photo Supply Company

(C. K.) JULLUNDUR CITY

மாதவிடாய் :

சகோதரிகளே! எமது "சும்பகி-ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்கு படுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100-க்கு 100 பலன் நிச்சயம். விலை ரூ. 6/- தபாற்செலவு ரூ. 0-14-0.

கர்ப்பத்தடை :

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர். பூரண கர்ப்பத் தடைக்கு ரூ. 6–0–0. 6 மாத காலத் தடைக்கு ரூ. 3–0–0. (தபாற் செலவு ரூ. 0-14-0)

வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் "மதனவிலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம். விலை ரூ. 3–0–0

விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், லேல்வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்! விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C. M.)

70, Cornwallis Street, CALCUTTA—6

இரவில் தனியாக இருக்கும்போதுதான் பார்த்துக்கொள்ள வேண்டும்

KOKSHASTRA (Private)

கொக் சாஸ்திரம் (இரகசியமானது)

284 படங்களுடன் விளம்பரத்தினுல் சரிவர கூறமுடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன. படிக்கிறவர்கள் நன்ருகவும், தெளிவாகவும், விஷயங்களை புரிந்து கொள்வார்கள் நல்லவிதமான 284 படங்கள் இருப்பதால் மார்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம் தான் வெகு நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை ரூ. 2—12—0

BED ROOM PHOTOS = படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்குப் படுக்கை அறைக் காட்சிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 5—0—0 அனுப்பி, பெற்றுக் கொள்ளுங்கள். 25 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட்டின் விலை ரூ. 2—12—0,

கடிதப்போக்குவரத்து ஆங்கிலத்திலேயே (இங்கிலீஷில்) இருக்கவேண்டும்.

AMERICAN TRADING CO. (C. K.)

JULLUNDUR CITY. Pb.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.